பூனைக் கன்றுகள் அழகுப்பு

பூனைக் கன்றுகள் அழகல்ல

புனைவுகள் & கட்டுரைகள்

பேயோன்

பூனைக் கன்றுகள் அழகல்ல

உரிமம்: பேயோன்

Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் பகிரப்படுகிறது.

முதல் மின்பதிப்பு பிப்ரவரி 2015

அட்டை மற்றும் உட்புற ஓவியங்கள், வடிவமைப்பு: பேயோன்

Poonaik Kanrugal Azhagalla

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License.

First electronic edition February 2015

Cover art, illusrations, and design: Payon

முன்னுரை

ஆனா ஆவன்னா எழுதக் கற்றுக்கொண்டதையும் சேர்த்தால் நான் எழுத வந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. பள்ளிப் பருவத்தில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல் உள்பட பல்வேறு துறைகள் சார்ந்து நான் எழுதிய ஆயிரக்கணக்கான படைப்புகள் நல்ல மதிப்பெண் தரப்பட்டு ஆசிரியர்களால் புறக்கணிக்கப்பட்டன. பல ஏமாற்றங்களைக் கடந்து கல்லூரிப் பருவத்தை எட்டிய பின்பும் அந்த நிலைமை தொடர்ந்தது.

பள்ளி நாட்களில் கிட்டத்தட்ட 200 கட்டுரைப் போட்டிகளில் பங்கேற்றிருக்கிறேன். ஒருமுறையும் எனக்குப் பரிசு விழுந்ததில்லை. விருதுக் குழுக்களின் பாராமுகத்திற்கு அதுதான் முன்னோடி என்று சொல்ல வேண்டும். வயது மாற மாற எனது எழுத்துநடையும் மாறியதே தவிர உள்ளடக்கம் மாறவில்லை. எனவே கட்டுரைப் போட்டிக்கு

எழுதிய கட்டுரைகளை நான் பத்திரப்படுத்திவைத்திருந்தால் இன்று மேலும் பல புத்தகங்களுக்குச் சொந்தக்காரனாகியிருப்பேன்.

எண்பதுகளில் நடுவில் நான் படித்த கல்லூரியின் ஆண்டுமலரில் எனது கட்டுரை ஒன்று வெளியானது. 'புறநானூறில் சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பு கொண்ட அதுதான் எனது முதல் அச்சிட்ட படைப்பு. உண்மையில் எனக்குப் புறநானூறும் தெரியாது, பத்திரமாகப் பார்த்துப் போகவும் தெரியாது. இருப்பினும் கல்லூரி ஆண்டுமலருக்கு அது போதுமாக இருந்தது. அந்தக் கட்டுரை ஆசிரியர்களின் கவனத்தை என் பக்கம் திருப்பியது. தேர்ந்த தமிழாசிரியர்கள்கூட எழுத்துரு அளவு போன்ற விஷயங்களில் என்னிடம் கருத்துக் கேட்க ஆரம்பித்தார்கள். ஆனால் மாணவிகள் என்னைத் தவிர்க்கத் தொடங்கினார்கள். இன்று வரை பகல்நிழலாய்த் தொடரும் பெண்களின் புறக்கணிப்புக்கு அதுதான் பிள்ளையார் சுழி என்பேன். அதற்கு முன்பு ஆசிரியைகளாவது என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அதே எண்பதுகளின் நடுவில் மேகமூட்டமான ஒரு மாலை வேளையில் கணையாழி, தீபம், திசைகள், யுனெஸ்கோ கூரியர், சோவியத் நாடு, பொறியாளர் குரல் ஆகிய பத்திரிகைகள் எனக்கு அறிமுகமாயின. இலக்கியம், தீவிர சினிமா போன்ற விசயங்கள் என்னைக் கவர்ந்தன. இதுதான் எனக்கான வாழ்க்கை என்ற கண்கள் திறக்கப்பட்டது போல் உணர்ந்தேன். தமிழில் ஆடல்-பாடல்களுடன் கூடிய மாற்று சினிமா வலுப்பெற்றுக்கொண்டிருந்த காலமது. சென்னைப்

பல்கலைக்கழக நூலகத்தில் உதவி நூலகனாகப் பணிபுரிந்துகொண்டு இந்தப் படங்களின் மாலைக் காட்சிகளுக்குச் சென்றது, பாரகன் திரையரங்கில் 'லாரி டிரைவர் ராஜாக்கண்ணு' பார்த்துவிட்டுத் 'தீபம்' இதழில் அதன் விமர்சனத்தைப் படித்து வரிக்கு வரி எனது முதல் சினிமா விமர்சனத்தை எழுதியது எல்லாம் இன்றுகூட மறக்காமல் நினைவிருக்கிறது.

நூலகத்தில் வேலை பார்த்தபோதுதான் என் மனைவியைச் சந்தித்தேன். அவர் பிரசிடென்சி கல்லூரியில் வரலாறு படித்துக்கொண்டிருந்தார். அப்போது அவருக்குத் திருமணம் ஆகியிருக்கவில்லை. அவர் என்னைப் பார்ப்பதற்காகவே நான் வரலாறு தொடர்பான புத்தகங்களை அவரது கல்லூரி வகுப்பறைப் பக்கம் எடுத்துச்செல்வேன். அவரை ஈர்க்கக் கவிதை எழுதத் தொடங்கினேன். ஆழமாகவும் இல்லாமல் மசாலாவாகவும் இல்லாமல் அன்று நான் தேர்ந்தெடுத்த கவிதை நடை இன்றைய தேதி வரை எனக்குச் செருப்பாக உழைத்துக்கொண்டிருக்கிறது. சுமார் நூறு கவிதைகளை அவருக்குக் காட்டிய பின்பும் அவர் அடிக்கடி விடுப்பில் போகத் தொடங்கிய பின்பும் அவருக்குக் கவிதையில் ஆர்வமில்லை என்று புரியவந்தது. ஆனால் அக்கவிதைகளின் பின்னால் இருந்த உழைப்பு எனக்குக் காதலைச் சம்பாதித்துக் கொடுத்தது, சில ஆண்டுகளுக்குப் பின்பு திருமணத்தில் கொண்டுபோய் நிறுத்தியது.

திருமணம் ஆன சில மாதங்களில் எனக்கு இருத்தலியத்தில் ஆழ்ந்த வெறி ஏற்பட்டது. அரசு நூலகங்கள், வெளிநாட்டுக் கலாச்சார மையங்கள், உலக சினிமா திரையிடல்கள்

போன்றவற்றில் கணிசமாக நேரம் செலவிட்டு அறிவுஜீவி நண்பர்களுடனான உரையாடல்களில் உதிர்ப்பதற்கான தகவல் துளிகளைத் திரட்டிக்கொண்டேன். விளைவாக, நான் எழுதுவதும் அதிகரித்தது. இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கைச் சூழ்நிலைகளே என்னை எழுத்தின் புதிய திசைகளை நோக்கித் தள்ளியிருக்கின்றன. அதனால்தான் என் எழுத்து ஒரு நன்றிக்கடனாகவாவது வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.

2000இல் இணையம் அறிமுகமானதும் எனக்குள் இருந்த எழுத்தாளனுக்கு மொத்தமாக முழிப்புத் தட்டியது. படித்ததையெல்லாம் எழுத ஆரம்பித்தேன். அந்த ஆண்டில் எனது முதல் புத்தகமான 'ரயில்வே வேலைவாய்ப்புகள்' வெளியானது. பின்னர் வெகுஜன வார இதழ்கள் இடைநிலை எழுத்தாளர்களுக்கு இடமளிக்கத் தொடங்கியதும் நான் சகட்டுமேனிக்குப் பிரசுரமாகத் தொடங்கினேன். நான் படித்த கல்லூரியின் நூலகத்தில் என் புத்தகங்கள் தடை செய்யப்பட்டிருந்தாலும் அந்தக் கல்லூரி மாணவர்களின் பாடத்திட்டத்தில் என் படைப்புகள் இருக்கின்றன.

2005இல் தனியார் நிறுவன குமாஸ்தா வேலையைக் கைவிட்டு முழுநேர எழுத்தாளனாக மாறினேன். இதற்கிடையில் என் பெயர் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. சிலிண்டர், கூரியர் அல்லாத காரணங்களுக்காக மக்கள் என்னைப் பார்க்க வந்தார்கள். கூட்டங்களில் பேசக் கூப்பிட்டார்கள். கூட்டங்களில் எழுதக் கூப்பிட்டார்கள். கூட்டங்களில் உட்காரக் கூப்பிட்டார்கள். திரைப்பட

வசனகர்த்தா வாய்ப்புகள் தேடி வந்தன. ஏழெட்டுப் படங்களுக்கு எழுதினேன். ஒரு விற்காத புத்தகத்தை மட்டும் எழுதியிருந்த நான், இப்போது 600க்கும் மேற்பட்ட விற்காத புத்தகங்களின் ஆசிரியன். இது என்னுடைய அறுநூற்று சொச்சமாவது முன்னுரை.

எனது நாற்பதாண்டுகால எழுத்தனுபவத்தில் நான் பார்க்காத புறக்கணிப்பு இல்லை. பெண்கள் முதல் வாசகர்கள் வரை எல்லா நிராகரிப்பையும் பார்த்தாயிற்று. நோபல், சாகித்திய அகாடமி போன்ற பெரிய விருது அமைப்புகளைப் பற்றி வேண்டிய அளவு எழுதியாயிற்று. இன்னும் எழுதலாம் (எனக்கு அங்கீகாரம் தராததில் இவர்களுக்கு என்ன கிடைக்கிறது என்று புரியவில்லை). இத்தனை அதிருப்திகளையும் மீறி நான் ஏன் தொடர்ந்து எழுதுகிறேன் தெரியுமா? இல்லையென்றால் வீட்டு வேலைகள் செய்ய வேண்டியிருக்கும்.

பேயோன்
பிப்ரவரி 2, 2015

இன்றைய பொழுது

காலையிலிருந்து ஜன்னலோர மேஜை மேல் ஒரு அன்ரூல்டு நோட்டுப் புத்தகம் கிடந்தது. ஸ்டேஷ்னரி கடையில் எட்டு ரூபாய் வீசியெறிந்தால் கிடைக்கும் 192 பக்க நோட்டுப்

புத்தகம் அது. அங்குமிங்கும் நகராமல் அசையாமல் அதனுலகத்தில் ஆழ்ந்து கிடந்தது அந்த நோட்டுப் புத்தகம். நாள்பட்ட மனிதப் பயன்பாட்டின் அடையாளமாகச் சில தாள்கள் தனித்தனியாகவும் சக தாள்களோடும் லேசாக உடலை வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. வரிசையை மீறித் தெரிந்த தாள்களின் விளிம்பில் பால் பாயின்ட் பேனாவின் எல்லை மீறல்கள். மேற்பகுதியில் பைண்டிங் உரிந்து மெல்லிய நூல்நுனிகள் வெளிப்படத் தொடங்கியிருந்தன. நிறம் மங்கிக் கீறல் விழுந்த பூக்களைச் சுமந்த அட்டையின் இரு வெளிமுனைகள் மடங்கியிருந்தன. ஜன்னல் வழியாக வந்திருந்த வெயில் சூரியகாந்திகளை சூடாக்கிக்கொண்டிருந்தது. அந்த இடத்தையே தூசு சாம்ராஜ்யமாகக் காட்டியது புகுவெயில்.

அருகிலிருந்த பேப்பர் வெயிட்டிடம் மணி 12.30 என்றது குமாரின் கைக்கடிகாரம். குமார் மணிக்கட்டை உயர்த்திப் பார்த்து அதைத் தெரிந்துகொண்டான். ஒரு மணிப் பேருந்திற்கு இப்போது கிளம்பினால் சரியாக இருக்கும். – என்று நினைத்தானே தவிரக் கிளம்பவே வரவில்லை அவனுக்கு மனம். இந்த நோட்டுப் புத்தகம், பேப்பர் வெயிட், பால்பாயின்ட் பேனா ஆகிய இத்யாதிகளோடு இத்யாதியாய் நாமும் இருந்துவிட்டால் எத்தனை சுமைகள் மிச்சம் என்று பெருமூச்சு விட்டான். வெயிலும் நிழலும் மாறிமாறிப் படிந்த காலித் தெருக்களின் மதிய மந்தம் அவன் ஏறப்போகும் பேருந்தில் பிரதிபலிக்காது. கூட்டம் நெருக்கித் தள்ளும். சொந்த முயற்சியால் இம்மிகூட அசைய முடியாத நிலையில் ஒரு மணிநேர கடும்

உடற்பயிற்சி பெறும் அனுபவத்தை பேருந்து அவனுக்குத் தந்துவிடும். அந்தப் பேருந்தில் ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து முடித்துவிட்டு தன் நிறுத்தத்தில் தன்னை உமிழ்ந்துகொண்ட பின் இருக்கிறது அலுவலகத்தில் பணிபுரி படலம்.

பேப்பர் வெயிட்டிற்குள் ஒரு கடலும் அதில் ஒரு பனி மலையும் இருந்தன. மலையின் அடிவாரத்தில் இருந்த கரையில் ஐந்து பெங்குவின்களும் ஒரு நீர் நாயும் குழுமியிருந்தன. அவை என்ன பேசினாலும் சத்தம் கண்ணாடியைத் தாண்டி வெளியே வரப்போவதில்லை. அலுவலகத்திற்கு போன் போட்டு உடல்நிலை சரியில்லை, இன்று வரவில்லை என்று சொல்லத் தோன்றியது குமாருக்கு. எந்த ஒரு பொய்மையையும் அவன் குரலை வைத்தே மேலாளர் கண்டுபிடித்துவிடக்கூடியவர். போதாக்குறைக்கு பியூன் யாரையாவதும் அனுப்புவார். இன்றைக்கு என்னென்ன வேலை? இன்றைக்குச் செய்ய வேண்டிய வேலை ஒன்று இருந்தது. அதை இன்றைக்குச் செய்யாமல் விட்டால் உலகம் அழிந்துவிடாது. அழிவதாக இருந்தால் இளவரசி பெண் பார்ப்பு விழாவிற்கு திடீர் விடுமுறை போட்டபோதே அழிந்திருக்க வேண்டும். அற்ப விஷயங்களுக்காக அழிந்து என்ன பயன்?

தன் அளவைவிடப் பெரிதான பூட்ஸை ஒற்றைக் காலில் அணிந்துகொண்டு நீந்தப் பார்க்கும் வாஷ்பேசின் போலக் கதவருகில் காரை பெயர்ந்திருந்தது. மனிதன் உருவாக்கிய தற்செயல் மேகம் போலப் பல வாரங்களாக வடிவம் மாறாமலே இருந்தது காரை. இந்தத் தொலைவிலிருந்து

பார்க்கக் கறுப்பா சிவப்பா என்று தெரியாத ஒரு எறும்பு, காரைப் பிரதேசத்தை கவனமாகத் தவிர்த்து மொத்தப் பரப்பையும் சுற்றிவளைத்துச் சென்றுகொண்டிருந்தது. நேர்ப் பாதையில் செல்லத் தேவையில்லாத அளவிற்கு அவசரம் இல்லை போல; அவசரம் எல்லாம் நமக்குத்தான் போல என்று விரக்தியுடன் நினைத்துக்கொண்டான் குமார்.

அவனுக்கு ஒன்று புரியவேயில்லை. ஒரு விலங்கு என்ற முறையில் உயிர் பிழைத்திருப்பதுதானே மனிதனின் வேலை? காட்டில் வேட்டையாடி உண்டபோது அவன் நன்றாகத்தானே இருந்தான்? நாகரிகம் மனித வாழ்க்கைக்கு அப்படி என்ன மதிப்புக் கூட்டலைச் செய்துவிட்டது? சக்கரத்தையும் நெருப்பையும் கண்டுபிடித்தது போதாதா? எதற்காக இத்தனை கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள், கோடானுகோடி சிக்கல்கள்? மனித அறிவின் உன்னதம் என்று சொல்லிக்கொண்டு ஒரு ராட்சத அபத்தத் தொழிற்சாலையை முடுக்கிவிட்டுவிட்டோம். விளைவு? மற்ற விலங்குகள் மனிதனை நம்பிச் சிக்கலில்லாது வாழ்க்கை நடத்துகின்றன. நாம்தான் ஆறறிவு என்ற பெயரில் அறிவுக்கொன்றாக அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறோம். வேலியில் போகிற ஓணான் நமக்குள்தான் உறங்கிக்கொண்டிருந்திருக்கிறது. நல்ல கூத்து இந்த அறிவு.

குமாருக்கு சக ஊழியர்கள் அனைவரும் மரவுரி தரித்துத் தன்னுடன் காட்டில் வேட்டையாடிக்கொண்டிருப்பது போன்ற காட்சி மனதில் தோன்றியது. சுடிதாரிலேயே சுண்டியிழுக்கும் இளவரசி மரவுரியில் கிறங்கடித்தாள். மற்றவர்களின் மும்முரம் கூர்தீட்டிய கம்பைக் கையில்

தூக்கிப் பிடித்துக்கொண்டு கரடியைப் பின்தொடர்வதிலேயே இருந்தது. வழக்கமாக ஏதாவதொரு சாக்கு வைத்துக்கொண்டு அவளுடன் பேச்சு வளர்த்தும் சுகுமாரே காலடிச் சத்தம் எழுப்பக்கூடாததில் உறுதியாக இருந்தான். இளவரசி அதே கோலத்தில் முன்னேறிச் சென்றாள், ஆனால் குமாரின் கவனமெல்லாம் அவள் மேல்தான் இருந்தது. அவன் அவளை வெவ்வேறு உடைகளில் கற்பனை செய்து பார்த்திருக்கிறான் என்றாலும் மரவுரி அவனுக்குப் புதிது. குமார், இளவரசி, சுகுமார், – இல்லை, இளவரசி, குமார், சுகுமார், – லிங்கேசன் சார், வேலு சார் எல்லோருமாகச் சேர்ந்து கரடியை அடித்தாயிற்று. அதை நெருப்பில் வாட்டி சாப்பிட்டுப் பசியும் ஆறியாயிற்று. அடுத்து என்ன? சுகுமார் இளவரசியை அணுகுகிறான். இளவரசி உறுமிச் சபித்து அவனை விரட்டுகிறாள். லிங்கேசன் சாரும் வேலு சாரும் நிஜத்தில் தமது வயது காரணமாகக் கல்பனாவைப் பொருட்படுத்தாதவர்கள். ஆனால் ஒரு அழகிய இளம்பெண் மரவுரியில் இருந்தால் எந்த நடுத்தர வயது ஆண்களுக்குத்தான் சபலம் ஏற்படாது? திருமணம் நிச்சயமாகிவிட்ட பாதுகாப்பு, கற்காலத்தில் செல்லாது. வேட்டையாடி வேட்டையாடி உடல் இந்த இருவருக்கும் கல்லாகியிருந்தது. ஒரே சமயத்தில் இருவரையும் கையாள்வது கடினம்... குமாருக்கு இந்தச் சிந்தனையோட்டம் கசப்பூட்டியது. அநாவசிய நினைவுகளைக் கிளறியது. இன்றைக்கு அலுவலகத்திற்குப் போகாமல் இருக்க இன்னொரு அரூபக் காரணம் கிடைத்தாற்போல் ஆனது.

ஜன்னல் சட்டத்து ஆணியில் மாட்டியிருந்த சைக்கிள் சாவி எந்த உணர்ச்சியுமின்றி குமாரை வெறித்தது. கடலில் ஊறும் பனி மலையை மேஜை மேல் வைத்து உருட்டத் தொடங்கினான் குமார். ஒரு பெங்குவினின் மண்டையிலிருந்து ஆகாயம் வரை விரிசல் விரிந்திருந்ததை அப்போதுதான் கவனித்து எரிச்சலடைந்தான். இது எப்போது? விடுமுறை கிடைக்காத சாத்தியங்கள் சட்டெனக் குறைந்துவிட்டது போலிருந்தது... ஏதோ திடீர் வாசனை. மண். பலமாகத் தூறிக்கொண்டிருந்தது. வானமும் அதனால் அறையும் இருண்டிருந்ததை அவன் கவனித்திருக்கவில்லை. வேலைக்குச் செல்ல விடாத சோம்பல் வெறுப்பு, மழையால் வலுத்தது. நாட்களை எண்ணினான் குமார். ஞாயிறு வருவதற்கு இன்னும் இரு நாட்கள். தன் மொத்த வாழ்க்கையுமே ஞாயிறுகளை நோக்கிய தளர்ந்த நடையாக அவனுக்குத் தோன்றியது. ஒருவேளை இளவரசிக்குத் திருமணம் நிச்சயமாகாமல் இருந்திருந்தால் அலுவலகம் இவ்வளவு கசக்காதோ என்று கேட்டுக்கொண்டு உடனே அந்தக் கேள்வியை நிராகரித்தான். இளவரசியுடனான உறவு, வேலையுடன் இருந்த உறவு போல் தொடக்கத்திலேயே சபிக்கப்பட்டிருந்தது. நாம் இப்போது எதிர்கொண்டுவருவது வாழ்க்கை. வாழ்க்கையிலிருந்து யாரையும் யாராலும் காப்பாற்ற முடியாது. சக அறைவாசிகளைப் பொறாமைப்படவைத்த பிச்சை சம்பளத்தையும் தாண்டி வேலை இருப்பதும் ஒன்று, இல்லாததும் ஒன்று என்னும் தத்துவ மனப்பான்மைக்குத் தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்துவிட்டதாக நினைத்துக்கொண்டான் குமார்.

"பழைய பேப்பர், இரும்பு சாமான்!"

அமைதிக்குள் தலையை நுழைத்த கூக்குரலைக் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தான் குமார். இருட்டியது இருட்டியதாகவே இருந்தது. ஆனால் தூறல் நின்றுவிட்டிருந்தது. தெருவில் தனியாக வாடிக்கை வியாபாரி பாலிதீன் உறையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு தள்ளுவண்டியை சாவகாசமாகத் தள்ளிச் சென்றுகொண்டிருந்தான். மழை நனைத்த தரையில் தள்ளுவண்டி இரும்புகள் தடதடக்க நகர்ந்தது. வியாபாரி வண்டியைத் தள்ளுவதைவிட அதன் கரங்களைத் தட்டாமாலை சுற்ற விரும்பியது போல் பிடித்துக்கொண்டு பின்தொடர்வது போலிருந்தது. பண்டங்களைக் கூவியபடி எந்தப் புறமும் திரும்பிப் பார்க்காமல் போய்க்கொண்டே இருந்தான் வியாபாரி, தெருக் கோடி மரத்தில் வண்டியும் தானுமாய்க் கரையும் வரை.

சொந்த ஜென் கதைகள்

நிரப்புதல்

துறவி ரியோகான் ஒரு மலை உச்சியிலிருந்து சிறு கற்களை ஒவ்வொன்றாக எறிந்துகொண்டிருந்தார். அவரை சாப்பிட அழைக்க வந்த இளம் சீடன், "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் குருவே?" என்று கேட்டான். "இந்தப் பெரும்பள்ளத்தை நிரப்பிக்கொண்டிருக்கிறேன்" என்றார் ரியோகான். "உங்களுக்கென்ன பைத்தியமா? இது சாத்தியமா?" என்றான் சீடன். அதற்கு ரியோகான், "அதை நீ பள்ளத்திடம் அல்லவா கேட்க வேண்டும்?" என்றார்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் நாமே செய்வதாக நம்புவது முட்டாள்தனம்.

ஊற்றுதல்

மெய்ஜி காலத்து ஜென் குருவான தனகவாவைப் பார்க்க ஒரு பல்கலைக்கழகப் பேராசியர் வந்தார். ஜென் பற்றிய முழுமையான விளக்கத்தை அளிக்கும்படி தனகவாவிடம் பேராசிரியர் கேட்டுக்கொண்டார்.

தனகவா பேராசிரியருக்காக ஒரு தேனீர்க் கோப்பையை எடுத்துவைத்து அதில் தேனீரை ஊற்றினார். கோப்பை நிரம்பியது. ஆனால் தனகவா நிறுத்தாமல் ஊற்றிக்கொண்டிருந்தார். பேராசிரியர் திகைத்துப் போய் பார்த்துக்கொண்டிருந்தார். தனகவா இன்னொரு குடுவையில் மேலும் தேனீர் வரவழைத்து தொடர்ந்து அதே கோப்பையில் நிரம்பி வழிய ஊற்றினார். பேராசிரியர் பொறுமையிழந்து, "அதுதான் நிரம்பிவிட்டதே. பிறகு ஏன் விடாமல் ஊற்றுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"வாழ்வில் அபத்தங்களுக்கு முடிவே கிடையாது" என்றார் தனகவா.

சுமத்தல்

ஒரு மூத்த துறவியும் இளம் துறவியும் மடாலயத்திற்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர். மழை பெய்து சாலைகளில் குட்டைகளை உருவாகியிருந்தன. ஓர் இடத்தில் ஓர் அழகிய இளம்பெண் ஒரு குட்டையைத் தாண்டிச் செல்ல முடியாமல் நின்றிருந்தாள். மூத்த துறவி அவளிடம் சென்று அவளைத் தூக்கிக்கொண்டு சாலையின் மறு பக்கத்தில் இறக்கிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

"துறவிகளான நாம் ஒரு பெண்ணைத் தொடலாமா?" என்று இளம் துறவி மூத்த துறவியிடம் கேட்டார். "இது தெரிந்தே கேட்கிற கேள்வி மாதிரி இருக்கிறதே" என்றார் மூத்த துறவி.

அறிந்ததைக் கடந்து புதியதை அறி என்று ஜென் கூறுகிறது.

துறவைத் துறத்தல்

ஞானி ஷிமிஸு அவரது அறிவிற்காக ஜப்பான் முழுவதும் மதிக்கப்பட்டார். ஒரு நாள் அவர் தமது சீடர்கள் அனைவரையும் அழைத்தார். "நான் துறவை அறிந்துவிட்டேன். இனி இந்த வாழ்க்கை எனக்குத் தேவையில்லை. இல்லற வாழ்க்கையில் ஜென்னைத் தேடப்போகிறேன்" என்று ஷிமிஸு அறிவித்தார். பின்னர் மடாலயத்தை நடத்தும் பொறுப்பைத் தமது தலைமை சீடரிடம் அளித்துவிட்டு வெளியேறினார். கானகத்தை விட்டு நகரத்திற்குச் சென்ற ஷிமிஸு, திருமணம்

செய்துகொண்டு ஒரு குழந்தை பெற்றுக்கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள் அவர் மடாலயத்திற்கு ஒரு சிறு பையுடன் திரும்பி வந்தார். அவரை யாரும் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை.

உண்மைக்காகக் காத்திருத்தல்

ஹச்சிபெய் என்ற ஞானிக்கு ஒரு இளம் சீடன் இருந்தான். "குருவே, உண்மை என்றால் என்ன?" என்று ஒரு நாள் சீடன் கேட்டான். "அடுத்த மாதம் சொல்கிறேன்" என்றார் ஹச்சிபெய். அதன் பின் அந்தச் சீடன் அதே கேள்வியை விடாமல் கேட்டுக்கொண்டிருந்தான். ஞானியும் அவன் கேட்கும்போதெல்லாம் "அடுத்த மாதம் சொல்கிறேன்" என்று பதிலளித்தார். சீடன் நம்பிக்கையுடன் முப்பதாண்டுகள் பொறுமையாகக் காத்திருந்தான். பிறகு ஹச்சிபெய் மரணப் படுக்கைக்குப் போனார். அப்போதும் சீடன் அந்தக் கேள்வியைக் கேட்டான். ஹச்சிபெய் புன்னகையை பதிலாக அளித்துவிட்டு இறந்தார். சீடனுக்கு அந்தக் கணமே ஞானம் வந்தது. இருந்தாலும் "இந்தப் புன்னகையை முப்பதாண்டுகளுக்கு முன் பூத்திருக்க வேண்டியதுதானே" என்று அவன் கேட்கத் தவறவில்லை.

வணக்கம் புத்தரே

ஒரு மூத்த துறவியும் அவரது இளம் சீடரும் காட்டில் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது எதிரில் இன்னொரு மூத்த துறவியும் அவரது இளம் சீடரும் வந்தார்கள். ஒரு மூத்த துறவி இன்னொரு மூத்த துறவியைப் பார்த்து "வணக்கம் புத்தரே" என்றார். அவரும் "வணக்கம் புத்தரே" என்றார். பிறகு இருவரும் வெவ்வேறு திசைகளில் செல்ல, ஒரு சீடர் "உங்களுக்கு அவரை முன்பே தெரியுமா?" என்று தனது குருவிடம் சந்தேகம் கேட்டார். "தெரியாது. ஆனால் எங்கள் இருவருக்குமே எதிரொலி விளையாட்டு தெரியும்" என்றார் துறவி.

புத்தரைக் கைவிடுதல்

பிரசித்தி பெற்ற காமாகுரா மடாலயத்திற்கு சீனத் துறவி ஹான் ஜிங் வந்திருந்தார். அவர் மிகவும் வயதான துறவி. பறவைகளின் கீச்சொலி, இலைகளின் சரசரப்பு, நீரோடையின் மெல்லிய ஓசை தவிர அமைதியாக இருந்த அந்த இடத்தைப் பார்த்ததும் ஹான் ஜிங்கிற்குப் பிடித்துவிட்டது. தியானம் செய்ய ஏற்ற இடம் என்று அந்தத் துறவி நினைத்தார். ஆனால் அந்த மடாலயத்தில் ஒரு ஈ இருந்தது. அவர் தியானம் செய்தபோது அந்த ஈ ரீங்கரித்துக்கொண்டே இருந்தது. அவரால் மனதை புத்தரிடம் செலுத்த முடியவில்லை. தினமும் தியானிக்க முயன்று முயற்சியைக் கைவிட்டார் ஹான் ஜிங். பிறகு ஒரு நாள் துறவிக்கு ஒரு யோசனை தோன்றியது. புத்தரைக் குறித்து தியானம் செய்வதைக் கைவிட்டு ஈயின்

ரீங்காரத்தைக் குறித்து தியானித்தார். அது அவர் நீண்ட காலத்திற்குப் பிறகு செய்த மிக ஆழ்ந்த தியானமாக இருந்தது. அதன் பிறகு அவர் புத்தரை நினைக்கவேயில்லை.

கல்வியின் போதாமை

குரு யான்ஷி தியானம் செய்வதற்காக மடாலயத்திற்கு வெளியே நீண்ட தூரம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சீடருக்கு யான்ஷியின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டது. ஒருமுறை யான்ஷி தியானத்திற்குக் கிளம்பியபோது சீடர் அவரைப் பின்தொடர்ந்தார். குரு காட்டை விட்டு வெளியேறி ஊரில் இருந்த ஒரு வீட்டிற்குள் நுழைவதைப் பார்த்தார். சிறிது நேரத்திற்குப் பின் அந்த வீட்டினுள் நுழைந்த சீடர், தமது குரு ஒரு பெண்ணுடன் தீவிர சல்லாபத்தில் இருந்ததைக் கண்டு அதிர்ந்தார். "குருவே, என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஏன், தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறாய்?" என்றார் யான்ஷி.

"இன்மையை முழுமையால் நிரப்புகிறேன்" என்று குரு சொன்னதாகவும் ஐதீகம் உண்டு.

திடீர் பழம்

ஒரு பயணி வயல்களின் வழியே
பயணித்துக்கொண்டிருந்தபோது புலி ஒன்று எதிரில் வந்தது.
அவன் தப்பியோட, புலி துரத்தியது. ஒரு உயர்ந்த
பாறையின் உச்சிக்கு வந்த பயணி, அதன் விளிம்பிலிருந்து
தாவி எதிரே இருந்த காட்டுக் கொடியைப்
பிடித்துக்கொண்டு தொங்கினான். அவன் தலைக்கு மேலே
புலி நின்று உறுமியது. அவனுக்குக் கீழே இன்னொரு புலி
அவனை சாப்பிடக் காத்திருந்தது. அந்தக் கொடி மட்டுமே
அவனைத் தாங்கியது. இரு சுண்டெலிகள் அந்தக்
கொடியை மெல்லக் கடித்துத் தின்னத் தொடங்கின.
அப்போது தன் கையருகே ஒரு ஸ்ட்ராபெரிப் பழம்
தொங்கிக்கொண்டிருந்ததை அவன் பார்த்தான். கொடியை
ஒரு கையால் பிடித்துத் தொங்கியபடி இன்னொரு கையால்
ஸ்ட்ராபெரியைப் பறித்துத் தின்றான். சீச்சீ, இந்தப் பழம்
புளிக்கும்!

பேனா

சட்டைப்பையில் பேனா இல்லாமல் நான் வெளியே
போவதில்லை. திடீரென யாராவது 'வாசகர்' – ரசிகர் –
எதிரில் வந்து புத்தகத்திலோ துண்டுச் சீட்டிலோ
ஆட்டோகிராப் கேட்டால் புன்னகையுடன்
கையொப்பமிட்டுத் தர பேனா இருக்காமல் போவது
எழுத்தாளனுக்கு அசிங்கம். செய்கிற வேலையெல்லாம்
கணிப்பொறி விசைப்பலகையில்தான். இருந்தாலும் எழுத்துத்

தொழிலுக்குப் பேனா ஒரு மகத்தான குறியீடு என்பதால் அதை நினைவுச் சின்னமாக வைத்திருக்கிறேன். காசோலையில் கையெழுத்துப் போடவும் பேனா இன்றியமையாதது.

பிறகு நான் வெளியே கிளம்பலானேன். என் மேஜை மேல் ஓர் அழகிய மர பென் ஸ்டாண்டு இருக்கிறது. தன்னைக் கொண்டு உருவாக்கப்படும் எதையும் அழகாக்கிவிடுவது மரத்தின் இயல்பு. அதில் சாய்ந்து நின்று தூங்கிக்கொண்டிருந்தது எனது பேனா. என் வலதுபக்கக் கை, எதிர்பார்ப்புடன் நீட்டப்பட்ட விரல்களுடன் பேனாவை நெருங்கியது. அப்போது திடீரென ஓர் இடைஞ்சல் – மகன். பேனாவை நோக்கிப் புறப்பட்ட கை ஒரு கணம் உறைந்து, தளர்ந்து பின்வாங்கியது.

"அப்பா, என்னுடைய பென்சில் டப்பாவைப் பார்த்தாயா?"

என்னுள் கோபம் பிரவகித்தது. ஒருவருடைய பென்சில் டப்பாவைத் தொலைப்பது ஒரு வேண்டாத தினசரிச் சடங்கு.

"அதை நான் ஏன் பார்க்க வேண்டும்? அதைப் பத்திரமாக வைத்துக்கொள்வது உன் பொறுப்புதானே?" – இது நான்.

"கிடைத்துவிட்டது."

"எங்கே இருந்தது?"

"பள்ளிக்கூடப் பையிலேயே இருந்தது."

கடைசியில் இன்றைய அன்றாடப் பிரச்சினைக்கு
இப்படியொரு ஜென்-தனமான முடிவு.

என் வலதுகை, விட்ட இடத்திலிருந்து பேனாவின் திசையில்
தொடர்ந்தது. விண்ணென்று பாதத்தில் வலி. "அம்மா!" என
அப்படியே பாதிக்கப்பட்ட காலைப் பிடித்துக்கொண்டு
சில்லிடும் பிப்ரவரி மாத மொசைக் தரையில்
உட்கார்ந்துவிட்டேன். ஒரு கூரிய முனை காலில் குத்திட்டு
நின்றிருந்தது. மிகச் சிறிய முனை. முந்தைய தினம்
வெறுங்கைகளால் பாதியாக உடைத்துப்போட்ட இயங்காத
டிவிடிதான் ஒரு சிறிய கூர்துண்டாக என் வாழ்க்கையில்
மறுபிரவேசம் செய்திருக்கிறது. அது குத்திய இடத்திலிருந்து
ஒரு துளி ரத்தம் பெருகி வந்தது. வலி ஒரு சின்னஞ்சிறு
நாய்க்குட்டியாய் அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.
நான் சுதாரிப்பதற்குள் முதல் துளி ரத்தம் என் வலதுகைக்
கட்டைவிரல் ரேகையில் ஈஷியது. நான் அதைத் தரையில்
துடைத்துவிட்டு மீண்டும் கட்டைவிரலைப் பார்த்தேன். ரத்த
அபிஷேகத்தைக் கட்டைவிரல் கிட்டத்தட்ட
மறந்துவிட்டிருந்தது அல்லது மறப்பதற்குத் தீவிரமாக
விரும்பியதாய்க் காட்டிக்கொண்டது.

அந்தக் கட்டைவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும்
இடையே டிவிடி துண்டை இறுக்கமான 'சாண்ட்விச்'
ஆக்கிக் குப்பைத் தொட்டியிடம் எடுத்துச் சென்றேன்.
எங்கள் வீட்டுக் குப்பைத் தொட்டி, வருவோர் பார்வையில்
படாமல் சமையலறையின் ஒரு மூலையில்

வைக்கப்பட்டிருக்கும். அதனுடைய திறந்த வட்ட வாய்க்கு நேர் மேலே கட்டைவிரல்-ஆள்காட்டி விரல் சேர்க்கையை வைத்துக்கொண்டு விரல்களைப் பிரித்தேன். டிவிடி துண்டு இரவின் இருளில் ஓசையின்றி உதிரும் பனி போல் சத்தமில்லாமல் சமையல் குப்பையில் விழுந்து மறைந்தது. விரல்களைப் பார்த்தேன். இறுகப் பிடித்திருந்த டிவிடி துண்டு அவற்றில் ஒரு மணல் துகளைக் கிடத்தும் அளவிற்குப் பள்ளத்தை ஏற்படுத்தியிருந்தது. அருகில் சென்று உற்றுப் பார்த்தால் சிறு நிழலும் தெரியக்கூடும்.

பார்வை கணப்பொழுதில் மேஜைக்குத் தாவியது. அழுத்தினால் ரீஃபிலை நீட்டிக்கொடுக்கும் தலையை மின்னிக்கொண்டு அமர்ந்திருந்தது பென் ஸ்டாண்டில் பேனா. அதை நான் பாதி எடுப்பதற்குள் என்னென்னவோ நடந்துவிட்டது. ஆனால் ஒரு "Still Life" ஓவியம் போல் சலனமின்றி இருந்தது பென் ஸ்டாண்டு. சமீபத்திய நிகழ்வுகளுக்கு சாட்சியாக இருந்த பின்னும் ஒரு ஞானியின் மௌனத்தைக் கடைபிடித்து வாழ்வியல் சம்பவங்களை எதிர்கொள்ளும் அணுகுமுறையின் கலையை நாம் ஜடப்பொருட்களிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஏதோ ஞாபகத்தை மீறி இடதுகையால் வாஷ்பேசின் குழாயைத் திறந்திருந்தேன் – சரியாகவே. ரத்தம் பட்ட கையோ வலது. ஒன்றையொன்று கட்டிப் புரண்டுகொண்டிருந்த வலதுகை விரல்களின் (இனி 'விரல்கள்') மேல் குழாய் தவற முடியாத கடமையாய் ஆவேசமாக நீரைப் பாய்ச்சிக்கொண்டிருக்கையில் இடதுகை தானாக டெட்டால் சோப்புக் கூழ் டப்பியை எடுத்து

வலதுகைக்கு மேலே வைத்து அதன் தலையை அமுக்கியது. தன்னுடைய வலையின் இழையைப் பின்னிக்கொண்டே தொங்கி இறங்கும் சிலந்தி போல், ஆனால் தயங்கித் தயங்கி, கெட்டியாக இறங்கியது சோப்புக் கூழ். பின்னர் சட்டென ஒரு முடிவுக்கு வந்தது போல் தயக்கத்தை உதறி விரல்களின் மேல் விழுந்தது. ஏற்கனவே கட்டிப் புரள்வதில் மும்முரமாயிருந்த விரல்கள் சோப்புக் கூழ் பட்டதில் மேலும் உற்சாகமடைந்தது போல் தெரிந்தது. கைகள் சுத்தமாயின.

இரு கைகளிலிருந்தும் புது ஈரம் சொட்டச் சொட்ட கைகளின் துயர் துடைக்கத் துண்டு தேடினேன். வெண்ணிற பூத்துவாலை தனக்குத் சம்பந்தமில்லாத ஒன்று நிகழ்ந்துகொண்டிருப்பது போல் கொடியிலிருந்து வேடிக்கை பார்த்தபடி இருந்தது. முழு ஈரத்தையும் துவாலையின் மீது சுமத்த மனமின்றிக் கைகளை உதறியவாறு அதை நெருங்கினேன். இடதுகை துவாலையைக் கொடியில் வைத்தே ஏந்திக்கொள்ள, வலதுகை அது ஏற்படுத்திய குழிவில் புரண்டு புரண்டு ஒற்றிக்கொண்டது. அடுத்து இடதுகை.

துடைத்த கைகளின் எஞ்சிய நுனி ஈரத்தை பேண்ட்டின் தொடைப் பகுதியில் வருடி இடமாற்றிய பின் எனது சற்றைக்கு முந்தைய இலக்கை அணுகினேன். ஈரம் முழுவதுமாய் விடைபெற்று அதன் குளிர்ச்சி மட்டுமே மீதமிருந்த வலதுகையை பென் ஸ்டாண்டில் இருந்த பேனாவை நோக்கிச் செலுத்தினேன். பேனாவை எடுக்கவும் செய்தேன். அது என் சட்டைப்பையை அடைய சுமார்

ஒன்றேகால் அடி தொலைவே இருக்கையில் ஒரு திடுக்கிடுத்தும் குரல். பரிச்சயப் பெண் குரல். மனைவியின் தவிர்க்கவியலாத குரல். எனக்குத் தொலைபேசியாம். கிட்டத்தட்ட விரக்தியானது என்றே சொல்லிவிடப்படத்தக்க ஒரு புன்னகையுடன் பேனாவை மேஜை மீது வைத்துவிட்டு அகன்றேன். பேனா மீண்டும் சலனமின்றிக் கிடந்தது. ஆனால் இம்முறை பென் ஸ்டாண்டிலன்றி நேரடியாக மேஜை மேல். நடந்த சம்பவங்களால் பேனாவை பென் ஸ்டாண்டில் வைப்பதில் நான் நம்பிக்கை இழந்துவிட்டிருந்தது போல் தெரிந்தது.

"?"

"..."

"..."

"?"

"..."

"..."

"..."

அழைப்பு முடிந்து பக்கத்து அறையிலிருந்து வெளியே சென்று மேஜைக்குத் திரும்பி வந்தேன். சிறிது நேரம்

பேனாவையே பார்த்துக்கொண்டிருந்தேன். பிறகு பேனாவை எடுத்து சட்டைப்பையில் வைத்துக்கொண்டு வீட்டிலிருந்து வெளிக்கிட்டுத் தெருவின் நிஜத்தில் கலந்தேன்.

காணோளி விவகாரம்

> பிப்ரவரி 6ந்தேதி கர்நாடக சட்டமன்ற அவையில் மூன்று பா.ஜ.க. அமைச்சர்கள் செல்போனில் ஆபாச வீடியோ பார்த்தார்கள். இதனையொட்டி எழுந்த சர்ச்சையையடுத்து இவர்கள் மூவரும் பிப்ரவரி 8ந்தேதி ராஜினாமா செய்தார்கள். – செய்தி

பலருக்குக் கர்நாடக பா.ஜ.க. அமைச்சர்கள் சட்டமன்றத்தில் பாலியல் படம் பார்த்த பிரச்சினையின் தீவிரம் புரியவில்லை. காணோளியின் இயல்பான ஆபாசம் போக, வரலாற்றுப்பூர்வமாக சட்டமன்றம் என்ற இடத்தின் ஆபாசத்தன்மையைப் பற்றிக் கூறவே தேவையில்லை மற்றும் கன்னடமே கேட்க ஆபாசமானதொரு மொழி என்பதால் இந்த நிகழ்வு மும்மடங்கு ஆபாசமாகிறது.

ஆபாசம் 1 – காணோளிச் சம்பவம் நிகழ்ந்தது ஒரு சட்டமன்றத்தில் என்பதைப் புதிதாக நிரூபிக்கத்

தேவையில்லை. ஆபாசம் 2 – இங்குள்ள அரசியல்வாதிகளிடம் இருப்பது போல மொழிப் பற்றும் மொழி அறியாமையும் கலந்த ஒரு மொழிப் பற்று கர்நாடகத்திலும் உள்ளது. இதன் வாயிலாக அவர்கள் பார்த்தது ஆபாச கன்னடப் படமாகத்தான் இருக்க வேண்டும். இது நம்மைச் சற்று விரிவான இந்த மூன்றாவது புள்ளிக்கு எடுத்துச் செல்கிறது.

ஆபாசம் 3 – காணோளியில் நமக்குக் காணக் கிடைப்பது ஒரு கியூபிச ஓவியத்தில் கிடைப்பது போன்ற அரைகுறையான ஒரு சித்திரமே. ஒரு கியூபிச ஓவியன் அவன் வரையும் படத்தில் மனித உறுப்புகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தூவிப் புதிராக்குகிறான். கவிதைக்கும் ஓவியத்திற்கும் நெருங்கிய உறவு உள்ளதால் கவிதைக்கும் உரிய புதிர்த்தன்மை இது. பௌலோ பிகாசோ, பெர்டினாண்டு லெஜர் போன்ற கியூபிச ஓவியர்கள் வரைந்த நிர்வாண ஓவியங்களை இன்றைய செய்தித்தாள்களின் ரயில் விபத்துப் புகைப்படங்களின் முன்னோடிகள் எனலாம்.

இப்புதிர்த்தன்மையையும் மீறி காணோளியில் நடப்பதை நாம் ஊகிக்க முடிவது சொந்த ஏக்கத்தால் உந்தப்பட்ட கற்பனையின் வலிமை மட்டுமல்ல, காட்சி ஊடகத்தின் பலமும்கூட. இந்தக் காணோளியில் flesh toneகளின் நடமாட்டத்தை வைத்து காட்சித் தொடரை மனதிற்குள் இட்டு நிரப்ப முடிகிறது. அப்படிக் கிடைத்த சித்திரத்தைக் கொண்டு பார்த்தால் இது மைசூர் மஜ்ஜிகே என்ற பாலியல்

படத்தில் வரும் காட்சியாகும். மைசூர் மல்லிகே ஒரு தம்பதியினர் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் தங்கள் படுக்கையறைக் காட்சிகளைப் பதிவு செய்வதைப் பேசுகிறது. வணிக ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் கன்னட சினிமா இருக்கும் நிலையில் இன்றைய தேதிக்கு அதிகம் காணப்பட்ட கன்னடப் படம், பாலியல் புனைவு வகைப்பட்ட மைசூர் மஜ்ஜிகேதான் என்று கன்னட திரைப்படத் துறை புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சபாநாயகரின் பேச்சொலியை விலக்கி காணோளியிலிருந்து வெளிப்படும் ஒலியை மட்டும் கவனமாய் தனிப்படுத்திக் கேட்டால் "ஈவாகே இல்லி ஜரூராகி பன்பிட் அதனெ தெகது இதல்லி பிட்தீரா"[1], "ஸ்நானா ஆயித்தா"[1] போன்ற வசனங்களைக் கேட்கலாம். இவ்வசனங்கள் மைசூர் மஜ்ஜிகேயில் வருபவையே.

உடலுறவை வெகுஜன நுகர்வுக்காக அழகியல் ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான[2] சமரசங்களுடன் காட்சிப்படுத்துதல், பெண்ணை சமத்துவம் பேசுகிற, கவிதை எழுதுகிற வெறும் பெண்ணாகப் பார்க்காமல் சுவாரசியமான பொருளாகப் பார்த்தல் உள்ளிட்ட சமூக-கலாச்சார அம்சங்களின் பக்கம் நான் போக விரும்பாத அதே சமயத்தில், 'காணோளி' என்ற சொல்லின் பிறப்பியல் குறித்த புதிய தெளிவு கிடைத்திருப்பதில் எனக்கு மகிழ்ச்சி.

அமைச்சர்கள் பாலியல் காட்சிகளைச் சட்டமன்ற அவையில் கைபேசியில் பார்த்தது வம்புக்கு அழைப்பு விடுக்கும் செயல். இவர்கள் அலுவலக நேரத்தில் அதே

கைபேசியில் கிரிக்கெட்டைப் பார்த்திருந்தால் அல்லது ஆபாச மின்னூல் படித்திருந்தால் தம் பதவியைத் துறக்க வேண்டியிருந்திருக்காது. இது ஏன் என ஆழ்ந்து சிந்தித்தால் திரும்பத் திரும்ப காட்சி ஊடகத்தின் பலத்தில்தான் வந்து நிற்கிறது.

1 30 நாட்களில் கன்னட பாஷை, 1971, பாலாஜி பப்ளிகேஷன்ஸ்
2 My Speech to the Graduates, 1979, New York Times, Woody Allen

இயற்கைவழி பாலின சமத்துவத்தின் இன்றைய தேவை

அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு என்பார் தாத்தா
நீ படித்து என்ன ஆகப்போகிறது என்பார் அப்பா
படித்த திமிர் என்கிறான் கணவன்
எல்லாம் என் நேரம்.

- சொந்த கவிதை

It is amazing how complete is the delusion that beauty is goodness.

- Leo Tolstoy, The Kreutzer Sonata

நடப்புக் காலத்தில் எல்லாமே மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுவருகிறது. அதன்வழியில் ஆணாதிக்கவாதம் என்ற புராதன மதிப்பீடும் இன்றைய யுகத்திற்கேற்ப நிகழ்நிலைப்படுத்தப்பட வேண்டும். எப்படி நாம் மரபை முழுவதுமாக நிராகரித்துவிடாமல் அதன் ஆக்கபூர்வமான அம்சங்களை வைத்துக்கொள்கிறோமோ, எப்படி நம்மில் சிலர் கடவுள் நம்பிக்கை இல்லாதபோதிலும் கோவில்களை ரசிக்கிறோமோ, அதே போல ஆணாதிக்கவாதத்தின் எதிர்மறையான அம்சங்களை ஆராய்ந்தறிந்து நீக்கிவிட்டு நல்லவைகளை மட்டும் வைத்துக்கொண்டு புதிய அரசியல் பொருத்தப்பாடுகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அது ஆண் என்ற ஓர் இனத்தின் அடிப்படை அடையாளம் சார்ந்த தத்துவம் என்பதன் வெகுஜன புரிபடலுக்கு வழிகோல வேண்டும்.

முதலில், ஆண் ஏன் ஆதிக்கம் செலுத்தக்கூடாது? ஆளுவதில் பெண்ணுக்குள்ள உரிமை ஆணுக்கும் உள்ளதுதானே? என்று நாம் தர்க்கத்திற்காவது கேட்டுக்கொள்ளலாம். இன்று கல்வித், தொழில்துறை, மருத்துவம், கலை-இலக்கியம், அரசியல், அறிவியல்-தொழில்நுட்பம், குற்றம் என எங்குமெதிலும் பெண்கள்

இருக்கிறார்கள். எழுத்தாளர்கள் இருப்பது போல் பெண் எழுத்தாளர்களும் கவிஞர்கள் இருப்பது போல் பெண் கவிஞர்களும் இன்றைக்கு உருவாகிவிட்டார்கள் (அதுவும் ஔவையார் வகையறா அல்ல, பாப்லோ நெரூடா வகையறா). சமூக அதிகாரப் பகிர்வில் 95-05 என்ற பங்குநிலை மாறி 60-40 என்று கிட்டத்தட்டிய சமநிலை அடையப்பட்டுள்ளது. இதை நேர்மையான பின்ஆணாதிக்கவியல்வாதிகள் (feminists) யாரும் மறுக்க முடியாது.

அரசியல் பிரச்சினைப்பாடுகள் ஒருபுறமிருக்க, ஆண்கள் என்கிற முறையில் நாம் ஏன் ஆணாதிக்கவாதத்திற்கு ஒரு கவர்ச்சிகரமான பெயரை இட்டு மீளறிமுகம் செய்யக்கூடாது (முதலில் அதை ஒரு சித்தாந்தத்திற்குரிய மரியாதையைத் தந்து 'ஆணாதிக்கவியல்' என்று அழைப்போம்)? ஏனெனில் ஆணாதிக்கவியல் குறுகிய உலகப் பார்வையுள்ள சில ஆண்களிடம் சிக்கியிருக்கிறது. அவர்களிடமிருந்து அதை மீட்டு அனைத்து ஆண்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு பொது தத்துவார்த்த மரபின் நீட்சியாக அதை பரவலாக்கப்படுத்த வேண்டும். இது நம்மைப் போன்ற படித்த அறிவுஜீவிகளின் கையில் இருக்கிறது.

ஆணாதிக்கவியல் ஒரு தோல்வியுற்ற கடவுளாகும். அதிகாரபூர்வமாக அது ஏறத்தாழ வழக்கொழிந்துவிட்டது. திரைப்படங்களில் வெறும் வெற்றிக்கான வணிக "ஃபார்முலாவாகவும்" ஆணின் பாதுகாப்பின்மை உணர்வில் பிறக்கும் வெற்று மிரட்டல்களாகவும் மட்டுமே அதை நாம் இன்று பார்க்க முடிகிறது. இந்தச் சித்தரிப்பானது

எந்தவொரு உண்மை நிலையின் கொண்டாட்டப் பிரதிபலிப்பாகவும் இல்லாமல் ஆண் நனவிலியின் ஏக்கத்தை வெளிப்படுத்தும் படிமங்களின் தட்டையான தொகுப்பாக நீர்த்துவிடுகிறது. 'ரொட்டி ஜித்தன்' என்ற பங்கை ஒருகாலத்தில் தனியாக ஆற்றிய ஆண் இனம், நடப்புக் காலத்தில் அந்தப் பங்கு 'தாய்க்குலம்' என்ற பெண் இனத்தால் சிறுத்துவருவதன் கையாலாகாத சாட்சியாகக் கிடக்கிறது. ஆண் தனது இனத்தைப் பெருக்கிக்கொள்ள உருவாக்கப்பட்ட அமைப்பான குடும்பம் என்பதில் ஏற்படும் குற்றங்களைத் தடுக்க வந்த சட்டங்கள் ஆண் இனத்தையே அதிகளவு தண்டிக்கின்றன.

பெண்மை மட்டும் பல சமூகப் பங்குகளை உள்ளடக்கிய பன்முக அடையாளம் போலவும் ஆண்மையானது பரிணாம வளர்ச்சியின் ஆதிக் கட்டங்களிலேயே தங்கிவிட்ட ஒற்றைப் பரிமாணம் கொண்ட முரட்டியல்பு போலவும் நிறுவ முயலப்படுகிறது. ஆண்மை என்பது கெட்ட வார்த்தையாகி ஆண் அவனது இயல்புக்குரிய நல்லதனங்களை எல்லாம் இழந்து பெண்ணையும்விடத் தாழ்ந்தவனாகப் பார்க்கப்படுகிறான். இது போன்ற அபாண்டமான சித்திரங்களை சில ஆண்களும் நம்பி ஏற்றுப் பரப்புவதுதான் சோகம். ஆண்மை ஆணின் தனித்துவமான பாலினத்திற்கு உரிய இயல்பு எனப் புரிந்துகொள்ளப்படவும் அவன் அதிகபட்சம் ஒரு "genial giant"ஆகப் பார்க்கப்படவும் ஆண் அறிவுஜீவிகளும் ஆணுக்கு முன்னுரிமை தரும் இயற்கைவழி பாலின சமத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கலந்த நம்பிக்கையைக் கொண்ட பெண் அறிவுஜீவிகளும் பாடுபட வேண்டும். ஒரு

சுற்றுலாத் தலம் விளம்பரப்படுத்தப்படுவது போல் ஆண்மையின் நல்நிஜங்கள் குறித்து சமூகத்திடமும் சில "reformist" ஆண்களிடமும் விளம்பரப்படுத்த வேண்டும். இல்லை என்றால் விரைவிலேயே ஆண்மை என்பது வெறும் மோட்டார்சைக்கிள் விசயமாகிவிடும்.

பல முகமிலி பிம்பங்கள் கூட்டிணைந்த சமூகம் என்கிற அமைப்பு, பெண் எனும் பிம்பத்தை பலவீனமானதாகக் காட்டுகிறது. பெண்ணுக்குள்ள 'பொறுப்புச் சுமை', புற அழகு, குறிப்பாக உடல் சார்ந்த பலவீனம் ஆகியவை இந்த பலவீன நிலையின் அம்சங்களாக முன்வைக்கப்படுகின்றன. ஆயினும் பொறுப்பு, அழகு, பலவீனம் ஆகிய எதுவுமே இல்லாத ஏகப்பட்ட பெண்களை நாம் பார்க்கிறோம். அந்தந்தப் பெண்களுக்கு மட்டுமே பொருந்தும் இந்தக் குணாம்சங்கள் பெண் இனம் முழுமைக்கும் பொதுமைப்படுத்தப்பட்டு வழக்கமான ஆண்xபெண் இருமை நிலையைச் சுட்டி அந்தப் பலவீனத்திற்கு ஆண்தான் காரணம் என்பதாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இது நன்றாக இல்லை என்றால் அது மிகையாகாது.

ஆணின் இனப்பெருக்கத்தில் பெண்ணுக்குள்ள இடம் இன்றியமையாததாலேயே பெண்களுக்குச் சலுகைகள் அளிப்பதில் உள்ள தர்க்கத்தை ஆண்களில் ஒருவன் என்ற முறையில் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அவை பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்குத் தனி இருக்கை வரிசைகள் போன்ற வெறும் ஆறுதல் பரிசு விநியோகமாக நில்லாமல் ஆட்சியமைப்பில் 33% இடஒதுக்கீடு போன்ற

தூக்கிக்கொடுத்தல்களாகப் பெருத்துவிடுவதுதான் நம் முன் உள்ள நிஜமான, அவசரமான பிரச்சினை.

சம்பவ மதியம்

மதியத்தில் ஒரு நேரம். ஒரு பேருந்துக்காக அதன் நிறுத்தம் ஒன்றில் காத்திருந்தேன். பேருந்து என்னை நெருங்கப்போவதற்கு முன்னோட்டமாகப் பேருந்து வரும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. மணி இரண்டரை என்று சொன்ன கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். காலம் கனிய இன்னும் ஐந்து பத்து நிமிடங்கள் காத்திருந்தன. வெயிலில் காய்ந்துகொண்டிருந்த எதிர்வரிசையின் கடைகள் அவற்றின் உரிமையாளர்களுடைய மதிய உணவிற்காக மூடியிருந்தன. என் பக்கமெல்லாம் நிழல். என்னோடு நிழற்குடையும் சேர்ந்து நிழலை அனுபவித்துக்கொண்டிருந்தது.

அப்போது பக்கத்தில் தானும் பேருந்திற்காகக் காத்திருந்த ஒருவர். ஆளுயரம் இருந்தார், வயது நடுத்தரம். கோலம் போடத்தக்க அளவு சப்பட்டையான முகம். நுனி மட்டும் உள்ளிருந்து எட்டிப் பார்ப்பது போன்ற சிறு மூக்கு. "என் அப்பா செங்கல்பட்டு தாசில்தார் ஆபீசில் வேலை பார்த்தார். 1970இல் அவர் ரிடையர் ஆனதும் நான் இங்கே சென்னைக்கு வந்துவிட்டேன். சிங்கபெருமாள் கோவிலில் நிலம் இருக்கிறது. என் தெய்வாதீனம், நான் சென்னைக்கு வந்ததும் எனக்கு வேலை கிடைத்தது. மனைவி

ஹவுஸ்வைஃப். இரண்டுமே பிள்ளைகள். பெரியவன் எஸ்.ஆர்.எம்.மில் இன்ஜினியரிங் படித்தான். இங்கேயே ஒரு நல்ல படித்த பெண்ணாகப் பார்த்து கல்யாணம் செய்துவைத்தேன். இப்போது பெங்களூரில் வசதியாக இருக்கிறான். அவனுக்கும் இரண்டுமே பிள்ளைகள். சின்னவன் பாலிடெக்னிக் படிக்கிறான். அவனுக்குப் பாடுவதில் கொஞ்சம் ஆர்வம். போட்டியிலெல்லாம் பரிசு வாங்கியிருக்கிறான். நான் இருப்பது டபுள் பெட்ரூம் வீடு. சொந்த வீடுதான். வேளச்சேரி பஸ் ஸ்டாண்டிலிருந்து ஐந்து நிமிடம் நடக்க வேண்டும். நல்ல இடம். எல்லாமே பக்கத்திலேயே இருக்கிறது. ஆனால் மழை பெய்தால் நாறிவிடும். மற்றபடி அருமையான இடம். அங்கே எல்லோரும் நன்றாகப் படித்து ஓரளவு நல்ல நிலையில் இருப்பவர்கள். மாடர்னான ஏரியா. நாங்களும் மாடர்ன்தான். என் மனைவி கொஞ்சம் பழைய காலத்துப் பெண்பிள்ளை. மற்றபடி நாங்கள் ரொம்ப ஃபார்வர்டு. சின்னவன் எப்போதும் மொபைல்தான். நிறைய தோழிகள் இருக்கிறார்கள். சில நாட்களில் அவர்களை வீட்டுக்குக் கூட்டி வருவான். நான் அதையெல்லாம் கேட்டுக்கொள்ள மாட்டேன். 'எனக்கு உன் வயது புரிகிறது. என் வயதை நீ மதிப்பது போல் உன் வயதை நான் மதிக்கிறேன் – ' என்ன? 'உன் சுதந்திரத்தில் நான் தலையிட மாட்டேன். ஆனால் முக்கியமான டெசிஷன் மேக்கிங்கை உன் பெற்றோரிடம் விட்டுவிடு. நீ நன்றாக இருப்பாய், நான் கியாரண்டி.' நம் காலத்தில் நமக்கு இது மாதிரி விஷயத்தில் சாய்ஸ் இல்லை. பெற்றோர் பேச்சுதான் நமக்கு ஜி.ஓ., ஹெஹ்ஹெஹ்ஹே. அதனால் நமக்கு ஒன்றும்

குடிமுழுகிவிடவில்லை. என் மனைவி மாதிரி ஒருத்தி கிடைப்பது அபூர்வம். பிள்ளைகளை முழுக்க அவள்தான் வளர்த்தாள் (அவளுக்கு ஏற்கனவே பி.பி., கொலஸ்ட்ரால் இருக்கிறது. இன்னும் மூன்று வருஷங்களில் இதயநோய் வந்து பைபாஸ் செய்ய வேண்டியிருக்கும். அடுத்து எனக்கு ஹெர்னியா ஆபரேஷன், காடராக்ட் என மூன்று லட்சம் செலவாகிவிடும்). ஆனால் நம் சந்ததிகளுக்கு சாய்ஸ் இருக்கிறது. அதன் அருமை, அதன் வலிமை அவர்களுக்குத் தெரியுமா என்றால், எல்லா பிள்ளைகளுக்கும் தெரிவதில்லை. எத்தனையோ பேர் நாசமாகப் போகிறார்கள். பெரியவனுக்கு நானேதான் பார்த்துத் திருமணம் செய்துவைத்தேன். கைநிறைய சம்பளம், விக்கிரகம் மாதிரி குழந்தைகள். சின்னவனிடம் சொல்லிவிட்டேன், 'வெள்ளைக்காரியைத் தவிர யாரானாலும் உன் இஷ்டம்.' வெள்ளைக்காரி என்றால் கலாச்சார ரீதியாக ரொம்ப தூரம். நிற்காது. எனக்கு இன்னும் ஒரு வருஷம்தான் சர்வீஸ். மணலியில் மூன்று பெட்ரூம் வீடு கட்டிக்கொண்டிருக்கிறேன். முடித்தாயிற்று கட்டி. ரெஜிஸ்ட்ரேஷன் ஆயிற்றென்றால் பால் காய்ச்சிவிடலாம். அதற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறேன். ஆட்டோவில் போகலாம் என்றால் ஆட்டோவிற்கே விலை சொல்கிறான்" என்பது போன்ற முகபாவத்துடன் என்னிடம் ஏதோ பேச வாயைத் திறக்கத் தொடங்கினார்.

அந்த சமயம் பார்த்து என் கைபேசி ஒலித்தது. நான் சற்று நகர்ந்து நின்றுகொண்டு கைபேசியை எடுத்தேன். காதில் அதை வைத்து எதிர்முனையிடம் இப்படிக் கேட்டேன்:

"ஹலோ, யார் பேசறது?"

சம்பவ மாலை

புதுவையில் ஒரு இலக்கிய நிகழ்வை முடித்துக்கொண்டு திரும்பிய எனக்காக வீட்டில் ஒரு கடிதம் காத்திருந்தது. என் மேஜை மேல் கிடந்த சின்னஞ்சிறு வெளிர்நீல நிற அஞ்சல் உறையது. எனக்கு முன்பு அதை யாருமின்னும் பிரிக்கவில்லை. எனக்கு வரும் கடிதங்களை வேறு யாராவது பிரித்தால் வீட்டை சந்தி சிரிக்கச் செய்துவிடுவேன் என்பதால் இந்த ஏற்பாடு.

கடித உறையில் ஜப்பானிய அஞ்சல் தலை ஒட்டப்பட்டிருந்தது. உள்ளே ஜப்பானியர்களுக்கே உரிய நேர்த்தியான கையெழுத்தில் சீரான ஆங்கிலம். அதைப் படிக்கத் தொடங்கினால் இப்படி இருந்தது -

அன்புள்ள பேயோன் அவர்களுக்கு,

மாலை வணக்கம். உங்களுக்கு என்னைத் தெரியாது, ஆனால் சற்று நேரத்தில் தெரிந்துகொள்ளத்தான் போகிறீர்கள். 1997ல் உங்கள் முதல் ஜப்பான்

பயணமாக க்யோட்டோவிற்கு வந்தபோது எங்கள் வீட்டினருகே இருந்த கொமாச்சி விடுதியில் தங்கினீர்கள். நீங்கள் தங்கியது அங்கெனினும் சாப்பாடு எங்கள் வீட்டில் என ஒழுங்காகியிருந்தது. நீங்கள் தினமும் ஐந்து முறை எங்கள் வீட்டில் சாப்பிட்டீர்கள். உங்களுக்குப் பிடித்த உணவு யுடோன் நூடுல்ஸ். ஒவ்வொரு முறையும் அதை நிறைய சாப்பிட்டுவிட்டு "உடல், மனம் இரண்டும் நிரம்பிவிட்டது" என்று அலுப்பில்லாமல் ஒவ்வொரு முறையும் சொல்வீர்கள். நினைவிருக்கிறதா? ஒருமுறை உங்களுக்குப் பிடித்த யுடோன் நூடுல்ஸ் கிடைக்கவில்லை. சுஷிதான் இருந்தது. ஆனால் நீங்கள் ஏமாற்றமடையவில்லை. "ஜப்பானிய உணவுதானே?" என்று கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டு அதையும் நிறைய சாப்பிட்டீர்கள்.

உங்களுக்கு அன்று தின்ற சுஷியை நினைவிருந்தால் எங்கள் வீட்டு சச்சிகோவையும் நினைவிருக்கும். சச்சிகோ கிமுரா எங்கள் வீட்டில் இருந்த ஒரு முப்பது வயது முட்டாள். ஆனால் உங்கள் பார்வையில் அவள் அழகாகத் தெரிந்திருக்கிறாள் போலும். நான் அந்த சச்சிகோவின் மகன். அந்த தர்க்கப்படி உங்கள் மகனும்கூட. உங்களைக் காதலித்ததுதான் சச்சிகோ செய்த கடைசித் தவறு என்று சச்சிகோ அடிக்கடி சொல்வாள். இப்போது அவளுக்கு வேறு திருமணமாகிவிட்டது. வசதியாக, திருப்தியாக இருக்கிறாள். நான் க்யோட்டோவின்

சகாஷிடாமோன் அகாடமியில் படிக்கிறேன். அந்தப் பள்ளி என் வளர்ப்புத் தந்தையுடையது. அவர் நல்ல மனிதர், ஆனால் பணத்தின் அருமை தெரியாதவர். அதனால் பணத்தை வங்கிக் கணக்கின் பிடியிலிருந்து விடுவிக்க மறுக்கிறார்.

நீங்கள் க்யோட்டோவுக்கு வந்தது 1997ல். இப்போது 2012. ஆக, எனக்கு 14 வயதாகிறது. 14 வயதில் எனக்குள்ள செலவுகளைப் புரிந்துகொள்ள யாருமில்லை. என்னிடம் நிறைய பணம் இருக்கிறது. ஆனால் எல்லாமே என் வளர்ப்புத் தந்தையின் பெயரிலுள்ள வங்கிக் கணக்கில் முடங்கிக் கிடக்கிறது. இதை நான் எந்தப் பெண்ணிடமாவது சொன்னால் எடுபடுமா? அல்லது என் வளர்ப்புத் தந்தையின் இன்சூரன்ஸ் பத்திரத்தைக் காட்டி கடையில் பீர் வாங்கத்தான் முடியுமா? முடியாதுதானே?

என் உயிரியல் தந்தையைப் பற்றி என் தாயிடம் பல முறை கேட்டிருக்கிறேன். என் கண்கள் உங்களுடையவை போலிருப்பதாக சச்சிகோ சொல்லியிருக்கிறாள். நீங்கள் இறந்துவிட்டதாகச் சிறிது காலம் என்னை நம்பவைத்தாள் சச்சிகோ. ஆனால் என் செலவுகள் அதிகரித்துக்கொண்டே போவதைப் பார்த்ததும் எனக்குத் தோன்றியது, இந்த ஆள் எங்காவது உயிரோடு இருப்பார் என்று. நிறைய செலவு செய்து உங்களைக் கண்டுபிடித்திருக்கிறேன். எனக்கு என் தலைமை ஆசிரியரிடம் பணம் கேட்டு நிற்பது அலுத்துவிட்டது.

நீங்கள் அனுப்பப்போகும் சிறு தொகையை முதலீடாக வைத்து என் நண்பர்களுடன் சேர்ந்து டோக்கியோவில் 'பச்சிங்கோ பார்' ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டிருக்கிறேன் (பச்சிங்கோ பாருக்கு அர்த்தம் தெரியவில்லை என்றால் கூகுளில் தேடுங்கள். கூகுளும் தெரியாது என்றால் அகராதியில் பாருங்கள். அகராதி வைத்திருக்கிறீர்கள்தானே?).

நீங்கள் வாழும் கலாச்சாரத்தில் 'கடந்த காலத்திற்கு' அனுமதி இல்லை என்று எனக்குத் தெரியும். இதுதான் விஷயங்களைச் சிக்கலாக்குகிறது. ஒருவேளை உங்களால் பணம் அனுப்ப முடியவில்லை என்று வையுங்கள், எனக்கு திடீரென்று சகோதர பாசம் பொங்கி வழியத் தொடங்கிவிடும். எனக்கொரு அரைச் சகோதரன் இருப்பதை நான் அறிவேன். அவனுக்கு ஒரு கடிதம் அல்லது என் அன்பிற்குரிய சின்னம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினால் உங்கள் சொகுசான வாழ்க்கை தடம் புரண்டுவிடாது? போன் செய்து பேச ஆசைதான், ஆனால் எனக்கு ஆங்கிலம் தெரியாது. அதை வேகமாகக் கற்றுக்கொண்டிருக்கிறேன். இதைக்கூட என் வக்கீல்தான் எனக்காக எழுதுகிறார். நீங்கள் அனுப்பும் பணத்தில் ஒரு பகுதி அவருக்குக் கட்டணமாகும்.

உங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். என் தொழில் முயற்சி பாதுகாப்பாக நடைபெற என் யாகுசா நண்பர்கள் உதவுவார்கள். நீங்கள் ஒருமுறை

அனுப்பினால் போதும். நானும் ஒருமுறைதான் கேட்பேன். 500,000 யென்னுக்குக் குறையாமல் அனுப்புங்கள். கண்டிப்பாக டாலரில் அனுப்புங்கள்.

இவண்
ரியுனோசுகே யோஷிடா,
க்யோட்டோ

உதவியவர்
இச்சிரோ யோஷிடா,
யோஷிடா & பார்ட்னர்ஸ், எல்எல்பி.,
க்யோட்டோ

நான் படித்தது என்னை சிந்திக்கவைத்தது. இதயம் மிக வேகமாக அடித்துக்கொண்டது. சடக்கென்று அந்தக் கடிதத்தைக் கசக்கிப் பந்தாகச் சுருட்டிக் குப்பைத் தொட்டியில் எறிந்தேன். பிறகு என்ன தோன்றியதோ, எறிந்ததை வெளியே எடுத்து இரண்டாக, நான்காக, எட்டாக, பதினாறாக, முப்பத்தியிரண்டாக, அறுபத்திநான்காக, நூற்றியிருபத்தியெட்டாக, நூற்றிமுப்பதாக, நூற்றிமுப்பத்திமூன்றாக கிழித்து மீண்டும் குப்பைத் தொட்டியிலேயே போட்டேன்.

போட்டு நிமிர்ந்தால் அறை வாசலில் மனைவியின் நிழலாட்டம்.

"யாருகிட்டேந்து லெட்டர்?" என்றாள்.

"பணம் கேட்டு யாரோ பையன்" என்றேன் வெலவெலத்து.

உபரிப் பூக்கள்

உதவி கேட்டு வந்த நண்பருக்குச் சொன்ன அறிவுரை:

நமக்கொரு பிரச்சினை என வரும்போது அதனை உடனடியாகத் தீர்ப்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் இன்னொருவரிடம் போய் உதவி கேட்கும் வரை காத்திருக்கக் கூடாது. மகிழ்ச்சியான குடும்பங்கள் ஒரே மாதிரியாக மகிழ்ச்சியாக இருக்கின்றன என்றும் வருத்தமான குடும்பங்கள் தனித்தனி பாணியில் வருத்தமாக இருக்கின்றன என்றும் டால்ஸ்டாய் ஒரு நாவலில் எழுதுவார். அது போல நம் பிரச்சினைகள் நம்முடைய தனிச் சொத்துகள். சேச்சே, இல்லையே, இது எனக்கான பிரச்சினையல்லவா என்று இன்னொருவர் அதை வந்து உரிமை கொண்டாட முடியாது. நம் பிரச்சினைகள் நம்முடைய சொந்தக் குழந்தைகள், நம் தோட்டத்தில் மலர்ந்த பூக்கள். அவற்றை நாமேதான் சூடிக்கொள்ள வேண்டும்.

* * *

என் மகன் கெட்ட வார்த்தை பேசக் கேட்டு அவனைக் கண்டித்துக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் வாசகர் ஒருவர் (எனக்கு நண்பர்களைவிட வாசகர்கள் மிகுதி) என் வீட்டு வாசற்படியில் அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தார். நான் என் மகனைத் திருத்துவதைப் பார்த்து அவருக்கு ஆச்சரியம் பற்றிக்கொண்டது. நான் மட்டும் பேச்சிலும் எழுத்திலும் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது சரியா என்பது அவர் கேள்வி.

நான் "வாங்க வாங்க" என வரவேற்றபடியே அவருக்கு என் குழந்தை வளர்ப்புக் கொள்கையை விளக்கினேன். கெட்ட வார்த்தை மட்டுமல்ல, பொய் பேசுதல், உண்மை பேசுதல், சூது-வாது ஆகியவை மரணம் போல குழந்தைகள் செய்யக் கூடாத காரியங்கள். இவைகளை நாம் செய்கிறோம் என்றால் நமக்குத் தெரியும் நாம் ஏன் செய்கிறோம் என்று. ஏண்டா இப்படிச் செய்தாய் என்று கேட்கப்படும்போது மனசாட்சிக்கு விரோதமாகவோ விரோதமில்லாமலோ விளக்கம் கொடுக்க நமக்குத் தெரிகிறது. குழந்தைகளுக்குத் தெரியுமா? கேட்டவர் தெளிந்தார்.

* * *

ஒரு ஆண் திருமணத்திற்குப் பின்னர் பெண்வெறுப்பாளன் (misogynist) ஆகவில்லை என்றால் அதற்கு மூன்று காரணங்களே இருக்க முடியும்:

1. அவன் மணந்திருப்பது இன்னொரு ஆடவனை.
2. திருமணமானவுடன் மனைவி இறந்துவிட்டாள்.
3. திருமணமானவுடன் அவனே இறந்துவிட்டான்.

* * *

'ஒரு லோட்டா ரத்தம்' நெடுங்கதைக்காக ஓரான் பாமுக்கையோ விஸ்லாவா சிம்போர்ஸ்காவையோ அல்லது இருவருமையோ சாகடிக்கும்படி வாசகர்கள் – இல்லை, ரசிகர்கள்; எனக்கேது வாசகர்கள்? – தொடர்ந்து மின்னஞ்சலும் குறுஞ்செய்தியும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் சாக வேண்டிய வெளிநாட்டவர்கள் என பெரிய பட்டியல்களைத் தட்டச்சு செய்து அனுப்புகிறார்கள். உங்கள் ஆசையும் தர்ம சீற்றமும் எனக்குப் புரிகின்றன. ஆனால் நாவலாக எழுதினால்கூட அத்தனை பேரையும் ஒவ்வொருவராக சாகடிப்பது படிப்பவர்களுக்கு அலுப்பூட்டக்கூடியதாக இருக்கும். மொத்தமாக ஒரே சமயத்தில் எல்லோரையும் தீர்த்துக்கட்டுவது சில தர்க்கப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். சிம்போர்ஸ்காவை சாகடிக்க விரும்புபவர்களே, என்னால் அவரைக் கொல்ல முடியாது. நீங்கள் வேண்டுமானால் அவர் கவிதைகளை தொடர்ந்து மொழிபெயருங்களேன். அல்லது அஞ்சலிக் கட்டுரை எழுதுங்களேன். ஒரே சமயத்தில் சாகவும் அடித்து அஞ்சலியும் எழுதிய மாதிரி இருக்கும்.

* * *

இன்றைய தேதி வரை தமிழில் நூற்றுக்கணக்கான சினிமாக்களைப் பார்த்துவிட்டாலும் நான் பல முறைக்கு மேல் பார்த்த மறக்க முடியாத படம் என ஒன்று உண்டென்றால் அது இயக்குநர் மகேந்திரன்சாரின் 'உபரிப் பூக்கள்'தான். நல்ல படம்.

அஞ்சலி: ஏட்ரியன் ரிச்

மொழிபெயர்ப்பாள நண்பர் லபக்குதாஸ் பெருமகிழ்ச்சியில் இருக்கிறார். பெண் கவிஞர் ஏட்ரியன் ரிச்(1929-2012)சின் மரணச் செய்திக்குப் பிறகு சிற்றிதழ்களிலிருந்து அவருக்குத் தொலைபேசி அழைப்புகளும் குறுஞ்செய்திகளும் வந்தவண்ணம் உள்ளன. ஏட்ரியன் ரிச்சின் கவிதைகளை மொழிபெயர்க்கவும் ஏட்ரியன் ரிச்சுக்கு அஞ்சலி எழுதவும் ஆர்டர்கள் குவிந்துகொண்டிருக்கின்றன என்கிறார் லபக்குதாஸ். இதையும் அவர் தொலைபேசியில்தான் என்னோடு பகிர்ந்துகொண்டார். சொல்லும்போது அவர் கண்கள் மின்னியதை அவர் குரலில் கேட்க முடிந்தது.

சிம்போர்ஸ்காவின் துயரச் சாவு கொடுத்த மகசூல் லபக்குதாஸ் வீட்டு சோபாவுக்குப் புதிய உறைகளைப் பெற்றுத் தந்திருந்தது. ஏட்ரியன் ரிச் விவகாரத்தில் டூவீலருக்குப் புதிய இருக்கை வாங்க முடியுமென நம்புகிறார்.

இது அவர் அஞ்சலி எழுதிக்கொண்டிருந்த சூட்டில் மொழியாக்கம் செய்த ஏட்ரியன் ரிச் கவிதை ஒன்று:-

விடுப்பு

கோடையானது பிறிதொரு தேசம், அங்கே பட்சிகள்
சொட்டும் இலைகளினூடே எங்களை விடியலில்
விழிப்பூட்டின
எமதெல்லா விசேடங்களிற்கும் தமதொப்புதலை
ஈந்தன.
சதை மீதான காற்றின் ஸ்பரிசம் இன்னமும் லேசாக,

உன்னிப்பாக இருந்தது,
தனதொவ்வொரு சைகையும் ஒரு மலரில் முடிகின்ற
ஒரு லேடன் மரமொத்து புலன்கள்
வளர்ச்சியடைந்தன.
அக்காக்கப்படாத பிரதேசங்களில் ஒரு பச்சைக்
கால்வாயருகே
பீச் மற்றும் நெக்டரைன் பழங்களால் எமதிதழ்களைக்
கறைப்படுத்தியும்
தங்கக் குளவிகளை அறைந்துகொண்டும்
விக்கர் கூடைகளிலிருந்தபடி நாம்
இரவுணவருந்தினோம்.
பின்னர் முத்தமிட்டோம், சூரிய ஒளி பாய்ந்த
பழச்சாறை அருந்தி
நிலப்பரப்பு எமது பிடிக்குள் மடங்கியது,
தொலைவுகளுக்கு அப்பால் கிடந்த
பனிக்காலத்திற்கான நீண்ட மீள்நடையை யாதொரு
சுவாசமும் நினைவுகூரவில்லை.

சிம்போர்ஸ்கா, சில்வியா ப்ளாத், எமிலி டிக்கன்ஸ், அன்னா அக்மதோவா வரிசையில் ஏட்ரியன் ரிச் இடம்பிடிப்பாரா என்பது நமது அஞ்சலி மொழிபெயர்ப்பாளர்களிடமே உள்ளது.

ஒரு விறகுவெட்டியும் மூன்று கோடரிகளும்

(குழந்தைகளுக்கான புனைவு)



காலத்தால் வயதை அளக்கவியலாத தாவர யானைகளைப் போன்ற அடர்பெரு மரங்களாலான வனம் ஒன்றிருந்தது. அதனைச் சுற்றியும் ஊடாகவும் சுழித்துச் சுழித்து ஓடிக்கொண்டிருந்தது ஒரு சர்ப்ப தோற்ற நதி. இவ்விரண்டையும் மேகக் கண்ணாடி அணிந்து மேலிருந்து பார்த்ததொரு மலை. வனத்தின் விலங்குகள் இன்றைய

காலத்தில் நமக்குக் கிடைக்காத இயற்கையைச் சுவாசித்துக்கொண்டு பொதுவாக ஒரு காட்டில் மிருகங்கள் என்னவெல்லாம் செய்யுமோ அவைகளை மிருகத்தனத்தோடு செய்துகொண்டிருந்தன. வனத்தின் ஓரத்தில் வயல்கள் விரவிக்கிடந்தன. மொத்தத்தில் அப்பிரதேசம் முழுவதையும் இயற்கையானது சப்த வர்ண ஆகாயத் தனுசாகிய கிரீடத்தை அணிந்து ஆண்டுவந்தது.

மேற்படி வனத்தினுடைய புறவிளிம்பில் ஜாகை வகித்து வாழ்ந்துவந்தான் ஒரு நேர்மையான ஏழை விறகுவெட்டி. குழந்தைகளே, விறகுவெட்டி என்றால் wood cutter. கானகத்தின் நீள் இருளை அளாவி விறகுதாரி மரங்களைத் தேடி வனத்தின் மையஞ்சென்று கூர்மிகு கோடரியால் மரங்களினின்று விறகுகளைப் பிரித்தெடுத்து வருவான் நமது நபர். ஒருநாள் வனத்தினூடே தினமும் சென்ற நதியின் அருகில் வேர்புதைந்த ஒரு மரச் செறிவினுள் விறகுவெட்டி புகுந்தான். ஓடும் வயிறெல்லாம் வண்ண மீன்களாய்ச் சுமந்து சென்றது நதி. தனது கோடரியைக் கரையோரம் அகன்றதோர் விருட்சத்தின் பூதவுடலுக்குள் சடுதியில் பாய்ச்சினான். உட்புகுந்த கோடரியைக் கவ்வியது மரம் தானாடி இலையுதிர. விறகுவெட்டி அதனைப் பிய்த்தெடுத்து மீண்டும் பாய்ச்சி மரத்தில் அடுத்த பிளவினைச் செதுக்கினான்.

மீள் பாய்ச்சலுக்காய் கோடரியை விறகுவெட்டி வீச, உழைப்பின் வியர்வை உள்ளங்கையில் கசகசத்துப் பிடி நழுவிக் கூர்கோடரி பாய்ந்தது பக்கத்து நதியினுள் மீன் கூட்டமொன்றினைக் கலைத்தும் நதியில் மிதந்தவோர்

உலர்ந்த மரத்துண்டை அநாவசியமாய்ப் பிளந்தும் எட்டுத் திக்கிலும் அதிர்வலைகளை வீசி. ஏழை விறகுவெட்டி நடுங்கிய நிலம் போல் அதிர்ந்தான். நதியில் விழுந்த கோடரியின்றி இனி எதனை வெட்டுவது? சற்று ஓங்கிக் கிள்ளினால் சாய்ந்துவிடுமா எந்த மரமும்? அல்லது குத்துவிட்டால்தான் குடைசாயுமா? அட கெஞ்சினாலும்தான் கழன்று வருமா? சரி, சுரண்டினால் மட்டும் சுருண்டு விழுமா? கோடரியின் கோரிக்கையின்றி இறகு போடுமா தாவர யானை? இழந்த கோடரியை மீட்பதைக் காட்டிலும், நிலைமை புரியா மனையாளின் கோடரி நாக்கிலிருந்து நழுவுவது எப்படி? வரிசையாக விக்கித்தவனுக்கு நதி தன்னாயிரம் திவலையிதழ்களால் பேசிய சலசலப்பு கேட்காத வர்ணம் கவலை காதடைத்தது.

நதியில் குளிக்கும் சாக்கினில் கோடரியைத் தேடிப் பார்த்திடலாமா என்ற எண்ணம் விறகுவெட்டிக்கு எழும்பித் திரும்பினான். மறுகணம், நதியிலிருந்து பிரகாசமாய் ஒரு பெண்ணுரு புறப்பட்டு அவனெதிரில் நீர்வழிய நின்றது. அக்கானகத்தின் காவல் தெய்வம் அந்த ஜாஜ்வல்யை. விறகுவெட்டி பொழுதன்றைக்கும் அக்காட்டில் பட்ட பாட்டினை அவள் பார்க்காத நாள் இல்லை. எனினும் கூப்பிட்டுக் கொடுக்கப்படும் வரங்களுக்குப் பலனேதுமில்லை என்பதை அறிந்திராத தேவதை அல்ல அவள். அவனுக்குச் சகாயம் செய்ய தக்க தருணத்தை அவள் எதிர்பார்த்திருந்தாள். காத்திருந்த சந்தர்ப்பம் விறகுவெட்டியின் நதி விஜய வடிவில் வந்துகொடுத்தது.

கண்கூசும் மஞ்சள் ஒளியை வெளியிட்ட தங்கக் கோடரியை

நீட்டி தேவதை விறகுவெட்டியிடம் கேட்டாள்:
"விறகுவெட்டியே, இது உன்னுடைய கோடரியா?"
விறகுவெட்டி சொர்ணத்தைக் கண்டு சொக்கினான். அவன் மனதில் நேர்மையும் ஏழ்மையும் தம்மில் சிலம்பாடின. தேவை சார்ந்து மாற்றங்காண்பதா உண்மை? தன்னுடைய கோடரி இரும்புக் கோடரி என்பதல்லவா உண்மை?
"இல்லை" என்றான் விறகுவெட்டி. அவன் நேர்மை கண்டு அதிசயித்த வனமோகினி, அடுத்து பளிச்சிடும் வெள்ளிக் கோடரியைக் காட்டிக் கேட்டாள் "இது உன்னுடைய கோடரியா?" என. விறகுவெட்டி வெள்ளியைக் கண்டு வெம்பினான். அவன் மனதில் நேர்மையும் ஏழ்மையும் தம்மில் சிலம்பாடின. தேவை சார்ந்து மாற்றங்காண்பதா உண்மை? தன்னுடைய கோடரி இரும்புக் கோடரி என்பதல்லவா உண்மை? "இல்லை" என்றான் விறகுவெட்டி. தேவதை அதற்கும் அதிசயித்து அவனது இரும்புக் கோடரியை நீட்டிக் கேட்டாள், "இதுவாவது உன்னுடைய கோடரியா பாரேன்?" விறகுவெட்டி நிம்மதிப் பெருமூச்சுடன் தன் கோடரியைக் கைப்பெற்றான்.

அவனது குணத்தை மெச்சிய தேவதை, "விறகுவெட்டியே, உன் நேர்மைக்குப் பரிசு இந்தா, ஆனால் நீ போய் வேறு யாரையும் அனுப்பாதே" என மூன்று கோடரிகளையும் அவனுக்குக் கொடுத்தளித்தாள். விறகுவெட்டி அவற்றைப் பெற்று வறுமையைக் கைவிட்டு சாகும் வரை மகிழ்ச்சியாக இருந்தான். ஆகையால் குழந்தைகளே, இந்தக் கதை சொல்லும் செய்தியை மறக்காமல் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: வலிக்காமல் பலிக்காது.

அசரீரி

1

தெருவில் நடந்துகொண்டிருந்தேன். ஏதோ ஒரு தெரு. இங்கே அது முக்கியமில்லை. எது முக்கியம் என்றால் நான் ஒரு ஆளைக் கொலை செய்யப் போய்க்கொண்டிருந்தேனே, அது. ஒருவனைக் கொல்லச் சென்றுகொண்டிருப்பதும் போகிற வழியில் அலட்டிக்கொள்ளாத மன உறுதிக்கார புத்திசாலி தொனியில் முகம் தெரியாத ஒருவரிடம் அதைப் பகிர்ந்துகொள்வதும் கவர்ச்சிகரமாக இல்லை? நினைத்தேன்.

இந்தக் கொலை நான் நீண்ட காலமாகத் திட்டமிட்டுவந்த ஒரு குற்றச் செயல். என் குழந்தைப் பருவக் கனவு. ஒரு கொலைக்கு ஏன் இவ்வளவு நாள் என்கிறீர்களா? ஒரு சிகரெட் புகைப்பில் முழு கொலையைத் திட்டமிடும் தொழில்முறைக் கொலையாளி அல்ல நான். யாரையும் 'குளோஸ்' செய்வது என் பொழுதுபோக்கும் அல்ல. கொல்வதில் எனக்கு அனுபவம் இல்லை. அனுபவமே இல்லை என்றும் சொல்லலாம். ஆனால் எதற்கும் ஒரு முடிவு இருப்பது போல் தொடக்கமும் இருக்கும், இல்லையா? அதுதான் இது. சரி, என் நோக்கம்? பூஜ்யம். சும்மா கொல்வதற்கு நோக்கமெல்லாம் தேவையில்லை. உண்மையில் என் மனதை அகழ்வாராய்ச்சி செய்தால்

கொலைக்கான பொறி எங்காவது புதைந்திருக்கலாம். அம்மாதிரி போஸ்ட்மார்ட்டங்களை பிறகு வைத்துக்கொள்கிறேன்.

எவனோ ஒருவனின் சாவுக்காக இரண்டு பஸ் பிடித்து வந்திருந்தேன். என் திட்டம் எளிமையின் மறு உருவம். என் ஊரிலிருந்து நான்கு மணிநேர பேருந்துப் பயண தூரத்தில் உள்ள ஒரு இடத்திற்குச் சென்று அங்கே இருட்டில் தனியாக இருக்கும் யாரையாவது போட்டுத்தள்ளிவிட்டு பேசாமல் திரும்பி வந்துவிட வேண்டும். யாராலும் கண்டுபிடிக்க முடியப்போவதில்லை. ஏனென்றால் சாகிறவனை எனக்குத் தெரியாது, சம்பவ இடத்திற்கு நான் போகக் காரணமே இல்லை. அங்கே எனக்கு யாரையும் தெரியாது. எனவே கொலையை என்னோடு தொடர்புபடுத்தவோ நோக்கம் கற்பிக்கவோ முடியாது. அதனால்தான் 'அலிபி' எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. என்னைப் பிடித்தால்தானே கேள்விகள் வரும். 'இது பழைய டெக்னிக்' என்று அலுத்துக்கொள்வது உங்கள் சுதந்திரம். ஆனால் யாராவது இப்படி ஒரு கொலையைச் செய்ய முயன்று மாட்டிக்கொண்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லைதானே?

இதிலிருந்து எங்கே போவேன் என்று என்னால் ஊகிக்க முடிகிறது. நான்தான் 'கொலையாளி' என்பது கண்டுபிடிக்கப்படாது. அந்த தைரியத்தில் இன்னொரு கொலை செய்வேன். அதுவும் அனாதைக் கொலையாகும். பிறகு கொல்வதே ஒரு போதைப் பழக்கமாகிவிடும்.

ஒவ்வொரு கொலைக்குப் பிறகும் 'இன்றே கடைசி' என்று தீர்மானிப்பேன். ஆனால் திடீரென்று நிறுத்த கொலை என்ன சிகரெட் பழக்கமா? ஒவ்வொரு விக்கெட்டாக சாய்ந்துகொண்டிருக்கும். காலைகளில் காபி சாப்பிட்டபடி செய்தித்தாளில் என் கொலைச் செய்திகளை புன்னகையுடன் படிப்பேன்.

ஒரு கொலை 'ஆறிப்போக' எத்தனை ஆண்டு ஆகும் என்று எனக்குத் தெரியாது. நானாக மூன்று ஆண்டுகள் வைத்துக்கொள்வேன். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு கொலை செய்தால் சரியாக இருக்கும். இதெல்லாம் நடக்கும் என்று நிச்சயம் இல்லை. நாளைக்கே என்னை வடநாட்டில் எங்காவது டிரான்ஸ்பர் செய்தால் அங்கே போய்க் கொலை செய்வது கடினம். மொழி ஒரு தடையாக இருக்கும்.

இதையெல்லாம் நம்மை நம்பிச் சொல்கிறானே என்று பார்க்கிறீர்களா? நல்ல கேள்வி. ஆனால் நீங்கள் சாகக்கிடக்கும் ஜேம்ஸ் பாண்டும் அல்ல, நான் மாட்டிக்கொள்ளப்போகும் உங்கள் படத்து வில்லனும் அல்ல. நீங்கள் கதை சொல்வதற்குப் பயன்படும் ஒரு கருவி, ஒரு கதை உத்தி, அவ்வளவுதான்; உயிருள்ள, ரத்தமும் சதையுமான நடமாடும் நிஜ நபர் அல்ல. இந்தக் கதை உத்தி இல்லாவிட்டால் நான் செய்யப்போகும் கொலைக்கு நேரடி வர்ணனை தர முடியாது. சட்டத்திற்கு உதவ முடியாத ஒரு டம்மி சாட்சி இல்லாமல் கொல்லும்போது கதைசொல்லியைத் தனிமை வாட்டும். அதனால்தான் பேச்சுத் துணைக்கு நீங்கள்.

என் அனுபவத்தின் நுகர்வோரே, இந்த சாவு வழக்கமான மனித சாவாகத்தான் இருக்கும். நீ யாராக, எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பொட்டென்று சாகடித்துவிடுவேன் என்கிறது விதி. மனிதனை சாகடிக்க விதி அவனிடம் அனுமதி பெறாவிட்டாலும், முன்னறிவிப்பு போல படிப்படியாகவாவது சாகடித்தால் அவனது சாவில் கண்ணியம் இருக்குமா? பொட்டென்று போவது கௌரவம் போலவும் ஆஸ்பத்திரியில் வாரக்கணக்கில் இழுத்துக்கொண்டு கிடப்பது வேதனையான சாவு போலவும் சொல்கிறார்கள். மருத்துவமனையில் ஒயர்களும் மின்திரைகளுமாய் இழுத்துக்கொண்டு கிடந்துவிட்டு, தெரிந்து சாவதல்லவா கௌரவ சாவு? ஆனால் தெரிந்து சாகவும் ஒரு முதிர்ச்சி வேண்டும்.

இன்றிரவு வழக்கத்தைவிட இருட்டாக இருக்கிறது. இந்த ஊரில்தான் இப்படியா அல்லது இருள் என் மனதிலிருந்து வருகிறதா? இருட்டைக் குறியீடாகக் கொண்டிருக்குமளவு நான் செய்யப்போகும் காரியம் மோசமா என்ன? இருக்காது. இருட்டு பற்றிய என் பார்வை என் ரகசிய பயத்தைக் குறிப்பதாக இருக்கலாம். ரகசிய பயங்கள் ஒன்றும் செய்யாது. வெளிப்படையாக பயந்தால்தான் வந்த காரியம் தடைபடும்.

நேற்று மழை பெய்திருக்கும் போல. தெரு சொதசொத என்று கிடந்தது. இன்றும் மழை பெய்தாலும் பெய்வேன் என்பது போல் இருந்தது. ஒரு இடத்தில் ஷாப்பிங்

காம்ப்ளெக்ஸ் எழும்பிக்கொண்டிருந்தது. மழையால் வேலை நின்று அந்த இடம் அலங்கோலமாகக் கிடந்தது. சற்றுத் தள்ளி ஒரு வீட்டுக் கதவு திறந்தது. பளீரென்ற சி.எஃப்.எல். விளக்கொளி, மங்கலாகத் தெரிந்த வாசற்படி பெயின்ட் கோலம் வரை பாய்ந்தது. சில நொடிகளில் உள்ளேயிருந்து ஒருவர் வந்தார். திரும்பிப் பார்த்து வீட்டுக்குள் இருப்பவர்களிடம் ஏதோ சொன்னார். உள்ளேயிருந்து ஒரு அம்மணி எதையோ கொண்டு வந்து அவரிடம் கொடுத்தாள். பிறகு அவர் தெருவில் நடக்கத் தொடங்கினார். நடுத்தர வயது, சராசரி உயரம், தொப்பை, மெதுவான அசைவுகள் என்று எல்லா சாமுத்ரிகா லட்சணங்களும் இருந்தன. அனேகமாக அவர்தான் நம்முடைய ஆள். அவரைப் பின்தொடரத் தொடங்கினேன்.

விண்ணப்பதாரர் நிதானமாக நடந்தார். மரணம் என்பது மற்றவர்களுக்கு நடக்கிற விஷயம் என்று, நம்முடைய சாவு உப்புச்சப்பில்லாததாக இருக்கும் என்று ஆழமாக நம்புபவனுடைய கவலையற்ற நடை அது. அப்படி நம்பாதவராக இருந்தால் சற்று ஓரமாக நடப்பார். வாழ்க்கையில் எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும், புதிதாக எத்தனை முளைத்தாலும் யாருக்கும் வராத வேதனை எதுவும் நமக்கு வந்துவிடாது என்ற எதிர்பார்ப்பின் நடையும்கூட அது. அப்படியா விண்ணப்பதாரரே, நான் உங்களுக்கு ஒரு செய்தி வைத்திருக்கிறேன்.

நம் ஆள் விசை கொடுக்கப்பட்டது போல எந்தத் தெருவிலும் சந்திலும் திரும்பாமல் நேராக

நடந்துகொண்டிருந்தார். தமது உடனடி விதி தெரிந்தால் அந்தப் பகுதியில் ஒரு தெரு விடாமல் சுற்றிப் பார்த்துவிடுவார் என்று தோன்றியது. அவர் இரவு சாப்பாட்டிற்குப் பின் வாக்கிங் போக வந்தாரா, கடையில் ஏதாவது வாங்க வந்தாரா என்பது எனக்குத் தெரியாத வரை இந்த யுத்தத்தில் அவர் கைதான் ஓங்கியிருக்கும். ஆனால் கடைசியில் அவர் இடது பக்கமாக ஒரு இருட்டுச் சந்திற்குள் திரும்பினார். இதுதான் எனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம்.

3

மழையின் ஈரம் காயாத தெரு, சற்றுத் தொலைவிலிருந்த சிறியதும் பெரியதுமான வீடுகளின் வெளிச்சத்தால் ஆங்காங்கே மின்னி மேடு பள்ளங்களை இனங்காட்டியது. நான் பின்தொடர்ந்துகொண்டிருந்த ஆள் நடையில் வேகத்தைக் கூட்டினார். என்னை மாதிரி ஆட்கள் சைலன்சர் பொருத்திய துப்பாக்கியா வைத்திருப்பார்கள்? நல்ல கருங்கல்லாகத் தேடிக்கொண்டிருந்தேன். டார்ச் எடுத்து வந்திருக்கலாம் என்று தோன்றியது. அது பயன்பட்டிருக்காது என்று அடுத்த கணமே உறைத்தது.

குடும்பஸ்தருக்குக் கைபேசியில் அழைப்பு வந்தது. எடுத்து சில நொடிகள் பேசிவிட்டு வைத்துவிட்டார். வீட்டிலிருந்துதான் வந்திருக்கும். அப்படியே ஒரு கிலோ புளியும் வாங்கி வந்துவிடுங்களேன் என்று சொல்லியிருப்பார்கள். எனது ஊகம் உண்மையாக இருந்தால் வாழ்க்கையில் அவர் வாங்கப்போகும் கடைசி

கிலோ புளி அதுதான்.

நடந்துகொண்டிருந்தவர் சட்டென நின்றார். தெருவிற்குக் குறுக்கே ஒரு பெரிய பள்ளம் தோண்டியிருந்தார்கள். தோண்டியெடுத்த மண் அதன் அருகில் நான்கடி உயர மேடாகக் கிடந்தது. எனக்கொரு யோசனை. ஓடிப்போய் அவரை அதில் தள்ளிவிட்டால்? ஆனால் சாக வாய்ப்பு குறைவு. மண் ஆவாரே தவிர மண்ணோடு மண் ஆக மாட்டார். நான் மாட்டாமல் தப்பிக்கலாம். ஆனால் வந்த காரியம் நிறைவேறாது. மனிதர் இருபக்கமும் பார்த்து யோசித்தபடி நின்றார். எனக்குப் பகீரென்றது. அவர் பள்ளத்திற்காக வந்த வழியே திரும்பிச் செல்ல முடிவெடுத்தால் என்னைப் பார்த்துவிடுவார். என்னிடம் பேசவும் செய்யலாம். இந்த மாதிரி ஆட்கள் அறிமுகமில்லாத ஆட்களுடன் பேச வாய்ப்பு கிடைத்தால் விட மாட்டார்கள். அந்த ஆள் பேசி நான் பதில் சொல்லாமல் பின்தொடர்ந்தால் சந்தேகத்தைக் கிளப்பும். பதில் பேசினால் அவர் கூடவேதான் நடந்து செல்ல வேண்டியிருக்கும். பின்தொடர முடியாது. திடீர் தாக்குதலுக்கு சாத்தியம் இல்லாமல் போகும்.

நல்ல வேளையாக அவர் அந்த மண் மேட்டை சுற்றிச் சென்றார். நானும் அவர் பார்வையில் படாமல் பின்தொடர்ந்தேன். கைபேசியை எடுத்து யாருக்கோ போன் செய்து ஒரு நிமிடம் போல் பேசினார். என் ஊகப்படி அவர் ஏதோ ஒரு பெரிய கடைக்குச் சென்றுகொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் எல்லா இடங்களிலும் கடைகள் மூடியிருந்தன. அவர் அனேகமாகப் பிரதான சாலையில்

இருந்த ஒரு கடைக்குச் சென்றுகொண்டிருந்தார். தொலைவில் தெரு முனையில் கூடுதல் வெளிச்சமும் வாகனங்களும் தென்பட்டன. அதுதான் பிரதான சாலை. ஆனால் நம் ஆள் இடப்பக்கமாகத் திரும்பி இன்னொரு தெருவிற்குள் சென்றார்.

இந்தத் தெருவை எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. நான் நுழைந்த பாதியில் ஓரிரு தெருவிளக்குகள் எரிந்தன. ஒரு வீட்டில் ஒரு குடும்பம் மொத்தமும் வாசலில் உட்கார்ந்து பேச்சும் சிரிப்புமாக இருந்தது. இன்னொரு வீட்டு வாசலில் ஒரு பெண்ணுடன் ஒருவன் சைக்கிளை நிறுத்திவைத்துப் பேசிக்கொண்டிருந்தான். ஒரு வீட்டு வாசலில் நான்கைந்து பேர் ஒரு குழந்தையிடம் மாற்றி மாற்றிக் கேள்வி கேட்டு மழலையைக் கிளறி ரசித்துக்கொண்டிருந்தார்கள். நான் அந்த வீட்டைக் கடந்து போகும்போது அந்தக் குழந்தை என் மேல் இடிக்க வந்தது. சட்டென விலகி யாரும் என் உருவ அடையாளங்களை கவனிப்பதற்குள் விரைவாக நடந்தேன். இதென்ன திடீர் இம்சை!

சலிப்பும் களைப்பும் என்னுள் முகாமிடத் தொடங்கின. அவநம்பிக்கையும் கண நேர தரிசனம் அளித்தது. இதைச் செய்ய முடியாது என்று தோன்ற ஆரம்பித்தது. திரும்பிச் செல்ல கடைசிப் பேருந்து 11.30 மணிக்கு. இந்த ஆள் செய்யும் தாமதத்தால் பேருந்தைக் கோட்டை விட்டால் சிறிது நேரமாவது தெருவில் நடமாடி ரோந்து போலீசிடம் சிக்க வேண்டியிருக்கும். இங்கே என்ன செய்கிறாய் என்று போலீஸ் விசாரித்தால் என்ன சொல்வேன்? பயமும் எட்டிப் பார்த்தது. ஆனால் இந்த உணர்வுகள் என்

வைராக்கியத்தை இன்னும் வலுப்படுத்தவே செய்தன. எவ்வளவு நேரம் ஆனாலும் இந்த ஆள் சாக வேண்டும். வீட்டிலிருந்து வெகு தூரம் நடந்து வந்துவிட்டார். எனவே திரும்பவும் இருட்டுத் தெருக்கள் வழியாகத்தான் சென்றாக வேண்டும். நம்பிக்கைக்கு நிறைய இடம் இருந்தது. எதிர்பாராமல் அவர் இன்னொரு சந்தில் திரும்பினார். மிகக் குறுகலான சந்தாக இருக்க வேண்டும். இங்கிருந்து பார்த்தால் அப்படி ஒரு இடம் இருந்ததே தெரியவில்லை.

தெருவோரத்தில் மாம்பழ வடிவத்தில் ஒரு பெரிய கருங்கல் தென்பட்டது. அதைக் கையிலெடுத்தேன். நடையில் தீர்மானத்தையும் வேகத்தையும் அதிகரித்துக்கொண்டேன். அவர் வழி தெரிந்துதானே நடந்துகொண்டிருக்கிறார் என்று எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. வழி தெரியாமல் முட்டுச் சந்தில் முடிந்தால் அவர் என்னைப் பார்த்துவிடுவார். அவர் சாகும்போது மட்டும் என்னைப் பார்த்தால் போதும். இல்லை என்றால் கைகலப்பாகி காயத்தோடு முடிந்துவிடும். ஆள் செத்தாலும் சம்பவத் தரையில் என் சட்டைப் பொத்தான், நக இடுக்கில் என் சதை, மயிர், வியர்வை என்று மரபணு ஆதாரங்கள் குவிந்துவிடும். ஆனால் அது முட்டுச் சந்து அல்ல, இன்னொரு இருள் பிரதேசம்தான். இப்போது கொன்றே ஆக வேண்டுமா என்ற கேள்வி எழுந்தது. பயம்தான், வேறென்ன. இத்தனைக்கும் அது ஒரு தற்கொலைகூட அல்ல. என் கையால் இன்னொருவன்தான் சாகப்போகிறான்.

இடையில் அவருக்கு இன்னொரு கைபேசி அழைப்பு வந்து பேசத் தொடங்கினார். இதுதான் பாய வேண்டிய நேரம்.

கருங்கல்லை இடது கைக்கு மாற்றிக்கொண்டு வலது உள்ளங்கை வியர்வையை பேண்ட்டில் துடைத்துக்கொண்டு விரைந்தேன். நம் ஹீரோ இன்னொரு சந்தில் திரும்பினார். நான் கல்லை மீண்டும் வலது கைக்கு மாற்றி மார்புயரம் ஓங்கிய நிலையில் ஏந்தி கிட்டத்தட்ட ஓட்டமாகப் பின்தொடர்ந்தேன்.

சந்தினுள் நுழைந்ததுதான் தாமதம், பளாரென்று முகத்தில் அறைந்தது வாகன விளக்கொளி. எதிர்பாராத போலீஸ் ஜீப். வெள்ளமாகப் பாய்ந்த விளக்கொளிக்குப் பின்னால் மங்கலாக ஜீப் வாசலில் சில உருவங்கள்.

"யூ ஆர் அண்டர் அரஸ்ட்" என்றது விளக்கொளி.

4

சாவு யாருக்கு வேண்டுமானாலும் வரலாம் சார். உங்களுக்கும் எனக்கும்கூட வரலாம். ஆனால் எனக்கு சாவே பிடிக்காது. டிவியில் வந்தால் சானலை மாற்றிவிடுவேன். மாற்றின சானலில் வந்தால் அலுத்துக்கொள்ளாமல் திரும்பியும் மாற்றுவேன். அதன் மேல் அவ்வளவு வெறுப்பு. "சாவு நமக்குள்ளேயே இருக்கிறது" என்பார் எங்கள் ஜே.இ. "காத்துக்கொண்டிருந்துவிட்டு ஒருநாள் நம்மை இழுத்துக்கொள்ளும்" என்பார் அவர். நிறைய படித்தவர்.

எனக்குப் பொதுப்பணித்துறையில் வேலை. காலையில் எட்டு மணிக்கு பஸ் ஏறினால் எழும்பூர் வர பத்து

ஆகிவிடும். ஐந்து நிமிடம் தாமதமானால்கூட ஏட்டு (ஹெட் கிளார்க்குக்கு அப்படித்தான் பெயர் வைத்திருக்கிறோம்) காரசாரமாகத் திட்டுவார். சாயந்திரம் ஐந்தரைக்கு ஆபீசிலிருந்து கிளம்பினால் வீட்டுக்கு வந்து சேர எப்படியும் எட்டு ஆகிவிடும். வந்து ஒரு லைட் காபி சாப்பிட்டுக்கொண்டு டிவியில் சீரியல் பார்த்துக்கொண்டு கொஞ்ச நேரம் ரிலாக்ஸ்... தினமும் அப்படித்தான் வழக்கம். இன்றைக்கு வீட்டிக்குக் கிளம்பத் தாமதமானதால் வர ராத்திரி ஒன்பதாகிவிட்டது.

சாப்பிட்டுவிட்டு டிவி பார்த்துக்கொண்டிருக்கும்போது அசரீரி மாதிரி ஒரு குரல் கேட்டது. கேட்கும்போதே அது எனக்கு மட்டும்தான் கேட்கிறது என்று புரிந்துவிட்டது. வாக்மேனில் கேட்குமே, அது மாதிரி. சுற்றிமுற்றிப் பார்த்தால் அவரவர்கள் அவரவர்கள் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று அனாமத்தாக ஒரு குரல் எனக்கு மட்டும் கேட்கிறதே என்று எனக்கென்னவோ பதற்றமே வரவில்லை. குரலைப் பார்த்தால் சின்னப் பையன் மாதிரி இருந்தது. டிவி சத்தத்தைக் குறைத்துவிட்டு, என்னவென்று கேட்போமே என்று காபியைக் குடித்துக்கொண்டு கேட்க ஆரம்பித்தேன். ஆள் யார், எங்கிருந்து பேசுகிறான் என்று ஒரு விவரமும் இல்லை. யாரையோ கொலை செய்யப்போகிறானாம். நீண்ட நாள் திட்டமாம். போலீசால் கண்டுபிடிக்க முடியாதாம். கொலைக் கதை மாதிரி இருந்தது. ஆனால் வளவளவென்று தத்துவம், என்னத்திற்கோ ஒரு வறட்டு கர்வம், தெனாவெட்டு...

டிவியில் 'வாழாவெட்டி சுமங்கலி' ஓடிக்கொண்டிருந்தது. நீங்கள் சீரியல் பார்ப்பீர்களா? என் பெண்டாட்டி பேஸ்ட் தீர்ந்துவிட்டது, வேறு வாங்கி வா என்றாள். எதையும் தீருகிற வரைக்கும் விட்டுவிட்டு தீர்ந்தப்புறம் விழுந்தடித்துக்கொண்டு கடைக்கு ஓடுவது பெண்களின் பழக்கம். காலையிலேயே பேஸ்ட்டைப் பிதுக்கும்போது கவனித்தேன். ஆபீசிலிருந்து வருகிற வழியில் வாங்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

தாமதமானதில் மறந்துவிட்டது. என் பெண் – ஒரே பெண் – பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தாள். அது மட்டுமில்லாமல் மணி பத்தாகப் போகிறது என்பதால் அந்த நேரத்தில் அவளை வெளியே அனுப்ப வேண்டாமே என்று நானே வாங்குவதற்குக் கிளம்பினேன். வெளியே போனால் மழை வருகிற மாதிரி இருந்தது. பெண்டாட்டியிடம் குடை கேட்டு வாங்கிக்கொண்டேன்.

எங்கள் பகுதியில் எட்டு எட்டரைக்குக் கடையெல்லாவற்றையும் மூடிவிடுவான். மெயின் ரோட்டில் ஒரு கடை இருக்கிறது. ராத்திரி பதினோரு மணி வரைக்கும் திறந்திருப்பான். ஹோல்சேலாக விற்கிறான் என்பதால் டூத்பேஸ்ட் அங்கே ஒரு ரூபாய் கம்மி. ஆனால் ரொம்ப தூரம் நடக்க வேண்டும். இன்றைக்கு வேறு வழி இல்லை. கதை கேட்டுக்கொண்டே நடந்தேன்.

ரோடு குண்டும் குழியுமாக இருந்தது. புது செருப்பு வாங்கினால் மூன்று மாதம்தான் வருகிறது. தெரு விளக்குகள் பாதி நாள் எரிவதேயில்லை. இருட்டில் பெரிய

பள்ளம் ஏதாவது இருந்தால் அடிபட்டு சாக வேண்டியதுதான். இதற்கு நடுவில் அசரீரி கதை ரேடியோவில் பண்ணுகிற மோனோ ஆக்டிங் நாடகம் மாதிரி ஓடிக்கொண்டிருந்தது. கதையில் உருப்படியாக எதுவும் இல்லை. ஆனால் எப்படித்தான் முடிகிறது என்று பார்ப்போமே என்று நானும் விடாமல் கேட்டுக்கொண்டே வந்தேன். கதை முடிந்த பிறகு என்ன ஆகும் என்று தெரிந்துகொள்ளவும் ஒரு ஆவல். என்னுடைய நல்ல நேரம், நான் அதை அலட்சியமாக விடவில்லை. ஏனென்றால் நான் இப்போது சொல்லப்போவதை நீங்கள் நம்ப மாட்டீர்கள்.

அந்தக் கதை இருக்கிறதே, நான் கேட்டுக்கொண்டிருந்த கொலைக் கதை, அது என்னுடைய கதைதான். அந்தப் பையன் ஒரு ஆளைப் பின்தொடர்கிற மாதிரி வரும். அதிலிருந்தே ஏதோ உறுத்தியது. ஏனென்றால் அவன் சொன்ன வீடு, தெரு, வர்ணனை, அவன் பின்தொடரும் ஆள் போகிற வழி, எல்லாமே அச்சு அசப்பில் எனக்குப் பொருந்தியது. அவன் சொல்லச் சொல்ல நான் பயந்த மாதிரியே எல்லாம் துல்லியமாக இருந்தது. எனக்கு உதறியது. இவன் யார்? ஏதாவது மாயாவியா? என் காதுக்குள்ளே எப்படி வந்தான்? என்னை எப்படிப் பிடித்தான்? எங்கேயிருந்து என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்? "டேய், நிறுத்தடா!" என்றேன். "யாரடா நீ?" என்றேன். நன்றாகக் கத்தினேன். அவன் காதில் விழுந்த மாதிரியே தெரியவில்லை. அவன் பாட்டுக்குப் பேசிக்கொண்டேயிருந்தான். பிறகு எவ்வளவோ கெஞ்சினேன், மிரட்டினேன், ஒன்றுக்குமே

அவன் பதில் சொல்லவில்லை. தன் பேச்சை அவன் நிறுத்தவேயில்லை. நான் பேசுவது அவனுக்குக் கேட்காமல் அவன் பேசுவது மட்டும் எனக்குக் கேட்டுக்கொண்டிருந்தது ஒன்வே ரேடியோ மாதிரி. நான் நடந்துகொண்டிருந்த ஏரியாவில் ஈ காக்காய் இல்லை. வரிசையாய் ஷட்டர் போட்ட கடைகள். கத்தினால் யாருக்கும் கேட்காது, ஓடிப் பிரயோஜனம் இல்லை. ஒரே விஷயம், எனக்குத் தெரியும் என்று அவனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் என்னிடம் சொல்லியிருப்பானே.

அவன் விடாமல் தீர்மானமாக இருந்தான். இன்னொரு பக்கம் பயப்பட வேண்டுமா என்பதே எனக்கு சந்தேகமாக இருந்தது. இது கனவாக இருந்தால்? வீட்டில் இருந்தாலாவது அக்கம்பக்கத்திலிருந்து யாரையாவது வரச் சொல்லி தப்பிக்கலாம். அவர்கள் எனக்கு மறை கழன்றுவிட்டது என்று நினைத்தால்கூடப் பரவாயில்லை, யாராவது கூட இருப்பார்கள். ஆனால் வீட்டிலிருந்து ரொம்ப தூரத்துக்கு வந்து இருட்டில் தனியாக மாட்டிக்கொண்டேன். நான் நடக்கிற ஒவ்வொரு அடியையும் நான் போகிற ஒவ்வொரு தெருவையும் சரியாக வர்ணித்துக்கொண்டிருந்தான் அவன்.

வாயைத் திறக்க முடியாமல் மனசுக்குள்ளேயே அனத்திக்கொண்டிருந்தேன். உயிருக்கு ஆபத்து வந்தால் என்னை மாதிரி சாதாரண பிள்ளைக்குட்டிக்காரன் என்ன செய்வான்? என் பெண்ணும் பெண்டாட்டியும் கண்ணில் வந்தார்கள். என் பெண்டாட்டியைவிட என் பெண்ணை நினைத்தால்தான் துக்கமாக வந்தது. இரண்டு பேருமே

பாவம்தான்.

இதே மாதிரி முன்பு ஒருமுறை நடு ராத்திரியில் நான்கு நாய்களிடம் மாட்டிக்கொண்டேன். ஓடவும் முடியாது, நிற்கவும் முடியாது, அடிக்கவும் முடியாது. பாய்ந்துவிடும். கல் மாதிரி அப்படியே நின்றுவிட்டேன். அசைவதற்கே பயமாக இருந்தது. ஒன்று இருந்தால் சமாளிக்கலாம், நாலோடு மல்லுக்கட்ட முடியுமா? நாலும் உர், உர்ரென்று உறுமிக்கொண்டே பாய்வதற்கு ரெடியாக நின்றுகொண்டிருந்தது. யாராவது அந்தப் பக்கம் வந்து விரட்டாவிட்டால் சதை மிஞ்சாது. அந்த சமயத்தில் ஒரு ஆட்டோவில் இரண்டு பேர் வந்ததால் அன்றைக்குத் தப்பித்தேன். அதே மாதிரிதான் இப்போது சிக்கிக்கொண்டேன். ஓடத் தெம்பில்லை, துரத்துவான். நின்று என்னடா என்று கேட்டு சண்டை போட வயதில்லை. கத்தியோ கித்தியோ ஈஸியாக சொருகிவிடுவான். அப்புறம் அநாதைப் பிணமாகக் கிடக்க வேண்டும்.

அப்போது வீட்டிலிருந்து போன் வந்தது. வரும்போது அப்படியே ஒரு கிலோ புளி வாங்கிக்கொண்டு வா என்றாள் மனைவி. அவள் தாலிக்கு ஆபத்து வந்ததே அவளுக்குத் தெரியவில்லை! எனக்கா, அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. அவளிடம் சொன்னால், ஒன்று, என்ன உளறுகிறாய் என்பாள், அல்லது நம்பி ஒரேடியாக பயந்துவிடுவாள். அவள் வேலைக்கு ஆக மாட்டாள். ஆனால் பேசிவிட்டு வைக்கும்போதுதான் எனக்கு போலீஸ் ஞாபகமே வந்தது. இது முன்பே தோன்றியிருக்கக் கூடாதா?

உடனே 100ஐ அழைத்தேன். ஒரு லேடிதான் போனை எடுத்தார்கள். நிதானமாகப் பேசினார்கள். ஆள் வருவார்கள், பதட்டப்படாமல் இருங்கள் என்றார்கள். எனக்கு இந்த ஏரியா மனப்பாடமாகத் தெரியும். நான் பாட்டுக்கு ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுக் கால் போன போக்கில் நடந்துகொண்டேயிருந்தேன். ஓட வேண்டும் என்று தோன்றிக்கொண்டே இருந்தது. நடுவில் ஒரு தெரு முழுக்க ஜனங்கள் இருந்தார்கள். யாரிடமாவது உதவி கேட்கலாம், இல்லையென்றால் ஏதாவது ஒரு வீட்டுக்குள் புகுந்து ஒளிந்துகொள்ளலாம். ஆனால் நான் சொல்வதை அவர்கள் நம்ப வேண்டுமே! இப்போது தப்பித்தாலும் அவன் எங்கேயாவது ஒளிந்துகொண்டு நான் தெருவை விட்டு வந்ததும் மீண்டும் துரத்தினால் என்ன செய்வது? அதனால் நடந்துகொண்டேயிருந்தேன்.

சிறிது நேரத்தில் எனக்கு இன்னொரு போன் வந்தது. இந்த முறை முட்டையா பூண்டுப் பொடியா என்று நினைத்துக்கொண்டே பதட்டமாக போனை எடுத்தால் போலீஸ். இன்னொரு ஆள் பேசினார். நான் எங்கே இருக்கிறேன் என்று கேட்டார், சொன்னேன். அந்தத் தெருவிற்கு வரும் வழியில் தோண்டியிருக்கிறார்கள், ஜீப் நுழையாது என்றார். நான் வரும் ஏரியா வெளிச்சமாக இருக்கும், நிறைய ஜனம் இருக்கும், மெதுவாக மூன்றாவது தெருவுக்கு வாருங்கள், அங்கே அவனைப் பிடித்துவிடுவோம், பயப்படாமல் இருங்கள் என்றார். எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. ஹார்ட் அட்டாக் வருகிற அளவுக்குப் படபடப்பாக இருந்தாலும் நம்பிக்கையோடு நிதானமாக நடந்தேன். மூன்றாவது

தெருவுக்குள் போனால் ஒரு போலீஸ் ரோந்து ஜீப் நின்றிருந்தது. அருகே இரண்டு போலீஸ்கள் நின்றிருந்தார்கள். எனக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தார்கள் போல. என்னைப் பார்த்ததும் இரண்டு பேரும் ஓரமாகப் போ என்று வேகமாக சைகை செய்தார்கள். நான் ஓடிப் போய் ஜீப்புக்குப் பக்கத்தில் சுவரோரமாக நின்றுகொண்டேன். அந்த ஆள் பின்னாலேயே கையில் பெரிதாக இளநீர் சைஸுக்கு ஒரு பாறையைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தான். அதனால் அடித்தால் தலை நசுங்கிவிடும். போலீஸ் அவனைக் கோழி அமுக்குவது போல் அமுக்கிவிட்டார்கள். சின்னப் பையன்தான். இப்போது கொலை முயற்சி கேஸில் புழலில் இருக்கிறான். "சின்னப் பையன்கள் எதையாவது படித்துவிட்டுக் கொலைசெய்ய வந்துவிடுகிறார்கள்" என்றார் ஒரு போலீஸ். அப்படி என்னதான் படிக்கிறார்களோ!

5

நைட் ஒரு 11 மணிக்கு எனக்கு கன்ட்ரோல் ரூமிலிருந்து போன் வந்தது சார். ஏரியா எல்லாம் சொல்லி ஒரு மர்டர் அட்டெம்ட்டை தடுக்க சொன்னார்கள். பத்து நிமிஷத்தில் மடக்கிப் பிடித்துவிட்டோம். அக்கிஸ்ட்டை பொதுவாக முதலில் லாக்கப்பில் விட்டு நாலு காட்டு காட்டி ஒரு கண்டிஷனுக்குக் கொண்டுவருவோம். ஆனால் இந்த ஆள் வரும்போதே பேயடித்த மாதிரி இருந்தான். என்ன எழுதிக் கொடுத்தாலும் கையெழுத்து போட்டுவிடுவான் போல இருந்தது. என் கண்ணெதிரிலேயே அவன் கையைக் கிள்ளிக்கொண்டான். கிராக்கு. பொறுமையாக விசாரித்தேன்.

முன்பகை கிடையாது. ஆள் ஒருத்தருக்கு ஒருத்தர் யாரென்றே தெரியாது. எதற்கடா கொல்லப் போனாய் என்றால் உளறுகிறான். பிலாசபி பேசுகிறான். ஏதாவது படித்துவைத்திருப்பான் போல. கொலை செய்தால் தண்டனை கிடைக்காது என்று எந்த பிலாசபி சொல்கிறது சொல்லு என்று கேட்டேன். பயலுக்குப் பேச்சே வரவில்லை. கம்ப்ளெயின்ட் கொடுத்தவன் சொன்ன கதை எங்கேயும் செல்லாது. எஃப்.ஐ.ஆரில் அந்த ஆள் புகாரைப் பார்த்தால் சிரிப்பீர்கள். நாங்கள் பார்க்கும்போது அக்கிஸ்டு கொலை செய்ய ஓடி வந்தான். நாங்கள்தான் சாட்சி, நாங்கள்தான் கேஸ். நாங்கள் மட்டும் உடனே போகவில்லை என்றால் ஆள் செத்திருப்பான். ஆனால் அந்த ஆளுக்கு நன்றியே இல்லை. ஸ்டேஷனில் எங்கள் காசில் காபி குடித்துவிட்டு பிளாஸ்டிக் கப்பைக்கூட எடுத்துக்கொண்டு போய்விட்டான். நாளைக்கு பேப்பரில் வரும் பாருங்கள்.

நீர்க் காளான்

நீரில் நனைத்த கை உதறுவது போல் தூறுகிறது. இதுநாள் வரை கிரிக்கெட் மட்டை வெயிலில் வாட விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் தூறல் துளிகளைத் தங்கள் சிறிய அழுக்கு உள்ளங்கைகளில் பிடிக்கத் தெருவெங்கும் சிதறி ஓடுகிறார்கள். தின்ணையில் பாக்கு இடிக்கும் பல்லிலிக் கிழவி இடிபாட்டை நிறுத்திவிட்டு முகம்

மலர்ந்து தூறல் கிளம்பும் இடத்தை அண்ணாந்து பார்த்து வாய்சிரிக்கிறாள். அவளுக்கும் வருணனுக்கும் ஏதேனும் ஒப்பந்தம்?

பாதி நடையில் தூறலை எதிர்கொண்ட ஒருவர் இரு கைகளையும் தலை மேல் வைத்துக்கொண்டு குடை எடுத்துவர வந்த வழியே திரும்பிச் செல்கிறார். தன் மேல் விழும் மழைத் துளிகளை சேற்றில் புரண்ட வாலை ஆட்டி விரட்டுகிறது தெருவோர மாடு. தூறலை மதியாமல் காரியமாய் ஓடுகிறது ஒரு நாய். அதை வேடிக்கை பார்க்கப் பதற்றத்துடன் பின்தொடர்வது போல் சற்று இடைவெளி விட்டு இன்னொரு நாய்.

அதற்குள் சில தலைகளில் பாலிதீன் தொப்பிகள். சில பெண்கள் தூறலிலிருந்து தப்பிக்க சேலையால் முக்காடு போட்டு குஜராத்திக் கோலம் பூணுகிறார்கள். தெருவின் தார்த் தரை உலர்நிலை இழந்து மழையீரத்தின் கருநிறத்தை ஏந்தியாயிற்று. ஆங்காங்கே பலர் மூக்குக் கண்ணாடிகளைக் கழற்றி சட்டைகளில் துடைத்துக்கொண்டு பார்வைக்கு உதவியாய் மீண்டும் மாட்டிக்கொள்கிறார்கள்.

மழையாக வளரும் என்ற ஐயத்தில் கடை வாசல் ஒன்றில் ஒதுங்கிய ஒருவர் தூறல் நின்றுவிட்டதா என்று அறியக் கைநீட்டிப் பார்க்கிறார். அவரது புறங்கையிலும் மோதிர, ஆள்காட்டி விரல்களிலும் தூறல் துளிகள் விழுகின்றன. அது சவாரிக்கான அழைப்பில்லை என அறிந்தும் ஒரு ஆட்டோ ஓரங்கட்டுகிறது. வீடு திரும்பியவர் குடையுடன் வருகிறார். ஆனால் தூறல் ஓய்கிறது.

நாட்டு நடப்பு

அப்புறம் 'லேட்டஸ்ட்' சமூகப் பிரச்சினை என்ன? சீக்கிரம் தீருமா எப்படி? இன்றைக்கு பேப்பர் இன்னும் படிக்கவில்லை. அதற்குள் உலகத்தைப் புரிந்துகொள்ள வல்லடி. ஒரே சமயத்தில் பல பிரச்சினைகள் உலகைப் புரட்டிப் போட்டுக்கொண்டிருப்பதை நான் அறிவேன். அவை நாளும் மாற்றம் கண்டுகொண்டிருப்பதையும் நான் அறியாமலில்லை. உலகம் படுபிஸி. அது ஒரே சமயத்தில் எண்ணிறந்த பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டும் முன்னமே இருக்கிற பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டும் வளர்க்கிற பிரச்சினைகளைத் தீர்க்கப் போராடிக்கொண்டும் அப்போராட்டங்களைத் தடுத்துக்கொண்டும் தடுப்பதை எதிர்த்துப் போராடிக்கொண்டும் இருக்கிறது. உலகம் தன் மீது தானே போர் தொடுத்துக்கொண்டபடி இருக்கிறது. எல்லா ஆயுதங்களையும் பிரயோகித்துப் பார்க்கிறது. அடி தாங்காமல் சுருண்டு விழுகிறது. மீண்டெழ முடியாதபடிக்குத் திருப்பித் தாக்குகிறது. உலகம் குமுறுகிறது, கொண்டாடுகிறது, திமிறுகிறது, திண்டாடுகிறது, ஓசோனில் ஓட்டை போடுகிறது, சூடாகிக்கொள்கிறது, ரசிக்கிறது, வெறுக்கிறது, தனக்குள் ஆழ்ந்து பார்த்துக்கொள்கிறது, தனக்கு வெளியே கூர்ந்து பார்க்கிறது, தீர்மானிக்கிறது, குழம்புகிறது, கண்டுபிடிக்கிறது, தொலைக்கிறது, படிப்படியாக அழிகிறது. ஆனால் அத்தனையையும் இன்னும் பலதையும் செய்தபடியே

இருந்துகொண்டிருக்கிறது. இதெல்லாம் பேப்பரில் வராது. அதனால்தான் இன்றைய பேப்பரை இன்னும் தொடவில்லை. என் எதிரில்தான் டீப்பாயில் மடித்த நிலையில் கிடக்கிறது. திரும்பவும் யாருக்கோ என்னவோ நடந்திருக்கிறது போல. முகப்பில் பெரிய போட்டோ போட்டிருக்கிறார்கள்.

பரமகவி படலம்

புனைபெயருக்கான பெருந்தேடலில் ஈடுபட்டிருந்தார் மொழிபெயர்ப்பாளக் கவிஞர் லபக்குதாஸ். வகைதொகையில்லாமல் வார்த்தைகள் ஈவிரக்கமின்றிப் பலவாறாகக் கோர்த்து துணிந்து எழுதிக் குவிக்கப்படும் தமது கவிதைகளில் பஞ்சமின்றிக் காணப்படும் உயர்கவித்துவம், வெறும் கவிதைகளுக்குள் மட்டுமே புகைந்துகொண்டிராமல் புனைபெயரிலும் பொங்கிப் புளுக வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். ஒரு கவிஞனின் பெயரே அவனின் கவிதைகளுக்குண்டான கவித்துவத்தின் நிச்சயத்தன்மை சார்ந்த வாக்குறுதியை வாசகருக்கு அளித்து அன்னாரைக் கவிதைக்குள் இழுக்க வேண்டும் என்றார் அவர்.

நீங்கள் கவிதைகளைக் கொள்ளைநோய் போல் தவிர்ப்பவராக இருந்தாலொழிய 'பரமகவி' என்ற புனைபெயரில் சிறு/பெரு பத்திரிகைகளில் அவ்வப்போது

எட்டுப் பத்து வரிகளில் வரும் கவிதைகளைப் பார்க்கவாவது செய்திருப்பீர்கள். இப்போது அந்தப் பெயர் அவருக்கு அலுத்துவிட்டது. நான் வேறு கவிதைக்காக 'பேயோன் சாமர்த்தியா' என்ற புனைபெயரைக் கைகொள்வதாக முன்னம் ஒரு கட்டுரையில் சொல்லியிருந்தேன். போதாதா? அடுத்த வாரம் ஒரு பத்திரிகைக்குக் கவிதை அனுப்புவதாக "கமிட்" செய்துகொண்டுள்ளார். ஆகையால் புனைபெயர் நாமகரணம் சூட்டுதல் அடுத்த ஆறு மணிநேரத்திற்குள் செய்தாக வேண்டிய விஷயம். என்னிடம் போனில் பேசினார், பிறகு பைக் சாவியைத் திருகி வண்டியைக் கிளப்பிக்கொண்டு வீட்டிற்கே வந்துவிட்டார்.

புனைபெயர்களின் இயங்கியலைக் கலந்துரையாடினோம். சமஸ்கிருதமாகப் பெயர் வைத்துக்கொண்டால் கனவு காணுதல், தாபம், ஏக்கம், உறவு, பறவை, நபரிடம் நேரடியாகப் பேசுதல் என்கிற மாதிரி கவிதைகளாக எழுதுவார்கள். மிஸ்டு காலுக்கு பதில் வராதது கருதி வாடும் கவிதையாக இருந்தாலும் வெளி, கிளி எல்லாம் கலந்து எழுத வேண்டும். புனைபெயரில் இரண்டு பெயர்கள் இருந்து முதல் பெயர் -அன் விகுதியில் முடிந்து இரண்டாம் பெயர் -ஆ விகுதியில் முடிந்தால் சமூகப் பிரச்சினைகளைப் பற்றியும் எழுதுவார்கள். சாதாரணமாக சி. ரவி, இரா. செல்வம், நை. மோகன் என்கிறாற்போன்ற பெயரைப் பயன்படுத்தினால் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் சாயும் வசதி இருக்கிறது. ஆனால் பெயரில் கவர்ச்சி இருக்காது. நை. மோகன் என்ன எழுதிவிடப்போகிறான் என்று படிக்காமலே தூற்றவும் கூடும். ஆகவே உங்கள்

வியூகத்தைப் பொறுத்து ஒரு புனைபெயராகத் தேர்வு செய்யுங்கள் என்றேன். இதெல்லாம் அவருக்குத் தெரியாமல் இல்லை. அவரும் பழம் தின்று என்னைவிட ஒரு கொட்டை கூடுதலாகவே போட்டவர்தான். இருந்தாலும் அவர் பாசையில் சொன்னால் ஒரு "செகண்ட் ஒப்பீனியன்" வேண்டியிருந்தது.

பரமகவியை சமஸ்கிருதம் சுண்டியிழுத்தது. ஆனால் அன்-ஆ மீதும் ஒரு கண் இருந்தது. அன்னாவைத் தேர்வு செய்யாமல் போனால் கிடைக்க வேண்டியது ஏதாவது கிடைக்காமல் போய்விடுமோ என்கிற ஒரு திமித்ரியின் கவலை அவரிடம் தெரிந்தது. சமூக அம்சம் வேறு விட்டுப்போகுமோ என்ற சந்தேகம். பிறகு இரண்டு மாதிரியும் எழுதி முன்னோடியாகச் செய்து பார்க்கலாம் என்று அவர் தீர்மானித்தார். நான் அவருக்குச் சட்டெனக் கொடுத்த கலவையான பட்டியல்:

1. சிரமகவி
2. சவகவி
3. பூமத்தியன்
4. சஷ்டியப்தா
5. துருபதன்
6. அசாத்தியா

7. சோஸ்வீட்யா

8. ஆத்மாநான்

9. விசித்திரவிரியன்

10. பிரக்ஞன்

11. மானசீகன்

12. பெரியகவி

13. கம்பன் காவியா

14. கேசவன் காருண்யா

15. சௌந்தரராஜன் இந்திரா

16. அய்யன் திருவள்ளுவா

17. இதுதான் கவிதையா

18. அப்பன் ஆத்தா

ஒவ்வொரு பெயரின் சுப லாபங்களையும் அரை மணிநேரம் அலசிய பின் அப்பன் ஆத்தாவுக்கு விசித்திரவிரியன்தான் பிடித்திருந்தது. டீ வாங்கிக் கொடுத்தார்.

நேற்று நல்ல மழை

ஒரு நாள் (இன்றைக்கு) என் ஜன்னலுக்கு வெளியே நீண்டுநெடிந்த சாலையைப் பார்த்துக்கொண்டிருந்தேன்...

சேறான சாலையோரம். ஒரு மாடு அதில் நின்றிருந்தது. அந்தப் பக்கமாய் ஒரு பெட்டிக்காரர் வந்தார். சேற்றுக்கு நடுவில் தலைநீட்டிய ஈரங்குறைந்த இடங்களுக்குத் தாவுகையில் சேறு வழுக்கி விழுந்தார். இது நடப்பது மாட்டிற்கு அருகே. விழ விரும்பாத அவசரத்தில் பிடித்துக்கொள்ள ஏதுமின்றி மாட்டின் ஒரு கொம்புதான் கிடைக்க, கையால் அதைக் கவ்விக்கொண்டார். மாடு அனிச்சையாக ஆதரவு மறுத்துத் தலையை விலுக்கென்று ஆட்ட, அவரின் பிடி நழுவி ஏதோ நடுத்தெருப் பந்திக்குத் தயாராவது போல் தொபக்கென்று சேற்றிலேயே 'சப்ளாங்கட்டை'யிட்டு அமர்ந்துவிட்டார். அவர் முகத்தில் அதிர்ச்சியைவிட திகைப்பு. அவர் எதிர்பார்க்கவேயில்லை. என்னைக்கூட யாராவது ஐந்து நிமிடங்களுக்கு முன்பு இது பற்றிக் கேட்டிருந்தால் "எனக்கென்ன ஜோசியமா தெரியும்?" என்று விரட்டிவிட்டிருப்பேன். அதனால் எனக்குத்தான் அதிர்ச்சி.

அது சாதாரண சேற்றுத் தரைதான். மாடுகளின் புழக்கத்தால் சிறிது சாணியும் கலந்திருக்கும். சாணி உரமாகப் பயன்படுவதில்லையா? அது ஒன்றும் புதைகுழி அல்ல.

எவ்வளவு நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தாலும் ஒன்றும் ஆகாது. ஆனாலும் பதற்றமான ஒரு அவசரத்துடன் எழுந்துகொள்ளத் தலைப்பட்டார் நம்மவர். ஆடையெல்லாம், உள்ளங்கையெல்லாம் சாணிச் சேறு. கைப்பெட்டியைச் சற்றுக் குள்ளமான, அகலமான ஊன்றுபலகையாகப் பயன்படுத்தி எழப் பார்த்தார். அதுவோ பாவம் சின்ன பிரீஃப்கேஸ். அதனால் அவரின் எடையை ஏற்க முடியுமா? பெட்டியின் சேறு படாத பக்கத்திற்கும் சேறு அறிமுகமாகி பெட்டி மேல் அவர் விழுந்தார். இப்போது மனிதர் தொடைகளில் எல்லாம் சேறு. சிறு தொப்பையில் சேறு. முதலில் பேண்ட் டெரிகாட்டன் போல் தெரிந்தது. இப்போது பார்த்தால் தேர்ந்த துணிக்கடையாளரால்கூட 'என்ன மெட்டீரியல்?' என்று கண்டுபிடிக்க முடியாது.

மாடு ஏதோ நினைவுகளை அசை போட்டபடி வாலை ஒருமுறை சாவகாசமாய்ச் சுழற்றியது. நமது நபர் அக்கம்பக்கம் பார்த்தார். ஆனால் அவரை யாருமே கவனிக்காதது விசேஷம். உதவ ஆளில்லை என்றாலும் வேடிக்கை பார்த்து வெட்கப்படுத்தவும் ஆளில்லாதது அவருக்கு ஆறுதல்.

நம் மனிதர் பெட்டியைக் கையால் இரண்டடி தள்ளி விட்டார். விழுந்த இடத்திலிருந்தே எழுந்து நிற்கவும் முடியும் என்ற தத்துவார்த்த நம்பிக்கை அவருக்குப் போய்விட்டிருந்தது போலும். உட்கார்ந்தபடியே அவரின் பிரத்தியேக பெர்முடா முக்கோணத்திலிருந்து இழுத்து இழுத்து வேகமாக நகர்ந்தார். நான்கு இழுப்பில் உலர்ந்த

நிலம் தட்டுப்பட்டது. பின்னர் எழுந்து நின்று ஆடையிலிருந்த சேற்றை சேற்றுக் கைகளால் தட்டி விட முயன்றார். ஜாக்கிரதையாக அடிகளை எடுத்து வைத்துப் பெட்டியைக் கொத்தியெடுத்தார். விரையில் அடிவாங்கியவர் போல் பெங்குவின் நடை நடந்து நடுச்சாலையை அடைந்தார். ஆட்டோக்களுக்குக் கைகாட்டினார். எவனும் நிறுத்தவில்லை. தூறலிடத் தொடங்கியது. நொடிப்பொழுதில் பேரிரைச்சலுடன் கன மழையாக மாறிவிட்டது. பெட்டிக்காரர் ஆட்டோ பிடிக்கும் முயற்சியைக் கைவிட்டு மழையிலிருந்து ஒதுங்க சாலையின் எதிர்ப்பக்கம் இருந்த மூடிய கடையை நோக்கி விரைந்தார். அதற்கு முன் வாகனங்கள் வருகின்றனவா என்று சாலையின் இருபக்கமும் அவர் பார்க்காமல் இல்லை. நான் ஜன்னலை மூடிவிட்டேன். ஏனென்றால் ஜன்னலைத் தாண்டி வீட்டுக்குள்ளேயே சாரல் அடிக்க ஆரம்பித்துவிட்டது.

எப்படி இருத்தல்

'உங்களுக்கு மாத வருமானம் எவ்வளவு?' என்ற கேள்விக்குப் பிறகு நான் சொற்பமும் ரசிக்காத கேள்வி 'எப்படி இருக்கிறீர்கள்?' என்பது. தொலைபேசியில் கேட்பவர்கள் உண்மையிலேயே தெரியாமல் கேட்கிறார்கள். 'நன்றாயிருக்கிறேன்' என்று நான் பதிலளித்தால் அவர்கள் நம்பித்தான் ஆக வேண்டும். ஆனால் நேரில் பார்த்து 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்பவர்களுக்கு எங்கே

போயிற்று புத்தி?

என்னைப் பார்க்க வருபவர்கள் வணக்கம் சொன்னதும் சாவி கொடுத்தாற்போல் அடுத்து வாயைத் திறப்பது இந்தக் கேள்வியை ஒப்பிக்கத்தான். நான் முந்திக்கொண்டு சட்டென 'வணக்கம், உட்காருங்கள், மற்றதையெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம்' என்றுவிடுவேன். அதையும் மீறி 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று ஒருவர் கேட்டுவிட்டார் என்றால் அவரைக் கையைப் பிடித்துத் தரதரவென பக்கத்து அறைக்கு இழுத்துச்சென்று ஆளுயரக் கண்ணாடி முன்பு நின்றுகொள்வேன். 'இந்தாருங்கள், பார்த்துக்கொள்ளுங்கள், இப்படித்தான் இருக்கிறேன்' என்று என் கண்ணாடிப் பிம்பத்தைக் காட்டுவேன்.

'எப்படி இருக்கிறீர்கள்?' என்று நீங்கள் நாக்கின் மீது பல்லினைப் போட்டுக் கேட்கும்போது என்ன பதிலை என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள்? 'அதை ஏன் சார் கேட்கிறீர்கள், எல்லாம் குடிமுழுகிப் போய்விட்டது' என்றா சொல்லப்போகிறேன்? 'நன்றாக இருக்கிறேன்' என்றுதான் சொல்லியாக வேண்டும். எனது வருமான வேதனைகளையோ வீட்டு உபாதைகளையோவா விவரிக்கப்போகிறேன்? விவரிக்க ஆரம்பித்தால் அடுத்த முறை என் புத்தகத்தை வாங்கி என்னிடம் ஆட்டோகிராப் வாங்க வீட்டிற்குத்தான் வருவீர்களா? என் பதிலைத் தெரிந்தே எதிர்பார்த்துக் கேட்கும் அபத்தம் என்ன வகையில் சேரும்? தினமும் ட்விட்டரிலும் ஃபேஸ்புக்கிலும் ஏதாவது உளறிக்கொண்டுதான் இருக்கிறேன். அதை விடாமல் படித்துவிட்டுப் பிறகு வீட்டிற்கு வந்து நலம்

விசாரிப்பது அபத்தம்தானே? புகைப்படங்களில் உலகமே என் காலைக் கட்டிக்கொண்டிருப்பது போல் பல் தெரிய நான் சிரிப்பதை நீங்கள் பார்த்ததில்லையா?

என் நண்பர்கள் சிலர் தொலைபேசியில் 'என்னடா, உயிரோடுதான் இருக்கிறாயா?' என்று விசாரிப்பார்கள். அவர்களில் பலருடன் நான் நீண்டகாலத் தொடர்பில் இல்லை. எனவே அவர்கள் நிஜமான சந்தேகத்துடன் கேட்கக்கூடும். நமக்குத் தெரியாமலே செத்துப்போகிறவர்கள் எண்ணிக்கை பெரிது. நமக்கு வேண்டிய ஒருவரின் மரணத்தைத் தெரியப்படுத்த இன்னொரு வேண்டியவரைத் தொடர்பு கொள்ள முயன்றால் அவர் இவருக்கு முன்பே கமுக்கமாகப் போய்ச்சேர்ந்திருப்பார். ஆகையால் அவர்கள் கேள்வியை மன்னிப்பதில் குற்றமில்லை. ஆனால் மற்றவர்களுக்கு என்ன கேடு? 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று இவர்கள் கேட்பார்களாம், 'நன்றாகத்தான் இருக்கிறேன், நீங்கள் எப்படி?' என்று நாம் இவர்களுக்கு எதிர்க்கேள்வி கேட்டு சொறிந்துவிட வேண்டுமாம். என்னய்யா, விளையாடுகிறீர்களா? நீங்களெல்லாம் சகமனிதர்களோடு பிறக்கவில்லையா?

என் மனைவியின் உறவினர்களைப் பார்த்தோமானால், அவர்கள் மொட்டையாக 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்பதில்லை. 'உடம்புக்கு ஒன்றுமில்லாமல் நன்றாக இருக்கிறீர்களா?' என்றோ 'காலை எடுத்த பின்பு நடக்க முடிகிறதா? ஓ, அது நீங்கள் இல்லையா? சரி சரி' என்றோ விவரமாக விசாரிப்பார்கள். இது உண்மையான அக்கறையில் நல்ல தகவலை எதிர்பார்த்து ஆதங்கம்

கலந்த ஆர்வக்குறுகுறுப்புடன் கேட்கப்படும் கேள்வி. இதை மதித்து நாமும் எங்கே அரிக்கிறது, யாருக்கு பாக்கி தர வேண்டியிருக்கிறது என்று விரிவாகச் சொல்லலாம். என்னிடம் வரும் கேள்வி அந்த ரகமா? அப்படிக் கிடையாது.

'எப்படி இருக்கிறீர்கள்?' என்ற கேள்வியை அப்படியே அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டாம், அது உரையாடல் தொடங்க அது ஒரு வழி மட்டுமே என்கிற தர்க்கத்தை நான் ஏற்க மாட்டேன். அது உரையாடல் தொடங்கும் வழி மட்டுமல்ல, அது அலுப்பூட்டும் ஒரு சடங்கு. அதனால் உங்கள் எப்படி இருக்கிறீர்கள்களை என்னிடம் கொண்டுவராதீர்கள்.

ஏனென்றால் நான் நன்றாகத்தான் இருக்கிறேன். ரத்த அழுத்தம் இருக்கிறது. இரண்டு நெடுங்கடன்களை இப்போதைக்கு அடைக்க வழி இல்லை. வீட்டு வாடகையை ஏற்றிவிட்டார்கள். அதற்குப் பழிவாங்குவதற்காக மட்டுமே நான் வாடகைக்கு விட்ட சொந்த வீட்டிற்கு வாடகையை ஏற்றியிருக்கிறேன். விலை ஏற்றங்கள் மனதைக் குடைந்துகொண்டே இருக்கின்றன. மகன் படிப்புக்கும் திருமணத்திற்கும் ஆகப்போகும் செலவை நினைத்தால் இப்போதே தலைமறைவாகிவிடலாம் போலிருக்கிறது. மனைவி மனைவியாகவும் மகன் மகனாகவும் இருந்து இம்சிக்கிறார்கள். மிதமிஞ்சி அன்பைப் பொழிந்து குற்றவுணர்வுக்குத் தூபம் போடுகிறார்கள். உண்மை புரியாமல் வெறியைக் கிளறுகிறார்கள். என்னால் என்னைத் தாண்டிப் போக முடியவில்லை. சக

எழுத்தாளர்கள் என்னென்னவோ செய்து என்னைவிட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஏழை-பணக்காரன் வித்தியாசம் புயல் வேகத்தில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஒருநாள் நிலைமை மோசமாகிக் கலவரங்கள் வெடிக்கும். அப்பாவிகள் மட்டும் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படுவார்கள். இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் போலீஸ் உள்பட யாருக்கும் பாதுகாப்பு இருக்காது. தமிழகம் டிஸ்டோப்பிய யதார்த்தத்திற்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது. ஊடகங்கள் நானாவித லாகிரி வஸ்துக்களையும் நமக்கு ஊட்டி விடுகின்றன. ராட்சத வியாபாரிகள் என்னைச் சுரண்டுகிறார்கள், குழந்தைகளிடமும் பெரியவர்களிடமும் பொய் சொல்லுகிறார்கள். கலை இலக்கியங்கள் பெருமளவில் மலினமாகிவிட்டன. மக்கள் கேளிக்கைக்குக் குழந்தைகளின் கையைப் பிடித்துக்கொண்டு ராட்சத வியாபாரிகளிடம் போகிறார்கள். ஜேப்படி கொடுத்து சுய சுபிட்சம் குறித்த மாயபிம்பத்தில் மிதக்கிறார்கள். ரத்த அழுத்தத்தின் கைங்கரியத்தில் ஐந்து காபி இரண்டு காபியாக சரிந்துவிட்டது. கவிதை வாசிப்பதைக் குறைத்த பின்னும் ரத்த அழுத்தம் 150/100இலிருந்து இறங்கவில்லை. ஆனால் நான் நன்றாகத்தான் இருக்கிறேன். டி-ஷர்ட் அணிவதால் இளமையாகவும் தெரியக்கூடும்.

ஆகையால், உங்கள் உபயகுசலோபரிகளை எல்லாம் என்னிடம் வைத்துக்கொள்ளாதீர்கள். தமிழில் 'வணக்கம்' என்றொரு வார்த்தை இருக்கிறது. சுருக்கமான, அழகான, பூடகமில்லாத வார்த்தை. இந்தியப் பிரதமர்கள், ஜனாதிபதிகளுக்கெல்லாம் தெரிந்த வார்த்தை. இதைச்

சொல்லிவிட்டு விஷயத்திற்கு வாருங்கள் போதும்.

டாக்டர் விருது

இடைவிடாமல் முழுதாகப் 10 நொடிகள் காலிங்பெல்லை அழுத்தும் சத்தம் கேட்டது. லபக்குதாஸ்தான். பத்து நொடிகள் விடாமல் காலிங்பெல்லை அழுத்தக்கூடிய ஒருவரை கவிஞர் என்றால் நம்ப மாட்டார்கள். ஆனால் இந்தக் காலத்தில் கவிஞர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்.

கதவைத் திறந்து அவர் உருவத்தைப் பார்த்து, "வாங்க" என்றேன். நான் சொன்னபடி அவரும் வந்தார். சென்ற முறை நான் அவர் வீட்டிற்குப் போனேன். இது அவர் முறை. நான் போனபோது அவர் மனைவி 14 இட்லி செய்து கொடுத்தார். இப்போது என் மனைவி ஊரில் இல்லாததால் கடலைப்பருப்பைத்தான் வறுத்துத் தின்ன வேண்டும்.

"அப்புறம் என்ன விசேஷம்?" என்றார் லபக்குதாஸ்.

நான் விஷயத்தைச் சொன்னேன்.

"இந்த சைடா ஒரு கௌரவ டாக்டர் பட்டம் வருதுய்யா!"

லபக்குதாஸ் பதில் பேச்சு பேசாமல் முகமெல்லாம் மலர, இருவரிசைப் பற்களும் தெரியப் புன்னகைத்தார். அவருக்கு இது கசப்பான செய்தி என்று பொருள். சாகித்ய அகாதமி விருது கிடைப்பதாகச் சொன்னால் வாய்விட்டு சிரித்து என் கையை உலுக்கியெடுத்திருப்பார்.

"இது நல்லாயிருக்கே! யார் குடுக்குறாங்களாம்?"

"பெருங்களத்தூர்ல ஒரு ஹோமியோபதி க்ளினிக்."

"வண்டலூரா இருக்கப்போவுது!" கிண்டல் செய்கிறாராம்.

"இல்ல, பெருங்களத்தூர்தான்."

"ஹோமியோபதி க்ளினிக்-னா எந்த க்ளினிக்? அவங்களுக்கு யாரு ஃபண்ட் பண்றாங்க?"

அதாவது நான் பதற்றமாக விவரங்களை மறைக்கப் பார்க்கிறேனாம், இவர் துருவித் துருவிக் கேட்டு எனக்கு அசௌகரியத்தையும் டாக்டர் பட்டத்தின் சட்டபூர்வம் குறித்த சந்தேகத்தையும், முடிந்தால் பயத்தையும் ஏற்படுத்துகிறாராம். ஆனால் எனக்கு இந்தாள் தந்திரங்கள் எல்லாம் அத்துபடி.

"ஸ்ரீ சாய் வைத்யசாலா ஹோமியோபதி க்ளினிக் அண்ட் ரிசர்ச் சென்டர்" என்றேன் அமைதியாக.

"கேள்விப்பட்ட மாதிரி இருக்கு. ஹோமியோபதில ரிசர்ச்னா

சுக்கையும் மிளகையும் கஷாயம் பண்ணி எலிக்குக் குடுத்துப் பாப்பாங்களா?"

இவர் வலதுசாரிக்காரர்கள், இணைய அரசியல்வாதிகள் போல நிறைய தகவல்களை அடுக்கி எழுதினாலும் ஆராய்ச்சிக்கு அர்த்தம் தெரியாது. ஆனால் அதை விளக்க நான் ஆளில்லை. எனவே அவரது சந்தேகத்தை அப்படியே 'லூஸில்' விட்டேன்.

"போன மாசம்தான் பேயோன் விருதுன்னு ஒண்ணு வாங்குனீரு..."

"அது பர்சனல். இது வெளியேர்ந்து வருது..."

"எப்படியோ உம்ம வனத்துல ஜலதாரைதான்."

"ஏன்யா, பேசிக்கிட்டுத்தானே இருக்கோம்? எதுக்கு வனம், கனம்னுக்கிட்டு? காட்டுல மழைன்னு சொல்றது..."

"ஒன் அவர் யூஸ் பண்லன்னா டச் விட்டுப் போயிடுதுய்யா."

"வொக்காபுலரி பிரிண்ட் அவுட் என்னாச்சு?"

"அத விடுய்யா, என்னிக்கு பட்டம் சூட்டுறாங்க?"

"ஆகஸ்டு 3, சாயந்திரம் 7 மணிக்கு விழா."

"ஆகஸ்டு 3 என்ன கெழம வருது?"

"அன்பின் வெள்ளி."

"அமௌன்டு எவ்ளோ?"

"பத்து ருவா."

"அவ்வளவுதானா? கேவலமா இருக்கே!"

அதென்னவோ உண்மைதான். பத்தாயிரத்தை வைத்துக்கொண்டு உருப்படியாக ஒன்றும் செய்ய முடியாது. ஆயிரம் ரூபாய் வரிகளில் போய்விடும். ஒன்பதாயிரத்தில் ஆறு, மனைவி கைக்குப் போய்விடும். மிச்ச மூன்றை வைத்துக்கொண்டு கால் டாக்சியில் அரக்கோணம் போய்விட்டு வரலாம்.

"அப்படித்தான் இருக்கு. ஆனா அதக்கூட ஏத்துக்கலன்னா நாம என்ன மயித்துக்கு எழுதிட்டிருக்கோம்?"

"கரெக்டுய்யா, ஆனா ஒரு பதினஞ்சுன்னாகூட கொஞ்சம் டீசண்டா இருக்குமே?"

டாக்டர் பட்டம் பெறுவதன் இன்பத்தை லபக்குதாஸ் சாமர்த்தியமாக சுரண்டிக்கொண்டிருப்பது அப்போதுதான் எனக்கு உறைத்தது. இதை கவுண்டர் செய்ய வேண்டும்.

"கௌரவ டாக்டர் பட்டம்கூட இல்லாம எத்தன பேரு எழுதிக்கிட்டுத் திரியறான் எலக்கியம்னுட்டு. காசு இருக்கிறவன் வாங்கித் திங்குறான். எனக்கு ஓசில

கிடைக்குது. அடுத்த மாசம் நான் டாக்டர், அது போதும்யா எனக்கு."

லபக்குதாஸ் அடங்கிப்போனார். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் வேறு விஷயத்தைப் பேசத் தொடங்குவார். ஆனால்,

"அமௌன்டு பத்தி எனக்கு சந்தேகமா இருக்கு. கௌரவ டாக்டருக்கு இருபதாவது குடுப்பாங்க. இது எதோ ராங் இன்ஃபர்மேஷன்" என்றார்.

"இல்லய்யா, பத்துதான். ஆனா அது தவிர மாசம் பத்தாயிரம் சம்பாதிக்கலாம்னாங்க. ஃபுல் டீட்டெய்ல்ஸ் கேட்டிருக்கேன். இப்ப ஃபோன் வரும்."

லபக்குதாஸ் வீட்டிற்கு வரும் சமயத்தில் அந்த அழைப்பு வர வேண்டும் என்று எண்ணத்தில் ஏற்பாடு செய்திருந்தேன். வந்தது.

"ஹலோ, பேயோன். குட்மார்னிங். ஆமா... ஆமா, டாக்டர் பட்டம்... சொன்னாங்க... அப்படியா... ஆறு மாச கோர்ஸா? ஒக்காள ஓளி யாருகிட்ட!"

லபக்குதாஸ் அதற்கு முன்பு என்னை அப்படிப் பார்த்ததேயில்லை.

தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே

அகலிகை கதையில் பெண்ணிய செய்தி வைக்க வேண்டும். காவிய நாயகி சோரம் போய்விட்டாள் பார் என்று எள்ளி நகையாடக் கூடாது. அந்த செய்திக்கேற்ப கதையை அமைக்க வேண்டும். அதில்தான் எனக்கு பெண்டு நிமிர்ந்துகொண்டிருந்தது. இந்திரன் அவள் வாசற்படி வரை வந்துவிட்டான். அதற்கு மேல் கதை நகர மறுத்தது. நிறைய வர்ணனை ஜாலங்கள் சேர்த்துப் பார்த்தேன். ஆனால் கதையின் பலக்கேடான நிலையை அவை காப்பாற்றவில்லை. சட்டென்று முடிந்து தொலைக்காமல் இதென்ன இழவாய்ப் போயிற்று என வாசக ரீதியில் நினைத்துக்கொண்டு கதைக் கோப்பை வெறுப்பாய் மூடினேன்.

எழுதிக்கொண்டிருக்கும் விசயம் முட்டுச் சந்துக்குப் போய் நிற்கும்போதெல்லாம் மனதை திசைதிருப்பத் தொலைக்காட்சியை நாடியே எனக்குப் பழக்கம். ஊர் ஜனங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு காலாற நாலு தெரு நடந்தால்கூட தொலைக்காட்சியில் த்ரிஷாவோ தமன்னாவோ (மேடங்கள்) ஆடுவதைப் பார்ப்பதற்கு ஈடாகாது (இதை ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர் படிப்பவர்களுக்கு: த்ரிஷாவும் தமன்னாவும் என் குழந்தைப் பருவத்தில் நான் ரசித்த அஞ்சலிதேவி, ராஜசுலோசனா போல ஐம்பதாண்டுகளுக்கு முன்பு இருந்த முன்னணி நடிகைகள்). இதில் த்ரிஷா மட்டுமே 5.8 அடி உயரம். இவர்களையெல்லாம் பார்த்தால் புனைவுலகை விட்டுக் கற்பனை உலகிற்குத் தாவிவிடும் மனம்.

டி.வி.க்கு நேரெதிரில் ரிமோட் கையுடன் சோபாவில் உட்கார்ந்து 'ஹாயாக' சாய்ந்துகொண்டால், இருக்கிற எல்லா பிரச்சினையும் ஆளை விடச் சொல்லி உத்தரவு வாங்கிக்கொள்ளும். தினமும் இந்நேரத்தில் மகனுடைய படிப்பு காரணமாக அணைந்திருக்கும் டி.வி. இந்த சந்தர்ப்பத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. என் 15 வயது மகன் நிக் டி.வி.யில் டோரெமோன் பார்த்துக்கொண்டிருந்தான். சோட்டா பீம், எஃப்டிவி, செய்திகள் போன்றவைகளைப் பார்க்காத வரை எனக்கு மகிழ்ச்சியே. ஆனால் நான் டி.வி. பார்த்தே ஆக வேண்டிய நிலை இது. காஜல் அகர்வாலின் ஓர் உடலசைவில் அகலிகையின் விதி நிர்ணயிக்கப்படலாம்.

"நகருடா, போய்ப் படி" என்றேன் அதிகாரமாய்.

"அவன் பாக்கட்டும் இவ்ளோ நேரமும் படிச்சிக்கிட்டு இருந்து இப்பதான் டி.வி. பாக்க உக்கார்றான் அதுக்குள்ள ஏன் எழுப்புறீங்க பாவம் சாயந்திரத்துலேந்து படிச்சிக்கிட்டிருக்கான் நீங்க லேப்டாப்ல ஏதாவது போட்டுப் பாத்துக்குங்க அவனத் தொந்தரவு பண்ணாதீங்க அவனும் எவ்ளோ நேரந்தான் படிப்பான் என்ன பரிச்சையா வரப்போவுது எட்டு மணிக்கு வெளிய போய் வெளையாடக்கூட முடியாது நீங்க போய் வேற ஏதாவது பண்ணுங்க கத புஸ்தகம் படிங்க டி.வி. அவன் பாத்துக்கட்டும் டேய் நீ பார்டா ராஜா" – சமையலறையிலிருந்து மனைவி.

நானோ என் மகன் படித்துக்கொண்டிருந்த நேரத்தைவிட

அதிக நேரம் கணினியில் உட்கார்ந்திருந்தேன். திரும்பவும் அந்த செவ்வக ஒளிப் பலகையைப் பார்க்க என் கண்களுக்கும் மனதிற்கும் திராணியில்லை. சற்றும் பெரிய திரையில் ஐந்தடி இடைவெளி விட்டு அமர்ந்து உயிரோட்டமாக எதையாவது பார்க்க வேண்டும் போல் இருந்தது. வீட்டுச் சூழலில் ஒரு எரிமலை வளையம் வளையமாகப் புகை விடத் தொடங்கியிருந்தது எனக்குப் புரிந்தது. ஆனால் இது தவிர்க்க முடியாத சூழ்நிலை. அகலிகைக்கொரு முடிவு தெரிந்தாக வேண்டும்.

"நானும் காலைலேந்து கம்ப்யூட்டர்லதான் உக்காந்துட்டு வரேன். அவன் வேணா கம்ப்யூட்டர் எடுத்துக்கட்டும். டேய், நீ கம்ப்யூட்டர் எடுத்துக்கோ" – இது நான். ஏனென்றால் டி.வி. எனக்கு வேண்டும்.

"கம்ப்யூட்டர் வேணாம்பா..."

மகனின் நிலைமை புரியாமலில்லை. தாயின் கண்டிப்பான மேற்பார்வையில் மூன்று மணிநேரம் மாங்குமாங்கென நோட்டுப் புத்தகங்களில் மாற்றி மாற்றிக் கிறுக்கிக்கொண்டிருந்துவிட்டு இப்போதுதான் அவனுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. அதை அனுபவிக்க விரும்புகிறான். ஆனால் டி.வி. பார்த்தால்தான் கதை எழுத முடியும் என்கிற என் நிலைமையை படைப்பு மனநிலை இல்லாதவர்களுக்கெல்லாம் புரியவைக்க முடியாது.

"அதெல்லாம் அப்பறம். நீ முதல்ல ரிமோட்டை வெச்சிட்டு

எழுந்திரு."

"அம்மா..."

"என்னாது நான் சொல்றது புரிலியா உங்களுக்கு? அவந்தான் டி.வி. பாத்துக்கறேன்னு சொல்றான்ல பாக்க விடுங்களேன் நீங்க இப்ப டி.வி. பாத்து என்ன பண்ணப்போறீங்க அவன் படிச்சி டயர்டா இருக்கான் அவன் கொஞ்ச நேரம் பாத்துக்கட்டும் நீங்க வேற ஏதாச்சும் பண்ணிக்கிங்க."

"அவனுக்கு கம்ப்யூட்டர்ல நிறைய கம்ப்யூட்டர் கேம்ஸ் இருக்கு."

"அதான் அவன் வேணாங்கறானே அப்புறம் என்ன நொய்யி நொய்யின்னு உங்களுக்கு வேற ஏதாச்சும் பண்ணணும்னா கடைக்குப் போய் தோச மாவு வாங்கிட்டு வாங்க."

நான் தயங்கித் தயங்கி நின்றேன். இது என்ன மாதிரி ராஜதந்திரம்? டி.வி.யை என் வாரிசுடன் பகிர்ந்துகொள்வதில் எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் என்னால் அவனோடு உட்கார்ந்து டோரெமோன் பார்க்க முடியாது. அது நான் சிறு வயதில் பார்த்திருக்க வேண்டியது, வாய்க்கவில்லை. இப்போது நான் வளர்ந்து இரட்டை இலக்க வயதில் எனக்கே ஒரு மகன் இருக்கிறான். எனக்கு நிறைய நடிகைகளுடன் சினிமா பாட்டு பார்க்க வேண்டும். மகன் பார்க்க மாட்டான்.

நாங்கள் இல்லாதபோது அவன் என்ன பார்க்கிறானோ எனக்குத் தெரியாது. இந்த நிமிடத்தில் அவனுக்கு டோரெமோன் கேட்கிறது. அரசாங்கம், ராணுவம், சட்டம், நீதித் துறை எல்லாம் அவன் பக்கம் இருக்கின்றன. நான் எனது செருப்புகளை மாட்டிக்கொண்டு தோசை மாவு கொள்முதலுக்குக் கிளம்பினேன்.

வெளியே வந்ததும் வெதுவெதுப்பான காற்று தனது மென்கரங்களால் என்னை வரவேற்றது. இரு வாரங்களாக அலைக்கழித்துக்கொண்டிருந்த வெப்பம் சற்றுத் தணிந்தாற்போல் இருந்தது. இருந்தாலும் பல ஆண்கள் வாசற்படிகளில் சட்டையின்றி அமர்ந்திருந்தார்கள், தொலைக்காட்சித் தொடர்களைத் தவிர்ப்பதற்காக வெளியே வந்து அமர விரும்பியவர்கள் போல. சில வாசல்களில் பெண்களும் இருந்தார்கள். அவர்கள் பார்வையற்ற காதுகேளாதவர்களாக இருக்கலாம். தெரிந்தவர்கள் போட்ட கும்பிடுகளையெல்லாம் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டு நடந்தேன்.

நடுத் தெருவில் இருந்த கணபதி மாவு மில்லைக் கடந்தேன். உள்ளே மங்கிய மஞ்சள் பல்பு வெளிச்சத்தில் அரவைக்காரரும் ஒரு வாடிக்கையாளரும் நின்றிருந்ததைப் பார்க்க முடிந்தது. அதனைக் கடக்கும்போது மூக்கை உரசிய மிளகாய்ப்பொடி வாசனை என் குழந்தைப் பருவத்தை மனதின் கண்களுக்குக் கட்டியிழுத்து வந்தது. சிறுவயதில் மாவரைக்கும் பெரும்புனலையும் அதன் இனிய இரைச்சலையும் மாவு வெளிவந்து பெரிய தகர டின்னில் கொட்டுவதையும் பிரமிப்போடு பார்த்திருக்கிறேன். எப்படி

இந்தப் பெரிய முரட்டு இயந்திரத்தால் டால்கம் பவுடர் பதத்திலும் நொய் வாகிலும் என இருவிதமாக அரைக்க முடிகிறது என வியந்திருக்கிறேன். மிளகாய்த் தூளை அரைத்த பின்பு அதன் கலப்பில்லாமல் அரிசி மாவு கிடைப்பது குறித்தும் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். இன்று பெருநகரக் குருவிகள் போல மாவு மில்கள் வழக்கொழிந்துவருகின்றன. அவை பற்றிப் பேசுவதை வேண்டுமென்றே தவிர்க்கிறார்களோ என்று நான் நினைக்குமளவு யாரும் மாவு மில்கள் பற்றிப் பேசுவதுகூட இல்லை. இன்றைய தலைமுறையினருக்குப் பார்க்கக் கிடைக்காத பழைய அதிசயங்களில் ஒன்று நமது மாவு மில்கள். நான் நிறைய பார்த்துவிட்டேன்.

சில அடிகள் தள்ளி, உடலை முறுக்கிக்கொண்டு பளபளப்பாகக் கிடந்த ஒரு காலி பெப்சி டப்பா மளிகைக் கடை வாசலை அலங்கரித்தது. காசை நீட்டிய கையாலேயே தோசை மாவைப் பெற்றுக்கொண்டு, பிடி வைத்த மாவுப் பையின் செயற்கைக் குளிர்ச்சியை மறுகையால் தொட்டு அனுபவித்தபடி வீட்டை நோக்கித் திரும்பினேன்.

வீட்டில் மகன் சோபாவின் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டிருந்தான். "எந்திரி" என்று சொல்ல வாயெடுத்தவன் சமையலறையில் பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்டு நிறுத்தினேன்.

"பாத்துட்டியாடா?"

"இல்ல, இப்பதானே வந்து உக்காந்தேன்."

"சரி, பாத்த வரைக்கும் போதும், அப்பறம் பாத்துக்கலாம்."

"அம்மா..."

மறுகணம், அழைக்கப்பட்ட நபர் கூடத்திற்கு வந்து என்னிடம் பேசத் தொடங்கியிருந்தார்.

"ஐயய்ய இத ஏன் வாங்கிட்டு வந்தீங்க இது இட்லி மாவு திருப்பிக் குடுத்துட்டு தோச மாவுன்னு வெளக்கமா கேட்டு வாங்கிட்டு வாங்க போங்க."

"இட்லி மாவும் தோச மாவும் ஒண்ணுதான?"

"அடடே அப்புடிங்களா? தோச உப்புமா மாதிரி இருந்தா சாப்புடுவீங்களா? போயிட்டு வாங்க போய் தோச மாவுன்னு கேளுங்க."

மீள்பயணத்தினூடே பல்வேறு வகையான உணர்ச்சிகளைக் கிளறும் அனுபவங்கள் எனக்குக் கிடைத்தன. பல விதமான மனிதர்கள், காட்சிகள், இயற்கையின் சிறு அற்புதங்கள்... எதையும் விவரிக்க எனக்குப் பொறுமை இல்லை. தோசை மாவும் இட்லி மாவும் ஒன்றுதான் என்று கடைக்காரனிடம் ஏற இறங்கிய பார்வையை அவமானத்துடன் வாங்கிக் கட்டிக்கொண்டாயிற்று. இரு மாவுகளும் ஒன்றே என்பதை மனைவி ஏற்றாக வேண்டுமே. ஆதாரத்திற்காக கடைக்காரன் சொல்வதை செல்பேசியில் வீடியோ எடுத்திருக்கலாம். எடுத்துச் சென்ற அதே பிடி வைத்த மாவுப் பை மனதில் கனக்க வீட்டிற்குத் திரும்ப எடுத்துச்

சென்றேன்.

என் வீட்டில் வெராந்தா இல்லை. வீடு நேரடியாகக் கூடத்தில் தொடங்கிவிடுகிறது. அங்கேதான் டி.வி. இருக்கிறது. அதன் எதிரில் சோபா காலியாக இருந்தது. மின்சாரக் கட்டணத்திற்கு அநாவசியமாக ரூபாய்களைச் சேர்த்தபடி டி.வி.யும் மின்விசிறியும் தனியாக ஓடிக்கொண்டிருந்தன. அவன் பாத்ரூமிற்குப் போயிருக்கலாம். அவசரப்பட்டு சோபாவில் அமர்ந்து டி.வி.யைப் பிடித்தால் 'பேக் டு ஸ்கொயர் 1′ ஆகிவிடும். நான் இல்லாத நேரத்தில் என்ன நடந்தது என்று தெரியாததால் சிறிது நேரம் நடுக்கூடத்தில் நின்று பின்னந்தலையை அடையாளமாகச் சொறிந்துகொண்டு நின்றேன்.

"எங்க போய்ட்டான் இந்தப் பையன்?" என்றேன்.

"கோபி கூப்டான்னு அவனோட போயிட்டான் டி.வி. நீங்க பாத்துக்குங்க" என்றபடி அடுப்படியிலிருந்து வெளியே வந்தவர் கையிலிருந்த தோசை/இட்லி மாவுப் பையைப் பறித்துப் புரட்டிப் பார்த்துவிட்டு உள்ளே எடுத்துச் சென்றார்.

நான் பெருமூச்சுடன் சோபாவில் அமர்ந்து ரிமோட்டைத் தேடியெடுத்து ஒரு சினிமா பாட்டு அலைவரிசைக்கு மாற்றினேன். கிறங்கடிக்கும் உடலமைப்பு கொண்ட ஒரு நடிகை போதுமான மட்டும் மேற்கத்திய உடை அணிந்து லால்பாகில் நடனமாடிக்கொண்டிருந்தார். அருமை.

இடையில் அகலிகை பற்றி யதார்த்தமாக ஒன்று தோன்றியது. கௌதமருக்கு ராமனில்தான் கண்டம்.

மேடை ஏறும் மதிப்புரைகள்

5/7/2012
சென்னை

அன்பிற்குறிய பேயோன் சார்!

வணக்கம்! நான் மோகன். "வன்மதி" என்ற புனைப்பெயரில் எழுதுகிறேன். சமீபத்தில் எனது இரண்டாவது கவிதைத் தொகுப்பாகிய "புறநகர் மனப்பான்மை" வெளியாகியது பற்றி நீங்கள் தெரிந்திருப்பீர்கள். இயக்குனர் ரமணன் வருகை தந்து வாழ்த்துரை ஆற்றினார். _____ வார ஏட்டில் என் தொகுப்பிற்க்கு விரிவாக மதிப்புரை வெளியிடுவதாக கூறியுள்ளனர். உங்களிடமிருந்து மதிப்புரை பெற்று தருவதாக நான் அவர்களுக்கு வாக்குறுதியளித்து விட்டேன். வரும் ஜீலை 20-இற்குள் அதனை எழுதிக் கொடுத்தால் மிக்க நன்றியுடையவன் ஆவேன். கவிதைகளை பாராட்டித் தான் எழுதவேண்டும் என இல்லை. உங்கள் பார்வையை சமரசங்களற்று சுதந்திரமாக பதிவுசெய்து ஒரு வளரும் கவிஞனை ஊக்குவிற்க்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் தங்கள் பார்வைக்காக எனது நூலின் பிரதிகளிரண்டை

இணைத்துள்ளேன்.

இப்படிக்கு என்றும் உங்கள் வாசகன்
"வன்மதி" மோகன்

இணைப்பு 1: "புறநகர் மனப்பான்மை" கவிதைத் தொகுப்பு
இணைப்பு 2: "புறநகர் மனப்பான்மை" கவிதைத் தொகுப்பு

* * *

6-7-12
சென்னை

அன்பின் மோகன்,

வணக்கம். எனக்கு அறிமுகம் தேவையில்லை. உங்கள் பெயரைக் கொண்டு பார்க்கையில் நீங்கள் 80களில் பிறந்திருப்பீர்கள் என ஊகிக்கிறேன். இளையராஜாவின் வாழவைப்பில் கொடி கட்டிய நடிகர் மோகனின் பெயர் அக்காலத்தில் ஒரு மோஸ்தராகப் பல குழந்தைகளுக்கு வைக்கப்பட்டன. நீங்கள் அந்தக் குழந்தைகளில் ஒருவராக இருக்கலாம் அல்லது உங்கள் தாத்தா பெயர் மோகனாக இருக்கலாம். முதலில் கவிதைத் தொகுப்பு வெளியீட்டிற்கு வாழ்த்துக்கள். வெளியீ’ட்டு விழாவிற்குத் திரைப்பட இயக்குநர்களெல்லாம் வருவதால் உங்கள் புத்தகத்தின் தலைபோகிற முக்கியத்துவத்தை உணர முடிகிறது.

முக்கியத்துவம் தரத்தின் இன்றியமையாத சகோதரன். ரமணன் சார் உங்களுக்குச் செய்யாத எதை என்னால் செய்துவிட முடியும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

கவிதைத் தொகுப்பிற்கு மதிப்புரை எழுதுவதிலும் கருத்து சொல்வதிலும் எனக்கொரு சிக்கல் இருக்கிறது. எனக்குக் கவிதை புரியாது. கவிதை பற்றி எழுதுவதற்குக் கவிஞன் என்ற தகுதி மட்டும் போதாது. கவிதை புரிந்தாக வேண்டும். எனக்குக் கவிதை புரியாது. நீங்கள் கவிதை எழுதும்போது எதனாலோ பாதிக்கப்பட்டதைப் பதிவு செய்கிறீர்கள். உலகை உங்களுக்கே'யுரிய' பார்வையில் பார்த்து உங்கள் மூளையின் தர்க்கத் திறன் பார்த்துப் பார்த்துச் செதுக்கிய மொழியில் உங்கள் அரசியல், திட்டமிடல், நோக்கங்கள் ஆகிய கருவிகளுடன் எழிற்படப் பதிவு செய்கிறீர்கள். ஆனால் அப்பதிவுகளை நான் படிக்கும்போது இவையெல்லாம் என்னை வந்தடைவதில்லை. உங்கள் கவிதையைப் படிக்கையில் நீங்கள் நன்றாக பாதிக்கப்பட்டவர் என்பது மட்டுமே புரிகிறது. இந்தச் சிக்கல் எனக்கு எல்லா கவிஞர்களிடமும் உள்ளது. அதனால்தான் கவிதைக்குக் கருத்தோ மதிப்புரையோ கேட்டால் இரண்டையும் மன்னிப்புக் கோரலுடன் மறுத்துவிடுவேன். ஆனால் உங்கள் பிரச்சினையை நான் வேறு விதமாக அணுக விரும்புகிறேன்.

உங்கள் கடிதத்தில் ரமணன் சார் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அவரை உங்களுக்கு எப்படி, ஏன் தெரியும்? ரமணன் தற்போது 'மூக்குத்திப்பூ', 'பசி 2′ ஆகிய

படங்களில் மும்முரமாயிருப்பதை அறிவேன். இவ்வளவு பணிகளுக்கிடையில் உங்கள் நூல் வெளியீட்டிற்கு அவர் வருவது உங்கள் கவிதைகள் மேல் அவர் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது. அந்த நம்பிக்கை எனக்கும் தொற்றிக்கொள்கிறது.

குறிப்பாக என்னுடைய மதிப்புரைதான் வேண்டும் என்று நீங்கள் தீவிரமாக இருப்பதைப் புரிந்துகொள்கிறேன். ஆனால் நாம் மதிப்புரைக்குள்ளேயே போகத் தேவையில்லை. வெளியிலிருந்தே முடித்துக்கொள்ளலாம். 'புறநகர் மனப்பான்மை'க்கு இரண்டாவதாக ஒரு நூல் வெளியீட்டு விழாவைக் கோவையில் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதற்கும் ரமணன் சார் வருவதாகவும் என் வாசகர்கள் மூலம் அறிகிறேன். ரமணன் சார் உங்களுக்கு அவ்வளவு நெருக்கமா? நான் உங்களுக்கு மதிப்புரை எழுதி அது பக்க அளவிற்கேற்பக் கொந்தப்படுவதைவிட கோவை விழாவில் நான் கொஞ்சம் பேசிக்கொள்வது நல்ல ஏற்பாடாக இருக்கும் அல்லவா? எனக்கும் எழுதும் வேலை மிச்சமாகும், உங்களுக்கும் என்னை ரமணன் சாருக்கு அறிமுகப்படுத்திய மாதிரி இருக்கும்.

மதிப்புரையில் இல்லாத வசதி மேடைப் பேச்சில் இருக்கிறது. இன்று நாம் பார்க்கும் நவீன தமிழகத்தை உருவாக்கியவர்கள் மேடைப் பேச்சுக்குப் பதிலாகக் கட்டுரைகள் எழுதியிருந்தால் இன்று நாம் பார்க்கும் நவீன தமிழகம் உருவாகியிருக்காது. உங்கள் கவிதைகள் எனக்குப் புரியவில்லை என்பதை முன்பே குறிப்பிட்டாயிற்று. எனவே

அவை பற்றி நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. ஏழெட்டு வெளிநாட்டு எழுத்தாளர், ஓவியர், இயக்குநர், பாலே நடனக் கலைஞர் பெயர்களை இடைபுகுத்தல், உங்கள் கவிதைகளிலிருந்து கவித்துவமாகக் கருதப்படக்கூடிய சில வரிகளை மேற்கோள் காட்டல், எல்லாவற்றுக்கும் என்னுடைய அலாதியான தர்க்கத்தால் முடிச்சுப் போடுதல்... இப்படியாக அமைந்திருக்கும் எனது உரை. நான் உங்களை ரெய்னர் மரியா ரில்கே என்ற கவிஞருடன் ஒப்பிடலாம் என்று இருக்கிறேன். எனது வாழ்வின் பெரும் புதிர்களில் ஒன்றான அவரை உங்களுக்குப் பிடிக்கும்.

ஆகமொத்தம் என் கவிதை அறியாமையை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதை உங்களுக்காகச் செய்கிறேன். அழைப்பிதழில் என் பெயரைச் சேர்க்க வேண்டும் என்பதில்லை. ஏதோ காரணத்தினால் ரமணன் சார் விழாவுக்கு வருவதை ரத்து செய்துவிட்டால் உடனடியாக எனக்குத் தெரியப்படுத்தவும். என் உரையில் அவரைப் பற்றியும் ஓரிரு வரிகள் இருக்கும். மேடையில் அந்த வரிகளை நான் பேசும்போது லேசாகத் திரும்பி அவரைப் பார்ப்பேன். அவர் விழாவுக்கு வரவில்லை என்றால் எனது உரை வீணாகி என்னால் வர இயலாது போய்விடும்.

கவிஞர்களுக்குத் தங்கள் முதல் தொகுப்பில் முழு திருப்தி இராது. அதன் மீதான அதிருப்திகளில் கற்ற பாடங்களை இரண்டாம் தொகுப்பில்தான் காட்டுவார்கள். உங்கள் முதல் தொகுப்பை நான் பார்த்ததில்லை. இரண்டாவது சிறப்பாக

வந்திருப்பதைப் பார்த்து முதல் தொகுப்பு எவ்வளவு திராபையாக இருந்திருக்கும் என்று என்னால் ஊகிக்க முடிகிறது. உங்கள் மூன்றாம் தொகுப்பு இரண்டாம் தொகுப்பை வெகுவாகக் கேவலப்படுத்தட்டும் என வாழ்த்துகிறேன். அதற்குத் தகுதியான நபர்தான் நீங்கள். சுதந்திரத்திற்கு நன்றி.

அன்புடன்
பேயோன்

காலை மலர்

"ஆம்பளைன்னா வேலைக்குப் போவணும். எளுத்தாளன்னு வீட்லயே கெடந்தா எப்புடி? களுதய ஆபீசுக்குப் போய் எளுதுறது. அவனவன் ஆபீசுக்கும் போயிட்டு வீட்டுக்கும் ஒத்தாசையா இருந்துட்டு எளுதி சம்பாரிச்சிட்டிருக்குறான்.

"எப்பப் பாத்தாலும் டிவி, சினிமா, புஸ்தகம்னு வீட்டுக்கு ஒரு வேல செய்யிறதில்ல. எல்லாத்தியும் நாந்தான் செய்யணும். இதென்ன சத்திரமா சாவடியா? ரெண்டு நாள் ஒக்காந்து கரண்ட்ட குடிச்சி லோலோன்னு கம்பியூட்டர தட்டிட்டிருக்குறது, அத பன்னண்டு ருவா செலவு பண்ணி குரியர்ல அனுப்புறது, அதுக்கு ஒரு மாசம் களிச்சு ஐநூர் ருவா செக் அனுப்புவான். அதுக்குத்தான் அத்தன அலப்பற. அது வாரதுக்குள்ளாற எனக்கு செக் வந்துச்சா,

செக் வந்துச்சான்னு என்னமோ லச்ச ருவா இவருக்கு எவனோ எளுதிவெச்சு அனுப்புற மாதிரி ஆயரந்தடவ நொய்யி நொய்யின்னு கேட்டுட்டே இருக்குறது.

"ரெண்டு வீடு வாங்கிப்போட்டா ஆச்சா? எல்லாருந்தான் சொந்த வீடு வெச்சிருக்கான். அதையே பெரிய சாதன மாதிரி எப்பப் பாத்தாலும் சொல்லிட்டே இருக்குறது. என் அண்ணன் பையனுக்கு ஊருல ஒரு தெருவே இருக்கு. ஆனா இவுருதான் மகாராஜா. இவுரு சிங்கிள் பெட்ரூம் வெச்சு ரெண்டு அரமண கட்டுவாரு. நாங்க வாயப் பொத்திட்டு ரசிக்கணும். அந்த மொசைக்கு தரைல தண்ணி கொட்டுனா தெரியிறதில்ல. டைல்ஸ் போட செலவு பாத்தா என்ன இதுக்கு வீட்டக் கட்டணும்? வேளா வேளக்கி காப்பி.

"அப்பறம் என்ன செஞ்சாலும் நொள்ள சொல்றது. ரசத்துல உப்பில்லன்னா போட்டுக்க! அதான் டப்பாவுல பக்கத்துல வெச்சிருக்குல்ல. உப்பு ஜாஸ்தின்னா தண்ணிய ஊத்திக்க. என்னமோ ஸ்டார் ஓட்டல் ஓனர் மாரியே எப்பவும் பேச்சு. சமையல்ன்னா ஒவ்வொருநா ஒண்ணு ரெண்டு கூடக்கொறையத்தான் செய்யும். ஏன், நீ சமைச்சுப் பாரு. பொறவு எல்லாரும் ஓட்டல்லதான் சாப்பிட்டுக்கணும். "பீட்சா" திங்க வேண்டீதுதான் "பீட்சா".

"என்னிக்காவது நாலு கேள்வி கேட்டுட்டா ஆம்பளையா வாயத் தொறந்து பதில் சொல்றத வுட்டுட்டு மூஞ்சிய தூக்கி வெச்சிட்டு தாம்பரம், திருமாங்காடுன்னு போயிடுறது. அந்த பத்து நாள் நாந்தான் கண்ட கருமத்தையும் கையெழுத்து

போட்டு குரியர் வாங்கணும். வீட்ல ஏற்கனவே குப்பை குப்பையா குமிஞ்சி கெடக்குறது போதாதா? நாம எளுதுன குப்பையில்லாம அடுத்தவன் குப்பையவும் சேத்து சேத்து அலமாரில அடுக்கி வெச்சிக்கிறது முன்னால நின்னுக்கிட்டு பத்திரிக்கைக்காரன் போட்டோவுக்கு போஸ் குடுக்க.

"எம் புருசன் எளுத்தாளன்னு பெருமையா சொல்லிக்கணுமாம். எளுத்தாளன்னா என்னான்னு கேக்குறா அவ'வ. என்னாத்த சொல்ல? எளுத்தாளன்னா யாரு? 'கத கவித எளுதுவாரு'ன்னா எவ்வளோ சம்பளம்னு கேக்குறாளுக மூதிக. இந்த அசிங்கத்த எங்க போய்ச் சொல்ல? வாழ்க்கையில நாலு புஸ்தகத்த கண்ணால பாத்திருந்தா தெரியும். அவளுக கெடக்கட்டும், அவளுக அப்புடித்தான் கேப்பாளுக. நமக்கெங்க போச்சு புத்தி? பதினஞ்சு வயசுல ஒரு பையன் இருக்கான், அப்பன் வேலைக்குப் போகாம வீட்ல ஒக்காந்துட்டு டிவி பாத்துட்டிருக்கான்னா அப்பறம் நாமதான பதில் சொல்ல வேண்டிருக்கு?

"ஒவ்வொருத்தன் பைக்குல பொண்டாட்டி புள்ளைங்கள பின்னால ஒக்கார வெச்சிட்டு சர்ரு சர்ருனு சுத்துறான். நமக்கெங்க அதெல்லாம். கையக் காட்டி ஆட்டோவ நிறுத்தி அர மணிநேரம் அவனோட வாக்குவாதம் பண்ணிட்டு வேணான்னு அவன் கேட்டதவிட இருவது ரூவா அதிகமா குடுத்து வேற ஆட்டோ புடிக்கிறது. அது வரைக்கும் அம்மாவும் புள்ளையும் தேமேன்னு நடுத்தெருவுல பராக்கு பாத்துட்டு நிக்கணும். வெளங்குமா இது?

"சும்மா சும்மா மீட்டிங்கு, விருதுன்னு வெளியூர் போயிடுறது. நாலாயர் ருவா செலவு பண்ணிட்டு ஊருக்குப் போயிட்டு வந்து எரநூர் ருவா தாம்பாளத்த கொண்டாந்து 'ஏய் எனக்கு இதக் குடுத்தாங்க இதுல என் பேரு எளுதிருக்கு பாரு'ன்னு பெருமையா காட்டிக்கிறது. ஒரு சாமி படம் கலைப்பொருள் வெக்க வீட்டுல எடமில்ல. வீடு முளுக்க இவுரு வாங்குன வேல்டு கப்புதான்.

"எத்தன நாளு ஊரு ஒன்ன நம்பும்? நாளைக்கே கோயான்னு ஒருத்தன் வருவான் நீ அவனப் பாத்துதான் அத்தனயும் எளுதுனேன்னுக்கிட்டு. அப்ப எவன் செக்கு அனுப்புவான்? அப்ப வேலக்கித்தான போவணும்? டை கட்டுனாத்தான் வேல தருவான்னு எவஞ்சொன்னான்? சரி, வீட்ல அடுப்பு எரியணுன்னா டையத்தான் கட்டுறது? பொண்டாட்டி புள்ளைக்கிக் கஞ்சி ஊத்த டை கட்ட மாட்டானா ஒரு ஆம்புள?

"அப்பறம் வாசகன் பீசகன்னு தெனமும் எவனாவது வீட்டுக்கு வந்துருவான். நான் வீட்டு வேலயப் பாக்குறதா இவனுங்களுக்கு காப்பி வாத்துத் தர்றதா? 'காபி டம்ளர மெதுவா வெய்யி'ன்னா ஏன், நீ பத்து தேயி, நான் காப்பி போடுறேன் எப்புடி வசதி? சினிமா டிஸ்கசன் போறியே, ஒரு படமாச்சும் ரிலீஸ் ஆவுதா? பொண்டாட்டி புள்ளைங்கள சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போனா பாவம் இந்தப் பையனுக்குத் திங்கிறதுக்கு குடிக்கிறதுக்கு வாங்கித் தர்றதில்ல. அந்தப் பாவந்தான் இளிக்கிது.

"பொண்டாட்டி புள்ளையோட பத்து நிமிசம் பேசுறதில்ல.

எதுக்கெடுத்தாலும் 'அம்மாகிட்ட கேளு.' சீரியல் பாக்குறப்பதான் இந்த வீட்டுல பாசம் பொத்துக்கிட்டுப் பொங்கும். அது முடிஞ்சப்புறம் டீ சாப்புடறேன்னு வெளியே போயிடுறது. நீங்க வெளிய போயி என்னாத்தப் பண்ணுவீங்கன்னு எங்களுக்குத் தெரியாதா?

"நேரத்துக்குப் படுக்க வாரதில்ல. ஒரு மணி வரைக்கும் டிவி பாத்துட்டு நல்லா தூங்கிட்டிருக்குறவள ஏய் ஏய்னு எளுப்புறது. காலையில அஞ்சு மணிக்கு எளுந்து காப்பி குடுன்னு உசுர வாங்கிறது. வெறும் நாலு மணிநேரம் தூங்குனா ஒடம்பு என்னத்துக்காவும்? சம்பாரிக்கிற பைசா எல்லாத்தியும் ஆஸ்பத்திரிக்கே அளுவுறதுக்கா?"

'(அடுத்த பகுதியில் நிறைவடையும்)'

ஆறு சிம்பொனிகள்

1. பாரதியின் பெரும்பிழை

இப்போதுதான் கவனிக்கிறேன். பாரதியார் ஒரு பிழையான மொழியாக்கம் செய்திருக்கிறார். "வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்" என எழுதியிருக்கிறார். இதில் வரும் மாநிலம், ஆங்கிலத்தின் 'அரசு' என்று பொருள்படும் "state"ஐக் குறிக்கிறது. 1875 அக்டோபர் 31ஆம் தேதியில் காந்தி போல குஜராத்தில்

பிறந்த சர்தார் வல்லபபாய் படேல் இந்திய விடுதலைக்குப் பிறகு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான நிலப்பகுதிகளை இணைத்து இன்றைய அனைத்திந்தியாவை உருவாக்கும் முன்னர் ஏது மாநிலங்கள்? அப்போது இந்திய துணைக்கண்டம் சமஸ்தானங்களாகவும் மாகாணங்களாகவும் பட்டிதொட்டிகளாகவும் பிரிந்திருந்தது. பாரதி அறியாமல் சொல்வது அரசு எனும் பொருளில். அப்போது இருந்தது பிரிட்டிஷ் அரசு அல்லவா? அவர் எழுதும் ஒவ்வொரு என்போமுக்கும் மனதுக்குள் 'சரிங்க சார்' போட்டுக்கொண்டே வரும்போது இந்தத் தவறை கவனிக்காமல் இருந்துவிடுகிறோம்.

2. வேலை வாய்ப்பு

ஒரு பணக்காரப் பெண்ணைக் காதலித்தால் அவளிடமிருந்து பிரிவதற்கு சுளையாக ஒரு தொகை கிடைக்கிறது. உண்மையில் பட்டதாரிகள் இதை ஒரு 'ஸ்டெடி ஜாப்'-ஆகவே கருதலாம். 90களின் தொடக்கத்தில் ஒரு பணக்காரப் பெண்ணின் அப்பனிடம் எதிர்பார்க்கக்கூடிய தொகை ஒரு லட்சத்து ஒரு ரூபாயாக இருந்தது. இன்றைய தினம் குறைந்தது இரண்டரை லட்சத்து ஒரு ரூபாய் தரப்படுவதாக எனது காவல் துறை நண்பர்கள் கூறுகிறார்கள். இந்தத் தொழிலில் பயண வாய்ப்புகள் நிறைய இருக்கும் என்று எனக்கொரு யூகம்.

எப்போதுமே, பணத்தின் அருமை தெரிந்த தந்தைமார்களுக்கு, சாத்தியமான மருமகன்கள் கோரும் சரிக்கட்டுத் தொகை ஒருவிதத்தில் நியாயமானதாகத்

தோன்றிவந்துள்ளது. மகளை அவள் விரும்பும் நபருக்குத் திருமணம் செய்துவைத்தால் எதிர்பாராத திருமணத்திற்கு ஆகும் பந்தல், சாப்பாடு, சீர் செனத்தி போன்ற செலவுகளுடன் ஒப்பிடுகையில் லஞ்சத் தொகை சிறிதாகப் படுவதில் வியப்பேதும் இல்லை.

அந்தக் காலத்திலேயே எனது நண்பர்கள் சிலருக்கு நான் இந்த யோசனையைத் தந்திருக்கிறேன். இதற்காக அவர்களுக்குப் புதிய வங்கிக் கணக்குகள், வைப்பு நிதிக் கணக்குகள் தொடங்கிக் கொடுத்திருக்கிறேன். சிலர் சரியான முதலீடுகளைச் செய்து இன்று சௌகரியமாக வாழ்கிறார்கள். இன்றும் என்னைப் பார்க்கும்போதெல்லாம் நன்றி சொல்வார்கள். இதன் நிதி சாத்தியங்களை உணராத பல காதலர்களுக்கு காதலிகளின் தந்தைமார்களிடம் பணம் கேட்பது ஒரு கடைசி நிமிட பின்யோசனையாக மட்டுமே தோன்றுவது பெண் போதுமான அளவு போகப் பொருளாகக் கருதப்படாததையே காட்டுகிறது. இந்த நுகர்வு யுகத்தில் இந்த நிலை மாறும் என எதிர்பார்க்கிறேன்.

முக்கியமான விஷயம், பணத்திற்காக ஒரு பெண்ணுக்கு இதயமுறிவு ஏற்படுத்துகிறோமே என்று இளைஞர்கள் எண்ணக் கூடாது. உங்கள் காதலுக்குக் கிடைத்த சம்பளமாக அந்தப் பணத்தைக் கருத வேண்டும். கரும்பு தின்னக் கூலி கிடைத்தால் வேணாஞ்சாமி என்று சொல்வோமா? இதில் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு உறவுகளின் நிலையாமை குறித்துக் கிடைக்கும் இலவச பாடத்தை எந்த ஹார்வர்டிலும் போதிக்க மாட்டார்கள். ஒரு பணத்தாசைக்காரனிடம் சிக்காமல் இருந்தோமே என்றும்

அவள் சமாதானமடையலாம். தந்தைக்கோ, தானே முன்னின்று மகளைக் காப்பாற்றிய திருப்தி இருக்கும். இறுதியில் எல்லா தரப்பினருக்கும் திருப்தியளிக்கக்கூடிய ஏற்பாடு இது. ஆனால் முன்பே பணக்காரர்களாக இருக்கும் பணக்கார இளைஞர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுவது பேராசை. நான் ஏழை பட்டதாரிகளுக்குத்தான் வழி சொல்கிறேன்.

3. நமக்கென்ன வேலை?

சிறந்த புத்தகங்களை, சிறந்த திரைப்படங்களைப் பற்றி சிறந்த விமர்சகர்கள் எழுதிவிடுகிறார்கள். ஆமாம், ஆங்கிள், உணர்ச்சிகள், உளவியல், அரசியல், வண்ணம், கிண்ணம் என்று எல்லாவற்றைப் பற்றியும் எழுதுகிறார்கள். நமக்கு சுத்தமாக வேலையே இல்லை. நம் பார்வை அவ்வளவு முக்கியமில்லை. இவர்கள் நம்மைவிடப் பெரிய ஆட்கள். விமர்சனம் எழுதும் வேலை வற்றலாய்க் காய்ந்த துணியைப் பிழிகிற வேலை. எதையாவது எழுதிக்கொண்டிருக்கிற நேரத்தில் ரிலாக்சாக இன்னொரு புத்தகம் படிப்போம், இன்னொரு படத்தைப் பார்ப்போம், உலகத்தை சந்தோசமாக வைத்திருப்போம்.

4. கேவலம்

"உங்கள் சிறுகதைத் தொகுப்பைப் படித்தேன். கேவலமாக இருக்கிறது" என்று வெகு சுலபமாகச் சொல்லிவிடுகிறார்கள். ஒரு கதையை எழுதுவது எவ்வளவு சிரமமான வேலை தெரியுமா? கவிதையைக் குற்றம் சொன்னால்கூட நியாயம்

இருக்கும். "உங்கள் கவிதைத் தொகுப்பைப் படித்தேன். கேவலமாக இருக்கிறது" என்று யாராவது சொன்னால் "நீங்கள் என்ன லூசா? அது படுகேவலமாக இருக்கிறது சார், படுகேவலமாக இருக்கிறது!" என்று நானே ஆட்சேபிப்பேன். ஆனால் கதை அப்படி அல்ல. அதில் உழைப்பும் திட்டமிடலும் ஜோடி சேர்ந்திருக்கின்றன. கதை சரியாக முடியுமா, அல்லது முடியாமலே அச்சுக்கு அனுப்ப வேண்டியிருக்குமா என்ற கவலையும் முடிச்சுகளைத் தீர்மானிப்பதில் உள்ள உளைச்சலும் தனி சோகங்கள். மதிப்புரை எழுதும்போது இவைகளை மனதில் இருத்த வேண்டும். கதாசிரியன் வாசிக்கவும் சேர்த்துதானே மதிப்புரைகள் எழுதப்படுகின்றன? பின்பு நாகரிகம் இல்லாமல் எதிர்மறையாக எழுதினால் எப்படி?

5. தர வெள்ளோட்டம்

லபக்குதாஸின் வீட்டுக்குள் நுழைந்தபோது அவர் தம் 12 வயது மகனை இரு கைகளால் தள்ளிவிட்டுக்கொண்டிருந்தார். லபக்குதாஸ் மகனை அடிக்க மாட்டார். படக்கூடாத இடத்தில் பட்டுவிடுமோ என்று பயம். அதனால் மகனை ஐந்து நிமிடங்களுக்குத் தள்ளிவிட்டுக்கொண்டிருப்பார். மனைவிக்கும் இந்த முன்னெச்சரிக்கையைக் கற்றுக்கொடுத்திருந்தார். இருவருக்கும் மகன் மேல் கோபம் வந்து தண்டனை கொடுக்க முடிவெடுத்தால் அவனை ஒருவரிடம் ஒருவர் தள்ளி விடுவார்கள். அந்த சமயம் பார்த்து நாம் அங்கே போனால் "வாங்க" என்பார்கள் இருவரும் கோரஸாக. நம்மையும் தள்ளி விடக் கூப்பிடுகிறார்களோ என்று நமக்கு

சந்தேகம் எழும்.

இம்முறை லபக்குதாஸ் மகனை தனியாளாக ஒருகை பார்த்துக்கொண்டிருந்தார். "வாங்க" என்றார் என்னைப் பார்த்து. மகன் சட்டைப்பையிலிருந்து சிதறி விழுந்திருந்த பொருட்களைப் பொறுக்கிக்கொண்டு ஓடிப்போனான்.

"என்னய்யா நடக்கிறது இங்கே?" என்றேன்.

"மொழிபெயர்ப்பாளர் மகன் வர்க்கப் பரிசோதனையில் தோல்வியடைந்துவிட்டான்" என்றார்.

இவரைத் தள்ளி விட ஆள் இல்லை.

6. உண்மை

உண்மை பற்றி இணையத்தில் ஓயாத விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன, உண்மையைப் போல் ஒன்றுக்கும் உதவாத விசயத்தை எங்குமே பார்க்க முடியாது. அது ஒரு உதவாக்கரை நிதர்சனம். உண்மையைத் தெரிந்துகொண்டு என்னத்தை செய்யப்போகிறோம்? எடுத்துக் காதிலா மாட்டிக்கொள்ள முடியும்?

போகாமல் வருபவை

காலை டீக்கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது என்னை நோக்கி ஒருவர் வந்தார். மௌனமாக 'திசை காட்டிப் பறவை' பிரதியொன்றை என்னிடம் கொடுத்தார். நானும் மௌனம் குறையாமல் அவருக்கு 100 ரூபாய் கொடுத்தேன். இப்படித்தான் போன வாரம் ஒருவர் என் வீடு தேடி வந்து 'பாம்புத் தைலம்', 'காதல் இரவு' இரண்டையும் தந்துவிட்டு 150 ரூபாய் அள்ளிக்கொண்டு போனார். பதினைந்து ஆண்டுகளாகவே என் புத்தகங்களுக்கு இம்மாதிரி நடந்துவருகிறது.

இவ்வகை கொடுக்கல் வாங்கலுக்காக மாதம் 1500 ரூபாய் ஒதுக்கியிருக்கிறேன். சில சமயங்களில் "பட்ஜெட்"டை மீறியும் போவதுண்டு. சிலர் "பல்க்"காக வேறு கொண்டுவந்துவிடுவார்கள். அச்சமயங்களில் முன்பே பார்த்து மாடிக்குப் போய்விடுவேன். அதற்குத்தான் ஜன்னலோரம் உட்கார்வது. வீண் செலவு! வருபவன் புத்தகத்தைக் கொடுத்துக் காசை எண்ணிப் பார்த்துவிட்டுச் சும்மா போகிறானா? அவனிடம் வாங்கும் ஏச்சு போக மனையாளிடமும் கிடைக்கிறது. இருவரின் "வொக்காபுலரி"யும் வெவ்வேறு என்பதுதான் இதில் ஆறுதல்.

இப்படியே போனால் அல்லது வந்தால் பெண்டாட்டி தாலியை விற்க வேண்டியிருக்கும். தாலியை விற்றுப் புத்தகம் போடாத மிகச் சில எழுத்தாளர்களில் ஒருவன் என்று இவ்வளவு நாள் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தது கேலிக்கூத்தாகிவிடும். புத்தகம் போட்டுப் பெண்டாட்டி தாலியை விற்றவன் என்ற வேண்டாத புதுப் பெருமை

சேர்ந்துகொள்ளும். இருப்பது ஒரு பெண்டாட்டி என்கையில் எத்தனை தாலிகளைத் தேற்ற முடியும்?

இந்த "ரிட்டன்" ஆசாமிகளுக்கு என் புத்தகங்களைப் படித்ததும் அவற்றை நானேதான் என் சொந்தக் காசில் போட்டிருக்க முடியும் என்ற எண்ணம் எப்படியோ ஏற்பட்டுவிடுகிறது. சில எழுத்தாளர்கள் அப்படிச் செய்கிறார்களல்லவா? பதிப்பாளர்களிடம் காசு கொடுத்து என் புத்தகத்தைப் பதிப்பி என்று சொல்லி வெளியீட்டு விழாக்களுக்குப் பணம் தந்து பார்வையாளர்களை வரவழைத்து பத்திரிகைகளில் மதிப்புரை ஏற்பாடு செய்து "பேக்கேஜ் டீல்" போடுகிறார்கள். நான் மதிப்புரையை மட்டும் விட்டுக்கொடுப்பதில்லை. மற்றதெல்லாம் பதிப்பாளன் நீ பார்த்துக்கொள் என்று விட்டுவிடுவேன். அவனும் என்னைத் தொந்தரவு செய்ய மாட்டான். ஆனால் ரிட்டன்காரன் நான் அவன் பாக்கெட்டில் உரிமையாகக் கை விட்டுப் பணம் எடுத்துப் புத்தகத்தை அவன் கையில் திணித்துவிட்டு காத்திருந்த ஆட்டோவில் சட்டென ஏறித் தப்பித்தது போல் உணர்கிறான்.

இவர்களுக்கு என் யோசனை என்னவென்றால், என் புத்தகங்களைப் பிடிக்கவில்லையா? குப்பையில் போடு, பேருந்து இருக்கையில் திருட்டுத்தனமாக மறந்து வைத்துவிட்டுப் போ, யாராவது எடுத்துத் தரக் கூப்பிட்டால் காதைப் பொத்திக்கொண்டு ஓடு, அல்லது உன் எதிரிகளிடம் தள்ளிவிடு. உன் எதிரி நானல்ல. எதிரி என்றால் நீண்டகாலப் பகையை, முன்பகையை, தனிப்பட்ட விரோதத்தைக் குறிக்கிறது. நீண்டகால வாசகர்கள் எல்லாம்

லட்சணமாக, மூடிக்கொண்டு படித்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் கவனமாகத் தவிர்க்கிறார்கள். அந்த கவனம் இருக்கட்டும் என்கிறேன். அதற்குப் பதிலாக அம்பை ஒடித்து ராமன் ஆகப் பார்ப்பது கேனைத்தனம். நீ தின்றுவிட்டு பில்லை என் தலையில் கட்டாதே.

பதிப்பாளரைக் கேள் என்று சொல்லத் தோன்ற வெட்கம் தடுக்கிறது. ஏனென்றால் பின்னர் பதிப்பாளர்களிடம் எனக்கு மரியாதை இருக்காது. ஒரு "ரிட்டன்" சம்பவத்தை மட்டும் என் பதிப்பாளர் ஒருவரிடம் சொன்னேன். "இருக்காதே? காப்பி நல்லா போவுதே?" என்றார் என்னை நம்பாத ரீதியில். "ரிட்டன்" அவருக்கு வந்தால் தெரியும். வீட்டில் ஒரு மர பீரோவை இதற்காகவே ஒதுக்கியிருக்கிறது. 'என் புத்தகங்களின் பெரும்பாலான காப்பிகளை நானே வாங்கிவிடுவ'தாகக் கேள்விப்பட்டு சில கற்றுக்குட்டி பதிப்பாளர்கள் என்னிடம் ஆர்டர் தந்து குழைகிறார்கள்.

நான் என் பதிப்பாளர்கள் எல்லோருக்கும் கறாராகச் சொல்லிவிட்டேன்: இனிமேல் என் புத்தகங்களை கைக்காசு போட்டு வாங்குவதாக எண்ணம் இல்லை. சும்மா கொடுத்தால்கூட வாங்க மாட்டேன். நான் வேண்டுமானால் சும்மா கொடுக்கிறேன். புது பில் அச்சடிக்கும்போது "Goods once sold cannot be returned to its author. Violators will be prosecuted" என்று ஒரு வார்த்தை சேர்த்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் பிளாக்கில் விய்யுங்கள். இனிமேல் என் புத்தகங்களை நான் காசு கொடுத்து வாங்க மாட்டேன்.

நோபல் பரிசு ஏற்புரை

(எதற்கும் இருக்கட்டும் என்று)

பெரியோர்களே-தாய்மார்களே, இங்கு கூடியிருக்கும் பதிப்பாளர்களே, படைப்பாளிகளே, இதனை உலகெங்கும் தமிழ்த் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பில் பார்த்துக்கொண்டிருக்கும் ரசிக வாசக எழுச்சிகளே, என் சூழலைச் சேர்ந்த சிலரின் அவதூறுகளையும் சூழ்ச்சிகளையும் புலனாய்வு செய்து உண்மை நிலவரத்தைக் கண்டறிந்து நோபல் பரிசுக் குழுவிற்கு உள்ளபடி தெரிவித்த ஸ்வீடிஷ் உளவுத் துறையினரே, மற்றும் கடைசியாகச்

சொல்லப்பட்டாலும் குறைத்துச் சொல்லப்படாத நோபல் பரிசு தேர்வுக் குழுவினரே, காலை வணக்கம்.

ஸ்பானிய இயக்குநர் லுயி புனுவலின் The Discreet Charm of the Bourgeoisieஇல் ஒரு காட்சி வரும். படம் நெடுக ஒரு குழுவினரால் சாப்பிட முயற்சி நடந்துகொண்டிருக்கும். நான் சொல்லும் காட்சியில் ஒரு கதாபாத்திரம் ஒரு உணவகத்திற்கு நண்பர்களுடன் சென்றிருப்பார். அவருக்கு யதார்த்த சிக்கனுக்கு பதிலாக ரப்பரில் செய்த சிக்கன் பரிமாறப்படும். அந்தப் பாத்திரம் உடனே கொதிப்படைந்து எழுந்து நின்று சர்வரிடம் கத்த வாய் திறக்கும் வேளையில் அவருக்குப் பின்னால் திரை விலகும். தான் ஒரு மேடையில் நின்றிருப்பதையும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் தமது இருக்கைகளில் இருந்தபடி அவரைப் பார்த்துக்கொண்டிருப்பதையும் அவர் உணர்ந்து வசனம் மறந்த நடிகன் போல் வெலவெலத்து நிற்பார்.

இப்போது இந்த இடத்தில் நானும் அப்படித்தான் நிற்கிறேன். என் வாய் நடுங்கத்தான் இதைப் பேசுகிறேன். நான் நோபல் பரிசு மேடை ஏறுவது இதுவே முதல் முறையாகும். எனக்கு முன்பு பல அமர மற்றும் வாழும் எழுத்தாளர்கள் இந்த இடத்தில் நின்று தத்தம் உரைகளைச் சிறப்பாக ஆற்றியிருக்கிறார்கள். நோபல் பரிசு ஏற்புரைகளைப் படித்து வளர்ந்தவன், ஒருநாள் நானே ஏற்புரை ஒன்றினை ஆற்றுவேன் என்று கனவிலும் நினைத்ததில்லை. திரை இப்போது விலகிவிட்டது. நூற்றுக்கணக்கான உள்ளூர், உட்சூழல் விருதுகளைப் பெற்ற நான், இன்று 'விருதாதி விருது' என்று மதிக்கப்படும்

நோபல் பரிசைப் பெறுவதில் மட்டற்ற குதூகலம் அடைகிறேன்.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஆகச்சிறந்த பரிசாகும். ழான் பால் சார்த்தர் போன்ற ஒரு சில போராளி எழுத்தாளர்களைத் தவிர இந்தப் பரிசை யாரும் நிராகரிக்கத் துணிந்ததில்லை. கிசிங்கர், ஒபாமா போன்றவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டதில் எனக்கும் மறுப்புகள் உண்டு. ஆனால் பாப் இசையரசர் மைக்கேல் ஜாக்சன் முன்பொரு முறை பிரபலமாகச் சொன்னது போல, "நான் ஒரு காதலன், நான் ஒரு சண்டைக்காரன் அல்லன்."

ஹோசே சரமாகோ, எங்கள் விஸ்லாவா சிம்போர்ஸ்கா, மார்க்வெஸ், பிராட்ஸ்கி, காம்யூ, நெருடா, கவாபாட்டா, ஹெமிங்வே என நான் மனக்கைகளால் கால்தொடும் பல ஆசான்கள் இந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார்கள். அதே சமயத்தில் டால்ஸ்டாய், செக்காவ், போர்ஹே, நபகௌ போன்ற பிற ஆசான்களுக்கு இந்தப் பரிசு கிடைக்காமல் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். போர்ஹேவும் டால்ஸ்டாயும் வாங்காத பரிசை நான் வாங்கியதில் எனக்குப் பெருமையே. அவர்கள் தற்போது எங்கிருந்தாலும் என்னை வாழ்த்துவார்கள் என நம்புகிறேன்.

இலக்கியத்தின் மீதான தீராத காதல்தான் என்னை இங்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. லுஃப்தான்சாகூட அதற்குப் பிறகுதான். காம்யூ, மார்க்வெஸ் போன்றோரின் வரிசையில் ஒருவனாக என்னைப் பார்க்கலாமா என்று

எனக்குத் தெரியவில்லை. எனக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதாக எனது அல்லக்கை அன்பர் ஒருவர் முதலில் என்னிடம் தெரிவித்தபோது எனது முதல் எதிர்வினை, அதை மறுத்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான். நோபல் பரிசு பெறத் தகுதியுள்ள மூத்த எழுத்தாளர்கள் பலர் தமிழில் இருக்கிறார்கள். உயிரற்ற பல தமிழ் இலக்கிய ஆளுமைகளுக்குப் பின்னிறப்பாகவும் (மொழிபெயர்ப்பாளருக்கு: posthumously) கொடுக்கலாம். இவர்கள் எப்படியும் ஒபாமாவைவிட நல்ல எழுத்தாளர்கள். அதன் பின்னர் இந்த ஆண்டு தமிழுக்கு இவனைத் தவிர வேறு யாருக்கும் பரிசைத் தருவதற்கில்லை என்று நோபல் பரிசுக் குழு முடிவு செய்திருக்குமோ என்ற ஐயத்தில்தான் அப்பரிசைப் பெறும் முதல் தமிழனாகும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டேன்.

இந்நிலையில், இது வழக்கமான மேடைப்பேச்சு அல்ல என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். நோபல் பரிசு ஏற்புரை இது. எனவே, உலகம் இன்று பல மாற்றங்களை வேகமாகக் கண்டுவருகிறது. மாற்றம் வரலாற்றுக்கு ஒரு தொட்டில் பழக்கம். தன் உயிர் பிழைத்தலுக்காகப் போராடும் ஒரு நிஞ்சா, பீதியில் ஆயுதங்களை சரமாரியாக எதிரி மேல் எறிவது போல் வரலாறு நம் மீது மாற்றங்களை ஓயாமல் எறிந்துகொண்டிருக்கிறது. சொட்டுத் தண்ணீர் குடிக்காமல் பாலைவனத்தைக் கடந்து வந்தவனின் தாகவெறியுடன் நாமும் பின்விளைவுகளைப் பற்றி யோசிக்க நேரமின்றி இந்த மாற்றங்களை உடனுக்குடன் விழுங்கி அடுத்த மாற்றங்களுக்குத் தயாராகிறோம். நம் பாரம்பரியக் கட்டிடங்கள் அழிந்துவருகின்றன. சிறு கடைகள் மறைந்து

பெரிய கடைகள் எழும்பி பிளாஸ்டிக் விஷத்தைப் பரப்பிவருகின்றன. அழகிய நடிகைகளை திருமணம் என்னும் அமைப்பிடம் இழந்துகொண்டிருக்கிறோம். தேங்காய் எண்ணெய் முதல் மதிப்பீடுகள் வரை எல்லாமே கவர்ச்சிகரமான சாஷேக்களில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இது ஒரு தோற்கும் யுத்தம். மாற்றங்களைப் பற்றிப் பேசியாயிற்று.

ஆக, மாற்றங்களின் இன்னொரு யுகத்தில் ஒரு படைப்பாளியின் இடம் என்ன? அவன் மாற்றங்களை ஏற்படுத்துபவனா, மாற்றங்களுக்கு பலியாகுபவனா? பார்வையாளனா, பங்கேற்பாளனா? ஒரு படைப்பாளி வரலாற்றுப் பிரக்ஞையுடன் பார்வையாளனாக இருந்து பதிவு செய்வதையே பங்கேற்பாக சொல்லிக்கொண்டு தப்பித்துவிட முடியுமா? அல்லது அவன் போராட்டப் பேரணிகளில் பங்கேற்கும் நடமாடும் எழுத்தாளனாக இருக்க வேண்டுமா? தாய்மார்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலக்கியத்தின் எதிர்காலத்தைப் பற்றியும் எனக்குச் சில கேள்விகள் உண்டு. எதிர்காலத்தில் இலக்கியம் இருக்குமா? இருந்தால் அது என்ன பெயரில் இருக்கும்? அதைவிட முக்கியமாக, இலக்கண இலக்கியப் பிழைகள், தகவல் பிழைகள், போலி அக்கறை வெளிப்பாடுகள், அநாவசியமாகச் சிக்கலாக்கப்பட்ட மொழிநடை, உணரப்படாத உணர்வுகள், வெற்றுத் தகவல்கள் ஆகியவற்றை உள்ளடங்கலாகக் கொண்ட, ஓரளவு படித்துவிட்டு மறந்துவிடத்தக்க சிறப்பான தமிழ்ப்

புத்தகங்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டால் தோராயமாக எத்தனை காப்பி போகும்?

இந்த உயரத்திலிருந்து பார்க்கையில் உங்களில் பலர் என் உரைக்காக உங்கள் காலைத் தேனீரைத் தியாகம் செய்திருப்பது தெரிகிறது. நன்றி. எனவே எனதுரையின் கடைசிப் பகுதிக்கு வருகிறேன். நோபல் பரிசைப் பெறும்போதும் மகிழ்ச்சி, பெருமிதம் தவிர சில எதிர்மறை உணர்வுகளும் ஏற்படுகின்றன. ஏனெனில் என் கனவுப்படி நோபல் பரிசு வாங்கியாயிற்று. அதற்கு மிஞ்சிய எதுவும் இல்லை. அமெரிக்க ஜனாதிபதி ஆக முடியாது. பரிசின் வரலாற்றில் பரிசை ஒரே ஆளுக்கு இருமுறை கொடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. மீண்டும் இந்தப் பொன்னான பரிசை நான் வாங்க முடியாது. நோபல் பரிசு பெற்ற கையால் இனி ஊரில் பொன்னாடைகளையும் தாம்பாளங்களையும் மோசமாக வடிக்கப்பட்ட பஞ்சலோக பாரதி, வள்ளுவர்களையும் வாங்கப்போவதை நினைத்தால் இப்பாரம்பரியமிக்க மேடையிலேயே அழுதுவிடுவேன் போலிருக்கிறது.

குதிரைச் சுற்றிக் கோலாட்டம் ஆடுவானேன்? அடுத்து எப்போதாவது நோபல் பரிசை அளிக்க ஆள் கிடைக்காதுபோனால், அல்லது கிடைத்தாலுமேகூட, தயங்காமல் எனக்குக் கொடுத்துவிடவும். நான் அதற்குத் தகுதியானவன்தான் என்பதை இம்முறை அதை எனக்குக் கொடுத்து நீங்களே நிரூபித்துவிட்டீர்கள். 'பட்ட காலிலே படும்' என்று எங்களிடம் தமிழில் ஒரு பொன்மொழி உள்ளது. முதல் முறையாக இரண்டாம் முறையாக நோபல்

பரிசு பெறும் முதல் பரிசுதாரி ஒரு மூன்றாம் உலக நாட்டைச் சேர்ந்தவராக இருந்தால் சர்ச்சைகள் எழாது, உங்களுக்கும் பெரு(ந்தன்)மை. உங்கள் பரிசை எனக்கே இன்னொரு முறை கொடுப்பதற்கு விதிமுறைகள் தடையாக இருந்தால் பின்னிறப்புப் பரிசாகவாவது தருவது குறித்துப் பரிசீலிக்கும்படி நோபல் பரிசுக் குழுவைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இன்னும் சுமார் நாற்பது ஆண்டுகள் காத்திருப்பதை நீங்கள் மனங்கொள்ள மாட்டீர்கள் என உறுதிபட நம்புகிறேன். உங்கள் பெருமதிப்புமிக்க நிறுவனர் ஆல்பிரட் நோபலின் டைனமைட், போபர்ஸ் போன்ற களங்கங்களை உலகம் மறக்க வாழ்த்துகிறேன்.

மற்றவர்களுக்கு: மீண்டும் இதே அரங்கில் விரைவில் சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

கட்டுரையில் வருவது

"ஹலோ?"

"அமெரிக்க-வியட்நாம் உறவுகள் பத்தி 'இடைநிலை'ல கட்டுரை எழுதிருக்கீர் போல?"

"ஏன், எழுதக் கூடாதா? எழுதுனா அமெரிக்க-வியட்நாம்

உறவுகளோட புனிதம் கெட்டுப்போயிடுமா?"

"கெட்டுப்போனா எனக்கென்ன வந்துது, மயிராப்போச்சுன்னு இருந்துருவேன்..."

"அப்பறம் எதுக்கு விசாரண?"

"அதுல ஒரு தப்பு கண்டுபுடிச்சேன்."

"அதான பாத்தேன். தப்பெல்லாம் தானா கண்ல மாட்டணும்யா. நாம கண்டுபுடிக்கக் கூடாது."

"என்னன்னா, மூணாவது பாராவுல 'அமெரிக்கக் கல்விச் செயலர் ரிச்சர்டு வெபர் ஜூன் இரண்டாம் தேதியானது செவ்வனே நடந்துகொண்டிருக்கையில் ஹோசிமின் மாநகராட்சிப் பள்ளியில் பிஞ்சுகளுக்கு இனிப்பு விநியோகித்தார்'னு ஒரு லைன் வந்திருக்கு. அவர் இனிப்பு விநியோகிச்சது ஜூன் இருபதாந்தேதி. ஒரு சைபர் பிஞ்சுபோச்சு."

"அப்புடியா? இதான் கரெக்டான இன்பர்மேசனா?"

"ஆமா, வேணா வியட்நாம் டாட் கவ்-ல எஜுகேஷன்ங்கிற லிங்க்ல போய் ஈவென்ட்ஸ்ல க்ளிக் பண்ணா ஸ்கெட்யூல்க்கு கீழ தேதி வாரியா போட்டிருப்பான் பாத்துக்கும்."

"ரொம்ப தாங்க்சு. இந்தத் தகவல் ஒமக்கு என் கட்டுரையப் படிக்கிறதுக்கு முன்னாடி தெரியுமா?"

"அது எதுக்கு இப்ப?"

"நீர் எதுக்குய்யா குடுமி ஆடாம வியட்நாம் டாட் கவ்-ல்லாம் போகணும்?"

"உம்ம தேதில தப்பு இருக்கா இல்லையா?"

"அட, அது கட்டுரைல வர்றதுய்யா. அதுல போய் தப்பு சொல்றீரே?"

ஓட்டேரி, பயணக் கட்டுரை

எந்த ஊருக்குப் போனாலும் அதன் அதிகாலை நேரம்தான் அந்த ஊரை எனக்கு அறிமுகப்படுத்துகிறது. மனிதர்களின், வாகனங்களின், பொருட்களின் அவலட்சணம் அடங்கிக் கிடக்கும் நேரமது. தூக்கம் சுகமானாலும் விழித்திருக்கும் காலை நேரங்களுக்கு அது ஈடாகாது. கனவுலகின் அதர்க்கங்கள் நிஜத்தில் ஒரு சிறுமி ஒரு கிழவி சாலையைக் கடக்க உதவும் காட்சியைக் காண வாய்க்கும் நெகிழ்ச்சிக்கு நிகராகாது (உண்மையில் யாருக்கு யார் உதவுகிறார்கள் என்று தெரியவில்லை). 'இதையெல்லாம் பார், இன்றைக்கும் இதுதான் நீ வாழப்போகும் இடம்' என்று நமக்குச் சொல்வது போல் கதிரவன் ஊருக்கு வெளிச்சமடித்துக் காட்டுகிறான்.

ஓர் உறவினர் வீட்டில் நேற்றிரவிலிருந்து தங்கல். நேற்றுத் தூங்கச் சென்றபோதே 'நாளை காலை கண்விழிப்போன்' என மகிழ்ச்சியோடு நினைத்துக்கொண்டேன். தெருக்களும் எனக்காகக் காத்திருந்தது போல் தோன்றியது. இன்று எழுந்ததும் காலைக்கடன்களை அடைத்துவிட்டு ஊர்வலத்திற்குக் கிளம்பினேன். இப்போது ஓட்டேரியின் அப்பிராணியான தெருக்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன்.

ஓட்டேரி புறநகருக்குரிய வளர்ச்சி அறிகுறிகளை அனுபவித்துவருகிறது. சில தெருக்களில் பெரும்பாலான வீடுகளுக்குக் கட்டுமானப் பணி நடந்துகொண்டிருக்கிறது. செங்கல் தூளும் மணலும் சிமெண்டும் கலந்த கட்டிட மண் காலடியில் நறநறக்கத் தெருக்களைப் பார்வையிட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் வண்ணம் பூசப்படாத சில வீடுகள் என்னைப் பார்த்து அவமானப்பட்டுத் திரும்பிக்கொள்ள முடியாத சூழலில், இருந்த நிலையிலேயே ஜன்னல் கண்களையாவது மூடி சமாளிக்கின்றன.

ஒரு வீட்டிற்கு அஸ்திவாரத்தை மட்டும் எழுப்பியிருக்கிறார்கள். கொஞ்சம் ஆளுயரக் குழந்தைகள் பாண்டி விளையாடத்தக்க கான்கிரீட் பாத்தி போல அருமையான வடிவமைப்பு. எல்லா அறைகளிலும் காகித, பாலிதீன், பிளாஸ்டிக், பாட்டில் குப்பைகள். படுக்கையறையில் மது அருந்திவிட்டு பாட்டில்களை உடைத்திருக்கிறார்கள், ஆனால் பிளாஸ்டிக் கோப்பையை நசுக்காமல் விட்டுவைத்திருக்கிறார்கள்.. சமையலறையில்

ஆணுறை கிடக்கிறது. பூஜையறை போன்ற இடத்தில் சிமெண்டு கறையுடன் பாதி கிழிந்த பெருமாள் படம். குழந்தைகளை விட்டால் இந்தக் குட்டிச் சுவர்கள் மீது நடந்துகொண்டே இருப்பார்கள்.

பட்டுப்புடவை, டி-ஷர்ட், சுடிதார், த்ரீ ஃபோர்த், நகைகள், மல்லிகை முழங்கள் என ஒரு மென்பொருள் குடும்பம் ஓட்டேரியின் உள்கட்டமைப்பு குறித்துப் பரபரப்புடன் கலந்துரையாடியவாறு எதிர்ப்படுகிறது. பளிச்சென்ற சுடிதார் மீதென் விழிகள் ஓரிரு நொடிகள் நிலைக்கின்றன. சுடிதாரின் அகன்ற டி-ஷர்ட் வெகுவான எரிச்சலுடன் என்னைக் கண்ணிடுகிறது. தனது சுடிதார் அன்னிய ஆடவக் கண்களால் மேயப்படுவதான மனப்பதிவில் என்னை முறைக்கும் டி-ஷர்ட்டின் மனநிலையைப் புரிந்துகொண்டு என் கண்களால் அதனிடம் 'சேச்சே!' என்கிறேன்.

பின்னாலேயே ஒரு எருமை மாட்டை இழுத்துக்கொண்டு ஒரு ஜாதிப்பெயர் வருகிறார். அவரது வேகத்திற்கு ஒத்துழைக்காத மாட்டை உரிமையுடன் முஷ்டியால் ஓங்கிக் குத்துகிறார். குத்தப்பெற்ற இடத்தை மட்டும் சிலிர்த்துக்கொள்கிறது மாடு (நடிப்பா?). மனிதனும் மாடும் என் முதுகுக்குப் பின்னான பிரதேசத்தில் மறைகிறார்கள்.

தெருக்களுக்கு நான்காம் தெருவின் இரண்டாம் சந்து என்கிற ரீதியில் பெயர் வைத்திருக்கிறார்கள். வீடுகளுக்கோ இந்த ஹவுஸ், அந்த ஹோம் என்று பெயர்கள். இத்தெருக்களில் நடக்கும்போது எண்கள் மீது எழுத்து

(நான்) நடக்கும் உணர்வு. ஒரு அரைகுறை வீட்டிற்கு முன்பு ஆண்களும் பெண்களுமாய் சித்தாட்கள் ஒரு மணற்குவியலின் மேல் ஓய்வாக அமர்ந்து ஊர் நியாயம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான்கு வீடுகள் தள்ளி ஒரு சிறிய மேடை மேல் ஒரு குட்டிச் சிறுவன் தனியாக அமர்ந்து கிரீம் பிஸ்கட் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். நான் அவனிடம் 'எனக்கொன்று கொடேன்' என்பது போல் புன்னகையுடன் விளையாட்டாகக் கை நீட்டுகிறேன். எஞ்சிய நிறைய பிஸ்கட்கள் இடக்கையில் அவன் தின்னலுக்காய் தமதுறைக்குள் காத்திருந்தாலும் அவன் பகிராமல் சலனமற்று என்னைப் பார்க்கிறான். காலையின் அமைதி இன்னும் உயிர்த்திருக்கிறது.

எத்தனையாவது தெருவையோ கடந்து இன்னொரு எண்ணாம் தெருவில் நுழைகிறேன். இக்குறுகிய தெருவில் கிடைத்த மிதிவண்டி இடைவெளியில் அதற்குள் ஒரு குறுங்கோவில் எழும்பிவிட்டிருக்கிறது. அநேகமாகப் பிள்ளையாருடையதாக இருக்கும். 'இன்னொரு விநாயகர் கோவில்' என்ற பெயர்ப் பலகையும் சில நாட்களில் அதன் நெற்றியில் விபூதி போல் இடப்படலாம். தெருவின் ஒரு பக்கம் தரையில் ஜல்லிக் கற்கள் ஒழுங்கின்றி இறைந்திருக்கின்றன. இம்மாதிரிக் கற்களை ஆட்டத்தால் கூழாங்கற்களைப் போல் வழவழப்பாக்கிக் கல்லாங்காய் என்று ஒரு விளையாட்டு விளையாடுவோம். பல்லாங்குழிகூட ஃபன்ஸ்கூலில் போட்டுவிட்டார்கள். ஆனால் கல்லாங்காய்க்கு 'கேம் ஓவர்' சொல்லிவிட்டார்கள்.

எனக்கு ஐந்தாறடிகள் முன்பு ஒரு பேருருவம்

நடந்துகொண்டிருக்கிறது. எனக்கு முன்பான தெருவைக் கிட்டத்தட்ட முழுமையாக மறைத்துக்கொண்டு வேகுவேகென நடக்கிறது இவ்வுருவம். என்ன வேலையோ. தினமும் காலையில் சுற்றியிருக்கக்கூடிய கரலாக்கட்டைகளே உடலோடு ஐக்கியமாகிவிட்டது போல் தசைத்த கைகள் காற்றைக் குத்தித் தள்ளிக்கொண்டு அதன் நடைக்குத் துடுப்புகளாக உதவுகின்றன. வலக்கையில் ஒரு சாண் நீளத் தழும்பு. முதுகுச் சட்டையை நனைத்த வியர்வை நீண்டதூர நடையின் தொடர்ச்சியது என்று சொல்கிறது. ஒரு பாறாங்கல்லின் எடையைத் தாங்கக்கூடிய புஜத்தின் பகுதியில் வியர்வையின் உப்பு வெள்ளையாய் ஒரு ஆற்றின் வரைபடம் போல் படிந்திருக்கிறது.

என்னை மிகச் சிறியவனாக உணர பிரபஞ்சத்தின் பிரம்மாண்டத்தை நினைத்துப் பார்க்கத் தேவையில்லை. சமயத்தில் இந்த மாதிரி ஆட்கள் கண்ணில் பட்டாலே போதும். இந்த உருவை முந்திச் செல்லாவிட்டால் தெரு முடியும் வரை இதன் முதுகை மட்டுமே பார்த்துக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. முந்திச் செல்ல வேகம் கூட்டி நடக்கிறேன். எலுமிச்சை அளவுள்ள சரளைக் கல் ஒன்று என் கால் பட்டுப் பேய் புகுந்த கால்பந்தாய்ப் பறந்து அந்த உருவத்தின் குதிகாலில் அடித்துத் தெறிக்கிறது. விருட்டென்று திரும்பிப் பார்க்கிறது அந்த உருவம். பற்கள் கோபத்தில் அரைபடும் காட்சி. பீதியில் இதயம் நின்றுவிட, என் கால்கள் மட்டும் சம்பிரதாயமாய் மேற்கொண்டு இரு காலடிகளை எடுத்துவைக்கின்றன.

நான் சம்பிரதாயத்தை முறித்துக்கொண்டு வந்த வழியே ஓட்டமெடுக்கிறேன். சற்றுமுன் கடந்த தெருவிற்குள் ஓட்டமாகவே நுழைகிறேன். பிஸ்கட் பையன் இடம் மாறாமல் பொம்மை போல் என்னை வேடிக்கை பார்க்கிறான். "பின்னாடி வர்றானா?" என்று கத்துகிறேன் அவனைப் பார்த்து. ஆனால் ஓட்டேரி தலாய் லாமா இதில் ஒரு பார்வையாளர் மட்டுமே. சாகச சரித்திர இளைஞன் குதிரையில் விரைந்து வந்து அழகிய இளவரசியைச் சரேலென அள்ளிச் செல்வது போல, ஒரு கடல் நாரை பறக்கிற போக்கில் ஒரு மீனைக் கவ்விக்கொண்டு பறத்தலைத் தொடர்வது போல, ஓடும் வேகத்திலேயே குனிந்து ஒரு கண்ணாடித் துண்டைப் பொறுக்கிக்கொள்கிறேன். அதனை எனக்கு முன் நீட்டி வைத்துக்கொண்டு ஆள் வருகிறானா என்று உளவு பார்க்கிறேன். இன்னும் வரவில்லை. ஓட்டத்தை நிறுத்திக் கால்கள் நடுங்க மெதுவாக நடக்கிறேன். நடுக்கத்தை நிறுத்த குனிந்து இரு கைகளாலும் முட்டிக்குக் கீழ் கால்களை அழுத்திப் பிடித்துக்கொண்டு நடந்தாலும் நடுக்கம் என் பலத்திற்கு அடங்கவில்லை. ஆனால் யாருடைய பலத்திற்கு அடங்கும் என பீதி குத்திக்காட்டுகிறது. மனம் வேறு எப்போதோ நாய்க்கு பயந்து இதே ரீதியில் ஓடிய நினைவைத் தேவையில்லாமல் எடுத்து நீட்டுகிறது நான் கேட்டது போல.

எனக்குப் பின்னிருந்து கனத்த ஓட்டச் சத்தம் எதுவும் இல்லை. ஆனால் பைக் சத்தத்தின் மேலும் ஒரு காது வைத்துக்கொள்கிறேன். இடையிடையே பின்பார்வைக் கண்ணாடியைப் பயன்படுத்துகிறேன். இவ்வளவு தெரு

தாண்டித் துரத்தி வர யாருக்கும் பொறுமை இருக்காது, நான் அவ்வளவு முக்கியமான எதிரி அல்ல என்று தர்க்கம் என்னைத் தேற்ற, கண்ணாடித் துண்டை ஒரு குப்பைத் தொட்டிக்குள் போடுகிறேன்.

மூச்சு இன்னும் வாங்கிக்கொண்டிருக்கிறது. மூச்சிரைப்புக்கு உறவினர்களிடம் என்ன விளக்கம் தருவது என யோசிக்கையில் நடமாடும் டீக்கடை ஒன்று தென்படுகிறது. அதன் முன் மூன்று பேர். இதில் இளைப்பாறிவிட்டுச் செல்லலாம் என ஆசுவாசித்துக் கடைக்குச் செல்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ரத்த அழுத்தத்திற்குத் தூபம் போடும் டீ, காபி வேண்டாம் எனத் தோன்ற, மாஸ்டரிடம் ஒரு பால் கேட்கிறேன். "பாலா சார்?" காத்திருப்பில் மௌனமாய்க் கழிகிறது பொழுது. பின்னர் பவ்யமாய் என்னை நோக்கி நீள்கிறது பால். ஆனால்,

எதிர்பார்க்கவேயில்லை. தடித்த கையால் ஓங்கி முதுகில் பளாரென்று ஒரு அறை. "ஐயய்யோ!" என அலறியபடியே தாக்கத்தில் ஓரடி நகர்கிறேன். கையின் உரிமையாளனுடைய அடையாளம் குறித்த யூகம் சார்ந்த பயத்தின் எதிர்பார்ப்புடன் முகத்தில் அழுகையின் சாயல் சகிதம் அதே விருட்டுடன் திரும்பிப் பார்க்கிறேன்.

"நான்தாண்டா, ஏண்டா கத்துறே? வீட்ல காபி போட்டு வெச்சிருக்கு. நீ பாட்டுக்கு இங்க வந்து வெள்ளையுஞ்சொள்ளையுமா பாலக் குடிச்சிட்டிருக்க?" என்கிறார் ஓட்டேரி உறவினர். நிம்மதிச் சிரிப்போடு பாலை எடுக்க நடுங்கும் கை நீண்டு பாலை உறவினர் மேல் தட்டி

விட்டது.

ஒவ்வொரு வீடும்

1

முதலில் கதவு எண் 41. கேட்டிற்கு உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டிருந்தார்கள். தயக்கத்துடன் அதைத் திறந்துகொண்டு உள்ளே சென்று தாழ்ப்பாள் போட்டுவிட்டு முதன்மைக் கதவைத் தட்டினேன். காலை நேரம். உள்ளே இருப்பவர்களுக்கு எவ்வளவு வேலை இருக்குமோ. இந்த நேரத்தில் தொந்தரவு செய்கிறேன்.

"நீதான் தொறயேன்!" என்ற ஆண் குரலின் ஒலிப்பையடுத்து கண்ணாடி வளையல் சத்தம் கதவைத் திறந்தது. என்னைப் பார்த்ததும் அந்த இளம் தம்பதியர் திகைத்துப்போனார்கள். நான் எதிர்பார்த்தது இன்ப அதிர்ச்சி.

"சார்! உள்ள வாங்க சார்!" என்றார் கணவன்.

நான் பல முறை கண்ணாடிக்கு முன்பு நின்று பயிற்சி செய்திருந்த தர்மசங்கட முகபாவத்தை வரவழைத்துக்கொண்டு ஒரு புன்னகையையும் அதில் கலக்க விட்டேன்.

"உக்காருங்க சார்" என்று ஒரு டைனிங் டேபிள் செட் நாற்காலியை இழுத்துப் போட்டாள் மனைவி. அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் கணவனைத் துணுக்குறுதலுடன் பார்த்துக்கொண்டு அப்படியே நின்றாள். இருவரும் ஆயத்த ஆடைகளில் இருந்தனர்.

"நீங்களும் இந்த ஏரியாலதான் இருக்கீங்கன்னு தெரியும். ஆனா உங்கள இங்க எதிர்பாக்கல. நான் உங்க பெரிய ஃபேன் சார். சாரி, வீடெல்லாம் அலங்கோலமா இருக்கு" என்று அது வரை நான் கவனிக்காத சொற்ப அலங்கோலத்தைக் கைகாட்டினார் கணவன். 'மவனே, நீ எங்க வீட்டுக்கு வா, அங்க இருக்கு உனக்கு அலங்கோலம்' என்று நினைத்துக்கொண்டேன்.

"பரவால்ல பரவால்ல. வீடுன்னா அப்படித்தான் இருக்கும், இருக்கணும். வாழ்க்கை வாழப்பட்டுக்கிட்டு இருக்குன்றதுக்கான அவசிய அடையாளங்கள் இதெல்லாம். நாம வாழ்ந்துக்கிட்டிருக்கமான்னு எனக்கு சந்தேகம் வர்றப்பல்லாம் என் ரூமைப் பாத்து 'எவ்ளோ குப்பையா இருக்கு'ன்னு நெனச்சுக்குவேன். உங்க அலங்கோலம் உங்க வாழ்க்கை சரியான திசைல போயிட்டிருக்குறதக் காட்டுது. அது நல்லதுதானே" என்றேன் மனைவியின் நாற்காலியில் நிறுவிக்கொண்டு.

"சார் 'பேயோன்'னு பெரிய எழுத்தாளர், சினிமாவுக்கெல்லாம் எழுதுறாரு" என்று மனைவிக்கு அறிமுகப்படுத்திவைத்தவர், "சார் நீங்க வந்ததுக்கு ஏதாவது ஸ்பெஷல் ரீசன் இருக்கா?" என்றார். மென்பொருள்

அல்லது வங்கி. "உங்களுக்கு என்னத் தெரியுமா?"

"சும்மாத்தான் வந்தேன்" என்றேன். "இந்த யுகத்து இளம் தம்பதிகள் எப்படி வாழ்றாங்கன்னு கொஞ்சம் பாக்கலாம்னு. ஒரு சிறுகதைக்காக உங்கள மாதிரி சில பேரை அப்சர்வ் பண்ண வேண்டிருக்கு. நீங்க இதே தெருவுல இருக்கீங்களா, அதுனால உங்ககிட்டேந்து ஸ்டாட் பண்றேன். கொஞ்ச நேரம் ஒரு ஓரமா உக்காந்துட்டுப் போறேன். நீங்க பாட்டுக்கு உங்க வேலையப் பாருங்க. நான் இப்ப கெளம்பிடுவேன்."

மனைவியின் துணுக்கு கணவனையும் தொற்றிக்கொண்டது தெரிந்தது. அவர்கள் எங்கோ கிளம்புவதற்கு நடுவில் இருந்தார்கள். கூடத்திற்கும் உள் அறைக்கும் பரபரப்பாகச் சென்று வருதல், கூடத்திலேயே அங்குமிங்கும் எதையோ தேடுதல், ஒரு அலமாரியிலிருந்து இன்னொரு அலமாரிக்குப் பயணப்படுதல், பிரித்த அஞ்சல் உறைகளைப் பிளந்து பார்த்தல் என்று வழக்கமான கடைசி நிமிட நடவடிக்கைகளில் தங்களையும் என்னையும் சிறிது நேரம் மறந்தார்கள்.

"சீப்பு எங்கன்னு பாத்தீங்களா?" என்று மனைவி கணவனை நாசூக்காகக் கேட்டாள். அன்னியர்களைப் பார்த்தால் எங்கிருந்தோ வந்துவிடுகிறது மனைவிகளுக்கு இந்த நாசூக்கு கணவனிடம்.' நான் இருப்பதையே மறந்துவிடுங்கள், நான் பிறக்கவேயில்லை என்றுகூட நினைத்துக்கொள்ளுங்கள், சகஜமாக இருங்கள்' என இன்னொரு முறை அவர்களுக்கு நினைவுபடுத்த

வேண்டியிருந்தது.

"சீப்ப ஏன் எடுத்த எடத்துல வெக்க மாட்டன்றீங்க?" என்று சத்தமாக மாறிவிட்டிருந்தாள் மனைவி இப்போது.

"நான் வெச்ச எடத்துலயே அது இல்ல. அத நீதான எடுத்திருப்ப? நாம ரெண்டு பேர்தான இருக்கோம் இந்த வீட்டுல? சார்கூட இப்பதான் வந்தாரு. அவருக்கு அவர் வீட்டு சீப்பே தேவப்படாது. கரெட்டுதான சார்?" என்றார் கணவன்.

"இந்தச் சின்ன வயசுலயே உள்ளபடி சொல்லிட்டீங்க" என்றேன்.

"அவர ஏன் இழுக்கிறீங்க? அவர் உங்களுக்கு சப்போர்ட்டா? அவரு வேடிக்க பாக்கத்தான வந்துருக்காரு..."

"இப்ப கௌம்பிடுவேன்" – நினைவூட்டினேன்.

"நீங்க இருங்க சார்" என்றார் கணவன்.

மனைவிக்காரி உள் அறைக்குள் மாயமானாள். கணவன் சற்று நேரம் விழித்துக்கொண்டிருந்துவிட்டுத் தானும் மறைந்தார்.

முழுசாக ஒரு நிமிடம் கடந்தது. என்னைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருப்பார்களோ? இருக்கலாம். கவிதைகள்

மட்டுமே முன்னூறு நானூறு தேறும். கூடத்தில் ஷோகேஸின் மேல் தட்டில் சில பீங்கான் குழந்தைகள், டெரகோட்டா குதிரை ஜோடி, மேலைநாட்டு மணமக்கள் பொம்மை, அதற்குக் கீழ்த் தட்டில் கோலம், சமையல், இலக்கியம், வேர்டு பவர், தன்னம்பிக்கை, உள்நாட்டு, வெளிநாட்டு இலக்கியம் என்று சில புத்தகங்கள் (கோலமும் சமையலும் எனக்குப் புன்னகையளித்தன. அவை நான் எழுதியவை). சுவர்களில் குழந்தைநல மருத்துவர் கிளினிக்கில் இருப்பது போல குழந்தைகள் முத்தமிட்டுக்கொள்ளும் பிரம்மாண்ட ஓவியம், மளிகைக் கடை நாள்கிழிப்பு நாள்காட்டி, அஞ்சல்கள், ரசீதுகள் போன்றவற்றை வைக்கும் பழங்குடி கருப்பொருட்கள் கொண்ட மூன்றடுக்கு உறை. 29 அங்குல தொலைக்காட்சி, அதன் நிறுத்தத்தில் டிவிடி பிளேயர், செட் டாப் வகையறா. மற்றபடி கூடத்தில் பார்க்க ஒன்றும் இல்லை.

வெளியே காம்பவுண்ட் சுவரின் உட்புறத்தை உரசிக்கொண்டிருந்த ஒரு செம்பருத்திச் செடியைக் காற்றின் கைகள் மென்மையாகத் தாலாட்டின. என்னைப் பார்த்துப் புன்னகைத்தது ஒரு செம்பருத்திப் பூ. சும்மா ஒரு சுவாரசியத்திற்காகச் சொல்கிறேன். பூ புன்னகைக்கவெல்லாம் இல்லை. அது புன்னகைத்தால் எப்படி இருக்கும்? புன்னகைக்காத நேரங்களில் பூ என்ன செய்யும்? ஒரு பூ புன்னகைத்தால் பார்ப்பவர்கள் அலறியடித்துக்கொண்டு ஓடிவிட மாட்டார்கள்? பயப்படாதவர்கள்கூட அந்த அசிங்கத்தைப் பார்த்து வாந்தியெடுப்பது நிச்சயம். எனக்குப் பயம் கிடையாது. வாந்தி உண்டு. ஒரு பூ புன்னகைப்பது என்ன பிள்ளையார் பால் குடிப்பது போன்ற அற்புதமா?

பொதுவாக பூக்களின் அமைப்பே அவை புன்னகைப்பதற்குத் தடையாக இருக்கும். எனக்குத் தெரிந்து சூரியகாந்திப் பூவுக்குத்தான் புன்னகைக்கத் தேவையான ரியல் எஸ்டேட் இருக்கிறது. அந்தப் பூவில் பெரும்பகுதியே அந்தப் பெரிய வட்டம்தான். அதில் புன்னகை மட்டுமின்றி புன்னகைக்கு மேல் ஒரு மீசைக்கும் கீழே ஒரு பிரெஞ்சு தாடிக்கும் இடமுள்ளது. இந்த இரண்டு பேரும் வெளியே வந்தால் என் அவதானிப்புகளைப் பகிரலாம். ஆனால் இன்னும் உள்ளேதான் இருந்தார்கள். உடலுறவு?

"ஹலோ?" என்றேன். எதிர்வினையே இல்லை. சாப்பாட்டு மேஜை மீது பாதி நிரம்பிய கிளாஸில் தண்ணீர் இருந்தது. அதை ஒரு மடக்கில் குடித்துவிட்டு கிளாஸின் வாய்ப்பகுதியை சுவரின் மேல் வைத்து அடிப்பகுதி மேல் காதை வைத்துக் கேட்டுப் பார்த்தேன். உள் அறையிலிருந்து எதையும் கேட்க முடியவில்லை. அந்த அறையில் நடப்பதை என்னால் பார்க்க முடிந்திருந்தால் இருவரும் நான் கிளம்புவதற்காகப் படுக்கையில் பொறுமையாகக் காத்திருப்பதைப் பார்த்திருப்பேன். ஆனால் இந்தச் சுவர் வழக்கமான ஒரு செங்கல்-சிமென்ட் விவகாரம் என்பதால் பெயின்ட் பூச்சு தாண்டி எதுவும் கண்ணில் படவில்லை. இன்னும் சில நொடிகள் காத்துவிட்டுக் கிளம்பினேன். நான் பார்க்க வந்ததைப் பார்த்தாயிற்று.

"நான் கெளம்பறேன் சார், இன்னும் நாலு வீடு போகணும். சாரி ஃபார் த டிஸ்டபன்ஸ்" என்று கத்திவிட்டு வெளியே சென்று கேட்டைத் திறந்து அந்த வீட்டைக் கடந்துகொண்டிருக்கும்போது "போயிட்டாரு" என்று

கணவன் குரல் திரையிட்ட ஜன்னல் வழியே கேட்டது. 'அதான் தெரியுதே' என்று எனக்குள் சொல்லிக்கொண்டு அடுத்த வீட்டிற்குச் சென்றேன்.

2

கதவு எண் 42. காம்பவுண்ட் சுவர் பீடிகை இல்லை. நேரடியாக பூட்டிய கதவுதான். எதற்கும் உறுதிப்படுத்திக்கொள்ள காலிங் பெல்லை அழுத்திவிட்டுக் கதவைத் தட்டினேன். அருகில் திண்ணை போல் இருந்த இடத்தில் கூடையுடன் காணப்பட்ட ஒரு மூதாட்டி, "ஆளில்லியே, தெரிலியா?" என்றார். "அதான் பூட்டு போட்டிருக்கே" என்று பதிலளித்துவிட்டு 43க்கு நகர்ந்தேன்.

43க்கு காம்பவுண்டும் 'ஸ்ரீநிவாசா பாரடைஸ்' என்ற பெயரும் இருந்தன. ஒரே சமயத்தில் வாசற்படிகளாகவும் திண்ணையாகவும் அதில் உட்கார்ந்திருந்த ஒரு பெரியவருக்குப் பயன்பட்ட இடத்தில் அவர் (பெரியவர்) அமர்ந்து செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தார். நான் கேட்டின் தாள் பிடியை கேட்டின் மீது மோதி உலோக ஒலி எழுப்பினேன்.

அவர் நிமிர்ந்து பார்த்து "யாரு?" என்றார். ஹிண்டு பேப்பர் படிப்பதாக, அதையும் ஆங்கிலத்தில், சொன்னாலே உள்ளே விட்டுவிடுவார் போல் தெரிந்தது.

"அயாம் பேயோன், ஐ ரீட் த ஹிண்டு. லெட்டர்ஸ் டு த எடிட்டர் ஆல்சோ அக்கேஷ்னல் காண்ட்ரிப்யூட்டர். இஃப்

யூ சீ இன் த ஃபோர்த் பேஜ்..." என்று அறிமுகப்படுத்திக்கொள்ளத் தொடங்கியவனைக் கைநிறுத்தி, "வாங்க, சும்மாதான் சாத்திருக்கு" என்றார்.

"வீட்டுக்குள்ள யாரும் இல்லையா?" என்றேன்.

"இல்ல. சாயந்தரமா வாங்க" என்றார்.

"ஹஸ்பண்ட் அண்ட் வைஃப் வெளிய போயிருக்காங்களா?"

"ஆமா. உங்களுக்கு என்ன வேணும்? ஏன் இதையெல்லாம் கேக்கறீங்க?"

"அயம் ய ப்ராலிஃபிக் ரைட்டர் டூயிங் ய ரிசர்ச் ஆன் கான்டெம்பரரி ரிலேசன்சிப் வேல்யூஸ் பிட்வீன் கப்பிள்ஸ். த ஃபைட்டிங், த த்ரெட்டனிங் அண்ட் ஆல், யூ நோ..."

"ஈவினிங்கா ஏழு மணிக்கு அப்பறமா வாங்க."

"நான் உங்ககிட்டயே கொஞ்சம் கொசின்ஸ் கேக்குறேனே? யூ லுக் ஃப்ரீ."

"சரி, சொல்லுங்க."

"ஐ ஹாவ் அன் இன்ஃபார்மல் ஓரல் கொசினேர். உங்க வீட்டு தம்பதிகள் ஒரு வாரத்துக்கு எத்தனை தடவை சண்ட போட்டுக்குவாங்க? எதுக்கெல்லாம் சண்டை போடுவாங்க? அதுல எத்தன தடவை டைவர்ஸ் பேச்சு அடிபடும்?

கைகலப்பு உண்டா? அதிகமா யார் ஆரம்பிச்சி வெப்பாங்க? எப்படி சமாதானம் ஆகும்..."

சொந்த வீட்டு அவல் கிடைத்த உற்சாகமே இல்லாமல் அவர் அளித்த தகவல்கள்:

வீட்டில் அவரைத் தவிர ஒரு மகன், மருமகள், பள்ளி செல்லும் பேத்தி, ஒரு தூங்கும் நாய் ஆகியோர் இருக்கிறார்கள். வாரம் மூன்று நாள் சண்டை. மற்ற நாட்களில் தொலைக்காட்சி, செல்பேசி, ஃபேமிலி அவுட்டிங். விவாகரத்துப் பேச்சு தீவிரமாகவும் வேடிக்கையாகவும் அடிக்கடி (சண்டைகளின்போது சுமார் 45% சமயங்களில்) அடிபடும். பரஸ்பர குடும்பத்தினரின் நடவடிக்கைகள், வீடு பராமரிப்பு, சொத்து கொள்முதல், குழந்தையுடன் நேரம் செலவிடுதல் முதல் பொருட்கள் இடம் மாற்றி வைக்கப்படுதல், கடமைகள் தவறுதல், ஒரு அவசரம் என்றால்கூட கடைக்குப் போகாமை என்பவை வரை பல்வேறு காரணிகள் சண்டைக்குக் காரணங்களாக உள்ளன. சண்டைகள் பெரும்பாலும் மருமகள் தொடங்கிவைப்பவை. பல சமயங்களில் அதற்கு மகனின் அப்பாவிப் பேச்சு தூண்டுதலாக இருக்கிறான். அடுத்து மருமகள் அந்தத் தூண்டுதல்களை பூதாகாரமாக்கி சட்டபூர்வமாகப் பிரிவது வரை கொண்டுவருவார். மருமகள் தனது கோபத்தையும் வெறுப்பையும் வேறுவழியின்மையையும் காட்டிக்கொள்ள அந்தப் பேச்சை எடுப்பார். மகன் அதை வார்த்தையளவில் புரிந்துகொண்டு இணையத்தில் மலிவானோரும் சிறந்தோருமான வக்கீல்களைத் தேடத் தொடங்குவார். பதிலாளர் மற்றும்

அவரது பேத்தி இந்த நிகழ்வுகளில் பங்கேற்காமல் தொலைக்காட்சி பார்ப்பார்கள் அல்லது பிரச்சினையின் மையம் தொலைக்காட்சியாகவே இருக்கும் பட்சங்களின்போது நாயை இழுத்துக்கொண்டு நான்கு தெரு வாக்கிங் செல்வார்கள். அடிதடி இல்லை. ஆனால் அதன் குறியீடாக பாத்திரச் சத்தமும் கணினியில் இரைச்சலான பாட்டுச் சத்தமும் உண்டு. தனிநபர் சோர்வு, விருந்தாளிகள் வரவு போன்றவற்றால் சண்டைகள் நிறைவடையும். இந்தத் தரவுகள் போதும் எனக்கு.

"அணில் பறந்தது / காக்கை ஓடியது / ஒன்றுக்கும் ஒன்றும் ஆகவில்லை" என்கிற ஆத்மாநாமிய வரிகள் நினைவிற்கு வந்தன. ஒன்றுக்கும் ஒன்றும் ஆகாது என்ற புரிதல் தம்பதிகள் இருவருக்கும் இருப்பது நலம் என்றும் இச்சடங்குகள் அவர்களுக்கு நடக்கும்போது அவற்றை அவர்களே மனதளவில் தூர இருந்து வேடிக்கை பார்த்துவிட்டு மறந்துவிடுவதே அவர்களுக்கான தீர்வு என்றும் ஆலோசனை வழங்கிவிட்டு விடைபெற்றேன்.

3

அடுத்து நான் சென்ற வீடு என்னுடையதேதான்.

"எங்க போனீங்க? லாண்ட்லைன் நம்பர யாருக்கும் குடுக்காதீங்க" என்று மனைவி தொடங்கினார்.

"உன் காரியமாத்தான் போயிட்டு வர்றேன்" என்றேன்.

"என் காரியம்னா?"

"உன் காரியம்னா நீ உயிரோடதான இருக்கே, உனக்குப் போய் யாராவது காரியம் பண்ணுவாங்களா? வீண் செலவு. நான் வேற அர்த்தத்துல சொல்றேன். 'ஒவ்வொரு வீட்டுக்கும் போய்ப் பாரு'ன்னு நைட்டு எங்கிட்ட கத்துனியே, இந்தத் தெருவுல ஆறு வீட்டுக்குப் போய்ப் பாத்துட்டேன். எல்லாரும் நம்மள மாதிரிதான்."

வாசக வாழ்த்து

(வாசகர் வன்மதி எனக்காக எழுதிய பிறந்தநாள் வாழ்த்துக் கவிதை)

ஆகஸ்டு 7இல் பிறந்தானே
மெல்லக் கனவாய் வளர்ந்தானே
பள்ளி, கல்லூரி பயின்றானே
புத்தகம் பலதைப் படித்தானே
தானும் எழுத வந்தானே
காதலைக் கொஞ்சம் இத்தானே
அதைத் திருமணமாக்கி முடித்தானே
ஆண்மக வொன்றினைப் பெற்றானே
நூல்கள் பலவினைக் கண்டானே
செலவுகள் பலதமைச் செய்திட்டே
விருதுகள் கலகலெனக் குவித்தானே

எந்தையும் யாயும் மகிழ்ந்து குலவிய
தொன்றுதொட்ட சூழலிதில்
இன்னும் எத்தனை செய்வானோ
பார்க்க நானும் இருப்பேனோ.

நாய்கள் ரொம்ப பொசசிவ்



விடிகாலையின் இருளில் ஓர் அன்னியத் தெருவில்
பரிச்சயமற்ற நாய்களிடம் மாட்டிக்கொண்ட அனுபவம்
உங்களுக்கு இருக்கிறதா? எனக்கு இருக்கிறது,

அதனால்தான் கேட்கிறேன். இதை அனுபவமும் சம்பவமும் கலந்த ஒரு நிகழ்வு என்று சொல்ல வேண்டும்.

பால் லாரிகள் இன்னும் லோடு ஏற்றியிருக்க வாய்ப்பில்லாத ஒரு காலை. இந்திய நேரத்தின் கீழ் வருபவர்கள் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். வீடில்லாத ஒரு சிலர் சிறு மூட்டைகளைச் சுமந்தபடி தமக்குத் தாமே பேசிக்கொண்டு சென்றார்கள். ஆள் நடமாட்டமே இல்லாத இந்த நேரத்தில் அவர்கள் தனியாகத்தான் பேசியாக வேண்டும். நான் ஒரு வெளியூர் பயணத்தை முடித்துக்கொண்டு ஆட்டோ பிடித்து என் வீட்டிற்கு இருதெரு தள்ளி இருந்த ஒரு டீக்கடையில் இறங்கிக்கொண்டேன். அந்த நேரத்துத் தேநீருக்கு இணையான ஒரே பானம், மறுநாள் அதே நேரத்தில் கிடைக்கும் தேநீர்தான். அதைக் குடித்துவிட்டு காலைக் குளிர்த் தனிமையை ரசித்துக்கொண்டே மெல்ல நடந்து வீட்டிற்குச் செல்லலாம் என்று திட்டம். இதில் தேநீர் அருந்தலை மட்டுமே சரியாகச் செய்ய முடிந்தது.

போகும் வழியில் ஒரு நாலு முனைச் சந்தில் மிக மங்கலான தெருவிளக்குகளை ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டே நடந்தேன். என் ஏமாற்றத்தை மோப்பம் பிடித்துவிட்டது போல் எங்கிருந்தோ பரபரப்பாக ஓடி வந்தன இரண்டு நாய்கள். அவற்றைப் பார்த்தவுடனே எனக்கு விசயம் விளங்கிவிட்டது. நான் அவற்றின் சந்தேகத்தைக் கிளப்பாதிருக்க நடை வேகத்தைக் குறைத்துக் கிட்டத்தட்ட 'ஸ்லோ மோஷன்' அடிப்பிரதட்சிணமாய் நடந்தேன். நாய்களும் உறுமியபடி

நாசூக்கான இடைவெளி விட்டு மெல்லப் பின்தொடர்ந்தன (அவற்றுக்கும் பயம் இருக்கும் இல்லையா? நான் ஏதாவது எம்.எல்.ஏ.வுக்கு வேண்டப்பட்டவனாக இருந்து தொலைத்தால்?). நான் நடக்க நடக்க அவற்றின் உறுமல் குரைப்பாக வலுப்பெற்றது. எனக்கு முதுகுத் தண்டு சில்லிட்டது, இதயத் துடிப்பின் தீவிரத்தில் மார்புப் பக்க சட்டை பட்டன்கள் விம்மின. கால்களோ, ஓங்கி இழுத்துவிட்ட கிடார் கம்பிகளாய் நடுங்கின. பயந்துவிட்டேன்.

'என்னய்யா நடக்கிறது இங்கே?' என விசாரிப்பாக இன்னும் இரண்டு நாய்கள் வந்து சேர்ந்துகொண்டன. 'இவர்களைப் பார்த்து நீங்களும் கெட்டுப் போய்விடாதீர்கள்' என்று நான் அவற்றைக் கண்ணால் எச்சரித்தேன். உடனே அவை சகாக்களின் குரைப்பில் சேர்ந்துகொண்டன. நான் சிலையாக நின்று வெகு நேரமாகியிருந்ததைச் சொல்லவில்லையே. நிற்கையிலேயே இவ்வளவு சம்பவம் என்கிறபோது, அசைந்தால் பதினாறு கால் பாய்ச்சல்தான். நாலா திசைகளிலும் பார்த்தேன். ஒரு திசையில்கூட ஆளில்லை. நானாக கௌரவம் பார்க்காமல் நாய்களுடன் கட்டிப் புரண்டு சண்டை போட்டுத் தப்பித்தால்தான் உண்டு.

நாய்கள் என்னைக் குதறுவதில் எனக்கு உக்கிரமான ஆட்சேபணை இருந்தது. அவை கட்டையால் அடித்தால் அல்லது கத்தியால் குத்தினால் வாங்கிக்கொண்டு நன்றியுடன் நடையைக் கட்டுவேன். ஆனால் அவை நிச்சயம் ஆயுதங்களைப் பயன்படுத்துபவையாகத் தெரியவில்லை. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக

இருந்துவரும் ஓர் உயிரினம் இன்னும் கற்களால்கூட ஆயுதம் செய்யக் கற்கவில்லை. நாம் தகவல் யுகத்திற்கு வந்துவிட்டோம். நாய்களுக்குக் கற்காலமே இன்னும் தொடங்கவில்லை. அதுதான் பிரச்சினை. ஒருவேளை மனிதன் அவற்றை அடிமையாக்காமல் விட்டிருந்தால் அவை பரிணாமப் படிகளில் ஏறி எனக்கு இந்த நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இடுக்கண்தான் வந்தாயிற்றே, ஆளில்லா இருள் தெருவின் நடுவே சிரித்துப் பார்க்கலாமா எனத் தோன்றியபோது கனரக பைக் ஒன்றில் ஒருவர் வந்தார். போலீஸ். என் நிலைமையைப் பார்த்தார். "வாங்க சார், நாய்கிட்ட மாட்டிக்கிட்டேன்" என்றேன். "வண்டில ஏறுங்க" என்றார். சட்டென ஏறி "தாங்க்யூ சார்" என்றேன். உற்சாகம் பற்றிக்கொண்டது. "சாருக்கு இந்த நேரத்துலயும் டியூட்டியா சார்?" என்றேன். "ரத்தினசாமி தெரு எங்கருக்கு தெரியுமா?" என்றார். தெரிந்திருந்தது. என் தெருவிலிருந்து பதினைந்து நிமிட நடை தூரம். "நான் காட்றேன் சார்" என்றேன் நன்றியுடன். ரத்தினசாமி தெருவில் ஒரு புது வீட்டின் முன் பைக் நின்றது. "தாங்க்ஸ், வரேன். இப்படியே நடந்து போயிடுங்க" என்றவர் அவ்வீட்டின் கேட்டைத் திறந்து இருண்ட காம்பவுண்டுக்குள் மறைந்தார். நான் நடைகட்டத் தொடங்கினேன்.

தெரு முனையில் எனக்காக வேறு செட் நாற்காலி நண்பர்கள் காத்திருந்ததை இங்கிருந்தே பார்க்க முடிந்தது. அந்தத் தெரு நாய்களைவிட இந்தத் தெரு நாய்கள் அபாயம் குறைந்தவை என்று மாமா கருதினார் போலும்.

ஆனால் உலகம் முழுக்க நாய்கள் 'பொசசிவ் டைப்'தான். பாதித் தெருவில் ஒரு 24 மணிநேர ரத்னா நர்சிங்ஹோம் இருந்தது. நாய்கள் என்னை அணுக அடியெடுத்து வைக்குமுன் சட்டென அதனுள் புகுந்தேன். மணி மூன்றேமுக்கால் இருக்கும். அந்த நேரத்திலும் எனக்கு முன்பு மூன்று பேர் ரிசப்சனில் காத்திருந்தார்கள். பழைய கணினியில் சிறிய திரையில் அநேகமாக சீட்டாடிக்கொண்டிருந்த ஒரு பியூன் தோற்றத்து ஆண்பிள்ளை, "சொல்லுங்க?" என்றார். "தலைவலி" என்றேன் பயண மூட்டையை இறக்கியபடி. அவர் என்னை ஒரு விதமாகப் பார்த்துவிட்டு, "உக்காருங்க" என்றார். நான் என்ன சொல்ல முடியும்? "ஓ, தாராளமா!" என்றேன்.

மழைக் கவிதை எழுதுவது எப்படி?

காதலை அடுத்து மழைதான் கவிதை எழுத சுலபமான விசயம். எல்லோருக்கும் காதலன்/காதலி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் நாம் எல்லோரும் மழையைப் பார்த்திருப்போம். குறைந்தபட்சம் அதில் நனைந்தாவது இருப்போம். காதலும் மழையும் பரஸ்பரத் தொடர்புள்ளவை. காதல் கவிதையில் மழையையும் மழைக் கவிதையில் காதலையும் சர்ச்சையின்றி நுழைக்கலாம். இரண்டுமே ஒன்றுக்கொன்றின் கவிதை ஊக்கிகள்.

மழைக் கவிதை எழுத கண்ணோட்டம் முக்கியம். மழையை

'வானிலிருந்து தண்ணீர் கொட்டுதல்' என்று யதார்த்தமாகப் புரிந்துகொள்ளாதீர்கள். யதார்த்தத்தை உடலுறவு வர்ணனைகள் போன்றவற்றுக்கு வைத்துக்கொள்வோம். மழை எப்படிப் பெய்கிறது? பல துளிகளாகப் பிரிந்து பெய்கிறது. அவ்வளவு தண்ணீரையும் ஒரு நொடியில் வெடித்துக் கொட்ட மேகங்களுக்கு சொல்லியா கொடுக்க வேண்டும்? மழை சொட்டுநீர்ப் பாசன பாணியில் பெய்வது நம் போன்ற கவிஞர்களுக்குப் பெரும் வசதி. மின்னற்பொழுதே நேரம் என்று கொட்டிச் சென்றால் நமக்கு ஒன்றும் தேறாது. ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் ஊரெல்லாம் தண்ணீராக இருக்கும்.

இந்தச் சிறு வீழ்துளிகளை எதனோடெல்லாம் ஒப்பிடலாம் என்று யோசியுங்கள். கவிதைக்குப் பயன்படும் எவையெல்லாம் 'பிட் ஐட்டங்களாக' இருக்கின்றன? நினைவுகள், அனுபவங்கள், உணர்வுகள், துன்பங்கள், இன்பங்கள், புன்னகைகள், பார்வைகள், முத்தங்கள், அம்புகள், ஏவுகணைகள், கடைசியாக கண்ணீர்த் துளிகள், பிறகு உயிர்கள், பொடுகு, எச்சில், இன்ன பிற ஆகியவை. இவற்றில் எந்த சமயத்தில் எதைப் பற்றி எழுதுகிறீர்களோ அதை மழையோடு கோர்த்து எழுதுங்கள். மழைத் துளி ஒரு சராசரி நீர்த் துளியைவிடக் குறுகலாக இருப்பதால் அதன் உருவத்தை நினைவுபடுத்தும் விதமாக வரிக்கு ஒரு வார்த்தை எழுதினால்கூடப் போதும். ஐம்பது வார்த்தைகளை வைத்துக்கொண்டு இரு பக்கங்களை நிரப்பிவிடலாம். காலியாகக் கிடக்கும் முக்கால் பக்கத்தை தொலைபேசி எண்கள் எழுதப் பயன்படுத்தலாம், குழந்தைகளுக்குப் படம் வரையக் கொடுக்கலாம். ஏன்,

நாமேகூட வரையலாம். நாம் வரைந்தால் கொஞ்சம் ஒழுங்காக வரைவோம்.

அடுத்து, மழைத் துளிகள் பறவைகளுக்குப் போட்டியாக அந்தரத்தில் அலைந்துகொண்டிராமல் புவியீர்ப்பு சக்தியின் அறிவியல் தன்மையால் தரையில் விழுகின்றன. தண்ணீர் என்றைக்காவது விழுந்த இடத்தில் 'செட்டில்' ஆகிறதா? நமது தெருக்கள் தமது பள்ளங்களின் வாயிலாக முடிந்த வரை அதைச் சாதிக்க முயன்றாலும் தெருக்களின் சரிவான குணம் அதை அனுமதிப்பதில்லை. விளைவு, மழைநீர் பெருக்காக எடுத்துத் தெருக்களெங்கும் தேங்கவும் ஓடவும் செய்கிறது. இத்தற்காலிக ஓடைகளில் ஏதாவது மிதக்கும். இது நமக்கான சமிக்ஞை. காலி வாட்டர் பாக்கெட்டுகள், மாணிக்சந்த் உறைகள், பேருந்து பயணச் சீட்டுகள், ஒற்றைச் செருப்புகள் போன்ற வாடிக்கையான வஸ்துக்களுக்கு பதிலாக நமக்கு வேண்டியவை (எ.கா., நினைவுகள், புன்னகைகள்...) மிதப்பதாக வர்ணனையில் சேர்த்துக்கொள்ளவும்.

குறிப்பு: ஒரு மழைக் கவிதையில் இரண்டு பேருக்கு மேல் இடமில்லை. மழையைத் தனியாகவோ காதல் துணையுடனோதான் அனுபவிக்க முடியும். பரஸ்பரம் காதல் வயப்பட்ட இருவரை மழை ஒரு குடையின் கீழ் கொண்டுவருகிறது. எனவே நண்பர்களோடு அல்லது சக ஜாதிச் சங்க உறுப்பினர்களோடு சேர்ந்து அனுபவித்ததை எல்லாம் எழுத முடியாது. இந்த ரகத்தினர் மழையில் 'மாட்டிக்கொள்ள'த்தான் முடியும். சம்பந்தமில்லாமல் சாலையில் திரியும் ஆட்களை வர்ணனைச் சதைக்குச்

சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் முக்கியப் பாத்திரங்கள் இரண்டுக்கு மிகாமல் இருக்கட்டும். அதற்கு மேல் போனால் தகாத பாலியல் உறவைக் குறிக்கக்கூடும்.

மழைக் கவிதையில் வெளிப்படும் மனநிலை என்ன? அது ரம்யம் (ஒரு வசதிக்காக நெகிழ்ச்சியையும் இதில் சேர்ப்போம்), ரொமாண்டிக், அல்லது சோகம் என்பதாக இருக்கலாம். அடிப்படையில் மூன்றுமே ரொமாண்டிக்தான். ஆனால் சோகம் ஒரு எமோசனல் ரொமாண்டிக். மழைக் கவிதையில் சோகத்தை எழுதும்போது எவ்வளவு சுகமாக இருக்கும் தெரியுமா? வீட்டில் தனியாக இருக்கும்போது செய்துபாருங்கள். படிமங்கள் (ஒப்பீடுகள்) மரக்கிளையிலிருந்து நழுவி விழும் பாம்பாகப் பின்னிப் பின்னி வந்து ஊற்றும். சில துன்பவியல் மழைக் கவிதைகளைப் படிக்கும்போது அதை எழுதிய நபரின் திருப்தி விகிதத்தை நாமே ஊகிக்கலாம்.

கீழ்க்கண்ட என் சிறு கவிதையில் மழை, காதல், தனிமை, உவமை, உருவகம், வர்ணனை ஆகியவற்றை கவனியுங்கள்:

பார்வை விட்டு
போன பின்னும்
என்னில் சிறகடிக்கும்
உனக்கான எண்ணங்கள்
பெய்த பிற்பாடும்
மழைக்கின்ற
மரம் கணக்காய்.

மழைக் கவிதை எழுதுமுறை பற்றி இன்னும் சொல்லலாம். ஆனால் இவ்வளவுதான் எழுதினேன்.

சுதந்திர தினத்திற்கு வாழ்த்தலாமா?

எங்கெங்கு காணினும் பிரச்சினையடா என்று இருக்கும் இச்சமகாலத்தில் இந்தக் கேள்வி பலர் மனதில் தொக்கி நிற்கிறது. சுதந்திர தினத்திற்கு வாழ்த்து சொல்லலாமா என்று ஏராளமானோர் என்னை செல்பேசியில் அழைத்துக் கேட்கிறார்கள். நானும் எத்தனை பேருக்குத்தான் "ராங் நம்பர்" சொல்வது? அதுவும் வாரத்திற்கு நான்கு முறை தொலைபேசும் வாசகர்களிடம்? சிலர் என் மனைவி குரலைத் துல்லியமாக மிமிக்ரி செய்து பேசி திடுக்கிடச் செய்து நான்தான் பேசுகிறேன் என உறுதிப்படுத்திக்கொண்ட பின்பு இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள்.

'அட ஞான சாம்பிராணிகளா, சுதந்திர தினத்தைக் கொண்டாடலாமா என்று கேட்டுத் தொலைங்களடா வெண்ணெய்களா' என்கிற வார்த்தைகள் தொண்டை வரை வந்தாலும் வாசகர்களை ஈட்ட வேண்டிய சமயத்தில் இழப்பது அடுக்காது எனும் சுய கரிசனத்தில் அவைகளை விழுங்கிவிடுகிறேன். தொண்டையில் தொக்கும் வேறு வார்த்தைகள்: 'எனக்கென்னய்யா தெரியும்? யாராவது பள்ளி ஆசிரியரைக் கேளுங்கள். வைத்துவிடவா?'

அதானே! நான் ஏதோ உலகத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்து கிறுக்கிக்கொண்டு தமிழ்ச் சூழலை மாற்றிக்கொண்டிருக்கிறேன். என்னிடம் போய்!

சரி, அவர்கள் கேட்பதிலும் ஒரு தர்க்கம் இல்லாமலில்லை. கொண்டாடுவதைவிட வாழ்த்துவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அதன் அரசியல் இங்கிதம் குறித்து அறிய விரும்புகிறார்கள். அநீதிகள் மலிந்த யுகத்தில் சுதந்திர தின வாழ்த்து சொல்லி வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிறோமோ என்ற பீதி இருக்கத்தானே செய்யும். கொண்டாடுவது சுதந்திர தினத்தையாகவே இருந்தாலும் அதைச் செய்வது நாம் என்பதால் அதில் ஒரு தன்னலம் உள்ளது. வாழ்த்துவதோ பிறர் மகிழ்ச்சியை நாடுவதைக் காட்டுகிறது. சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதாக ஃபேஸ்புக்கில் புகைப்படங்கள் போட முடியாதில்லையா?

இதற்கிடையில் இந்தக் கேள்வியைக் கேட்கும் வாசகர்களோ தொடர்ந்து குவிகிறார்கள். வகையாக மாட்டிக்கொண்டதாக உணரும்போது அவர்களுக்கு ஒரு ஆயத்த பதிலை அளிக்கிறேன். 'உன்னால் வாழ்த்தப்படுபவன் சுதந்திரமாக உணர்கிறானா? குறிப்பாக சுதந்திர தினத்தன்று சுதந்திரத்தை உணர்கிறானா? அவனால் நள்ளிரவி'ல் தைரியமாக பொது இடத்தில் சிறுநீர் கழிக்க முடிகிறதா? அல்லது உனக்கு வாழ்த்த வேண்டும் போல் இருக்கிறதா? ஆம் எனில் வாழ்த்துச் சொல்லு. இல்லையா? ஆளை விடு!'

எப்படி இருந்த ஈழ...

தாவரங்களில் பணப் பயிர்கள் இருப்பது போல பறவைகளில் ஈமு கோழிகள் பணப் பறவைகளாகக் கருதப்படுகின்றன. ஆஸ்திரேலியாவைப் பூர்வாங்கமாகக் கொண்டதாக சொல்லப்படும் ஈமுவைப் பற்றி சமீபகாலமாக நிறைய கேள்விப்படுகிறோம். மக்கள் அதை வைத்து லாபம் பார்ப்பதில் குறியாக இருக்கிறார்களே தவிர அதன் வரலாறு பற்றி யாருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

ஈமுவுக்கும் ஒரு வரலாறு இருக்கவே செய்கிறது. "அஞ்சிரைத் தும்பி" என்ற கம்பரின் வர்ணனை, நாளுக்கு ஐந்து வேளை சாப்பிடும் ஈமுவைக் குறிப்பதாக (அஞ்சு இரை தும்பி) தமிழ் அறிஞர்கள் கூறுகிறார்கள். ஈமுவை வளர்க்க அதன் இறைச்சி, எண்ணெய், அலகு, பால் என வணிக ரீதியான காரணங்கள் உள்ளன. இருந்தாலும் அதன் பறக்காமையை கௌரவக் குறைவாகக் கருதி சிலர் அதை வளர்க்கத் தயங்குகிறார்கள் (வெறும் கோழிகள் பறக்காததை நாம் எப்போதோ ஏற்றுக்கொண்டுவிட்டோம்).

இது சமீபத்திய பின்னடைவுதான். ஏனென்றால் ஈமுக்கள் சமீபகாலம் வரை விண்ணை அளந்துகொண்டிருந்த பறவைகள். தமிழகத்தில் கம்பகாலத்தில் உள்ளூர் தொலைத்தொடர்பு வசதிகள் (புறா, பருந்து போன்றவை) செயலிழந்த சமயங்களில் ஒற்றர்கள் தகவல் அனுப்ப ஈமு கோழிகள் பயன்பட்டிருக்கின்றன. சில வகை ஈமுக்கள் முற்காலச் சோழர்களுக்கு ஆகாய விமானங்களை இழுத்துச் சென்றுள்ளன. இது பற்றியும் ஆளாளுக்குக் குறிப்பெழுதி

வைத்திருக்கிறார்கள்.

ஈமுக்கள் நாம் நினைப்பதைவிடப் பழைய வரலாறு கொண்டவை. கி.மு. நான்காம் நூற்றாண்டு வரை ஈமுக்கள் ஈ.மு., ஈ.பி. (முறையே ஈமுவுக்கு முன், ஈமுவுக்குப் பின்) என இரு குழுக்களாகப் பிரிந்திருந்தன. இவற்றுக்கிடையே கடும் பகை இருந்தது. போர்ப் பறவைகளான ஈமுக்களின் உக்கிரமான மோதல்களை அன்றைய ரோமானியப் பேரரசு பெரும் தொந்தரவாகக் கருதியது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஈமுக்களின் இரண்டாம் சிசிலிய யுத்தத்தில் ஈ.பி. கோழிகளைப் பூண்டோடு அழிக்க ஈ.மு. கோழிகளுக்கு ரோமானியப் பேரரசு உதவியது. இதையடுத்து ஈ.மு. கோழிகளின் பெயரிலிருந்து புள்ளிகளை நீக்க பேரரசர் மாக்சிமஸ் ஆணையிட்டார். இன்று ஈ.மு. இனமே நிலைத்து ஈமுக்கள் என அழைக்கப்படுகின்றன.

18ஆம் நூற்றாண்டில் தொடங்கிய தொழில் புரட்சியில் விளைந்த மாசுபாடும் வான்வழிப் போக்குவரத்து வாகனமாக அதன் பயன்பாடு குறைந்ததும் சேர்ந்து ஈமுக்களின் உடலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தின. இறக்கைகளின் எடை அதிகரித்துக் கால்கள் பெருத்தன. விமானத்தைக் கண்டுபிடித்த அமெரிக்க ரைட் சகோதரர்கள் 1904இல் பருந்து இறக்கைகளை ஒரு ஈமுவிற்குப் பதியன் செய்து பறக்கவைக்க முயன்று தோல்வியடைந்தனர். ஈமுக்கள் மோட்டார் விமானங்களுக்கு வழி விட்டு கசாப்புக் கடைகளுக்குள் ஒதுங்கிக்கொண்டன. 'கராஜ்'கள் பண்ணைகளாயின.

போர்ப் பறவையாகவும் விமானமாகவும் இருந்துவந்த ஒரு மகத்தான பறவையினம் யுத்தமயமான வாழ்க்கைமுறையாலும் கால மாற்றங்களாலும் தனது மேன்மையை இழந்து இன்று மோசடிகளுக்குத் துணைபோகும் உதவாக்கரை கிரிமினலாகச் சுருங்கிவிட்ட சோகக் கதையைத்தான் அதன் வரலாறு கூறுகிறது. நெருப்பிலிருந்து மீண்டு வந்த புராணப் பறவையான ஃபீனிக்ஸ் போல ஈமுவும் அதன் பண்டைய கௌரவத்தை மீட்டுக்கொள்ளும் என்று தோன்றவில்லை. ஏனென்றால் மிக விரைவில் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஈமு கோழிகளைக் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிப்பார் என காவல் துறை நண்பர்கள் கூறுகிறார்கள்.

பூனைக் கன்றுகள் அழகல்ல

குழந்தைகள் என்றாலே அழகு என ஒரு பொதுக் கருத்து நிலவுகிறது. எல்லோருக்கும் குழந்தை இருப்பதுதான் இதற்குக் காரணம். நான் பார்த்த வரை அவைகளில் சுமார் தொண்ணூறு சதவீதம் அவலட்சணமானவை. மீதி பத்தைத்தான் நாம் ரசிக்கிறோம், கொஞ்சுகிறோம். தொண்ணூறை அவைகளின் பெற்றோர்கள் கொண்டாடுகிறார்கள்.

என் மகன் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது நான் முகஞ்சுளிக்காத நாளே இல்லை. அவனைப்

பார்த்தாலே கைபிசைவேன். என் மனைவி அவனை என் எதிரில் நிறுத்திவைத்து என் கையில் சப்பாத்தி மாவைக் கொடுத்துவிட்டுப் போய் பதினைந்து நிமிடங்களுக்குப் பின்பு வந்து பறித்துச் செல்வாள். அவன் அகலும் வரை தவிப்பில் என் கைகள் பிசைவதை நிறுத்தாது. மழலை என்கிற ஆறுதல்கூட எனக்குக் கிடைக்கவில்லை. ஐந்து வயது வரை அவன் தின்பதற்கும் அழுவதற்கும்தான் வாயைத் திறந்தான். பொத்திப் பொத்தி வளர்த்தேன். ஆனால் எத்தனை நாள்? கல்வி கேள்விகள் அவனை அழைத்தன.

ஒரு சமயத்தில் அவனை ஏதாவது ராணுவத்திற்கு விற்றுவிடலாமா என்றுகூடத் தோன்றியது. மூன்று வயதுக் குழந்தையை நிராகரிக்க யாருக்கு மனசு வரும்? கடைசி வரை மனைவி ஒத்துழைக்கவேயில்லை. உறவினர்கள் என்னைக் குடும்பப் பிருஷ்டம் செய்துவிடுவார்களோ என்று எனக்கும் ஒரு பயம் இருந்தது. ஆனால் சில தியாகங்கள் அவசியம்தானே? அவன் இப்போது 15 வயதில் பார்க்கப் பரவாயில்லை. கண்ணாடியெல்லாம் பார்த்துக்கொள்ள முடிகிறது. அப்படியே என் ஜாடை.

பெற்றோர்கள் தம் குழந்தைகளிடம் ஏற்படும் ஈர்ப்பை, தமது உயிரினம் தழைக்க உதவும் ஒரு உயிரியல் செயல்பாடாகப் புரிந்துகொள்வதில்லை. மண்டையில் அடிபட்டாற்போல் சொக்குகிறார்கள். இந்தக் கூத்தைத் தனிச் சுற்றுக்கு மட்டும் வைத்துக்கொள்ளாமல் புகைப்படம் எடுத்து நண்பர்களுக்குக் காட்டி வெறுப்பேற்றுகிறார்கள். அவைகளைப் பாடி, ஆடிக் காட்டவைக்கிறார்கள். இந்தப்

பூனைகளுக்கு மணி கட்ட யாருக்காவது தைரியம் இருக்கிறதா?

என்னைக் கேட்டால் தைரியம் வேண்டாம், நாசூக்கு இருந்தால் போதும். சமீபத்தில் என் வீட்டுக்கு வந்த ஒரு உறவினரின் குழந்தைக்கு ஆறு வயதிருக்கும். ஆண்பிள்ளை. ஆளைப் பார்த்தால் ஒரு வேளை சோறு இறங்காது. அவர்கள் வீட்டில் யாரும் இவ்வளவு அசிங்கம் இல்லை. மழலை, கழலை என ஒரு சத்தத்தையும் காணோம். வந்ததிலிருந்து எதையாவது திறந்துகொண்டும் தள்ளிக்கொண்டும் இருந்தான்.

நான் கேட்டேவிட்டேன்: "என்ன தம்பி, உங்கள் பையன் உங்கள் சாயலும் இல்லை, உங்கள் மனைவி சாயலும் இல்லையே?"

அவர் நெளிந்தார். "அவன் என் மாமனார் சாயல். நான் என் மாமனார் சாயல் அல்லன்" என்று விளக்கினார்.

"உங்கள் பையன் அழகாக இருக்கிறான் என்று யாராவது உங்களிடம் சொல்லியிருக்கிறார்களா?"

"சொல்லியிருக்கிறார்களே, நிறைய பேர். திடீரென்று ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?" என்றார் மேலும் சங்கடமாகி.

"சொன்னது யார்? வீடு எங்கே?"

உறவினர் பதில் சொல்லத் திணறல். ஆதாரமின்மையின்

அவஸ்தையது.

"உலகம் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும் தம்பி. நம்முடைய குழந்தை நமக்கு அழகாகத் தெரிந்தால் போதும்" என்றேன். "உங்கள் குழந்தையின் உருவத்தைப் பாராட்டுபவர்கள் உண்மையான நண்பர்கள் அல்ல. முகஸ்துதிக்காகப் பொய் சொல்பவர்கள். காரியம் ஆனதும் நிஜத்தைச் சொல்லிவிடுவார்கள். இந்த மாதிரி ஆட்களிடம் ஜாக்கிரதையாக இருங்கள். ஏதாவது பிரச்சினை வந்தால் என்னிடம் சொல்லுங்கள்."

"சொல்கிறேன்" என்றவர் "போகலாமாடா?" என்றார் அலமாரியில் ஒரே சமயத்தில் இரு கால்களையும் வைத்து ஏற முயன்றுகொண்டிருந்த தனது குழந்தையிடம். அவர் குழந்தையைப் பற்றிய உண்மையை அவருக்குப் போட்டுடைத்த முதல் ஆள் நானாகத்தான் இருந்திருப்பேன் போல. குற்ற உணர்வில் என் மனைவியிடம்கூட சொல்லிக்கொள்ளாமல் வீட்டுக்குப் போய்விட்டார். எனக்குக் 'குரங்கைப் பெற்றுப் பார்' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது.

ஒரு புத்தர் சிலைக்காக

(ஜென் சிறுகதை)

ஒரு ஜென் மடாலயத்தின் சீடர்கள் அதன் ஆஸ்தான புத்தர் சிலையை சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அந்த புத்தருக்கு 200 வயது. இயற்கை அந்தச் சிலையின் முக உறுப்புகளை மொண்ணையாக்கியிருந்தது. புத்தர் சிலை என்று கையில் இருந்த வேறெதையோ கொடுத்து அக்கால ஸ்தபதி ஏமாற்றிவிட்டாரோ என தலைமைச் சீடருக்குச் சந்தேகம் எழுந்தது. அசுத்தங்களை நீக்கிவிட்டால் புத்தர் மடாதிபதி ஜாடையில் இருந்தது வேறு அவருக்கு எரிச்சலூட்டியது.

"அடேய் புத்த குட்டிகளா, இங்கு வாருங்கள்!" புதிதாகச் சேர்ந்த குழந்தைத் துறவிகளை அழைத்தார். சிறுவர் கூட்டம் குடுகுடுவென பவ்யமாக ஓடி வந்தது. நன்றாகக் கழுவித் துடைத்த சிலையைக் காட்டி, "இது யாரைப் போல் இருக்கிறது?" என்றார் தலைமைச் சீடர்.

"வி. மகாவீரர்" என்றான் ஒருவன்.

"இளங்கோவடிகள்" என்றான் இன்னொருவன்.

"மீசை தாடி மழித்த வள்ளுவர்" என்றான் மற்றொருவன்.

"ஆர். வள்ளலார்" என்றான் ஒரு பையன்.

தலைமைச் சீடர் பெரும் சங்கடம் அடைந்தார். மடாலயத்திற்கு அவர்தான் நிர்வாகி. தலைமைத் துறவி எப்போதும் தியானத்திலும் ஜெபத்திலும் மூழ்கியிருப்பவர். நிர்வாக முடிவுகளைச் செய்த பின்பு அவருக்குச்

சொன்னால் போதும். தலைமைச் சீடர் ஒரு முடிவுக்கு வந்தார். இந்தச் சிலையை யாராவது பிச்சைக்காரனுக்குப் போட்டுவிட்டு அழகிய புதிய புத்தர் சிலையொன்றை நிறுவ வேண்டும்.

ஆனால் அதிலொரு சிக்கல். மூன்றடி புத்தர் சிலை செய்ய சிற்பிக்குக் கூலி எங்கிருந்து கொடுப்பது? அது வெறும் ஜென் மடாலயம்; ஆதீனமோ வைத்தியசாலை, பாடசாலை நடத்தும் குபேர மடமோ அல்ல. சாப்பாடு, தண்ணீர், துணிமணி எல்லாம் மடாலய ஜென் தோட்டத்தின் விளைபொருட்கள். புத்தருக்குக் காது சிறியதாக, துளையிடாமல், ஆடை மடிப்புகளையும் சிகை நுணுக்கங்களையும் குறைவாக வைத்து செதுக்கச் சொல்லி, அதற்கேற்ப கூலியைக் குறைத்துக்கொள்ளும்படி சொன்னாலும் ஸ்தபதிக்கு ஒரு சிறு தொகையாவது கொடுத்தாக வேண்டும். சிற்பிக்கும் அல்லவா இருக்கிறது வயிறு! பணத்தை எப்படிப் புரட்டுவது?

தலைமைச் சீடர் தம் முதன்மைச் சீடர்களை அழைத்துக் கூட்டம் போட்டார். வாசலுக்கு அருகே ஒரு உண்டியல் வைக்க முடிவானது. இதை மடாதிபதிக்குத் தெரியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது. இரண்டடி உயர உண்டியல் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சிறு பறவைகள் தவிர யாரும் வராத அந்த மடாலயத்திற்குப் பக்தர்களை வரவழைப்பது அடுத்த பணி. அதற்கும் ஒரு சீடர் யோசனை கூற, அது உடனடியாக

ஏற்கப்பட்டது. மடாலயத்தின் வெளிச் சுவரில் "இளம்பெண் துறவிகள் சேர்க்கை இன்று ஆரம்பம்" என்ற அறிவிப்புப் பலகையை மாட்டினார்கள். அங்கு எப்போதாவது பெண் துறவிகள் தங்கிவிட்டுச் செல்வதுண்டு என்பதால் மடாதிபதிக்குச் சந்தேகம் எழாது. ஆனால் கானக விளிம்பில் இருந்த ஆள் நடமாட்டமில்லாத அந்தப் பகுதிக்கு யாரும் வரவில்லை.

ஊருக்குள் போய் பெண் துறவிகள் சேர்க்கை பற்றிச் சுவர்களில் அறிவிப்பு எழுத முடிவு செய்தார்கள். அது நல்ல பலன் கண்டது. விரைவிலேயே சில இளம்பெண்கள் மடாலயத்திற்கு வந்து துறவறம் பூண்டார்கள். பெண் துறவிகளைப் பார்ப்பதற்காக புத்தரை வழிபட வந்தவர்கள் உண்டியலில் நிறைய காசு போட்டார்கள். "உங்கள் காலணிகளை வெளியே விடவும். உங்கள் உடைமைகளை பத்திரமாக வைக்கவும். தொலைந்தால் நிர்வாகம் பொறுப்பல்ல" என ஒரு பலகை வாசலில் வைக்கப்பட்டது. ஆளுயர புத்தர் சிலை செய்ய சிற்பிக்கு ஆணையும் முன்பணமும் தரப்பட்டன.

மடாலயம் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்க, தொண்டுக் கிழமான மடாதிபதி தமது நான்கு நாள் தியானம் முடிந்து வெளியே வந்தார். தலைமைச் சீடர் செய்த மாற்றங்களையெல்லாம் கண்டார். தமது தடியால் உண்டியலை ஓங்கி அடித்து அதை இரண்டாகப் பிளந்தார். காசுகள் எங்கும் இறைந்தன. "அற்பர்களே, எல்லோரும் காசைப் பொறுக்கிக்கொண்டு ஓடுங்கள். இல்லை என்றால் இந்தக் கட்டையாலேயே மண்டையைப் பிளந்துவிடுவேன்"

என்று கூவியதோடு ஆண், பெண் எனப் பாராமல் சில துறவிகளை அடிக்கவும் செய்தார். மடாலயம் காலியானது.

மடாதிபதி காலணிகள் பற்றிய பலகையை சுக்குநூறாக்கினார். "பெண் துறவிகளின் சேர்க்கை இன்று ஆரம்பம்" என்ற அறிவிப்பில் 'பெண்'ணை அழித்து 'ஆண்' ஆக்கி ஊருக்கு எடுத்துச் சென்றார் விளம்பரம் செய்ய.

என்ன பெரிய காம்யூ?

என்னை மிகவும் பாதித்த புத்தகங்களில் ஒன்று ஆல்பேர் காம்யூவின் The Stranger (L'Etranger). குறைந்த பக்கங்களில் நிறைந்த அனுபவம் தரும் இந்த நாவலின் முதல் ஐந்து பத்திகளை மட்டும் மொழிபெயர்த்துப் பார்த்தேன். இதை இன்னும் மெருகேற்றலாம் என்று எனக்கே தெரியும். கீழே -

> இன்று முதல் அம்மா கிடையாது. அல்லது நேற்றிலிருந்தோ என்னவோ; திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. இல்லத்திலிருந்து வந்த தந்தி இப்படிச் சொல்கிறது: உன் அம்மா காலம். நாளை ஈமம். ஆழ்ந்த அனுதாபம். இதனால்தான் சந்தேகமே; அது நேற்றாகவும் இருந்திருக்கலாம்.
>
> முதியோர் இல்லம் அல்ஜியர்ஸிலிருந்து தோராயமாக

ஐம்பது மைல் தூரத்தில் மரெங்கோவில் இருக்கிறது. இரண்டு மணி பஸ்ஸைப் பிடித்தால் இருட்டுவதற்குள் அங்கே போய்ச் சேர்ந்துவிடுவேன். பிறகு ரவைக்கு அங்கேயே முகாமிட்டு வழக்கம் போல் உடலுக்கு அருகாமையில் காவல் காத்து நாளை மாலைக்குள் இங்கிற்குத் திரும்பி வந்துவிடலாம். என் முதலாளியிடம் இரண்டு நாள் விடுமுறை கேட்டேன்; சந்தர்ப்ப சூழ்நிலையால் அவரால் மறுக்க முடியவில்லை என்பது வெளிப்படை. இருந்தாலும் அவர் பார்க்க எரிச்சலாகத் தெரிந்தாரோ என்று எனக்கொரு தோணல். நான் யோசிக்காமல் சொன்னேன்: "மன்னிக்கவும் ஐயா, இது என் தப்பு இல்லை என்று உங்களுக்கே தெரியும்."

அப்படிச் சொல்லியிருக்க வேண்டாம் என்று பிற்பாடுதான் தோன்றியது எனக்கு. நான் மன்னிப்பு கேட்கக் காரணமே இல்லை; அவர்தான் துக்கம் விசாரித்து மேல்விவரம் கேட்க வேண்டும். அநேகமாக நாளை மறுநாள் அவர் என்னைக் கருப்பு ஆடையில் பார்க்கும்போது கேட்பாரோ என்னவோ. இப்போதைக்குக் கிட்டத்தட்ட அம்மா இறந்த மாதிரியே இல்லை. 'ஈமம்' எனக்கு அதை உணர்த்தும், ஆள் போயாயிற்று, இனி சந்தேகத்திற்கு இடமில்லை என்று ஸ்டாம்பு குத்தி மனதில் இறக்கும்.

...

இரண்டு மணி பஸ்ஸைப் பிடித்தேன். வெயில் கொளுத்தும் மதியம் அது. நான் வழக்கம் போல

செலஸ்டின் உணவகத்தில் மதிய உணவு சாப்பிட்டேன். எல்லோரும் என்னிடம் அன்பாகப் பேசினார்கள். "அம்மா மாதிரி ஒருவரும் இல்லை" என்று செலஸ்ட் என்னிடம் சொன்னான். நான் கிளம்பியபோது அவர்கள் கதவு வரை என்னோடு வந்தார்கள். அங்கிருந்து போவதில் ஒரு அவசரம் இருந்தது. ஏனென்றால் கடைசி நிமிடத்தில் எம்மானுவலின் வீட்டுக்கு போன் போட்டு அவனுடைய கருப்பு டையையும் (tie) துக்க அனுஷ்டிப்புப் பட்டையையும் இரவல் கேட்க வேண்டியிருந்தது. அவன் மாமாவோ சித்தப்பாவோ பெரியப்பாவோ சில மாதங்களுக்கு முன்புதான் காலமாகியிருந்தார்.

மொழி ஆராய்ச்சி

1. உள்ளங்கள் வாழ்த்துவதற்கே

பிறந்தநாள் என்றால் முண்டியடித்துக்கொண்டு வரும் இரண்டு விசயங்கள்: 1. வாழ்த்திய அன்பு உள்ளங்கள், 2. வாழ்த்திய அன்பு நெஞ்சங்கள். நேரடியாக வாழ்த்துபவர்களுக்கு மரியாதையே இல்லை. டெலிபதி மூலம் வாழ்த்தப்படுவதையே மக்கள் விரும்புகிறார்கள்.

வாழ்த்திய அன்பு உள்ளங்களும் வாழ்த்திய அன்பு

நெஞ்சங்களும் சந்தித்தால் என்ன நடக்கும்? மூன்றாம் உலகப் போரா?

இதன் மொழிசார் உளவியலைப் பற்றி சற்று சிந்திப்போம். மனிதர்களுக்கு (signified) மவுசு இல்லை. அவர்களது செயலைத் தூண்டும் மனத்திற்குத்தான் (signifier) மதிப்பு. இன்னும் ஒரு படி மேலே போய் 'வாழ்த்திய நோக்க'த்தை (intent) இழுக்கலாம். ஆனால் வாழ்த்து பெறுபவர்கள் அறிவார்த்தமாக சிந்திக்க மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை உடனடி நெகிழ்ச்சி.

நம்முடைய பிறந்தநாள் அவ்வளவு நெகிழ்ச்சியான விஷயம். ஏனென்றால் நாமே நெகிழ்ச்சிக்கு உயிரைக் கொடுப்பவர்கள், மற்றவர்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள், அவர்களுக்குத் துன்பம் என்றால் தாமும் துன்பிப்பவர்கள். நம்மைச் சுற்றியிருப்பவர்கள் மட்டும் சளைத்தவர்களா? அவர்களும் புத்தர்கள், யேசுக்கள், காந்திகளே.

வாழ்த்தியவர்களுக்கு நன்றி என்று சொல்வதில் என்ன பிரச்சினை என்றால் உடனே ஆசாமிகள் உருவம் நினைவுக்கு வரும். இது மிக சோர்வை ஏற்படுத்துகிற ஒரு அசுவாரசிய பிம்பம். உள்ளம், நெஞ்சம் என்றால் கெட்டெண்ணம் அறியாத மேன்மையான ஒன்று நம்மை வாழ்த்துகிறது என்று காற்றில் ஒரே மனிதாபிமானமும் நட்புணர்வுமாக இருக்கும். அதனால்தான் வாழ்த்துவது எப்போதுமே உள்ளமோ நெஞ்சமோவாக இருக்கிறது. இந்த இரண்டில் ஒன்றாக என் கதை ஆகிவிடக் கூடாது

என்றுதான் ஃபேஸ்புக்கில் நான் யாரையும் பிறந்தநாளுக்கு வாழ்த்துவதில்லை.

2. தவிர்க்க இயலாமையின் கவர்ச்சி

காலை நேரத்தில் நடமாடும் பல வண்ணப் பூக்களாய் பலவித சீருடைகளில் பள்ளிக் குழந்தைகளைப் பார்க்கும்போது என் பால்ய காலம் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. அட, ஒரு நிமிசம் – தவிர்க்க முடியாவிட்டால்தான் என்ன? தவிர்த்து என்ன ஆகப்போகிறது?

என் குழந்தைப் பருவம் மகிழ்ச்சிகரமாகவே இருந்தது. எதிர்பார்ப்பில்லாத பெற்றோரின் வளர்ப்பில் சராசரி மாணவனாக, மறக்கத்தக்க காதல் தோல்விகளுடன் பெரிய உறுத்தல்களின்றி மேஜையில் பெயர் பொறித்து பெஞ்சு தேய்த்தேன். இதில் தவிர்ப்பதற்கு சுவாரசியமாக ஒன்றும் இல்லை. இனி பள்ளிக் குழந்தைகளைப் பார்த்தால் பால்ய காலம் தாராளமாக நினைவுக்கு வந்துகொள்ளட்டும். இனியும் தவிர்க்கப்போவதில்லை.

உண்மையில், இனி குழந்தைகளைப் பார்க்கும்போதெல்லாம் வேண்டுமென்றே என் சிறு வயதை நினைவுகூரப்போகிறேன். தவிர்க்க முடியாததை ஒரு மொழிக் கொள்கையாகவே கொண்ட கும்பல் கண்டுபிடித்துவிடாது. குழந்தைகளின் அறியா உதவியுடன் என்னால் முடிந்த ஒரு ரகசிய மொழிப் புரட்சியிது.

ராமுவும் சோமுவும்

(குழந்தைகளுக்கான கதை)

ராமுவும் சோமுவும் உயிர் நண்பர்கள். ஒருநாள் இருவரும் காட்டு வாக்கில் நடந்துகொண்டிருந்தனர். அப்போது ஒரு பயங்கரக் கரடி எதிரில் வந்தது. இருவரும் பயந்து ஓடத் தொடங்கினர். கரடி அவர்களை விடாமல் துரத்தியது. ராமு நண்பனை விட்டு ஒரு மரத்தின் மேல் ஏறித் தப்பித்தான். சோமுவுக்கு மரம் ஏறத் தெரியாது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. காட்டாந்தரையில் படுத்துக்கொண்டு இறந்தது போல் நடித்தான். கரடி அவன் முகத்தருகே முகர்ந்து பார்த்துவிட்டுச் சென்றுவிட்டது. அது போனதும் மரத்திலிருந்து இறங்கிய ராமு, சோமுவிடம் "கரடி உன்னிடம் என்னடா சொன்னது?" என்று கேட்டான். அதற்கு சோமு சொன்னான்: "'ஏனப்பா, நீ ஏற மாட்டாயா மரம்?'"

ஜாதி எழுத்து

நான் ஒரு ஜாதிப் பத்திரிகையில் சிறுகதை எழுதிவிட்டேனாம். நான் எப்படி ஒரு ஜாதிப்

பத்திரிகையில் எழுதலாம் என்று கேட்கிறார்கள். விட்டால் எனக்கு ஜாதிப் பத்திரிகைகளில் எழுதவே உரிமை இல்லை என்று சொல்லிவிடுவார்கள் போல! ஐயாக்களா, உங்களுக்கொரு தகவல்: நான் நேரடியாக அவர்கள் பத்திரிகையில் எழுதவில்லை. நான் எழுதி அனுப்பினேன், அவர்கள் அச்சிட்டார்கள், அவ்வளவுதான். இன்னொன்று, நான் என் ஜாதிப் பத்திரிகையில்தான் எழுதியிருக்கிறேன். என்னவோ உங்கள் ஜாதிப் பத்திரிகையில் எழுதிவிட்டது போல் குதிக்கிறீர்களே! அதுவும் என் கதையின் தலைப்பே "சாதி வேண்டாமே"தான். பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பை மாற்றச் சொன்னார். "'இனிமேல் ஒருபோதும் சாதி வேண்டாமே' என்றா வைத்திருக்கிறேன்? வெறும் 'சாதி வேண்டாமே'தானே?" என்று அவரை சமாதானப்படுத்தினேன். ஜாதிப் பத்திரிகையில் சமத்துவத்தைப் பற்றி எழுதும் ஒரே எழுத்தாளன் நானாகத்தான் இருப்பேன் ஐயா. இதுதான் என் ஜாதி புத்தியோ என்ன இழவோ!

கருணைக் கொலை

எழுத்தாளனாக ஊரைச் சுற்றும்போது பல பேரின் சகவாசம் கிடைக்கிறது. சமீபத்தில் அப்படிக் கிடைத்த நண்பர் ஒருவர் அஜ்மல் கசாபுக்குக் கிடைத்த மரண தண்டனை பற்றி பயங்கர குஷி தெரிவித்தார். இந்த அன்பர் சுமார் 40 கொலைகள் செய்து இன்னும் பிடிபடாமல் இருப்பவர்.

என்றைக்காவது மாட்டுவோம் என்ற பயத்தில் வாழ்ந்துவருகிறார். இத்தனை கொலைகள் செய்திருப்பதால் சாகும் வரை சிறைவாசம் போல் கொடூரமான தண்டனை ஏதாவது கொடுத்துவிடுவார்களோ என்ற பீதியில் இருந்தார் ("பண்ணது 40 கொலைன்னாலும் ஜெயில்ல சாவற வரைக்கும் அவஸ்தைப்படுறது நாமதானே சார்?"). கசாப் தீர்ப்பால் இப்போது இவருக்குள் நம்பிக்கை பிறந்திருக்கிறது. மரண தண்டனை என்றால் தூக்கில் போடும் வரை சில கால இம்சைதானாம். சாகும் வரை சிறைதான் உண்மையான மரண வேதனையாம். "மரண தண்டனையோடு விட்டுவிடுவார்கள்தானே?" என்று அடிக்கடி போன் செய்து கேட்கிறார்.

கீரைக்கழனி, பயணக் கட்டுரை

எனது எண்ணற்ற பயணங்களில் நான் அறிந்த ஒரு கசப்பான உண்மை, கிராமத்து மக்களுக்கே கிராமத்துத் தமிழ் புரிவதில்லை. ஒரு முறை திருச்சி சென்றுகொண்டிருந்தவனுக்கு கிராமத்துத் தமிழ் பேசும் ஆசை வந்தது. உடனே பேசியாக வேண்டும் போல் இருந்தது. ஒரு மண்வாசனைப் படத்திற்கு வசனம் எழுதக் கூப்பிட்டிருந்தார்கள். அதற்கும் பயன்படட்டும் என்று நினைத்தேன். பேருந்தோ வழியில் எங்கும் நிற்காமல் வெயிலைக் கிழித்துக்கொண்டு மெல்லப் பறந்தது.

இடையே கீரைக்கழனி என்ற இடத்தில் ஓட்டுநர் இன்ஜினை அணைக்காமல் சொந்த வேலையாக இறங்கினார். திடீர் உந்துதலில் பெட்டி படுக்கையுடன் அங்கேயே இறங்கிவிட்டேன். அது ஓர் அழகிய வறண்ட கிராமம். வயலும் பொட்டலும் கலந்த 'இன்டீரியர் தமிழ்நாடு' அந்த ஊர். உச்சி வெயில்தான் பிசைந்தது. என் கணக்குப்படி கிராமங்களில் தாகசாந்திக்குகத் குளிர்ந்த பானை மோர் கிடைக்கும். அல்லது சட்டை அணியாத கிராமத்து உழைப்பாளி யாராவது சரசரவெனத் தென்னை மரம் ஏறி இரண்டு இளநீர் வெட்டிப்போடுவார்கள். கிராமத்து விருந்தோம்பல் கண்ணீல் நீர் வரவழைப்பது. அதுவும் காரமாக ஏதாவது சாப்பிடும்போது.

சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு குடிசையை அணுகினேன். குடிசை வாயிலின் சொற்ப நிழலில் அமர்ந்து ஒரு கிழவி வெயிலை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.

"எலே ஆத்தா, சுருக்க மோத்தண்ணி குடுயேன் பாப்பம். ஒரே நாக்குத் தாக்கா இருக்கு" என்றேன் மோருக்காக.

கிழவி சுருங்கிய புருவங்களைச் சுருக்கி முறைத்தார். எங்கள் ஒருதலை உரையாடலைப் பார்த்து இன்னும் இருவர் வந்தார்கள்.

"பாட்டி, என்ன கேக்குறாரு?" என்று கிழவியைக் கேட்டார் ஒருவர்.

"என்னவோ கேக்குறான் மூதி ஒன்னும் வெளங்கல" என்றார்

கிழவி.

"ஆகாசத்து மஞ்சக் கதிரு பொடனி வளியா உளுது வேக்க விட்டுத் தெறிக்குதப்பு! அதுதேன் இங்கன சற்று மோத்தண்ணிய உட்டாக்கா குளிர்ந்துக்கிடுவேன்." விளக்கினேன்.

அதற்குள் இன்னும் நான்கைந்து கிராமத்து நெஞ்சங்கள் வந்தன. ஒருவர் கையில் மண்வெட்டிகூட இருந்தது. பஞ்சாயத்துத் தலைவர் தோரணையில் இருந்த ஒரு வெள்ளாடைக்காரர் ஒரு தம்பியைக் கேட்டார்:

"யாரு இவுரு? என்ன வேணுமாம்?"

தம்பி, "பஸ்ஸுலந்து எறங்குனயான், நேரா கௌவிட்ட போய் பேசுனயான். இவம் பேச்சு ஒரு மசுறும் வெளங்கல" என்றான்.

"எந்த ஊரு?" என்று தலைவர் கேட்டார் என்னிடம்.

"கீரைக்கழனி" என்றேன். அப்படித்தான் போர்டு போட்டிருந்தது.

"அது தெரியுது. ஒங்களுக்கு என்ன வேணும்?"

"மானம் காமாலையா கெடந்து நாக்கத் திருகுறாப்ல. அதான் செத்த மோத்தண்ணி கேட்டுப்டேன். கெடக்கா?"

அடுத்து கிழவி உள்ளிட்டு ஏழெண்மர் என்னை இடது வலது வாங்கினார்கள். என்னைச் சுற்றிக் குழுமியிருந்தவர்களை விலக்கிக்கொண்டு ஒருவன் முஷ்டியை என் முகத்தருகே வேகமாகக் கொண்டுவந்தான். மறுகணம், உடம்பு தரையில் படாமல் சுகமாக இழுத்துச் செல்லப்படும் உணர்வு. உடல் வலியும் வாகன நாராசமும் அடுத்து வந்தன.

"யோவ், எந்திரி" என்றது ஒரு உரிமைக் குரல். சென்னை செல்லும் பேருந்தில் சைதாப்பேட்டைக்கு டிக்கெட் வாங்கப்பட்டது. ஆனால் கிராமத்துத் தமிழ், கிராமங்களிலேயே நசிந்துவருவது ஏன்?

இப்படி ஒரு நாடகம்

[குறிப்பு: தூர்தர்ஷனுக்காக எழுதிய குறுநாடகம் இது.]

(இளைஞன் ரகு தன் வீட்டு மொட்டை மாடி மதில் சுவர் விளிம்பை இறுகப் பிடித்துக்கொண்டு தவிப்புடன் நின்றிருக்கிறான்...)

ரகு: (மனதிற்குள் உரக்க) என்னோட மாலுவா புள்ளத்தாச்சி? நம்பவே முடியலியே! அவ கொஞ்சம் பாதுகாப்பா இருந்திருக்கலாமோ?

(பயத்தில் துளிர்க்கும் வியர்வையை வழித்து மதில் சுவரைத்

தாண்டி பொதுமக்கள் மீது உதறுகிறான். யோசனையாகக் குறுக்கும் நெடுக்கும் நடக்கப் பார்த்து மாலதி மேல் இடித்துக்கொள்கிறான். பதற்றத்தில் அவள் அங்கே இருந்ததை அவன் மறந்துவிட்டிருந்தான்)

மாலதி: (கவலையுடன்) என்ன ரகு, இப்படி ஆயிடுச்சே!

ரகு: கவனிக்காம இடிச்சிட்டேன்.

மாலதி: நான் நம்ம கர்ப்பத்தைச் சொன்னேன்.

ரகு: தொந்தரவுக்கு மன்னிக்கணும், ஆனா அது உன் கர்ப்பம். எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா தோலை உரிச்சு ஆஃப்டர்ஷேவ் போட்ருவாரு. (அப்பா குரலில்) "கல்யாணத்துக்கு முன்னாடி என்னடா அவசரம்? அப்புறமா பெத்துக்குறது?" அப்டின்னுவாரு.

மாலதி: இப்ப என்னதான் செய்றது?

ரகு: மாலதி... நான் சொல்றேனேன்னு தப்பா நினைச்சிக்காதே... பேசாம கலைச்சிடு!

மாலதி: (இதை முன்பே எதிர்பார்த்த தொனியில்) இத நான் முன்னாடியே எதிர்பாத்தேன். கலைக்கிறதுக்கு இது என்ன கருவா?

ரகு: (புரியாமல்) பொதுவா வேற எதைக் கலைப்பாங்க?

மாலதி: கருவைத்தான். அதுக்காகக் கலைச்சிடுவாங்களா? ஹாஸ்பிடல் பில்லை யார் கட்டுவாங்க?

ரகு: (பல்லைக் கடித்துக்கொண்டு) நான் கட்டித் தொலைக்குறேன். சரியா? இன்னிக்கே கலைச்சிக்கோ! நான் ஏ.டி.எம். போயிட்டு வரேன்.

(ரகு நகர்கிறான். மாலதி தடுக்கிறாள்.)

மாலதி: (கறாராக) அதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம். முதல்ல நம்மளைப் பத்தி உங்க வீட்டுல பேசுங்க. நான் எங்க வீட்டுல பேசுறேன். ஓடிப்போற வேலை எல்லாம் என்கிட்ட வேணாம்.

ரகு: (சிந்தனையுடன்) கலைக்கிறதுன்னா நான் செலவு பண்ணணும். கல்யாணம்னா எங்கப்பாதான் செலவு பண்ணணும். கல்யாணம் பண்றதா இருந்தா கலைக்கிறதுக்கு அவசியம் இல்லை...

மாலதி: அதுக்குத்தான் சொன்னேன். கல்யாணம் பண்ணிக்குவோம்.

ரகு: (விரக்தியாக) வேற வழி? வர்ற சனிக்கிழமை முகூர்த்த நாள், ராகு அடிமடியில இருக்கான்...

(அவர்களுக்குப் பின்னாலிருந்து...)

ரகுவின் அப்பா: அப்படிச் சொல்றா என் மவனே!

(காயப்போட்ட லுங்கிக்குப் பின்னே மறைந்திருந்த ரகுவின் பெற்றோரும் மாலதியின் பெற்றோரும் வருகிறார்கள்)

ரகுவின் அப்பா: (மாலதியின் அப்பாவிடம்) வரப்போற சம்மந்தி, நான் சொல்லல? என் மவன் மிரட்டினாத்தான் வழிக்கு வருவான். (மீசையை முறுக்கியபடி) யாரோட புள்ள!

மாலதியின் அப்பா: (தயங்கி) அப்ப வரதட்சிணை...

ரகுவின் அப்பா: வரதட்சிணையா? சம்மந்தி, நீங்க எந்தக் காலத்துல இருக்கீங்க? என் பையனுக்கு ஒரு வேலை வாங்கிக் குடுத்தீங்கன்னா நான் எதுக்கு வரதட்சிணை கேக்கப்போறேன்?

மாலதியின் அப்பா: (துணுக்குற்று தனக்குள்ளே) அப்ப மாப்பிள வெட்டி ஆபீசர்னு மாலதி சொன்னது பொய்யா?

மாலதி: (ரகுவிடம் கெஞ்சலாக) சாரி ரகு, நீங்க கல்யாணப் பேச்சை இழுத்தடிச்சிட்டே இருந்ததாலதான் நாங்க எல்லாம் சேந்து இப்படி ஒரு நாடகமாடினோம்...

ரகு: அப்ப நீ கர்ப்பமா இல்லையா?

மாலதி: நான் மட்டுமில்ல ரகு, எனக்குத் தெரிஞ்ச எந்தப் பொண்ணும் கர்ப்பமா இல்ல.

ரகு: (அதிர்ச்சியுடன்) அடிக் கள்ளி!

(பார்வையாளர் பகுதியிலிருந்து கற்கள், அழுகிய தக்காளி, முற்றிய வெண்டைக்காய் எல்லாம் வந்து விழுகின்றன. விமரிசையாய் கெட்டி மேளம் ஒலிக்க...)

-திரை-

சுடச்சுட கம்பரசம்

கம்பர் இணையற்ற ஒரு கவிஞராகக் கருதப்படுகிறார். இராமாயணக் கதையை முதலில் சமஸ்கிருதத்தில் எழுதிய வால்மீகியைப் போலில்லாமல் கம்பர் நேரடியாகத் தமிழிலேயே எழுதினார். மொத்த நூலும் செய்யுள்களில் 'ரைமிங்'காக எழுதப்பட்டுள்ளது. இராமனின் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்தையும் பாநயம் பாராட்டத்தக்க முறையில் வர்ணிக்கிறார் இந்நூலில் இக்கம்பர். எனக்குப் பிடித்த சில பாடல்களை இங்கு உரையுடன் தருகிறேன்.

காட்டாக, சீதையை இராமன் முதன்முதலில் பார்க்கும் தருணம் -

> சீதையினை மாடமிலே நோக்குற்ற அண்ணல்காரன்
> பாதையிலே நின்றிட்ட வீலறு தேரொத்து
> போதையிலி லக்குவன் திண்டோ ளிற்சரிந்து

காதையிலே செய்தனன் புதியதோ ரேற்பாடு.

(மிதிலாபுரிப் படலம், மத்தேயு 17:2)

அதாவது, சீதையை மாடத்தில் பார்த்த இராமனுக்கு அவளது எழில்மிகு தோற்றத்தினால் போதை ஏற்பட்டு சக்கரம் இழந்த தேர் போல அங்கேயே நின்றுவிடுகிறான். அதோடு நின்றுவிடாமல் தம்பி இலக்குவனின் திடமான தோளைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொள்கிறான். இவ்வாறு கதையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்துகிறான்.

காட்டில் சூர்ப்பனகையின் ஆசைக்கு இணங்க மறுத்து இராமன் சொல்கிறான்...

காரிகை நின்னுரு கண்டிடு முதியரும்
வீரிய விளமை அயனிடங் கெஞ்சுநர்
வாரியெ டுத்துப் புல்லுவன் யானும்
ஆரிய சூழ்ச்சியால் மணம்புரி கிலையேல்.

(சூர்ப்பனகை ஆசைகாட்டுப் படலம், ஜான்சன் 225:4)

அதாவது: அழகிய இளம்பெண்ணாகிய உன்னைப் பார்க்கும் முதியவர்கள்கூட உன் பொருட்டு பிரம்மனிடம் இளமை வேண்டிக் கெஞ்சுவார்கள். எனக்கு மட்டும் ஆரிய சூழ்ச்சியால் திருமணமாகாவிட்டிருந்தால் நானும் உன்னையே நாடுவேன் என்கிறான் இராமன். நூலிலேயே மிக பலவீனமான செய்யுளாகக் கருதப்படும் இந்தப்

பாடலில்கூட சந்த நயத்தை நாம் ரசிக்கலாம்.

யுத்த வர்ணனைகள் கலிங்கத்துப் பரணியை நினைவுபடுத்துபவை...

> மங்கியரி லங்கையரென் றீருடல் மேருமார்
> நங்கையவள் பொருட்டாற் பொருதற்கருதீஇ
> பொங்கிவரு மெருமைக் குழாம் நிலங்கிள்ளி
> சொங்கிய ராரெனத் தெரிந்திடவே.
>
> (குடுமிப்பிடி படலம், யோசேப்பு 20:20)

அதாவது: குரங்குகளான வானர சேனை, இராவணனின் இலங்கை அணி என மேரு மலை போன்ற உடல்களைக் கொண்ட வீரர்கள் அடங்கிய இரு படைகளும் ஒரு பெண்ணுக்காகப் போரிடக் கருதி, இரு தரப்பில் பலவீனர் யாரென்று தேர்ந்தெடுக்க எருமைக் கூட்டம் போல் நிலத்தைக் கிள்ளும்படியாய் ஆவேசமாக யுத்தகளத்திற்கு ஓடி வருகின்றன.

கம்பராமாயணத் தரம் கம்பருக்குக் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தைத் தேடித் தந்ததோடு அதில் வரும் கதாபாத்திரங்களையும் புகழ்படுத்தியது. அனுமார் இன்று பட்டிதொட்டி எங்கும் வழிபடப்படுகிறார். சீதை பெண்ணியவாதிகளுக்குப் பயன்படுகிறார். ராவணன் பகுத்தறிவுவாதிகளின் நட்சத்திரமாகத் திகழ்கிறார். சேது மேம்பாலத்திற்குக் கல் சுமந்த அணில் சிறு பங்களிப்புகளுக்கு உருவகமாகிவிட்டது. வாலி, திரைப்படப்

பாடல்கள் எழுதுகிறார். வாலி பற்றிக் கம்பர் எழுதிய பாடல்களில் ஒன்று -

மாற்றான் தோட்டத்து மல்லிக்கு ஆசை
வாற்றான் அகந்தனில் அவளது தோசை
தோற்றே கண்டிலை வாலியின் மீசை
வேற்றாள் கொடுத்தனன் முதுகிற்பூசை.

(வாலி பூசைப் படலம், ஜார்ஜ் 11:1)

அதாவது: சொந்த சகோதரனும் மாற்றானுமாகிய சுக்ரீவனின் தோட்டத்து மல்லிகை மலரான சுக்ரீவனின் மனைவிக்கு வாலி ஆசைப்பட்டான். எந்த யுத்தத்திலும் தோற்காத மீசைக்காரன் வாலி, வேறொரு மாற்றானிடம் தோற்கிறான்.

யுத்தம் முடிந்த பிறகு (சீதையைத் தீக்குளிக்கச் சொல்லுமுன்பு) இராமனும் சீதையும் சந்திக்கும் வரலாற்றுத் தருணத்தைச் சொல்லாதிருக்க முடியுமா...

அண்ணியினை அண்ணலவன் நோக்கச்சே
கண்ணிரண்டும் நீர் பெருகி இருகாதும்
கிண்ணியுற்று இராமனார் அடைந்திட்டார்
பெண்ணிவளை மீளிணைந்து பேருவகை

(சேர்மானப் படலம், யோவான் 18:2)

அதாவது: அண்ணல் இராமன் சீதையைப் பார்க்கும்போது

அடையும் பரவசத்தில் அவன் கண்களில் நீர் பெருகுகிறது. அவளின் அன்பு மொழி கேட்க அவன் காதுகள் கிண்ணம் போல் பெருக்கின்றன. பல காலப் பிரிவிற்குப் பின்னர் சீதை என்கிற இந்தப் பெண்ணுடன் மீண்டும் இணைந்து இராமன் பெருமகிழ்ச்சி அடைகிறான்.

இப்படியெல்லாம் எழுதக்கூடியவர்தான் கம்பர். பழைய தமிழ் தெரியாதவர்கள் கம்பராமாயணத்தை விளக்க உரையோடு படிக்கலாம். உரை இல்லாமல் படித்தால் புரியாது, அதனால் பிடிக்காது.

சாவு :-)

சாவு எவ்வளவு வேடிக்கையான விஷயம் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? பயப்படுவது, அழுவது எல்லாம் இருக்கட்டும், இதைக் கற்பனை செய்துபாருங்கள்: தெருவில் ஒரு ஆள் ஏதோ சிந்தனையில் தரையில் கால்கள் மாறி மாறிப் பதிய நடந்துகொண்டிருக்கிறான். திடீரென்று ஒரு ஆழமான பள்ளத்தில் செருப்போடு விழுந்துவிடுகிறான். அப்புறம் ஆளையே காணோம். இது காமெடியாகத்தானே இருக்கிறது? ஒரு கணம் அவன் அப்பன் ரோடு போலக் கைவீசி நடந்துகொண்டிருக்கிறான். மறுகணம் தெருவே காலியாக இருக்கிறது. அடுத்தபடியாக, "நேத்துகூட நல்லாத்தானே இருந்தான்?" ஆட்கள் வேலை

செய்கிறார்கள் என்பது போல "நன்றாக இருப்பவர்கள் இதற்குள் விழக் கூடாது" என்று பள்ள வாசலில் போர்டா மாட்டி வைத்திருக்கிறார்கள்? பள்ளத்திற்குள் எட்டிப்பார்த்தால் தார் நிரப்பியது போல் ஒரே இருட்டு. பள்ளத்தின் உள்ளடக்கத்தை எவ்வளவுதான் முறைத்தாலும் யாருக்கும் வெளிச்சமில்லை. விளிம்பிற்குப் பின்னே நின்று எட்டிப்பார்க்கையில் ஏதாவது விரையும் வண்டியைத் தவிர்க்க அதே பள்ளத்தில் நாமும் விழுந்துவைத்தால் எப்படி இருக்கும்? தமாஷாக!

டெவலப்பிங் ஸ்டோரி

ஒரு சிறுகதை எழுத உட்கார்ந்தேன். "அந்த" என்று ஆரம்பித்துவிட்டேன். அப்புறம் கதையை எப்படி முடிப்பதென்று தெரியவில்லை. சிறிது நேரம் பயனில்லாமல் யோசித்துக்கொண்டிருந்த பின் "அந்த"-வை அடித்துவிட்டு "ஒரு" என்று எழுதினேன். இப்போது பல சாத்தியங்கள் இருப்பதாகத் தோன்றியது. எதையாவது தட்டச்சு செய்ய ஆரம்பித்தால் அது கடைசியில் ஒரு சிறுகதையில் வந்து முடியும் என்பது என் அனுபவம். ஆனால் இந்தக் கதை நகரவேயில்லை. சுதந்திரம் பெறுவதற்கு முன்பு நடந்த சரித்திரக் கதையாக எழுதலாம் என்று தோன்றி "ஒரு"-வை அழித்துவிட்டு "கி.பி. 1942″ என்று மாற்றினேன். ஆனால் அதற்குப் பிறகு என்ன எழுதுவது? வருடத்தை மாற்று –

"கி.பி. 1642″. இப்போது நிஜமாகவே ஒரு சரித்திரக் கதை ஆரம்பித்துவிட்டது. பாத்திரங்கள் ஒவ்வொன்றாக வர வேண்டியதுதான் பாக்கி. வழக்கமாக இந்நேரம் கதையை எழுதி முடித்திருப்பேன். இம்முறை ஒழுங்காக எழுத வேண்டும் என்பதில் குறியாக இருந்தேன், அதனால்தான் நேரம் பிடித்தது...

சேந்தன் சிநேகிதவர்மன்! ஒருவன் கிடைத்தான். சரி, யாரிந்த சேந்தன் சிநேகிதவர்மன்? சோழர் காலத்துக் குறுகிய மன்னன் ('குறுநில' என்பதுதான் 'குறுகிய' என்று தப்பாக வந்திருக்கிறது. பிழைதிருத்துநர் சரிசெய்துகொள்வார். ஏனென்றால் அந்தக் காலத்தில் குறுகிய மன்னர்கள் என யாராவது இருந்திருந்தால் ஏறி மிதித்திருப்பார்கள் என்று பிழைதிருத்துநருக்கும் தெரிந்திருக்கும் (ஒரு நம்பிக்கைதான்)) விமலகுப்தனின் வாரிசு. விமலகுப்தன் காலமாகிவிட்டான். ரவுடிகள் அவனது ராஜ்ஜியத்தைப் பிரித்துக்கொண்டுவிட்டார்கள். வில், வாள் வீச்சுகளில் வல்லவனான சேந்தன், இழந்த சக்தியை மீட்க ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறான். இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறான்? ஒரு குதிரைக்கு (அதாவது புரவி. குதிரைக்கு இதை விட்டால் தமிழில் வேறு வார்த்தையே கிடையாது) மேல் அமர்ந்து வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறான். எங்கே? காமாட்சி ஜோசியரைப் பார்க்க கும்பகோணத்திற்கு. எதற்கு? அப்பா விமலகுப்தன் ஜோசியரிடம் ஒரு பேழையைக் கொடுத்திருக்கிறார் மகன் வந்தால் அவனிடம் சேர்ப்பிக்கும்படி.

பேழையில் என்ன இருக்கும் என்று அப்புறம் முடிவு செய்துகொள்வோம். ஓலையாக இருந்தால் நல்லது. அதில்தான் ஏதாவது எழுதியிருக்கும். அந்த எழுத்து, அப்போதைய சோழப் பேரரசரிடம் தெரிவிக்க வேண்டிய ரகசிய செய்தியாக இருக்கும். அது துரோகிகளைப் பற்றிய தகவலாக இருக்கலாம். அதை மன்னர் பார்த்தால் அத்துரோகிகள் சிரச்சேதமடைந்துவிடுவார்கள் என்பதால் சேந்தனுக்கு வழியில் ("ராஸ்தையில்") ஆபத்து இருக்கும். ஆவணக் காப்பாளர் என்ற முறையில் ஜோசியருக்கே ஆபத்து உண்டு. இருந்தாலும் எப்படித் தப்பிக்கிறார் என்று விளக்குவது பெரிய வேலை. எனவே ஜோசியர் பாதுகாப்பை தர்க்கப் பிழையாக விட்டுவிடலாம். ஜோசியரை ஒற்றர்கள் கண்காணிக்கிறார்கள். சேந்தன் ஜோசியர் வீட்டிலிருந்து புறப்பட்டதும் அடியாட்களுக்குத் தெரிவிக்கிறார்கள். இப்போது புரிகிறது. ஜோசியர் அவர்களது இலக்கு அல்ல. குறுநிலமன்னபுத்திரன் சேந்தன்தான் இலக்கு. ரகசிய ஓலை கிடைத்த மாதிரியும் இருக்கும், சேந்தனைக் கொன்ற மாதிரியும் இருக்கும். ஆக, பேழையில் இருப்பது ஓலையேதான் என்று முடிவாகிவிட்டது!

இவ்வளவு திட்டம் போட்டு கடைசியில் அந்தப் பேழையில் அப்பாவின் குறுவாள், ராஜகுரு கொடுத்த ருத்திராட்ச மாலை என்று சப்பையாக ஏதாவது இருந்தால் எல்லாம் வீண். ஆனால் நாம்தானே எழுதுகிறோம், பேழை வரும்போது பார்த்துக்கொள்வோம். பேழையை எடுத்துச் செல்லும் சேந்தனை வழியில் ஒற்றர்கள் தாக்குகிறார்கள். சேந்தன் வீரமாகப் போரிட்டு அவர்களைக் கொல்கிறான்.

இந்தப் போரீட்டில் அவனுக்கும் காயம் ஏற்படுகிறது. ரத்தக் காயம். கிட்டத்தட்ட மயக்கநிலை. உடனடியாக மருந்து போட வேண்டும். சிறிது தூரத்தில் மீனாட்சி வைத்தியர் வீடு. சோழர் காலத்தில் ஜோசியர்களும் வைத்தியர்களும் ஒரே தெருவில் வசித்ததற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அக்காலத்தில் இரண்டு தொழில்களும் கிட்டத்தட்ட ஒன்றுதானும்கூட. இந்து பேப்பரில் வருவது போல சில நல்மேய்ப்பர்கள் சேந்தனை வைத்தியர் வீட்டிற்குத் தூக்கிச் செல்கிறார்கள். வைத்தியருக்கு மீனாட்சி என்று அழகிய மகள் ("புதல்வி") ஒருத்தி இருக்கிறாள். "அப்பா! யாரிவர்? இவருக்கு என்ன ஆயிற்று?" என்கிறாள். "யாரென்று தெரியவில்லையம்மா. ஆனால் முகத்தில் ராஜகளை வடிகிறது" என்கிறார். சரியாக வருகிறதா?

வைத்தியர் வீட்டில் தங்கும் சேந்தனுக்குக் கடும் ஜுரம் உண்டாகிறது. ஜுர வேகத்தில் "மீனாட்சி" என்று பிதற்றுகிறான். தன்னைத்தான் சொல்வதாக நினைத்து மீனாட்சியின் முகம் சிவக்கிறது. அவன் குறிப்பிடுவதோ அவள் அப்பாவை. மீனாட்சி அவன் மீது மையல் கொள்கிறாள். தையலுக்கும் மையலுக்கும் சரியாய்ப் போயிற்றா? மெல்ல குணமடைந்துவரும் சேந்தன் மீனாட்சியின் காதலைக் கண்ணுறவேயில்லை. அவன் புத்திசாலிதான். ஆனால் இரு பெண்கள் காதலிக்கும்போது ஒரு பெண்ணின் காதல் காதலிக்கப்படுபவனுக்குத் தெரியக் கூடாது. கதாநாயகியாக இல்லாமல் காதலிப்பவள் நாயகனை நெஞ்சோடு அணைத்து முத்தமிட்டு "நீங்கள்தான் எனக்கினி சுவாமி" என்று நேரடியாகச் சொன்னால்கூட கதாநாயகன் "அம்மணி, உன் மாங்கல்யம் குத்துகிறது.

கொஞ்சம் ஓரமாக நகர்த்திவைக்கக் கூடாதா?" என்று அப்பாவியாகப் பேச வேண்டும். இதெல்லாம் சரித்திரப் புனைவு மரபுகள். சும்மா புரவி, இலச்சினை, முடியாட்சி என்று எழுதினால் சரித்திரப் புதினம் ஆகிவிடுமா?

சரீரம் சொஸ்தப்பட்ட பின் சேந்தன் பேழையைத் திறக்கிறான். அதில் இருப்பது என்ன தெரியுமா? விமலகுப்தனின் குறுவாள்!!! அதிர்ச்சியாக இருக்கிறதா? நாம் முன்னரே எழுதியபடி ஒரு ஓலையும் உள்ளது. அதுவும் ரகசிய ஓலை. சேந்தன் ஓலையைப் படிக்கிறான். மாறுவேடமிட்டு நடுநிசியில் கயிறு கட்டி ஏறி மன்னரைக் கொல்லத் திட்டமிடப்படுவதாக அறிந்து சேந்தன் அதிர்ச்சியாகிறான். அவனுக்கு இப்போதுதான் தெரியும், இல்லையா? சேந்தன் ஒரு வேலை செய்கிறான். ஓலையை வைத்தியர் வீட்டில் ஒளித்துவைக்கிறான். எதிரிகள் கண்ணில் அரிதாரம் பூச வைத்தியச் சுவடி ஒன்றை எடுத்துக்கொண்டு அரண்மனையை நோக்கிப் புரவியெடுக்கிறான். அரண்மனை வேறு சமஸ்தானத்தில் இருக்கிறது. ஆகையால் அவன் பயணிக்கவும் வழியில் இடர்களை எதிர்கொள்ளவும் ஒரு பெரிய இடத்துப் பெண்ணைச் சந்தித்துக் காதலில் விழவும் நிறைய தூரம் கிடைக்கிறது.

சேந்தன் கதையின் முடிவில் பெரிய இடத்தில் வாழ்க்கைப்படுவான். அந்த இடம், தலைமை சோழ சேனாதிபதியின் மகள் கண்விழி. பெரிய அரசு அதிகாரி மகள் என்பதால் கிட்டத்தட்ட இளவரசிதான். எப்போதும் தோழிகள் புடைசூழ்ந்து கலகலவென

சிரித்துக்கொண்டிருப்பார்கள். கண்விழி மட்டும் தனியாகத் தெரிய களுக்கென்று சிரிப்பாள். அவள் மீனாட்சி போல் நாணிக் கோணும் வகை அல்ல. வாட்பயிற்சி உள்ளவள், குதிரையேற்றம் தெரிந்தவள். இரண்டு ஆண்பிள்ளைகளுக்கு நிகராக சாப்பிடுவாள். அழகாகவும் இருப்பாள் என்று சொல்ல வேண்டுமா? அழகாகவும் இருப்பாள். அதோடு புத்திசாலிப் பெண்.

கொள்ளிடத்தில் ஆறு பேர் சேந்தனை ஆயுதப் பிரயோகத்துடன் சூழ்ந்துகொள்கிறார்கள். சேந்தன் அறுவரையும் அநாயாசமாக மண்ணைக் கவ்வச் செய்வதோடு மீசையை மண்ணாக்குகிறான். அந்த அடர்ந்த கானகத்தில் தனியாக ஒரு உப்பரிகை மட்டும் நிற்கிறது. அந்த மேலிடத்திலிருந்து சேந்தனின் வீர விளையாட்டைப் பார்த்து சிலிர்க்கிறாள் கண்விழி. சண்டையால் உடலெங்கும் வியர்த்துப் புழுதி படிந்த சேந்தன் இன்னும் அழகாய்த் தெரிகிறான். "பலே!" என்று நினைத்துக்கொள்கிறாள் நாயகி. "அட பெண்பிள்ளை!" என்கிறது சேந்தனின் மனவோட்டம்.

"அம்மணி, இவர்கள் உங்கள் ஆட்களா?" என்று சேந்தன் பிணக்குவியலைக் காட்டிக் கேட்கிறான்.

"ஐயா, இதென்ன அக்கிரமம்? என்னைப் பார்த்தால் உங்களுக்கு அடியாள் போல் தெரிகிறதா?" என்கிறாள் கண்விழி.

"'அடி' என்று தெரிகிறது, ஆளா எனத் தெரியவில்லை" என்று சரசமாக பதிலளிக்கிறான் சேந்தன்.

இங்கே நாயகி சிலிர்த்து முகஞ்சிவந்து இத்யாதிக்கிறாள். இந்த மாதிரி ஒரு "சம்பாஷணை" வைக்க வேண்டும். சண்டையில் ஆடைகள் கிழிந்து புழுதியாகித் தலை கலைந்து சேந்தன் அழகான பிச்சைக்காரன் போல் ஆகிவிட்டிருக்கிறான். எனவே சேனாதிபதி வீட்டில் தங்க இடம் கிடைப்பது அசாத்தியம். மேலதிக இடர்கள் இன்றிப் பயணத்தைத் தொடர்கிறான் சேந்தன். இருப்பினும் அவன் அவளுக்காகத் திரும்பி வருவான் என்பதை இருவரும் அறிவார்கள். சரித்திரக் கதை.

இங்கே ஒரு புத்த விகாரை வர வேண்டும். விகாரையில் மூத்த துறவி ஒருவர் சேந்தனுக்கு அரசியல் ஆலோசகர். தெரிந்த ஆள் என்பதால் சேந்தனைப் பார்த்தவுடன் "வாப்பா" என்பார் (இது பௌத்த வாப்பா. "அப்பனே, வா" என்று பொருள்). அவரிடம் போலி ஓலை அடங்கிய பேழையை பத்திரப்படுத்தக் கொடுத்துவிட்டுப் புறப்படுகிறான் அரண்மனைக்கு. ஓலை தன்னிடம் இருப்பது தனக்குப் பாதுகாப்பானது அல்ல என்பதால், மன்னரை மீனாட்சி வைத்தியர் வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கே வைத்து ஓலையைக் காண்பிப்பதே சேந்தனின் திட்டம். உண்மையில் வைத்தியரிடம் இருப்பதுதான் மெய்யான ஓலை என்பது கதையைப் படிப்பவர்களுக்குத் தெரியாது. அந்த மர்மம் நாவலின் (ஆமாம், இப்போது நாவல்) இறுதியில்தான் வெளிவரும். இன்னொரு விஷயம், இங்கேதான் ஓலை, ஓலை என்று எழுதுகிறேனே தவிர கதையில் ஓரிரு இடங்களில் மட்டுமே ஓலை பற்றி வரும். இல்லையென்றால் வாசகர்களுக்கு ஒரே அமங்கலமாகத் தெரியும்.

அரண்மனைக்குச் சென்று மன்னரைச் சந்தித்து விஷயத்தைச் சொல்கிறான் சேந்தன். மன்னர் அவனை நம்புவதோடு தனக்கே சிலர் மீது சந்தேகம் இருப்பதாகக் கூறுகிறார். அவனை ஒரு ராஜத் துரோக புலனாய்வுப் படைக்குத் தலைவனாக்குகிறார். "உண்மை வெளிவரும் வரை நீ சாகசங்களில் ஈடுபட்டுக்கொண்டிரு. பல விதமான மனிதர்களைப் பழகிக்கொள். விளையாட்டாக நிறைய பேசு. எனது நிமித்தமாக சேனாதிபதியை அடிக்கடி பார்த்துவிட்டு வா" என்கிறார் மன்னர். கதையின் ஓட்டம் இப்போது பிடிபடுகிறது.

இடையில் கண்விழியின் அண்ணன் பொற்கொடிக்கு சேந்தனைப் பிடிக்காமல் போகிறது. பிற்காலத்தில் இவனுக்கும் சேந்தனுக்கும் ஒரு வாள் சண்டை உண்டு. சேந்தன்தான் ஜெயிப்பான். கண்விழிக்காக அவனை உயிரோடு விடுவான். பொற்கொடி வேறு சேந்தனை வேவு பார்க்க சிலரை அனுப்புகிறான். யார் அந்த வேவுக்காரர்கள் என்பதும் நாவலின் கடைசிப் பகுதியில் வரும். சேந்தனை புதிதாக சிநேகம் பிடிப்பவர்கள் மீது ஒரு கண் வைத்திருங்கள். யாரையும் நம்பாதீர்கள். குறிப்பாக ஒரு சமணத் துறவி வருவான். நல்லவன் மாதிரியே நடந்துகொள்வான். முட்டை கலந்த பதார்த்தங்கள் எதையும் சாப்பிட மாட்டான். ஆனால் இடுப்போரம் குறுவாளை மறைத்துவைத்திருப்பான். இவன் பொற்கொடியின் ஆள் என்று சொல்ல வரவில்லை. அப்படி இருந்தால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை என்கிறேன். இன்னொரு தடயம்: பொற்கொடி என்ற பெயரே சந்தேகார்த்தமாக இல்லை? பொற்கொடி ஏன் ஆண் வேடம் தரிக்க

வேண்டும்? அவளும் சேந்தனைக் காதலிக்கிறாளா? பிறகு ஏன் வேவு பார்க்க ஆள் அனுப்புகிறாள்? அக்கறையா பயமா? மன்னருக்கு எதிரான சதியில் அவளுக்குப் பங்கு இருக்கிறதா? எல்லா மர்ம முடிச்சுகளும் கடைசி பாகத்தில் வரிசையாக அவிழும். முக்கியமான பாத்திரங்கள் சிலர் சாவார்கள் ("மாண்டு போவார்கள்"). சிலருக்கு விஷம் வைக்கப்படும், சிலர் கத்திக் குத்து வாங்கி மாண்டு நிற்பார்கள்.

திருப்பங்கள் மலிந்த சரித்திர நாவலாக இது உருப்பெறும். கதைக்கு இடைஞ்சலாக இல்லையென்றால் சமகால அரசியல் சூழலுக்கான குறியீடுகளைப் பொதிக்கலாம். நாவல் பல பாகங்களாக இருக்கும். முதல் பாகத்திற்குப் பிறகு வரும் ஒவ்வொரு பாகத்திற்கு முன்பும் முன்கதை இருக்கும். இது முந்தைய பாகத்தின் கதையை ஒரு கல்கிப் பக்க அளவில் சொல்லும். இப்போதைக்கு இவ்வளவு "அவுட்லைன்" போதும்.

ஆண்மைப் பிரச்சினை

நான் அபூர்வமாக மதிக்கும் இளம் பெண் எழுத்தாளர் ஒருவர் எப்போதாவது எங்கள் வீட்டிற்கு வருவார். 'இப்போது எத்தனையாவது படிக்கிறாய்' என்று என் மகனிடம் தவறாமல் கேட்பார். அவர் திரைப்படத் துறையிலும் ஒரு கால் வைத்திருப்பதால் பேச்சுப் போக்கில்

ஏதாவது அதிரடி ரகசியங்களைச் சொல்வார்.

நான்கு நாட்களுக்கு முன்பு வீடு வந்தார். வழக்கம் போல் இலக்கியம், சினிமா, அரசியல், விலைவாசி என்று பேசினோம். அப்போதுதான் சொன்னார் ஒரு விஷயத்தை. முன்னணி நடிகர் ஒருவருக்கு ஆண்மை இல்லையாம். எனக்கு அதிர்ச்சி. அவர் பெயர் 'பாலாஜி' என்று வைத்துக்கொள்வோம். "என்ன, பாலாஜிக்கு ஆண்மை இல்லையா?" என்று சிறிது நேரம் முணுமுணுத்துக்கொண்டே இருந்தேன். அவ்வளவு நம்ப முடியவில்லை.

"காபி எடுத்துட்டுப் போங்க" என்றார் மனைவி சமையலறையிலிருந்து. நான் எழுந்து அந்த இடத்திற்குச் சென்றேன். மேடையில் இரண்டு காபிகள் ஆவியாகிக்கொண்டிருந்தன. அந்தப் பெண்ணைச் சந்தித்த உற்சாகத்தை மறைத்துக்கொள்ளவோ என்னவோ பாவம், நடிகரின் ஆண்மை பற்றிய தகவலை மனைவியிடம் சகஜமான தொனியில் பகிர்ந்துகொண்டேன். சொன்ன கையோடு தவறை உணர்ந்து "ஐயையோ!" என்று அலறிவிட்டேன்.

"அப்படியா? யார் சொன்னாங்க?" என்றார் மனைவி.

"யார் வேணா சொல்லிருக்க முடியும். சினி ஃபீல்டுல இப்ப இதுதான் ஹாட் நியூஸ்" என்றேன்.

மனைவியா கொக்கா என்றானாம். தோழியின் பெயரைச் சொல்லி, "அவ இப்ப சொன்னாளா?" என்றார் மனைவி.

"அப்படித்தான் ஞாபகம்" என்று நின்னைச் சரணடைந்தேன்.

"இந்த மாதிரி விஷயம்லாம்கூட பேசுவீங்களா?" என்று தொடங்கியது. காபி ஆறும் வரை ஒரே சுடரும் சூறாவளியுமாக இருந்தது. வீட்டில் அன்னியர் இருந்ததால் ஒலி கௌரவமான அளவைத் தாண்டவில்லை. இல்லாவிட்டால் நான்ஸ்டிக் தவாக்கள்கூட விரிசல் விட்டிருக்கும். பதினைந்து நிமிடங்களின் கடைசியில், பரஸ்பரம் திருமணம் ஆகாத ஒரு ஆணும் பெண்ணும் என்னவெல்லாம் பேசினால் நாகரிகம் என வரையறுக்கப்பட்டது. காபிகள் சூடாக்கப்பட்டன.

நான் பானங்களை ட்ரேயில் ஏந்திக்கொண்டுதான் கூடத்திற்குப் போனேன் என்றாலும் தோழியிடம் கேட்டேன்: "நீங்க இன்னும் போகலியா?"

பிளாஸ்டிக் நாற்காலிகள்

எதிர்வீட்டு இரண்டாவது மாடிக்காரருக்கு ஈமக்கடன்கள் நடந்துகொண்டிருக்கின்றன. தெருவின் இரு பக்கங்களிலும் பிளாஸ்டிக் நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. அவற்றில் பலருடன் நானும் அமர்ந்திருக்கிறேன், ஒரே ஒரு நாற்காலியில். பந்தல் போடவில்லை. ஆனால் இப்போது அவருக்குச் சொந்தமானதாக இல்லாமல் போய்விட்ட வீட்டின் வாசலுக்கு நேரெதிரில் ஒரு மனிதர் வெற்று

மார்போடு நின்று பபிள்ஸ் ஊதிக்கொண்டிருக்கிறார். தொப்பை நடுவே தொப்புளில் ஒரு சாமந்திப்பூ வைத்திருக்கிறார். அவர் உடலில் இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவுமாக இரண்டு பூணூல்கள். கழுத்தில் துளசி, ருத்திராட்ச மாலைகள், நெற்றியில் ஸ்வஸ்திகா சின்னம். அவரைச் சுற்றி சரியான வட்டத்தில் பத்து நடுத்தர வயதுப் பெண்கள் (அநேகமாக சுமங்கலிகள்) பாவாடை தாவணி அணிந்து சைக்கிள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முகத்தில் ஒரு சந்தோஷமும் இல்லை. சாவு அல்லவா?

ஒருவர் இறந்தால் அவருக்கு வேண்டியவர்கள் வாடிக்கைகளையும் பௌதிக எல்லைகளையும் மறந்து தங்களை முழுமையாக துக்க அனுஷ்டிப்பில் ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். இப்போது இத்தெருவில் பாதி இந்த ஈமக்கடன்களுக்காக எடுத்தாளப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வீட்டைக் கடந்து செல்பவர்கள் இரட்டைநாடி சரீரிகளாக இருந்தாலும் முடிந்த வரை உடலைக் குறுக்கிக்கொண்டு புதிதாகத் தண்ணீர் மீது நடப்பவர்களைப் போல் ஜாக்கிரதையாக அடியெடுத்துவைத்து நடக்கிறார்கள். செல்பேசியில் பேசியபடி முழங்கையால் இடித்துவிட்டுப் போய்க்கொண்டே இருப்பவர்கள் பிளாஸ்டிக் நாற்காலிக்காரர்கள் மீது படாத வண்ணம் ஒடுக்கம் பேணிச் செல்கிறார்கள்.

சோப்புக் குமிழி ஊதியவரும் பெண்களும் கலைந்து வீட்டுக்குள் சென்று மறைகிறார்கள். அடுத்த பத்து நிமிடங்களில் தெரு நடுவே ஒரு ஹோமகுண்டம்

தயாராகிறது. நெற்றில் ஸ்வஸ்திகா முத்திரை மற்றும் இரு பூணூல்களுடன் இன்னொரு பெரியவர் வீட்டுக்குள்ளிருந்து வருகிறார். சுள்ளிகளை அடுக்கி நெருப்பு மூட்டுகிறார். நெருப்பெரிய, உள்ளேயிருந்து இன்னொருவர் பழைய ரேடியோ ஒன்றை ஹோமகுண்டத்திற்கு அருகில் வைக்கிறார். அதை இயக்கி அலைவரிசைகளை ஓட்டிக் கடைசியில் விவித் பாரதியின் வர்த்தக ஒலிபரப்பில் கொண்டுவந்து நிறுத்துகிறார். சத்தத்தை அதிகரிக்கிறார். அது உள்நாட்டுச் சந்தையில் பணவீக்கத்தின் தாக்கம் பற்றி அலறுகிறது. "என்று தெரிவித்தார்", "என்று நம்பப்படுகிறது" என்று அது சொல்லும்போதெல்லாம் ஸ்வஸ்திகர்களும் சேர்ந்து "என்று தெரிவித்தார்", "என்று நம்பப்படுகிறது" என்று சேர்ந்து சொன்னபடி ஹோமகுண்ட நெருப்புக்கு மேலே தங்கள் கண்ணாடி வளையல்களைக் குலுக்கி ஒலி எழுப்புகிறார்கள்.

ஒரு இளம்பெண் பெரிய தட்டொன்றில் நான்கு இட்லி மாவுப் பைகளைக் கொண்டுவந்து தருகிறார். மூத்த ஸ்வஸ்திகர் ஒரு மாவுப் பையை ஹோமகுண்டத்திற்கு மேல் வைத்து சிறிய ரம்பத்தால் அறுக்கிறார். மாவு நெருப்பில் கொட்டுகிறது. மூன்று இட்லி மாவுகளும் இப்படிக் காலியாகின்றன. விவித் பாரதியும் செய்தி உச்சாடனமும் தொடர்கின்றன. அடுத்து இன்னொரு பெரிய தட்டு நிறைய கோபுரமாகக் குவிக்கப்பட்டு ஃபில்டர் சிகரெட்டுகள் வருகின்றன. ஒவ்வொரு "என்று தெரிவித்தா"ருக்கும் ஒரு சிகரெட்டை நெருப்பில் போடுகிறார்கள். புகை அதிகரிக்க, அருகிலுள்ள எல்லோருக்கும் வாயு முகமூடி விநியோகமாகிறது. "ஆஸ்துமா கேஸ் எல்லாம் சாப்பிடப்

போயிடுங்கள்" என்று ஒருவர் அறிவிக்கிறார். ஆனால் யாரும் தனக்கு ஆஸ்துமா இகுப்பதாக ஒப்புக்கொண்டு நகரவில்லை. தட்டில் எவ்வளவு சிகரெட் இருக்குமோ, அனைத்தையும் நெருப்பில் போட்டு முடிய வெகுநேரம் ஆகிறது.

ஒரு வாட்டர் கேன் கொண்டுவரப்படுகிறது. நெருப்பின் மேல் வைத்து அதன் வாய் அகற்றப்படுகிறது. 25 லிட்டர் தண்ணீர் நெருப்பை அணைக்கிறது. அடுத்து ஒரு கம்பளத்தை வீட்டிலிருந்து கொண்டுவருகிறார்கள். ஹோமகுண்டத்தைப் பெயர்த்து எல்லாவற்றையும் கம்பளத்தில் வைத்துக் கட்டுகிறார்கள். அதன் விளிம்புகளை அள்ளி ஒரு சுருக்குப்பை போல் குவித்துக் கயிறால் கட்டுகிறார்கள். இட்லி மாவை விரலால் தொட்டு இந்த மூட்டையின் மேல் ஸ்வஸ்திகா, சதவீதச் சின்னம், ஒரு ஜோடி மனிதக் கால்கள் ஆகியவற்றை வரைகிறார்கள். எங்கிருந்தோ எக்ஸ்டெண்டர் இணைப்பு கொடுத்து ஹேர் டிரையரால் அவை காயவைக்கப்படுகின்றன. பிறகு மூட்டை சுவரோரமாக வைக்கப்படுகிறது.

இப்போது அவரது உடலை ஸ்ட்ரெட்சரில் வெளியே கொண்டுவருகிறார்கள். சிலர் பலவீனமாகக் கைதட்டத் தொடங்கி உடனே நிறுத்துகிறார்கள். எனக்கு என் வேலை முடிந்தது போல் தோன்றுகிறது. எழுந்து என் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்குகிறேன். நடந்ததை இறந்தவர் பார்த்தால் என்ன சொல்வார் என்ற கேள்வி எழுகிறது. என்ன நினைத்தாலும் என்னிடம் சொல்ல மாட்டார். அவருக்கு என்னுடன் அவ்வளவாகப் பழக்கம் இல்லை.

கடுப்பாக ஒரு கொலை

ஓர் இன்ஸ்பெக்டர் குமார் மர்மக் கதை

அந்த வசதியான குஷன் சோபாவைப் பார்த்தால் யாருக்கும் பாய்ந்து உட்காரத் தோன்றும். இன்ஸ்பெக்டர் குமார் அதைத்தான் செய்தார். சிறிது நேரம் மரியாதைக்காக நின்று பார்த்த கான்ஸ்டபிள் 114, அதற்கு மேல் ஆசைக்கு அணை போட முடியாமல் தானும் சோபாவில் மூழ்கினார்.

வசதியான பழைய பங்களா. எல்லாம் தேக்கு. பங்களாவுக்குப் பின்னால் இருந்த திருமண மண்டபத்திலிருந்து ஈமக்கிரியை சத்தங்கள் கேட்டன. அறையில் இருந்த சகலத்தையும், காத்திருக்கச் சொல்லிவிட்டுப் போன வேலைக்காரரின் முதுகையும் இன்ஸ்பெக்டரின் கூர்மையான பார்வை ஸ்கேன் செய்தது. அவரது வாயோ, சமையல்காரரின் கை கால்கள் நடுங்குவதைப் பார்த்துப் புன்னகைத்தது.

பண்டைய மின்விசிறியின் சத்தத்தை குமார் சில நொடிகள் கேட்டுக்கொண்டிருந்த பின் பருமனாக ஒருவர் வந்தார். வெங்கடேஸ்வரா ஹெவி இண்டஸ்ட்ரீஸின் உரிமையாளர். பளிச்சிடும் வெண்மைச் சட்டை, வேட்டி. நெற்றியில் பக்தி. கோடீஸ்வரருக்கே உரிய எளிமை. மூன்று நாட்களுக்கு முன்பு மனைவியை இழந்த வேதனை முகத்தில்

நடமாடிக்கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் குமார் லத்தியின் காலி முனையை இடது உள்ளங்கையில் வைத்துக்கொண்டு மிடுக்காகத் தொடங்கினார்.

"முதல்ல உங்க வருத்தங்களுக்கு என்னோட அனுதாபங்கள் மிஸ்டர் வெங்கடேஸ்வரன். இந்த சமயத்துல உங்களை டிஸ்டப் பண்ண வேண்டியிருக்கு."

"செத்தவங்க எனக்கு ரொம்ப வேண்டப்பட்டவங்க சார். அதான் தாங்க முடியல" என விம்மினார் அம்மனிதர்.

"ரைட்டோ. குற்றவாளிய கண்டுபிடிக்கிறது உங்க சோகத்தைவிட முக்கியமானது. உங்க மனைவி கொலைல யாரை சந்தேகப்படுறீங்க?"

"எனக்கு சமையல்காரர் முருகன் மேலதான் சார் சந்தேகம். ஆனா நான் சொன்னதா அவர்கிட்ட சொல்ல வேணாம். ரொம்ப வருத்தப்படுவாரு. நல்ல மனுஷன்."

"அவரை ஏன் சந்தேகப்படுறீங்க?"

"என் மிஸஸ் எப்பவும் அவரைத் திட்டிக்கிட்டே இருப்பாங்க. ரெண்டு பேரும் அடிக்கடி சண்டை போட்டுக்குவாங்க. எனக்கு மத்தியஸ்தம் பண்ணவே நேரம் சரியா இருக்கும்."

"வெரிகுட். முதல் சஸ்பெக்ட் கிடைச்சாச்சு. அவரைக் கூப்பிடுங்க."

வெங்கடேஸ்வரன் சமையல்காரரை அழைத்தார். அவரை இப்போது வர்ணிக்கலாம். ஒடுங்கிய தேகம். பிளாஸ்டிக் பைகளுக்கு சவால் விடும் விதமாய் கண்ணுக்குக் கீழே மடிப்புகள். இயந்திர வாழ்க்கைக்கு வாழ்க்கைப்பட்டவரின் உயிரற்ற கண்கள். நெற்றியைக் காலம் நன்றாகவே உழுதிருந்தது. அதே நடுங்கும் கைகளில் ஒன்றில் வண்ண ஈரம் சொட்டும் பித்தளைக் கரண்டி. சாம்பாரா, ரசமா? ஏன் பொரித்த கூட்டாக இருக்கக் கூடாது? இன்ஸ்பெக்டரின் புருவங்கள் சிந்தனையில் சுருங்கின.

"இவங்க சம்சாரத்தோட கடைசியா நீங்க எப்ப சண்டை போட்டீங்க?" சமையல்காரரைக் கேட்டார் குமார்.

சமையல்காரர் விழித்தார். கைகள் இன்னும் தீவிரமாக உதறின. உதடுகள் துடித்தன.

"அவங்க செத்த அன்னிக்கு காலைல" என்றார் சமையல்காரர்.

"வெரிகுட். உங்க கை ஏன் நடுங்குது? கழுத்தை நெரிச்ச வலி இன்னும் சரியாகலியா?" என்று கேட்ட குமார், வெங்கடேஸ்வரனைப் பார்த்தபடி "ஒன் ஃபோர்ட்டீன், அரெஸ்ட் தி முருகன்" என்றார்.

"ஐயா, நான் எப்படி?" என்றார் முருகன் பதறி.

"ஷட்டப். உங்க கை நடுக்கமே உங்களைக் காட்டிக் குடுத்திருச்சு. கழுத்துல பதிஞ்ச மெல்லிய விரல் அடையாளம் உங்களுதுதான். மத்ததை ஸ்டேஷன்ல பேசிக்குவோம்" என்றார் குமார்.

114 ஓர் உரத்த பெருமூச்சுடன் சோபாவை விட்டு எழுந்தார். சமையல்காரரை எரிச்சலோடு பார்த்தார், 'அடங்க மாட்டியா?' என்பது போல. வெங்கடேஸ்வரன் கைதுக்கு இடம் விட்டு பின்னே நகர்ந்து நின்றார்.

"நோ, வெயிட். இவரை அரெஸ்ட் பண்ணுங்க" என்ற குமாரின் லத்தி வெங்கடேஸ்வரனைக் காட்டியது.

"யாரு, நானா? என்ன இன்ஸ்பெக்டர், விளையாடுறீங்களா?"

குமார் கடைசிப் பகுதி விளக்கத்தைத் தொடங்க செருமிக்கொண்டார்.

"எனக்கு விளையாடுற வயசில்ல வெங்கடேஸ்வரா. முருகனை அரஸ்ட் பண்ணச் சொன்னதும் நான் எதிர்பாத்த மாதிரியே உன் முகத்துல சடனா வந்த நிம்மதி உன் குற்றத்த புரூவ் பண்ணிருச்சு. உன் பொண்டாட்டியோட கருமாதி உனக்கு சொந்தமான கல்யாண மண்டபத்துல நடக்கறப்பவே சந்தேகப்பட்டேன். இந்தக் கொலைய முருகன் பண்ணிருக்க முடியாது. விரலுக்கு விரல் முளைச்ச மாதிரி இருக்குற அவர் கையால உன் பொண்டாட்டி கழுத்தை நெரிக்க முடியாது, அமுக்கி விடத்தான் முடியும்.

அது மட்டுமில்ல, எப்பவுமே சொந்தக்காரங்கதான் இவ்வளவு குரூரமா கொல்லுவாங்க. உனக்கு பிசினஸ் சரிஞ்சு போச்சு. புதுசா பிசினஸ் தொடங்க கடன் கிடைக்கல. பொண்டாட்டியக் கொன்னு அவ இன்சுரன்ஸ் பணத்துல புது பிசினஸ் ஆரம்பிக்க பிளான் போடுற. முருகன் உனக்கு பலியாடு. கரெக்டா? ஒன் ஃபோர்ட்டீன், இப்ப அரஸ்ட் பண்லாம்."

கோடீஸ்வரர் கு(ண்)டுகு(ண்)டு என ஓடப்பார்த்தார். இன்ஸ்பெக்டர் பூட்ஸ் காலைக் குறுக்கே நீட்ட சுமோ வீரர் போல் குப்புற விழுந்தார் வெங்கி.

"பிளடி அமெச்சூர்ஸ்!" என்றார் குமார்.

லேசில் தீராத பக்கங்கள்

புறநகர் மனப்பான்மை (கவிதைத் தொகுப்பு). ஆசிரியர்: வன்மதி. வெளியீடு: இடைநிலை பதிப்பகம், சென்னை.

கவிஞர் 'வன்மதி' மோகன், கவிதைக்குப் புதியவர் அல்ல. அவருக்குத்தான் கவிதை புதிது. எனவே இக்கவிதைத் தொகுப்பு அவருக்கு முக்கியமாகிறது. தொகுப்பில் நமக்குப் பரிச்சயமான விசயங்களைப் பரிச்சயமான வார்த்தைகளால் வருடிச் செல்கிறார் கவிஞர். லெட்டரிங் சிறப்பாக வந்திருக்கிறது. இந்நூலில் 90 பக்கங்கள் உள்ளன.

விலையும் 90தான், ஆனால் பக்கங்களுக்கு பதிலாக ரூபாய். சில பக்கங்களில் இரண்டு முதல் நான்கு வரிகளே அச்சாகியிருப்பதால் காலி இடம் நிறைய உள்ளது. இந்தக் காலி இடமே கவிதை வெளி எனப்படுகிறது. வன்மதியின் தொகுப்பில் கவிதை வெளியை ஆங்காங்கே பார்க்கலாம். அது இல்லாத இடங்களை அவரின் கவிதைகள் ஆக்கிரமித்துள்ளன. நூலின் தொடக்கத்தில் பக்க நுனிகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. இவை கவனமாகக் கிழிக்கப்பட வேண்டியவை. பைண்டிங் தொண்ணூறுகளின் இடதுசாரிப் புத்தகங்களை நினைவூட்டுகிறது. பின்னட்டையில் உள்ள பாஸ்போர்ட் புகைப்படத்தில் ஆசிரியர் வெளிர்நீலச் சட்டை, அடர்நீல மேட்ச்சிங் டை அணிந்திருக்கிறார். வகிடு அவர் கவிதைகளைப் போல் இடதும் வலதும் கலந்த இருமையைக் கொண்டிருக்கிறது. இந்நூலைப் பலவித சுவர்கள் மீது விசிறியடித்துப் பார்த்த பிறகும் நூல் அறுந்து தொங்காதது குறிப்பிடத்தக்கது. நான்காக மடித்து பேண்ட் பைக்குள் திணிக்க முடிகிறது. தயாரிப்பாளருக்குப் பாராட்டுகள். இப்புத்தகத்திற்கு 'செகண்ட் சேல்' மதிப்பு இல்லை. மற்றபடி இந்தத் தொகுப்பு ஒரு குறிப்பிடத்தக்க வரவு.

கற்கக் கசடற

இளைஞர்களுக்கு நான் எப்போதும் சொல்லும் அறிவுரை, "எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளுங்கள். நமக்கு வராது

என்று எதையும் விடாதீர்கள்." ஒருமுறை பக்கத்துத் தெருவில் என் மைத்துனர் நடத்தும் நர்சிங்ஹோமில் ஒரு மைனர் அறுவைச் சிகிச்சை நடக்கவிருந்தது. அதைச் செய்ய வேண்டிய மருத்துவரே விபத்தில் அடிபட்டு எங்கள் நர்சிங்ஹோமிற்கு 'எமர்ஜென்சி கேஸ்'-யாக வந்தார். அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது.

அவருக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்ய நான்கு சர்ஜன்கள் தேவைப்பட்டார்கள். மூன்று பேர்தான் கிடைத்தார்கள். மைத்துனர் எனக்கு போன் செய்து, "ஒரு ஆபரேஷன் மச்சான். வரியா, ஒரு கை குறையுது" என்றார். நான் மருத்துவப் புத்தகங்களைப் புரட்டுவது அவருக்குத் தெரியும். எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு ஸ்பேனரும் கடப்பாறையும் எடுத்துச் சென்றேன். நான்கு பேருமாய் கத்தி கபடாவுடன் வேலையில் இறங்கினோம்.

என் கத்திக் கை நடுக்கத்தால் சில தசைகளில் கோடுகள் விழுந்ததே ஒழிய நான் பயந்த அளவு சிக்கலான கேஸ் இல்லை. நான்கு ஜோடிக் கைகள் நுழைய மருத்துவர் உடம்பில் இடம் இல்லாததால் இதயத்தை வெளியே எடுத்துவைத்துத் தைத்தோம். ஆனால் அதைத் திரும்பி உள்ளே வைக்க முடியவில்லை. நரம்புகள், தசைகள், நூடுல்ஸில் செய்த பஜ்ஜி போல் சில உறுப்புகள், எல்லாம் புறங்கைகளில் இடித்தன. உள்ளே வைத்து முடிப்பதற்குள் நின்று இதயத்தை உடலுக்குள் அடக்கம் செய்த மாதிரி ஆகிவிடுமோ என்று எங்களுக்குப் பயம். எனவே நரம்பு இணைப்பு கொடுத்து ஒரு மாதிரி வெளியிலேயே வைத்துத் தைத்துவிட்டோம்.

ஆள் பிழைத்து நலமாக நடமாடுகிறார். ஆனால் எங்கள் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு எப்போதும் உர்ரென்று இருக்கிறார். எனக்குத்தான் அவர் ஒருபக்க மார்புப் புடைப்புடன் அர்த்தநாரீஸ்வரர் மாதிரி தெரிவதால் பார்க்கும்போது புன்னகை எழுகிறது. ஆகவே வாலிபர்களே, எதையும் கற்று மற.

அகலிகைப் படலம்



வேதா யுகம்...

தேவ சபையில் மேக மூட்டம் சூழ சுத்தமான பளிங்குத் தரையில் அப்சரஸ்கள் தமது நளினத்துடன் ஆடிக்கொண்டிருந்தனர். மயன் வடித்துக் கொடுத்த சிம்மாசனத்தில் வீற்று தேவேந்திரன் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இருப்பினும் அவன் அதில் லயிக்காத மனத்திற்கு சொந்தக்காரனாக இருந்தான்.

நான்காம் தேவாசுர யுத்தத்திற்குப் பின் தேவேந்திரனுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டிருந்தது. யுத்தத்தில் வென்றது வழக்கம் போல் கடைசி நேர விஷ்ணுவின் உதவியால் என்னவோ தேவர்கள்தாம். ஆனால் சொந்த பலத்தில் வெல்லாமல் ஒவ்வொரு முறையும் மூன்றாம் தரப்பு உதவியையே நம்பியிருப்பது இந்திரனுக்கு அவமானமாக இருந்தது. ஏன், தீவிர அசூஸ்யைகூட ஏற்பட்டது. மும்மூர்த்திகளில் ஒருவன் அல்ல என்றாலும் இந்திரன் தேவர் சமூகத்தின் அதிபதி. தேவர்களிடம் இல்லாத அசுரர்களின் பலம் சுக்கிராச்சாரியார். சுக்கிர மடத்தின் ராஜா. உண்மையில் அசுர பலம் எனப்படுவது சாட்சாத் சுக்கிராச்சாரியார்தான். இவரைத் தன்பக்கம் இழுக்க இந்திரன் செய்த சாம தான பேதங்களெல்லாம் தண்டமாயின.

ஆச்சாரியாரை மயக்க ஒரு பயிற்சி அப்சரஸை அமர்த்தி, அவளிடம் தானே மயங்கி, இந்திராணியின் இளக்காரத்திற்கு ஆளாகி, அதை நாரதமுனி ஊரெல்லாம் நாராயணித்து...

இந்திரனுக்கு நினைக்கவே தூக்கிவாரிப் போட்டது. கைக்கு எட்டியது தலைப்பாகையோடு போனது. தன்னுடைய (இந்திரனுடைய) பெயரில் ஒரு 'ஆணி'யைச் சேர்த்துத் தன் சிம்மாசனத்தின் பெண்பக்கத்தில் இடம்பிடித்த இந்திராணியைத் திரும்பிப் பார்த்தான். பரிபாலன இருக்கை பூலோக மிருகமான சிங்கத்தின் வடிவத்தில் இருக்கக் கூடாது; தன்னுடைய ஜோடி பிருஷ்டங்களுக்கு மட்டும் அமர இடமிருந்தால் போதும் என்ற இரு விருப்பக்குறிப்புகளையும் மயன் சாஸ்திரத்தைக் காட்டி அலட்சியப்படுத்திவிட்டான். இந்திராணி அழகுதான், ஆனால் அதில் ஆபத்து இல்லை. அலுப்பு இருந்தது, ஆனால் சவால் இல்லை. தேவஜீவனத்தின் இலக்கற்ற சொகுசு, இந்திரனைப் பிழிந்துகொண்டிருந்தது. ஒரு வீரனுக்கான வாழ்க்கை, வேடிக்கை பார்ப்பதில் கழிந்துகொண்டிருந்தது. அசிங்கப்படாமல் எதையும் அனுபவிப்பதற்கில்லை என்ற எண்ணம் அவனுக்குள் ஜனிக்காத குறையாகக் கிடந்தது.

பதினாலு உலகங்களையும் வென்றவனுக்கு ஆபத்து என்றால் ரிஷிகளுடன் மோதுவதாகத்தானே இருக்க முடியும்? இந்திரனுக்கு அப்படித்தான். மனதினுள் ரிஷிகளின் பெயர்களை ஓட்டிக்கொண்டான் – துர்வாசர், ஜமதக்னி, தத்தாத்ரேயர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், அங்கீரசர், சதுர்மாஸ்யர், பகவத்கீதர், ஸ்வர்ணபீஜர், அபிவாதயர், அக்பர், சுக்லபக்ஷர், காஸ்யபர், அகஸ்தியர், ஈஸ்டர், நாசர், யூதர், உருசியர், பிருகு, இந்திரர் (இவர் வேறு ஆள்)...

ரிஷிகளிடமும் ரிஷிபத்தினிகளிடமும் சாபங்கள் பெற்று அதோகதிப்படுவது இந்திரனுக்குப் பழக்கம் எனினும் ஓரளவிற்கு மேல் அவனுக்கு அதில் சுவாரஸ்யம் இல்லாமல் போனது. எல்லோரையும் அவன் ருசி பார்த்திருந்தான். ஆனால் ஒருவருடைய பெயர் மட்டும் தூரத்து அடியோட்டமாய் நிழலாடிக்கொண்டிருந்தது...

2

பல்லாயிரம் அடிகளுக்குக் கீழே, பூமி வர்ணிக்கப்படத் தொடங்கியது. அது ஒரு சாயங்காலம். சூரியனின் அரைவட்ட வடிவ மஞ்சள் பாதம் மண்ணில் புதைய இன்னும் நேரம் ஆகவில்லை. ஆகாயப் பஞ்சுமலைகள் போல் பிரம்மாண்டமாக இருந்த மேகங்களிலிருந்து தண்ணீர் எடுக்க வந்த தேவ மங்கையர் பொற்குடங்களை நீரில் மிதக்க விட்டு சூரியனுக்குக் கீழே நிகழ்ந்தவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். கந்தர்வர்கள் விவாக வேலைகள் முடிந்து புஷ்பக விமானங்களில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். படகுகளால் அவ்வப்போது குறுக்கிடப்பட்ட தருணங்களில் தவிர ஏரிகள் சலனமற்று சுற்றுப்புற பசுமையைப் பிரதிபலித்தன. அசையாமல் ஆங்காங்கே நுனி புகைத்துக் கூம்பாகக் கிடந்த மலைகளுக்கு இடையிலும் சமவெளிகளின் மீதும் நதிகள் வெவ்வேறு போக்குகளில் சென்றுகொண்டிருந்தன. பறவைகள் கும்பற்கும்பலாக வயல் வெளிகளை அளாவின. சமுத்திரத்து மீன்கள் அலைகளைக் கரையை நோக்கித் தள்ளிக்கொண்டிருந்தன.

மிதிலையிலிருந்து சற்றுத் தூரம் கழித்து கங்கை சுழித்தோடியது. ரிஷிகள் அன்றைய சாங்கியாதிகளை முடித்துவிட்டு யாகத் தீ மூட்டிய வியர்வையைக் கழுவ யானைக் கூட்டம் போல் அதில் குளித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் குளித்த ஈரம் சொட்டும் உடலோடு கரையைக் கடந்து அருகிலிருந்த ஆரண்யவனத்தை நோக்கி நடந்தார். மழை நின்ற பிற்பாடும் மரக்கிளைகள் தனிமழை பெய்வது போல, நீண்டு அடர்ந்த அடர்ந்த தாடியும் ஜடாமுடியும் உடலைத் தொடர்ந்து குளிப்பாட்டிக்கொண்டிருந்தன. அவரிடமிருந்து வெளிப்பட்ட தேஜஸ் அவரை மகரிஷி என அடையாளம் காட்டியது; ஆயிரம் சாப தவ வலிமை கொண்டவர் என எச்சரித்தது. அவரது ரிஷித்துவமும் முதுமையும் அவருக்கு ஓர் இளம் மனைவி இருப்பதைப் பறைசாற்றின. இவர்தான் கௌதமர். சப்தரிஷிகளில் ஒருவர். மந்திரங்களைக் கண்டுபிடித்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக, அகலிகை என்ற அழகான பெண்ணின் கணவர்.

அகலிகை... பெற்றோர் வாயிலாக அன்றி நேரடியாகப் பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப்பட்டவள். இவளைப் படைத்துப் பெருமை தேடிக்கொள்வதற்காகத்தான் பிரம்மன் தன்னைப் படைத்துக்கொண்டானோ என்று காண்போரைக் கருதவைக்கும் அழகி. அவளே பிரம்மன் சிருஷ்டித்த பெண்களுள் தலைசிறந்தவளாக இருந்தாள். பிரம்மபிரான் அவளைக் கௌதம மகரிஷிக்குத் திருமணம் புரிந்துவைத்தபோது, அவன் கிளியை வளர்த்துப் புளியங்கொம்பிடம் கொடுப்பதாக எல்லோரும் பாராட்டினர்

– இந்திரனைத் தவிர.

இங்கே இந்திரனின் ஆர்வக் கோளாறுக்கு ஒரு பின்னணி உண்டு. பிரம்மன் தனது பெண் படைப்புகளிலேயே முதன்மியான அகலிகையை யாரும் சிரமமின்றி அடைவதை விரும்பவில்லை. அவளாக யாரையும் தனக்குப் பதியென வரித்துக்கொள்ளவில்லை. எனவே அகலிகைக்குத் தகுந்ததொரு வாழ்க்கைத் துணையை அமைத்துக்கொடுப்பது பிரம்மனின் பொறுப்பானது. அவன் ஒரு போட்டி வைத்தான். யார் சொர்க்கம், பூலோகம், பாதாளம் ஆகிய மூவுலகங்களையும் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்குத்தான் அகலிகை என அறிவித்தான். இந்திரன் தன் சக்தியைக் கொண்டு மூவுலகையும் சுற்றி முடித்தான். ஆனால் கௌதமர் அவனுக்கு முன்பே தமது ஆசிரமத் தொழுவத்தில் கட்டியிருந்த காமதேனுவிற்குப் பூஜை செய்து அதனை மூவுலகங்களுக்குச் சமானமாக்கிய பின் அதைச் சுற்றி வந்து அகலிகையை வென்றார். இந்தக் குறுக்குவழி இந்திரனுக்குக் கடுங்கோபத்தையும் பெரும் பொறாமையையும் உண்டாக்கியது. முதிய துறவிகளுக்கு அழகிய இளம் மனைவிகள் என்ற வேதா யுக விதியை அவன் மனம் ஏற்கவில்லை. நடந்ததை மறந்துவிட்டு வேறு வாழ்க்கை அமைத்துக்கொள் என்ற நாரதர் உபதேசப்படி இந்திரன் இந்திராணியை மணந்தான், சரி, ஆனால் அகலிகையை மறந்தானா?

3

கௌதமர் அதற்குள் ஈரம் காய்ந்துவிட்டிருந்தார். புதுச் சுத்த

மேனியுடன் ஆசிரமத்தை நோக்கி அடர்ந்த வனத்தினூடே மாலைநேர இருளில் கௌதமர் நடந்தார். சாதாரண மானிடர்கள் நுழைய அஞ்சும் நேரமும் கொடிய விலங்குகள் நிறைந்த கானகமும் அவை. ஆனால் கௌதமர் மந்திரங்களின் பிரம்மன். அவரது தவ வலிமையை அறிந்த விலங்குகள் அவரைக் கண்டதும் தாமாக விலகின. அவ்வாறு பயப்படாத விலங்குகளையும் கௌதமர் ஐவரி மந்திரத்தைச் சொல்லி அடக்கினார்:

ஹே ம்ருகமே,
வழியை நீ விடுவாயாக
ஆசிரமத்திற்குப் போக வேண்டும்
அடியேனுக்கு இருக்கிறது
எக்கச்சக்க வேலைகள் ||

அந்த வயதில் அவர் விலங்குகளுக்குப் பயந்து காட்டினூடே ஓடுவதில் கவனத்தை ஒருமிப்பதற்கு பதிலாகத் தமது உயர்ந்த லட்சியங்களைக் குறித்து தியானிக்க அவரது மாந்திரீகம் உதவியது.

மனிதர்களைக் கல்லாக்குதல், நீர் மேல் நடத்தல், மாங்காய் விழவைத்தல், வாயிலிருந்து லிங்கம், விபூதி வரவழைத்தல், மனதால் கரண்டிகளை வளைத்தல், ஜடாமுடிக்குள்ளிருந்து முயலை எடுத்தல், வியாதியஸ்தர்களுக்கு அற்புத சுகமளித்தல் ஆகிய அஷ்டமாசித்திகள் கௌதமருக்குக் கைவந்த கலைகளாகும். வனவாசத்திற்கும் சகாக்களுக்கு வேடிக்கை காட்டவும் அவை உபயோகப்பட்டன. ஆயினும் பிரபஞ்சத்தை ஆளும் இந்திர பதவிக்கு முன்பு அவை

வெறும் விளையாட்டுகளாகவே மிஞ்சின.

மகரிஷி தம்மை இவ்வாறு கேட்டுக்கொண்டார்: இந்திரனாக இருந்தால் எவ்வளவு செய்யலாம்! சதாசர்வகாலமும் வீட்டு வேலைகள், பணிவிடைகள் என்று சிரமப்படும் அகலிகைக்குத்தான் என்னென்ன செய்து கொடுக்கலாம்! மான் தோல் புடவைகளுக்கு பதிலாகப் பருத்தித் துணிகளும் பட்டுத் துணிகளும் வாங்கித் தரலாம். தங்கத்தில் குண்டலங்களும் கழுத்து மாலையும் கேட்டதற்குக் காட்டில் எதற்குத் தங்கம் என்று பதில் சொல்லியாயிற்று. இந்திர பதவி அடைந்தால் எதிர்க் கேள்விகள் அவசியப்படாமல் அகலிகைக்கு வேண்டியது செய்யலாம். அகலிகைகூட எளிய ஆசைகளைக் கொண்ட பெண். உத்தரீயத்தில் ஜரிகை வைத்துக்கொடுத்தாலே நான்கு நாட்களுக்கு வாயெல்லாம் பல்லாக இருப்பாள். இந்திரனாகி அவளுக்குக் கண்ணாடி வாங்கிக் கொடுத்துவிட்டால் "இந்தக் கச்சை எனக்கு எப்படி இருக்கிறது?" என்பன போன்ற அற்பக் கேள்விகளையும் தவிர்க்கலாம். எத்தனை நாள்தான் அவளும் ஏரியின் திவலைகள் ஓய்ந்து அதன் பிரதிபலிப்புத் திறன் மீளக் காத்திருப்பாள்? பல நாட்களில் காலையில் தலை வாரச் செல்பவள் மாலையில் அவர் யாகபோகங்களை முடித்துவிட்டு வீடு திரும்பும் வரை வாராத தலையும் பொக்கைச் சீப்புமாய் ஏரிக் கரையில் பழியாகக் கிடப்பாள்.

அகலிகைக்கு வேலை சரியாக இருந்தது. சேவலின் கூவல் கேட்டுக் கௌதமர் எழுந்து காலைக் கடன்களுக்குக் கிளம்பிவிடுவார். அகலிகை ரிஷிபத்தினிக்கு அழகாக

சேவலுக்கு முழிப்பு தட்டும் முன்பே எழுந்து அரையிருளில் நதிக்கரைக்குச் சென்று கௌதமரின் தற்காப்பு மந்திரங்களை உச்சாடனம் செய்தபடி குளித்துவிட்டுத் திரும்பி வந்து வீடு வாசலைப் பெருக்க ஆரம்பித்துவிடுவாள். பக்கத்து ஆசிரம ரிஷிபத்தினிக்கு எல்லா வேலைகளுக்கும் பாட்டு என்றால் அகலிகைக்கு எல்லாப் பணிகளுக்கும் மந்திரங்கள். ஒருநாள் அவள் படும் சிரமத்தைப் பார்த்து மனமிரங்கிய கௌதமர், வேலைச் சிரமம் தெரியாதிருக்க ஒவ்வொரு வேலைக்கும் ஒரு மந்திரத்தை அவளுக்குக் கற்றுக்கொடுத்தார். பெருக்கிவிட்டுக் கோலம் போட்ட பின் சமையல். அதற்குப் பின்

மாந்திரீக மார்க்கமாய்
சிரமங்களைக் குறைத்த
தவப்பேரரசு கௌதமருக்குச்
சகல நன்றிகளும் உரித்தாகுக ||

என்ற மந்திரத்தோடு காலைப் பணிகள் நிறைவடையும். புதன்கிழமைகளில் மான், பசு, கரடி, மலைப்பாம்பு மாமிச விற்பனையாளர்கள் வாசல் தேடி வருவார்கள். அவற்றை வாங்கக் குழுமும் சகரிஷிபத்தினிகளுடன் பின்மதியம் வரை வம்பும் அரட்டையும் சிறு விளையாட்டுகளுமாகப் பொழுது போகும். அங்கிருந்த பத்து குடில்களுக்கும் கௌதமர்தான் மகரிஷி. அது மட்டுமல்லாது அகலிகையின் அழகிற்கும் அறிவிற்கும் முன்னே பிற பெண்களால் நிற்க முடியவில்லை. சில பெண்கள் ஓடவும் செய்தார்கள். மேன்மைகள் அளித்த தனிமையை அகலிகை உணர்ந்தது விழித்திருந்த நேரத்தில் மட்டுமன்று. தான் ஒரு

காட்டுவிலங்கைத் துரத்துவதாக ஒரு கனவு ஏறக்குறைய தினமும் அவளைப் பார்க்க வந்தது.

இருட்டும்போது கௌதமர் வீடு வந்து சேருவார். தாடி தீப்பிடிக்காத தூரத்தில் விளக்கை வைத்துச் சிள்வண்டுகளின் கூச்சல் தொடங்கும் வரை அதனொளியில் சுவடிகளை எழுதுவதும் படிப்பதுமாகப் பொழுதோட்டுவார். அடுத்து இரவிற்கான சமையல். கௌதமர் இரவில் மாமிசம் உண்ண மாட்டார். எனவே காய், கனி, கீரைகள் பறித்து வர காட்டில் அலைய வேண்டும். சமைத்த பின் சுடச்சுடப் பறிமாற கௌதமர் சாப்பிட்டுவிட்டுப் படுப்பார். தானும் உண்டுவிட்டுப் படுக்கும்போது அவர் உரத்த நித்திரையில் ஆழ்ந்திருப்பார். காடும் நதியுமே நம் வாழ்க்கையாகிவிடுமோ, கோசலம், விதேஹம், மகதம் போன்ற நகரங்களைப் பார்ப்பது கனவாகவே தங்கிவிடுமோ என்று அகலிகை தன்னையே கேட்டுக்கொண்டாள்.

கௌதமரின் அன்பில் அகலிகைக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஒரு சராசரித் துறவியைவிட அதிகமாகவே தமது மனைவியை அவர் நேசித்தார். ஆனால் அவள் மீதான அன்பு முழுவதையும் அவர் தவத்திலும் கிரியைகளிலும் செலுத்தியதுதான் அவளை அலைக்கழித்தது.
"ஆரியபுத்திரரே, தூங்கிவிட்டீர்களா?" என்ற சன்னமான விசாரிப்பிற்கு, சலனமற்ற குறட்டையே அவரது பதிலாக இருந்தது. இந்திரியங்களை வென்றவர் ஜனனேந்திரியத்தையும் சேர்த்தே வென்று தொலைத்திருந்தார் போலும். எப்போது நெருங்கினாலும் "இன்று வேண்டாமே, செவ்வாய் நல்ல நாளல்ல," "இன்று

வேண்டாமே, பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது," "இன்றைக்கு ஏகாதசியாகப் போய்விட்டது", "இன்றைக்கு துவாதசியாகிவிட்டது." இப்படியே த்ரையோதசி, சதுர்த்தசி, பஞ்சமி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, சஷ்டி, அமாவாசை, பௌர்ணமி, பிரதமை, த்ருதியை, த்விதியை, உத்தராயணம், தட்சிணாயணம்... எப்போதேனும் அவர் எதையோ, யாரையோ கண்டுவிட்ட விளைவாக அரைத்தூக்கத்தில் உறவு தொடங்கினால்கூட தாடியும் ஜடாமுடியும் அவள் முகத்தின் மேல் புரளும் புரட்சியில் தும்மலை அடக்கிக்கொள்வதிலேயே கவனமெல்லாம் போய்விடும். அந்த அபூர்வ சமயங்களிலும் தபோபலத்தை வைத்து என்னென்ன செய்யலாம்! இந்த பிராமணனுக்குக் கொஞ்சம் கற்பனையைக் கொடுத்திருக்கக் கூடாதோ இந்த ஆண்டவன் என்று வெம்பினாள் அகலிகை.

தனது அன்புத் தொல்லை அதிகரிக்கும்போதெல்லாம் யோகினி ஆகும்படி கௌதமர் ஊக்குவித்ததை அகலிகை கவனித்தாள். எலும்பும் தோலுமான தபஸ்வினிகளிடம் அவருக்கு இருந்த ஃபெட்டிஷ்யம் அவளது பார்வையிலிருந்து தப்பவில்லை. ஆனால் தவத்தில் இறங்கிவிட்டால் வீட்டுவேலைகளை யார் செய்வார்கள்? தபஸ்வினிகளா கௌதமருக்குப் பொங்கிப்போடுவார்கள்? கௌதமரின் ஆர்வம் தன்னை இல்வாழ்க்கையின் கேள்விகளிலிருந்து திசைதிருப்புவதில்தான் இருந்ததேயன்றி மனைவியின் ஆன்மபல விருத்தியில் அல்ல என அவளுக்குத் தெளிவாகவே புரிந்தது. யோகத்தின் உச்சத்தைத் தொட்டுவிட்டால் மட்டும் பெண்ணாகிய

தன்னால் இந்திரன் ஆகிவிட முடியுமா? பூரண்யம் பூர்த்தித்துவிடுமா?

அகலிகை சாஸ்திரோக்தமான பதிவிரதாபத்தினி. தாடி மீசை, தொந்தி, பிடியும் வாயும் வைத்த சொம்பு, கொட்டை மாலைகள் எனத் தோற்றமளித்த அக்கம்பக்கத்து ஆடவர்களை அவள் ஏறிட்டும் பார்த்ததில்லை. ஆனால் அது கௌதமரே போதும் என்ற பிரியத்தாலா என்பது அகலிகைக்கு வெளிச்சமாக இல்லை. அன்பின் இடத்தைக் கடமை எடுத்துக்கொண்டுவிட்டதோ என்ற கேள்வி அவளை எப்போதும் கேட்டுக்கொண்டிருந்தது. மகாகுருவாகிய கணவரின் சிஷ்யர்கள் அவரை முதுகுக்குப் பின்னால் 'குருமுட்டை' என்பது அவள் நினைவுக்கு வந்து முறுவலைக் கிளப்பியது. சாப்பிட்டுவிட்டு எழுந்து செல்வதிலேயே குறியாக இருந்த கௌதமர் மனைவியின் இந்த நுட்பமான மாற்றங்களைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை. அவர் எதையும் கவனிக்க விரும்பாத ஒரு மகரிஷியின் மனநிலையில் இருந்தார். இந்திராசனத்தில் அமர விரும்பினார்.

4

இந்திரன் மறக்கவில்லை. அதற்கு பதிலாக, அவன் நினைத்தான். இந்திராணியைத் தீண்டிய அரிதான தருணங்களில் அவன் மனதால் தூண்டியது அகலிகை விளக்கைத்தான். உள்ளங்கையில் மை தீட்டி தூரதரிசனத்தில் தினமும் ஒரு நாழிகை அவன் பார்த்துக்கொண்டிருந்ததும் அகலிகையைத்தான். முகவாயைக் கையில் ஊன்றி ஏரியின்

மெல்லிய அலைகளைப் பார்த்தவாறு அகலிகை சிந்தனையில் மூழ்கியதைக் கண்டான் இந்திரன். அவளது பெருமூச்சு எழுப்பிய திவலைகள் தன்னை நோக்கி வந்து சரணடைந்தது போல் அவனுக்குத் தோன்றியது. பிரபஞ்சத்திற்கு முதல் இடை கடை விரித்த பிரம்மதேவனின் புத்திரியாகப் பிறந்த இப்பைம்பொக்கிஷம், பூவுலகில் நகைதொகையின்றி மரவுரி தரித்து வீட்டு வேலை செய்து தேய்மானம் அடையும் நரதர்மிணியாகியிருந்ததைக் கண்டு இந்திரன் துக்கித்தான். "கௌதமன்... அந்தக் கிழட்டு நரன்!" எனப் பொருமினான்.

இது போன்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே அகலிகையை அடைய தேவேந்திரன் தீர்மானித்தான். கௌதமரின் இந்திர பதவிக் கனவை அவன் அறியாதவன் அல்ல. ரிஷிகள் குடியிருப்பில் தனது ஆட்கள் சிலரை இந்திரன் அமர்த்தியிருந்தான். கௌதமபத்தினியைத் தன் இச்சைக்கு இரையாக்கிக்கொண்டால் மகரிஷியின் கோபக் கிளர்ச்சி உபரி பலனாகக் கிடைக்கும். சினத்திற்குள்ளாகி கௌதமர் தமது தவ வலிமையைத் தன் மீது கரைப்பார். பிறகு இந்திர பதவி குறித்துக் கனவு காணக்கூட கௌதமருக்குத் தகுதி இருக்காது. வேண்டியது கிடைக்கும், இருப்பது பலப்படும். இதுதான் நாம் இட வேண்டிய திட்டம் என இந்திரன் தீர்மானித்தான்.

எப்போது மனத்திற்குள் அத்தீர்மானத்தை தேவேந்திரன் நிறைவேற்றினானோ அந்தக் கணத்திற்குச் சில நாட்களுக்குப் பின்பு வவ்வால்களும் யோகிகளும் தலைகீழாகத் தொங்கிய ஒரு சந்தியாகாலத்தில் மாமிச

வியாபாரியாக அவன் ஆரண்யவனம் புகுந்தான். ரிஷிகள் குடியிருப்பில் இருந்த ஒற்றர்கள் மகரிஷியின் நடமாட்ட நேரங்களை தேவேந்திரனுக்குச் சொல்லியிருந்தார்கள். பக்கத்துக் கிராமத்திலிருந்து ஆரண்யவனத்திற்கு வாடிக்கையாக மாமிசம் விற்க வந்த வியாபாரியை அடித்துப்போட்டுத் தள்ளுவண்டியோடு கவர்ந்த மாமிசப் பண்டங்களுடன் இந்திரன் மெல்லக் காட்டில் நுழைந்தான்.

தன்னை அடையாளம் கண்டுபிடித்துவிடக்கூடிய காட்டு ரிஷிகள் இல்லம் நீங்கிய பின்பு இந்திரன் தினமும் மாமிசத்துடன் வனவலம் சென்றான். கண்டான் அகலிகையை. அந்தக் காட்டில் அழகிய பெண்களுக்குப் பஞ்சமில்லை. எனினும் அகலிகையைக் கண்ட அவன் கண்கள், அன்றாடம் வேறு எந்தப் பெண் மீதும் நிலைக்க மறுத்தன. பிரம்மதேவனின் மகளுக்கும் மனிதப் பெண்களுக்கும் இல்லாத வித்தியாசங்களா? இந்திரனாலும் தன் தேஜஸை அகலிகையின் கூரிய பார்வையிலிருந்து மறைத்துக்கொள்ள முடியவில்லை. இந்திரனின் அதிர்ஷ்டத்தால் அவள் வசீகரிக்கப்பட்டுப் புதிர்ப் பார்வைகளைச் செலுத்தினாளே தவிர அவனை அடையாளம் காணவில்லை. தன்னைப் பார்த்ததும் படபடத்தாள். ஆனால் பேச்சுக் கொடுத்தால் அவள் இடம் கொடுக்கவில்லை. இவள் ஏன் தயங்குகிறாள்? தன்னை இவள் வெறும் அன்னிய வியாபாரியாகப் பார்க்கிறாளோ? அகலிகை தினமும் மாட்டிறைச்சி வாங்குவதைப் பார்த்த இந்திரனுக்கு கௌதமரின் இஷ்ட போஜனம் மாட்டிறைச்சியாக இருக்கக்கூடும் என்று தோன்றியது. அகலிகையின் தயக்கத்தை அது விளக்கியது.

இந்திரனாக அகலிகையை அடைய முடியாது என்று நம்பியவனுக்கு அகலிகை ஏமாற்றமளித்தாள். இவ்வளவு அவதிப்பட்டும் இந்தப் பெண்ணுக்கு புத்தி வரவில்லையே என ஆச்சர்யித்தான். 'உன்னை இந்திரனாக அடைய முடியவில்லை என்றால் கௌதமராக அடைகிறேன்' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான். நள்ளிரவுக்காகக் காத்திருந்தான்.

5

நள்ளிரவு ஒரு கரிய பெரும் பூவாக மலர்ந்தது. குறட்டை ஒலிகளுக்கும் மந்திர ஓசைகளுக்கும் இடையே இலை தழைகளை உடலெங்கும் கட்டிக்கொண்டு பூனை ரூபியாக கௌதமரின் இல்லத்திற்கு ரகசியமாய் விரைந்தான் இந்திரன். பலே ஜாக்கிரதையாகக் கூரை மேல் ஏறினான். அதன் உச்சியில் உறங்கிக்கொண்டிருந்த கௌதமர் வீட்டுக் கூரைச் சேவலை மெல்லப் பின்னாலிருந்து நெருங்கி, ஒரு சிறு கத்தியால் அதன் கழுத்தை அறுத்தான். சேவல் துளி அலறலைக் கூட எழுப்பாமல் சுருண்டு கூரையிலிருந்து விழுந்தது. கடந்த நாட்களில் அந்தச் சேவலின் குரலைக் கேட்டு மனப்பாடம் செய்திருந்த இந்திரன் தனது வாயைச் சுற்றிக் கைகளைக் குவித்து அது போன்றே கூவினான்.

திடுக்கிட்டு எழுந்தார் கௌதமர். இப்போதுதான் படுத்தோம், அதற்குள் விடிந்துவிட்டதா? அவருக்கு ஓய்வு கிடைத்தது போலவே இல்லை. மனைவியைப் பார்த்தார். சேவலின் கூப்பாடு கேட்காத அளவுக்கு அகலிகைக்குச் சோர்வு போலும் என்று நினைத்துக்கொண்டார். அவளை

எழுப்ப மனம் வராமல் காலைக் கடன்களுக்காக நதிக்கரைக்குக் கிளம்பினார். நிலவொளியில் மரங்களுக்குள் அவரது ரோமக்காட்டு முதுகு மறைந்த பின் கூரையை விட்டு இந்திரன் இறங்கினான். அந்த கௌதமரின் இல்லத்திற்குள் வலதுகாலை எடுத்துவைக்கையில் அவன் கௌதமராகவே ஆகிவிட்டிருந்தான்.

அறைப் பிரிவினைகள் அற்ற ஒரு பெருங்கூடமாக இருந்த இல்லத்தின் நடுவில் அகலிகை ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அந்தக் கோலத்தில் அவளைக் கண்டதும் வெறி கொண்டார் புதிய கௌதமர். அருகில் சென்று அவளைத் தொட்டு எழுப்பினார். கௌதமர் அரிதாகவே அவளை எழுப்புபவர் என்பதால் அகலிகை உடனே துயிலிறங்கி எழுந்து அமர்ந்தாள். தன்னைக் கிறக்கத்துடன் பார்த்துப் புன்னகைத்தது வழக்கமான கௌதமர்தானா என்று அகலிகைக்கு உடனடிச் சந்தேகம் எழுந்தது. ஏதோ நல்ல மந்திரத்தால் தம்மை எப்படியோ உருமாற்றிக்கொண்டிருக்கிறார் என்று தோன்றியது அகலிகைக்கு. ஆனால் வித்தியாசத்தை இன்னதென்று கோடிட்டிக் காட்ட முடியவில்லை. அவரது ஸ்பரிசத்தில் அதற்கு முன் இல்லாத ஒரு தீவிரத்தையும் வலுவையும் அவள் கண்டாள். நேரம் போகப்போக உணர்ந்தாள் அது வேறு ஆள் என்று. போதையின் உச்சத்திற்குச் சென்றுகொண்டிருந்த அகலிகை இந்திரனை அடையாளம் கண்டுகொண்டாள். அவள் எதுவும் பேசவில்லை.

கௌதமரின் காது மடலைச் சுற்றி மாட்டியிருந்த புனித நூலைக் காற்று புரட்டியது. பளிச்சிடும் நிலவைச் சுமந்து இன்னும் இரவின் இருளில் மூழ்கியிருந்த கானகத்தைக் கண்டு குழம்பினார் முனிபுங்கவர். கருப்புப் பூனை ஒன்று அவர் காலில் இடறாத குறையாகக் கடந்து சென்றது. இளம் புரோகிதன் ஒருவன் எதிரில் வந்தான். அவனைப் பின்தொடர்ந்து ஒரு விதவைப் பெண் வந்தாள். பக்கத்து மரம் எதிலிருந்தோ ஒரு ஆந்தை அலறியது. கௌதமரின் வயிற்றில் இனம்புரியாத கரைச்சல் ஏற்பட்டு நெஞ்சு படபடத்தது. எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சன்னமாக அசைந்தன மரங்கள். மலர்களும் புதர்களும் பறவைச் கீச்சொலிகளும் கடைசியாக நிலவும் அதையே சொல்லின. அகலிகைக்கு விரும்பத்தகாத நிகழ்வு ஏதேனும் நடந்திருக்குமோ? மகரிஷி பதறி மேலும் காற்றாக நடந்தார். இல்லத்தை நெருங்கினார். அவர் இல்லத்தின் கூரைச் சேவல் கழுத்திலிருந்து ரத்தம் வழிந்த நிலையில் வாசலில் இறந்து கிடந்தது. "ஹே அகலிகே!" என்று அலறினார் கௌதமர்.

ஆனால் அகலிகையும் கௌதமரும் எதையும் கேட்கும் ஸ்திதியில் இல்லை. அதிதியின் அணைப்பில் முழுமையாகக் கலந்துவிட்டிருந்தாள் அகலிகை. தக்கைக் கதவுகளை இடித்துத் தள்ளிக்கொண்டு இல்லத்தினுள் புகுந்த கௌதமர், தமது அணைப்பிற்குள் அகலிகை ஆழ்ந்திருக்கக் கண்டார். இல்லை, அது தாமல்ல. தம்மைப் போல் ஒருவன். யாரவன்? என் அகலிகை இன்னொருவன் மடியிலா? மடியல்ல, மார்புதான் எனினும் என் அகலிகை இந்தக் கோலத்திலா? அகலிகையா இவள்? இல்லை, இந்த

அகலிகை ஒரு மாயத் தோற்றம். இந்த கௌதமன்தான் நிஜத் தோற்றம். ஆனால் நாம்தான் கமண்டலத்தைக் கீழே வைத்துவிட்டு இருகைகளையும் பிசைந்தபடி இங்கு நிற்கிறோமே... "அடி அகலிகே!" என்று மீண்டும் அலறுமுன் கௌதமர் தம்மை இவ்வாறெல்லாம் கேட்டுக்கொண்டார்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தனர் அகலிகையும் திடீர் கௌதமரும். இந்திரன் இன்னும் கௌதமர் கோலம் கலையாமல் விதிர்விதிர்த்து நின்றான். அகலிகை ஆடைகளால் போர்த்திக்கொண்டு விக்கித்து நின்றாள். கௌதமரின் கண்கள் குளமாயின. "ஏனப்பா, இந்திரா! எவ்வளவு பெரிய ஆள் நீ! இதென்ன பொறுப்பில்லாத செயல்? உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக் கூடாதா? ஒருகணம் நானே குழம்பிவிட்டேன்" என்றார் மகரிஷி. ஆனால் உடனே கௌதமரின் வேதனை விலகி அவரது கடுங்கோபத்திற்கு அவசரமாக வழி விட்டது. இந்திரன் மீது அவர் விழிகள் நெருப்பைக் கக்கின. "பிரபஞ்சத்தை ஆளும் பொறுப்புக்கு நீ தகுதியானவன் அல்லன். நீ எந்தவொன்றிற்காக இப்பாதகத்தைச் செய்யத் துணிந்தாயோ அதுவே உன் தேகமெங்கும் ஆகக் கடவட்டும்" என கர்ஜித்தார். தேவேந்திர கதிக்குத் திரும்பிவிட்ட இந்திரனின் உடல் முழுவதும் தொப்புள்களால் நிறைந்தது. அகலிகை நடுநடுங்கினாள். இந்திரன் அங்கிருந்து மாயமானான்.

தம் அன்பு மனைவியிடம் கைநீட்டிக் கேட்டார் கௌதமர்: "உனக்கு நான் என்ன குறை வைத்தேன்? எத்தனை

மந்திரங்கள் கற்றுக்கொடுத்தேன்? கடைசியில் நீ என்ன செய்துவிட்டாய்! பிரம்மனின் புதல்வியான நீயா ஈரேழு உலகங்களும் போற்றும் கற்புக்கரசி? இனிமேல் அப்படிக் கிடையாது. அற்ப உணர்வுகளுக்குப் பலியாகும் சிற்றின்பக்காரியான நீ, எனக்கு மனைவியாக இருக்கத் தகுதியில்லாதவள். அறுபதாயிரம் ஆண்டுகள் கல்லாகக் கிட! நான் இனிமேல் வெளியே சாப்பிட்டுக்கொள்கிறேன்!" பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அகலிகை உறைந்துபோனாள். துரோக வேதனையும் குற்ற உணர்வும் அவளைக் குதறின. எந்த இந்திர பதவிக்காகத் தன் கணவர் அடிபோட்டுவந்தாரோ அந்த இந்திர பதவியை அடையும் தபோபலத்தைக் கோபத்தால் அவர் இழக்கத் தான் காரணமானதை உணர்ந்து அழுதாள்.

கண்களில் நீர் மல்க இருகை கூப்பினாள் அகலிகாதேவி. "என்னை மன்னித்துவிடுங்கள் ஸ்வாமி! கல்லானாலும் என்னால் உங்களைப் பிரிந்து இருக்க முடியாது. அதற்கு மரணமே மேல். வஞ்சகத்தால் மதியிழந்த எனக்கு விமோசனம் அளியுங்கள்" என்றாள் முனிபத்தினி. கௌதமர் இரக்கம் கொண்டார். கணநேரப் பிழைக்குத் தாம் கொடுத்த தண்டனை அதிகமோ என்று தோன்றினார். ஆனாலும் உடனடி விமோசனம் அளிக்கும் சக்தியை அவர் இழந்துவிட்டிருந்தார். "அகலிகே, நீ செய்தது தவறு. கஷ்டப்பட்டுக் கொடுத்த சாபத்தை என்னால் திரும்பப் பெற முடியாது. ஒருநாள் ஜனகன் என்ற மன்னனின் இளவலாகிய இராமன் இந்த வனத்திற்கு வருவான். அவன் புண்ணிய பாதம் பட்டால் நீ மீண்டும் பெண்ணாவாய். அது வரை என் பிரிவே உனக்குத் தண்டனை" என்றார்

கௌதமர். அகலிகை தலைகுனிந்தாள். வாழ்வில் இரண்டாம் முறையாகச் சமைந்தாள் அகலிகை. ஆனால் இம்முறை கல்லாக.

7

பல்லாண்டுகளுக்குப் பின்னர்... அடுத்த தலைமுறை மிருகங்களும் பூச்சிகளும் மரங்களும் ஆரண்யவனத்தை நிறைக்கத் தொடங்கியிருந்தன. எதிலும் தலையிடாமல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தாள் அகலிகை. கீறல்கள், வெட்டுக்கள், உடைப்புகள் என அகலிகையின் தோற்றத்தில் வயது தெரிந்தது. நகர முடியவில்லை. வனப் பயணிகளின் சௌகரியத்திற்கேற்ப அவள்தான் எங்கெங்கோ நகர்த்தப்பட்டாள். அகலிகைக்குக் கவலை ஏற்பட்டது. என்றாவது ஒரு நாள் இராமன் அந்த வனத்திற்கு வரப்போகும்போது அவன் கண்ணில் படாமல் போய்விடுவோமோ என்ற கவலை அது. இன்னும் எத்தனைக் காலம்தான் கல்லாகக் காத்திருப்பது? அவளடியில் பல்லாயிரம் ஆண்டுகளாக வாசம் செய்து பல வம்சங்கள் கண்ட புழு பூச்சிகள் அவளுக்குள் பொறாமையையும் ஏக்கத்தையும் தூண்டின. இம்மாதிரி அறுபதாயிரம் ஆண்டுகள் கழிந்தன.

ஆளரவங்கள் மீது எப்போதோ நம்பிக்கை இழந்துவிட்டிருந்தாள் அகலிகை. ஆனால் நம்பிக்கைக்கு எதிராக இயங்குவதுதானே நம்பிக்கையின் செயல்பாடு? ஒருநாள் உச்சியில், ஒன்றுக்கு மேற்பட்டோரின் காலடிச் சத்தங்களை அவள் தன் உருண்டை மேனியில்

உணர்ந்தாள். சற்று நேரத்தில் பேச்சுக் குரல்கள் கேட்டன. ஒரு முதியவர், இரு இளைஞர்கள், ஓர் இளம்பெண் ஆகியோரின் குரல்கள் அவை. அகலிகைக்குச் சிலிர்த்தது. ஜோதிட சஞ்சாரி உரைத்துச் சென்றது போல் நல்ல காலம் வந்துவிட்டதா? குரல்கள் மேலும் நெருங்கின.

"இராமா, இலக்குவா, சீதே, அந்தக் கல்லைப் பார்த்தீர்களா?" என்றது பிரம்மரிஷி விஸ்வாமித்திரரின் குரலேதான்.

இராமா என்றா அழைத்தார் விஸ்வாமித்திரர்? அகலிகைக்கு வாய் இருந்தால் இந்திர போகத்திற்குப் பிறகு அடுத்த முறையாய் பரவசத்தில் கூவியிருப்பாள்.

"அந்தக் கல்தான் அகலிகையா குருவே?" என்றான் ஓர் இளைஞன்.

"ஆம், இராமா, அதுவேதான். அபூர்வப் பேரழகி. ஒரு காலத்தில் நாங்கள் என்னென்னவோ உருவம் எடுத்து இவளைப் பார்க்க வருவோம். இந்திரன் விவகாரத்தால் கௌதமர் கடைசியில் பொறுமையிழந்து அவளைக் கல்லாக்கிவிட்டார். இந்திரனுக்கு வேண்டியதுதான். ஆனால் இந்தப் பெண்ணின் கதி பாவம்" என்றார் விஸ்வாமித்திரர் பொறாமையும் பச்சாதாபமும் கலந்து.

"எனக்கென்னவோ இவள் அவ்வளவு அழகாகத் தெரியவில்லை. நமது அரண்மனைத் தோட்டத்தில் இவளைப் போல் ஆயிரம் கற்கள் கிடக்கின்றன" என்றாள்

சீதை வேறு வகை பொறாமை தொனிக்க.

"குழந்தாய், நீ கல்லாவதற்கு முன்பு இருந்த அகலிகையைப் பார்த்திருக்க வேண்டும்" என்றார் விஸ்வாமித்திரர்.

அதற்குள் இலக்குவன், "அண்ணா, இந்த ஸ்திரீக்கு சாபவிமோசனம் கொடுக்கத்தானே இவ்வளவு தூரம் வந்தோம்? கொடேன். அகலிகையைப் பார்த்த மாதிரியும் இருக்கும்" என்றான் இராமனை நோக்கி.

"இந்தக் கல்தான் என்று உறுதியாகத் தெரியுமா?" என்று இராமனிடம் சீதை கேட்க, அவன் பேச்சின்றிக் கல் மீதிருந்த பெருக்கல் குறியைக் காண்பித்தான். அதன் கீழே "அகாலிகை" என சிவப்புச் சாந்தால் பிழையாக எழுதப்பட்டிருந்தது.

அரச குடும்பத்தினர் தன்னை நெருங்குவதை அகலிகை உணர்ந்தாள். ஆனால் பிரம்மரிஷி தவிர்த்த மற்றவர்களும் மரவுரியில் இருந்ததைப் பார்த்தாள். பாவம், கொற்றப் பரம்பரைக்கே என்ன பிரச்சினையோ என்று நினைத்தாள்.

"குஷத்வஜா, உன் பாதத்தால் அவளைத் தொடு" என்றார் விஸ்வாமித்திரர். இராமன் உடனே காலைத் தூக்கினான். "இருங்கள்!" என அவனைத் தடுத்து நிறுத்தினாள் சீதை. "தொடுவதா? தொடுவது பற்றி நீங்கள் எதுவும் சொல்லவில்லையே குருதேவரே?" என்றாள் சீதை.

"மகளே, உன் கணவன் உன்னிடம் சொல்லவில்லையா?

தொட்டால்தான் விமோசனம் கிடைக்கும். இல்லை என்றால் இந்த உன்னதமான பெண்மணி கல்லாகவே கிடக்க வேண்டியதுதான்" என்ற விஸ்வாமித்திரர், "என்ன இராமா, நீ சொல்லிவிட்டுக் கூட்டிவரவில்லையா?" என்றார்.

பார்த்துக்கொண்டிருந்த அகலிகைக்குள் கலவரம் மூண்டது. அறுபதாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது?

"சீதே, எத்தனையோ புல் பூண்டுகளை மிதித்து நடந்து வந்திருக்கிறோம். அது போல ஒரே ஒரு மிதி" என இராமன் கெஞ்சினான்.

"ஆரியபுத்திரரே, தாராளமாக மிதியுங்கள். ஆனால் வேறொரு பெண்ணைத் தீண்டியவரை நான் கணவராக ஏற்க மாட்டேன்" என்று சீறினாள் சீதை.

"சீதே, இது வெறும் வேறொரு பெண்ணைத் தீண்டுவதல்ல. ஒரு பெண்ணுக்கான புனர்ஜென்மம்" என்றான் இராமன்.

"அது பிறகு நிகழும் விளைவு. அந்த விளைவை ஏற்படுத்த நீங்கள் செய்யும் செயல் யாதாம்?" என்றாள் சீதை விடாமல்.

"என்னால் முடியும் என்றால் உங்களைக் கூப்பிட்டிருக்கவே மாட்டேன். நீங்கள் முன்பே சொல்லியிருக்க வேண்டும்" என்றார் விஸ்வாமித்திரர்.

"மன்னிக்கவும் குருதேவரே, ஏதோ ஒரு காலத்தில் விடுக்கப்பட்ட சாபத்தை முடிக்க என் கணவர் இவ்வளவு ஆர்வம் காட்டுவார் என்று நானும் எண்ணவில்லை" என்றாள் சீதை காரமாக.

இலக்குவன் இதனாலெல்லாம் அலுப்புற்று சுற்றுப்புறங்களைப் பார்க்கத் தொடங்கியிருந்தான். அகலிகையின் பார்வை இராமனை விட்டு நகரவில்லை.

"சரி, சீதாப்பிராட்டியின் சொல் கேட்டு நாம் வந்த நீண்ட வழியே திரும்புவோம்" என்றான் இராமன் ஆத்திரமாக. சீதைக்கு 'சீதாப்பிராட்டி' என்று அழைக்கப்படுவது பிடிக்காது. பிடிக்காதது மட்டுமல்ல, அவர்கள் மௌனமாக மெல்லத் திரும்பி நடக்கவும் தொடங்கியிருந்தார்கள்.

அதிர்ச்சியில் அகலிகை தொடர்ந்து கல்லாக இருந்தாள். முதுமையிலும் கல்தானா?

"இந்த ஆண்கள் கல்லைக்கூட விட மாட்டார்கள்" என்ற சீதையின் பொருமல் இலைகளின் பலத்த சரசரப்பையும் மீறி அகலிகையின் காதில் விழுந்தது.

மருந்தே இலக்கியம்

ஒரு நற்செய்தி. என் படைப்புகளை விரைவில் மருந்துக்

கடைகளில் வாங்கலாம். வயாக்ரா தயாரிக்கும் ஃபைஸர் மருந்து நிறுவனம் என்னிடம் ஆர்டரின்பேரில் எழுதி வாங்க முடிவு செய்துள்ளது. என் படைப்புகளில் மருத்துவ குணங்கள் இருப்பதாக யாரோ அவர்களிடம் கிளப்பி விட்டது எனக்கு நன்மையில் முடிந்திருக்கிறது. தூக்கமின்மைக்கு மருந்தாக Payon 50s, Payon 100s, Payon 250s என மூன்று டோஸ்களில் சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதித் தருவதாக ஒப்பந்தம் (இங்கு S என்பது நொடிகளைக் குறிக்கிறது). மாத்திரை வடிவில் வராது. சிறு புத்தகங்களாக வரும். சோதனை எலிகள் படிக்குமளவு பரிணாம வளர்ச்சி அடையாததால் இந்த டோஸ்கள் மனிதர்கள் மீது சோதிக்கப்பட்டன. பக்கவிளைவுகள், எச்சரிக்கைகள் என சில பட்டியல்களை ஃபைஸர் வெளியிட்டுள்ளது. இதயப் பிரச்சினை, ரத்த அழுத்தம் உள்ளவர்கள், முதியோர், கர்ப்பிணிகள், குழந்தைகள் இம்மருந்துகளைத் தவிர்க்க வேண்டும். ஒருவருக்கு மட்டும் ஓவர்டோஸ் ஆகி கோமா நிலையில் இருக்கிறார். மற்றபடி பிரச்சினைகள் இல்லை. அமெரிக்க மருந்து நிர்வாக வாரியம் ஒப்புதல் அளிக்க வேண்டியதுதான் பாக்கி. இதில் எனக்குச் சுளையாக ஒரு தொகை கிடைக்கப்போகிறது. சக எழுத்தாளர்களுக்கு வயிற்றெரிச்சலில் தூக்கம் போய்விடும். அவர்கள் தூக்கம் அனுஷ்டிக்க பேயோன் 100s-ஐப் பரிந்துரைக்கிறேன்.

தமிழின் முன்னணி எழுத்தாளன். கதை, கவிதை, கட்டுரை, நாவல் எழுதுவது தொழில். ஓவியங்கள் வரைவது உப தொழில். அங்கீகாரம் கிடைத்தும் பெரிய விருதுகள் கிடைப்பதில்லை. பிடித்த விஷயங்கள்: இலக்கியம், சினிமா, இசை, அறிவியல், பொருளாதாரம், இயற்கை, மனிதர்கள், மழையை வேடிக்கை பார்த்தல், பூக்களை முகர்தல், புன்னகைத் தல், அழகிய பூச்சி வகைகள், பறவைகள், மனித மேன்மை மற்றும் வாழ்வியல் உண்மைகளைக் குறிக்கும் குறியீடுகள்,